உ

சுபமஸ்து.

# ஸ்ரீமகாபாரதவிலாசம்,

கவிச்சக்ரவர்த்தியாகிய

இராயநல்லூர்

இராமசந்திரகவிராயரவர்கள்

பாடியது

இஃது

திருத்தணிகை

விசாகப்பெருமாளையர்

முன்னிலையில்

திருநீர்மலை

கோபாலகிருஷ்ணகவிராஜசேகரரால்

பரிசோதிக்கப்பட்டு

கா- ஸ்ரீராசர்மிமுதலியாராலும்

பு- சுப்பராயமுதலியாராலும்

ஷை- ஐயரது- விவேகக்கல்விவிளக்கஅச்சுக்கூடத்தில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்

பாரபவ௵-கார்த்திகைமீ 1846

உ

சுபமஸ்து.

# தெய்வசகாயம்.

# ஸ்ரீ மகாபாரதவிலாசம்.

## காப்பு-விருத்தம்.

சீர்பெருகுங் கருணையுளத் தருமராசன் ... *
திவ்வியமங் களகரமாய் விளங்கி யெங்கும் ... *
பேர்பெருகு மிளவாசு நாடகத்தைப் ... *
பெருமையுடன் மனமகிழ்ந்து பேசுதற்குப் ... *
பார்பெருகும் பதுமபுரி யதனில்வாழும் ... *
பங்கயக்கண் வரதர்திரு மருகனான ... ... *
ஏர்பெருகு மெய்ஞ்ஞான மூர்த்தியெங்கள் ... *
இடர்தீர்க்குங் குஞ்சரத்தை யிணங்கு வோமே ... *

## வெண்பா.

பண்ணமைந்த வாதிமகா பாரதத்தைநாடகமாய்த் ... ... *
தண்ணமைந்தசெந்தமிழாற் சாற்றவே-பெண்ணமைந்த ... *
மெய்யானநத்தவனும் வெற்பானநத்தவனுங் ... ... ... *
கையானநத் தவனுங்காப்பு ... ... ... ... *

## கணபதிவணக்கம் - விருத்தம்.

மேதினிதனிலேயைந்தாம் வேதமென்றெவரும்போற்றும் ... *
ஆதிமாபாரதத்தை யணிகொணாடகமாய்ப்பாடக் ... ... *
கோதில்பொன்மேருதன்னிற் குலவுமிக்காதைமுன்னாள் ... *
மாதிரம்புரக்கத்தீட்டும் வள்ளலார்காப்பதாமே ... ... *

## முருகக்கடவுள் - வணக்கம்.

வீறியமறையோரடைந்தாம் மறையெனவிளங்கிநிற்கக் ... *
கூறியபாரதத்தைக் குலவுநாடகமாய்ப்பாடத் ... ... *
தேறியமுனிவர்வாழ்த்தத் திருப்போரூர்தன்னில்வைகும் ... *
ஆறிருகையனென் னையனைவணக்கஞ்செய்வாம் ... ... *

## இதுவுமது.

அதிருநெடுங்கடல் சூழ்புவிமீதினி - லரிதின்விளங்கிய பாரதமா
னதை, மதுரமிகுந்தமிழ் நாடகமாயிசை - மருவுமலங்கிர்த மாக
வேகூறிட, நதியின்வளஞ்செறி கால்வயல்பாய்தரு - நளினமிகுஞ்
சமராபுரிமேவியே, வதிதருநங்குரு பாலகுமாரன்றன்-மருவுபதங்
களை நாடொறுமேத்துவாம் ... ... ... *

## பரமசிவவணக்கம்.

கங்கையுமறுகுந் தும்பைக் கடுக்கையுங்கவினுலாவுந் ... *
திங்களுமுடித்தவேணிச் செவ்வியுமழுவுமானும் ... ... *
மங்கைநல்லுமையாள்மேவு மருங்குந்தொல்லடியார்நெஞ்சில் *
தங்கியகமலத்தாளுந் தகையொடுநினைந்துவாழ்வாம் ... *

## உமையவள்-வணக்கம்.

அந்தரிகாளிநீலி யாரியைசத்திகாள ... ... *
கந்தரிகரகபாலி கௌமாரிவேதமூல ... *
மந்திரப்பிரணவசிலி மதயாமிசத்திசத்தி ... *
சந்திரவதனியாதி தற்பரைதனைத்துதிப்பாம் *

## சரஸ்வதிவணக்கம்.

தேவர்கள்முனிவர்சித்தர் செகத்தினிலுள்ளோர்மற்றை ..... *
யாவருமிறைஞ்சிப்போற்று மெழில்தருநான்முகத்தோன் ... *
நாவினில்விளங்குமாதி நாயகிதவளகஞ்சப் ... ... ... *
பூவினிலமர்ந்தவாணி பூங்கழல்வணக்கஞ்செய்வாம் ... ... *

## திருமால்-வணக்கம்.

பஞ்சவர்தூதனீண்ட பாரளந்திட்டமாயன் ... ... *
வஞ்சிபாஞ்சாலிக்கன்று மாளாததுயில்கொடுத்தோன் ... *
தஞ்சமென்றுரைத்தயானை தன்னிடர்தீர்த்தளித்தோன் ... *
மஞ்சடர்மேகவண்ணன் மலர்ப்பதம்போற்றிவாழ்வாம் ... *

## அவையடக்கம்.

வீரமன்னவர்களாலே விளங்கியராயநல்லூர் ... ... *
சூரியகுலத்தில்வந்த சொற்கவிராமசந்திரன் ... ... *
ஏரணிதருமராச னிளவரசெய்துங்காதை ... ... ... *
தாரணிதனில்விலாசந் தமிழினிலுரைசெய்தானே ... ... *

தரு—தோடையம்—தாளந்திரிபுடை.

தீரர்—நதிகுலசிங்காரர்—புஜபலரணசூரர்—திரவியகுபேரர் ... ✻
(சான்றோர்கண்மீது)
பேராரிளவரசெனுங் கதையைச் சீராரும்விலாசமெனச் சொல்ல
வே—வீரன்—சிவனருளிய குமாரன்—மயிலேறிய வலங்காரன் ... ✻
புகழுந்திருப்போரூரன்—றுணைசெய்யவே ... ..... ✻
அமராதிய வசுராதிபர்மாளவே ✻
சமராடியசமராபுரிமேவிய (வீரன்சிவனருளிய)
அந்தரிசிவ—சுந்தரிசமயது—ரந்தரியுமை—தந்தருளமுகிய ... ✻
(வீரன்சிவனருளிய)
அண்டர்கள்தவ—முந்தியமுனிவர்கள்—தொண்டர்களுல—கெண்டி
சையுந்துதி ... ... ... ... ... (வீரன்சிவனருளிய)

தரு—நாட்டை—தாளஞ்சம்பை.

செய செய வல்லபைநேசர் செயசான்றோர் தம்முள்வாசர்
செய செய சித்திவிலாசர் செயசெல்வகணேசர் ... ... ஆ—ஆ
வயமிகுந்த பாண்டவரில் வருந்தரும னிளவரசை ... ✻
நயமிகுந்த நாடகமா நானிலத்திற் சொல்லவே ... ... ஆ—ஆ
இசைவிளங்குஞ்சர்வாணி இனியமங்களகல்யாணி ... ✻
நிசரசிதநிர்வாணி நிமலிபதந்துணையே ... ... ஆ—ஆ
கடிகமழ்வெண்கஞ்சமதிற் காட்சியுறவோங்கிவளர் ... ✻
படிகநிறத்தவளுடைய பாதபத்மந்துணையே ... ..... ஆ—ஆ

மங்களம்—தரு—இராகஸ்ரீ—அசாவேரி—தாளந்திரிபுடை.

மங்களஞ்—செய—மங்களஞ்—சுப— மங்களம்— மங்களம்.
திங்களிளம்பிறையுந்—தங்குஞ்சடைமுடியுந் ... ... ... ✻
தேசுலாவுநாகா—பரணமுங்கொன்றையும் ... ... ✻
வாசமேவுமெய்ஞ்—ஞானதீபனென்று ... ... ... ... ✻
சித்தர்கள்தவ— முத்தர்கள்தத்துவ—நித்தர்கள்பரி—சுத்தர்கள்பரவிய
திரிநயனவிலாசமெட்யோகற்கும் ... ... ... ... ... ✻
மலைமகளெனுமாதுமைபாகற்கும் (மங்களஞ்செய)
செகமேல்வருமாயையினைத்துந்—தவமும்வகைஞானமளிக்கும் ✻
வருதேசிக னுகைவிருக்குங்—குருநாதன் செவ்வேள்முருகற்குஞ் ✻
கூறுபிறைநுதல்—குறமகள்வள்ளிக்குஞ் ... ... ... ... ✻

சுரிபதிதரு-மகள்தெய்வயானைக்கும் ... ... ... ... ❋
திசைமுகனுக்குங்- கலைமகளுக்குந்- திருமகளுக்கும் -முகில்வண்
திருலாவுதர்மராஜனிளவரசைப் ... ... [ணனுக்கும்
பேருலாவுதன்னாடகமுனைசெய்த ... ... ... ❋
செந்தமிழ்க்கவி ராமசந்திரன்றனக்குஞ் ... ... ❋
சுந்தரக்கவி-ராஜபண்டிதருக்குஞ் ... ... ... ... ❋
சிந்தித்திடு முகையூர்தண்டைநக-ருந்தற்புதநாவலூர்வளநகர் ...❋
செப்புந்தலைமைக்கொருநதிகுல-முற்றும்புகழ் விற்பரிமளநிறை
சிரகநன்மாலைபடைத்தவர்-காரணபத்திரகாளிவரத்தினர் ... ❋
சிங்கக்கொடியுந் தங்கமலையும் வளங்கொண்ட ... ... ❋
துங்கப்புகழால்த்தங்குநல்லசான்றோர்க்கும் (மங்களஞ்செய)

பிள்ளையார்வருகிற- பொதுவிருத்தம்.

அந்தமுமாதியாகி யருமறைப்பொருளுமாகி .... ❋
விந்துவுநாதமாகி மெய்ப்பொருடானேயாகும் ... ❋
இந்துவேணியனளித்த விறையொருமுதல்வனை ❋
சுந்தரமாமலர்த்தாள்திவ்விய கணபதிவருகின்றோ ...❋

பிள்ளையார்வருகிற-தரு-இராகம்-தோடி-தாளம்-ஆதி.

நாட்டுக்கணநாதர்வந்தாரோ-நதிகுலர்-நாட்டுக்கணநாதர்வந்தாரோ
நாட்டுக்குண்முகை-யூர்தண்டையார்பேடு ... ❋
நன்றுவலூர்பெற்ற-நதிகுலச்சான்றோர்கள் ... ... ❋
வீட்டுக்குவீடு விளங்கிக் களிப்பவர் ... ... ... ❋
ஈட்டுங்கல்விச்செல்வமேன் மேலளிப்பவர் ... ❋
சூட்டுவடவரை மேலே-யதைத்-தீட்டுநீர்வாகர்முன்னாலே ... ❋
ஆட்டுக்குமபாரத நாடகத்துத்தாளப் ... ... ❋
பாட்டுக்குமுன்னின்று பட்சம்வைத்தேயான ... (நாட்டுக்கண)
தங்கமலையைப்படைத்தகெம்பீரர் ... ... ❋
தரணிக்கொரு சுகவிற்பன-விரதத்தினை பெறுமற்புத (தங்க)
பரிமளநிரம்பிய-தழைத்திலங்கிய சிரகத்தாரர் ... ❋
சிங்கக்கொடிசூரர் - வடிவாள் - தங்கியவொய்யாரர் - அலங்கிருத
சிந்தையிற்றங்கிய-செல்வப்பிரகாசர் ... ... ❋
சந்ததம்வானவர்-போற்றும்விலாசர் ... [ணேசர்
சேயினைவல்லபை - தன்பிராணநேசர் - மாயன்மகிழுஞ்சித்திக

நீதகற்றிய - வேதமெய்ப்பொருள் ... .... ... ※
பூதலத்தினில் - சோதிமெய்ப்பொருள் ... ※
சித்தியளிப்பவர் - வெற்றியளிப்பவர் ... ※
அத்துவிதப்பரி - சுத்தமளிப்பவர் (நாட்டைக்கண)

விநாயகர்துதி - வெண்பா.

திங்கணதியறுகுசீரரவம்பொற்கடுக்கை ... ... ※
தங்குஞ்சடையரனார்தந்தருளும்-மங்கலஞ்சேர் ... ※
மும்மதமுநால்வாயுமோதகஞ்சேரைந்துகரக் ... ※
கைம்மலையின்செஞ்சரணங்காப்பு ... ... ※

சுப்ரமணியர்துதி - கட்டளைக்கலிப்பா.

காருலாவியசோலையுஞ்சாலையுங் ... ... ※
கயலுலாவியவாவியும்பொற்கொடித் ... ※
தேருலாவியவீதியுமாதவர் ... ... ... ※
சிறக்குநற்சமராபுரிதன்னில்வாழ் ... ... ※
பாருலாவியசங்கரிபாலனார் ... ... ※
பன்னுநான்மறையும்புகழ்சீலனார் ...... ※
சீருலாவியமுத்துக்குமாரவேள் ... ... ※
செம்பொற்பாதமென்சிந்தையிற்போற்றுவாம்

சபாபதிதுதி-கொச்சகம்.

செந்திருமால்வேதனொடுதேவபிரான்வானவரும் ... ... ... ※
வந்தனஞ்செய்தேபரவுமங்கைசிவகாமியொடு ... ... ... ※
திந்திந்திமித்தியெனச்சிற்சபையினிர்த்தமிடும் ... ... ... ※
எந்தனடேசனிணையடிகள்போற்றுவமே ... ... ... ※

பார்த்தசாரதிதுதி.

சீதரன்ரிஷிகேசவன்மாதவன்திகழ்நராரிநரசிம்மன்வாமனன் ※
யாதவன்மதுசூதன்முராரியோடச்சுதன்திருவிக்கிரமன்மெச்சிய ※
பூதகியுயிருண்டபுராதனன்புகழுமல்லிப்பதிதனில்மேவிய [ம்
நாதனும்பார்த்தசாரதிதன்னிருநளினபாதத்தைநாளும்வணங்குவா

துரோபதைவணக்கஞ் - சந்தவிருத்தம்.

இராகம் நீலாம்புரி.

முகிலுலாவியவள்கபாரமுமூரிவெஞ்சிலைநுதலணி ... ... ... ※
நகையுலாவியமதிமுகங்குமிழ்நாசியும்அருள்நாட்டமும் ... ... ※

நகமுலாவியதன்முமின்னிடைநயமுலாவியபதமுநன் ... ... *
மகமுலாவியவல்லிதுரோபதைமாது தாளை வணங்குவாம் ... ... *

நாட்டுவளம்-தரு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-மிசரம்.

கொண்டல்முழம்மாரிகள்பெய்ய- இந்த-குவலயத்தோர்களுமுய்ய,தண்டரளங்கொழித்தோடும்- நதி-தன்னிற்பெண்கள் கிரீடையாடும். ஆடும்பெண்கள்கூந்தல்வாசம்-ஒலி- அலைகடற்போயெங்கும்வீசும்,நீடுந்தேமாங்குயில்பாட- அணி- நிறைதோகைமாமயிலாட. முப்பழச்சாறெலாங்கூடியே-மணம்-மொய்த்ததேனுறெணவோடியே, செப்பருஞ்சேல்கெண்டைவாளையே-எங்குஞ் சிறச்செய்யுங்கமுகம்பாளையே. உழவருழுதவயலெல்லாம்- நறை- யூற்றெழப்பாய்ந்திடும்பயிரெல்லாம், அழகியசெந்நெல்கள்வீறியே-மணி- அம்பவளங்களுமீறியே. கன்னல்கணுக்கள்தெறிக்கும்- முத்து - கலைமதிபோலவெறிக்கும், அன்னஞ்செங்கமலத்திற்றுஞ்சுங்-கிள்ளை - அழகியவாழையிற்கொஞ்சும். குங்குமச்சாலைப்பூஞ்சோலைகள்- இன்பங்-கொடுக்குங்கரும்பாடும் ஆலைகள், கொங்குயர்பூமலரோடையும்-தவங்- கொண்டமறையவர்வாடையும், செகமெச்சுங்குருகுலநாடு- எங்கள்- திருதராட்டிரனுறும்நாடு, நாட்டின்வளமையைச்சொன்னோம்-இனி-நகரவளஞ்சொல்வோமின்னம் ... *

நாட்டுவளம்-முற்றிற்று.

நகரவளம் -தரு- இராகங்- கெண்டா.

இசைத்தநல்லாணிப்பொன்னுலேயிழைத்திட்ட திவ்யமாடங்கள்
அதில்-பெய்ந்தநவரத்தினத்தாலமுத்தியசித்திரகூடங்கள் ... *
வசந்தமுலாவிய வுன்னதநன்னய சாளரங்களும்- இம்- மாநில
மும்புயர்மேனிலமும்புகழ்நீளரங்களும் ... ... ... (க)
உச்சிதவச்சிரத்தாலே நிறுத்தியநீண்ட ஸ்தம்பமும்- யார்க்கும்-
உன்னருதாகிய பொன்மயமாயொளி பூண்டபிம்பமும் ... ..... *
மெச்சும்நல்எவ்வனப் பெண்கள்விளையாடுங் கசிதமேடைகள்-
மணம்-வீசிடுமாசறுதேசுறுநன்முல்லைமலரின்வாடைகள்... (உ)
சந்திரமண்டலமட்டும் அளாவியகோபுரங்களும்-அதில்-தாங்கி
யபச்சையின்ரத்தினத்தாற்செய்ததாபரங்களும் ... ... ... *
விந்தைகளோங்கிய தோரணத்தம்பமேற்கொடிகளாடலும் -
பின்னும்-மேவியசங்கீதரத்னாகரச்சுரபாடலாடலும் ... ... (ங)

நீத்தியமங்களசோபனமேவிய அஸ்தினபுரம்-இதில்- நீடூழியா
ளரசாட்சிசெய்திடுந்திருதராட்டிரன் ... ... ... ... ... ✳
புத்திரமித்திரகளத்திராதியாவரும்பொருந்திவாழ்ந்திடு -கன-
புண்ணியவானகர்தன்னைபுனைசெய்தேதாம்புவியுள்ளோர்களே. (ச)
தங்குமிந்நாடு நகருஞ்சொன்னேனிந்தச் சபையுள்ளோர்களே-
இனித்- தானடக்குங்கதையெல்லாமறைகுவோம் புவியுள்ளோர்க
ளே-பொங்குநதிகுலச்சான்றவர்யாவரும்பொருந்திவாழ்கவே-இ
தைப்-புகழ்பெறக்கூறியகவிராமசந்திரனும்பொருந்திவாழ்கவே.

நகரவளம்முற்றிற்று.

வாழி-கட்டளைக்கலிப்பா.

வாழிசந்திரவமிசமும்வாழியே ... ... ✳
வாழிபாண்டவர்வாழிமனுமுறை ... ... ✳
வாழியாறங்கநான்மறைவாழியே ... ... ✳
வாழிநற்கவிவாணருங்கொண்டலும் ... ✳
வாழிசான்றவர்யாவரும்வாழியே ... ... ✳
வாழியிக்கதைசொல்லியபேர்களும் ... ✳
வாழிநற்கவிராமசந்திரனும் ... ... ✳
வாழிவையகத்தோர்களும்வாழியே ... ✳

கட்டியக்காரன்வருகிற-பொதுவிருத்தம்.

மட்டிலாக்கீர்த்திபெற்ற மகாராசராசேந்திரன் ... ... ✳
அட்டதிக்கெல்லாங்காக்கும் அடல்பெருமரசர்கோமான் ... ✳
திட்டமாய்ப்பராக்கிரங்கொண்ட திருதராட்டிரன்றன்வாசல்... ✳
கட்டியக்காரன்வந்து களரியிற்றோன்றினனே ... ... ✳

வசனம்.

அஃதெப்படியென்றால் திருதராட்டிர மகாராசன் கொலு அலங்
காரஞ்செய்யுங் கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க ... ✳

தரு-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

கசித உசிதசெய விசய கட்டியக்காரன் வந்தானே ... ✳
அதி-காரவீரகுண-மாரசூரனென ... ... (கசிதஉசிதசெய)
திசைபுகழ்பரவிய திருதராட்டிரமன்னன் ... ✳
சிரோட்ட நற்கொடி கோட்டைகொத்தளம் ... ... ✳
வாட்டமற்றிட நாட்டம்வைத்திட (கசிதஉசிதசெய)

சிகரவட்டவனாயின்முகடுகிடுகிடெனத்-திடமுடன்வருஞ்சிங்கக்குட்
டி-திகழ்தருநவமணிமுடியரசர்நடுங்குந் - திறமிகுநயத்தங்கக்கட்
டி-அகடவிகடவதி பகடிபிரபலமத-யானைக்கிணையா நல்லகெட்டி
அமிர்தகுணபுனித- விதரணகுபகர- அலங்கிர்த- புசங்களைத்தட்டி
அட்டதிசைக்கொரு-மத்தமதப்புலி ... ... ... *
அச்சமொழித்து-கடற்றிரைகெக்கலி ... ... ... *
அட்டி - கொட்டி - தட்டி - கிட்டி - சுட்டி - மிகுந்த ... *
ஆக்கிரமித்து-சாக்கிரதைக்குள் - நோக்கம்வைத்து-சீக்கிரத்தில் *
அட்டாசமிட்டுச்சித்திர- முகமீசையைமுறுக்கிப் ... ... *
பட்டாவிசைத்தகச்சை-யிடையதிலேயிறுக்கி ... ... (கசித)

திருதராட்டிரமகாராசன்வருகிற

பொது-விருத்தம்.

நெஞ்சொருவிழியாக்கொண்டோனெடியசந்திரகுலத்தோன் *
வஞ்சிகாந்தாரிதன்னைவரிசையால்மணம்புணர்ந்தோன் ... *
அஞ்சுதலுடையோர்க்கெல்லாம் ஆறுதலர்க்கின்றோன் ... ... *
ரஞ்சிததிருதராஷ்டிரராசனும்வருகின்றானே ... ... *
அஃதெப்படியென்றால் ராஜாதிராஜ-ராஜஉத்தண்டனாகிய திரு
தராட்டிர மகாராஜன்வருகிற விதங்காண்க ... ... *

கட்டியக்காரன் - எச்சரிக்கை - ஆசிரியவிருத்தம்.

மணிமகுட மன்னவர்க ளிருபுறநெருங்கவே ... *
மருவலர்வணங்கிவரவே ... ... *
வயிரியர்கள்விருதுகள்படிக்கவேவிலைமாதர் ... *
வரிசைநடனம்புரியவே ... ... *
அணிகொண்டகுதிரைப் பெரும்படை நெருங்கவே *
ஆனையின்திரள்சூழவே ... ... *
அமைச்சர்க ளிணங்கவே பிரதானி தானுபதிக் ... *
ளங்கங்கு தங்கிவரவே ... ... *
பணிவிடைக் காரருந் திருவடிவணங்கவே ... *
பார்த்திபர் வணங்கிவரவே ... ... *
பாவையர்கள் வெண்சா மரங்கள்தன்மைவீசவே ... *
பம்பைதுந்து மிகுமுறவே ... ... *

திணிகொண்ட நவரத்ந சிம்மாசனக் கொலுவில் ... ❋
சிருட்டனேயாசுசெய்ய ... ... ... ❋
திருதராட்டிரனக சக்ரபதிவருகிறார் ... ... ❋
செனங்களேமெச்சரிக்கை. ... ... ... ❋

தரு- இராகம்- தோடி- ஆதிதாளம்.

திருதராட்டிரன்வந்தான் ... ... (இந்தச்)
செகபதிமகபதி-சிம்மாசனபதி (திருதராட்டிரன்வந்தான்)
மருளில்லாதபீஷ்மன்-விதுரன்கிருபன் துரோணன் ... ❋
மைந்தனசுவத்தாமன்கூட-வரமன்னவர்கொண்டாட (திருதராட்)
பூசக்கரக்குடைபிடிக்கப் - புகழ்விருதுபடிக்கப்
பூவையர்கள்நடிக்கப்-பொன்னலமெடுக்கப்
பூசுரத்தவர்-மாதவத்தவர்-ஆசிசொற்றிட-வேமிகுத்துள ... ❋
புண்ணியகனயோகன்-யார்க்கும்-எண்ணருமதியூகன்- நலந்திகழ்
புகழ்விளங்குதரு மன்றனக்கிளவர சகமகிழ்ந்து தர மங்களசுபகர
(திருதராட்டிரன்வந்தான்)

சிம்மாசனவணக்க-விருத்தம்

சச்சிதாநந்தமாகிச் சராசரந்தானேயாகி ... ... ❋
நிச்சயப்பொருளாயெங்கு நிரஞ்சனவஸ்துவாகி ... ❋
இச்சையாயிகபரத்து மிருந்தசைத்திடுவதான ......❋
அச்சுதன்செம்பொற்பாதமனுதினம்போற்றிபோற்றி

பீஷ்மருக்கும் - துரோணருக்கும்
திருதராஷ்டிரன்சொல்லும் - விருத்தம்.

பேணிநல்விரதங்காக்கும் பீஷ்மரேபோற்றிபோற்றி ... ❋
தோணிவராண்மைபெற்ற துரோணரேதெண்டன்போற்றி ... ❋
ஆணிலாப்பெண்மைபோலும் அச்சிலாத்தேனைப்போலுங் ... ❋
காணியாமுலகையாளுங் காரியநன்றேசொல்வீர் ... ... ❋

வசனம்.

ஐயாபீஷ்மரே கேளும்சுவாமி துரோணரே நானிந்தவுலகை யாளுகிறதுபுருஷனில்லாதபெண் சாதியைப்போலவும் அச்சில்லாதரதத்தைப்போலவு மிருக்கின்றது உங்களுக்கு நலமாயிருக்கின்றதா அதைத்தெரியச் சொல்லுங்களையா ... ... ... ... ❋

### பீஷ்மர்-விருத்தம்.

காரியமிதுவிதென்று கசடறத்தெரிந்துசொல்ல ... ❋
நேரிலாவிதரனீசர் நெருங்கியுன்னருகிருக்கத் ... ❋
தாரிடுதோளாய்நின்றன் தாற்பரியமின்னதென்றால் ❋
சீரிதாமாகாதென்று தெளிந்துபின்சொல்லுவாரே ❋

### வசனம்.

கேளப்பா திருதராட்டிர மகாராசனே சாமபேததானதண்டமென்னுஞ்சதுர்வித உபாயங்களெல்லாந்தெரிந்து சொல்லப்பட்டவர்கள் உன்னருகிலிருக்கும்போது உன்மனதில் நினைத்தகாரியத்தை அவர்களிடத்தில் சொல்லுவாயானால் இதுதகுந்ததாதென்று சொல்லுவார்களப்பா மகாராசனே ... ... ... ... ❋

### துரோணர்-விருத்தம்.

செப்புமுன்குலத்தினுக்குச் சிரேட்டனும்பீஷ்மன்பின்னுந் ... ❋
தப்பிலாவிதுரன்மிக்க சத்தியவாதிகளிருக்க ... ... ... ❋
ஒப்புமுன்மனதினுள்ளே யுற்பவமதனைச்சொன்னால் ... ... ❋
துப்புறவிபரமெல்லாம் தெளிந்துபின்சொல்லுவாரே ... ❋

### வசனம்.

கேளுமையா திருதராட்டிரமகாராசனே உம்முடைய குலத்துக்கெல்லாம் சிரேஷ்டராகிய பீஷ்மரிருக்க ஞானசம்பன்னராகிய விதுரமகாராசனிருக்க மேலும் உம்மிடத்தில் சத்தியவாதிகளெல்லாமிருக்க உம்முடையமனதில் நினைத்தகாரியத்தை யவர்களிடத்தில் சொல்லுவீரானால் அதற்குவிபரம் அவர்கள் சொல்லுவார்களையா மகாராஜனே ... ... ... ... ... ... ... ❋

### திருதராட்டிரன்-விருத்தம்.

சொல்லுவதென்ன வென்னிருகண்ணாய்த்- தோன்றிய வென்றம்பி பாண்டு, வல்லவனுன்சொல் வார்த்தைக்குப்பின்னே-மறுமொழி சொல்லிடாதவனாய், எல்லையிவ்வுலகமாண்டவன்சென்று- விட்டபின் மூதவன்மைந்தன் றருமன், நல்லவனவனுக் கிளவரசளிக்க- நான்மிக வெண்ணினேனைவ்மா... ... ... ... ... ... ❋

### வசனம்.

கேளுஞ்சுவாமி துரோணரே ஐயா பீஷ்மரே தம்பி விதுரா என்னவென்றால் நேத்திரமில்லாதவனெனக்கு இரண்டு நேத்திரமாகவும் என்

கருத்துக் கிசைந்தவனுகவுமிருந்த என்கண்மணியாகிய என்தம்பி பாண்டுமகாராசகன் என்னைச்செங்கோலுக் கதிபதியாக்கிச் சகலகாரியமுந்தானேபார்த்துவந்தான் ஐயோ அப்படிப்பட்டதம்பி இறந்துபோய்விட்டானே அப்படிதான் எனக்குமிது அநித்தியமானவுடல் ஆகையால் என்தம்பிபிள்ளைகள் ஐந்துபேர்களில்மூத்தவனுகியதருமராஜனுக்கு இளவரசுபட்டந் தரிக்கலாமென்று நினைத்திருக்கிறேன் இது உங்களுக்கு நலமாயிருக்கிறதா சொல்லுங்களையா. ... ... ... ... ... ... ... ... *

பீஷ்மர்-விருத்தம்.

நலத்திறுக்குரிய னன்மையிற்பெரியன் ... *
தலத்திறுன்வார்த்தை தவறிடாநெறியன் ... *
நிலத்திறுக்கிவனே நிருபனுய்நிறுத்தப் ... ... *
பெலத்தினீநினைத்தாய் பெரிதுபெரிதே ... *

வசனம்.

கேளப்பா திருதராட்டிரமகாராசனே மிகுதியான தருமகுணமும் நல்லதெளிவும் வல்லமையும்இவை யெல்லா மிருக்கும்படியாகிய அந்தத்தருமராஜனுக்கு இளவரசளிக்கலாமென்று கேட்டபோதேஎனக்குமிகவுஞ்சந்தோஷமாச்சுது ஆகிலும் உம்முடைய இஷ்டசித்தத்துக்குநான் என்னசொல்லுவேன் ஆகாகா வெகுபெரிது வெகுபெரிது. ... ... ... ... ... *

துரோணர்-விருத்தம.

பெரியவிவ்வுலகினுக்கும் பேசியகுலத்தினுக்கும் ... ... *
அரியவுன்செங்கோலுக்கும் அதிகமாஞ்சிரேட்டமாகும் ... *
உரியவுன்மனதுக்கேற்ற உத்தமபுத்திரனை ... ... ... *
தருமனுக்கரசையீந்தால் தடங்கலார்சொல்வாரையா ... ... *

வசனம்.

கேளுமையா திருதராட்டிரமகாராசனே நீர் நினைத்தபடியே அந்தத்தருமராஜனுக்கு இளவரசளித்தீரானல் இந்தப்பூமிக்கும் உம்முடையகுலத்துக்கும் உமதுசெங்கோலுக்கும் அதிகமாகியசிரேஷ்டமாகும் மேலும் உம்முடையமனதில் அன்பாகப்பட்டந்தரிக்கவேணுமென்று நினைத்ததற்குயார்தான் தடங்கல்சொல்வார்கள் ஆகாகா மகாயோக்கியம் மகாயோக்கியம் ... ... ... *

விதுரன்-விருத்தம்.

தடம்பெறுமார்பாவென்றன் றமையனேநின்றாள்போற்றி ... ✻
அடரபராஞ்சிதன்னி லரதனம்பதித்தாற்போல ... ... ... ✻
படர்ந்தவிவ்வுலகமெல்லாம் பரிசுத்தப்படுவதாக ... ... ✻
இடந்தருதருமனுக்கே யிளவரசளிக்கலாமே ... ... ... ✻

வசனம்.

கேளும் அண்ணா தருமராஜனுக்கு இளவரசு பட்டந்தரிக்கலா மென்று சொன்னதிடச்சித்தத்துக்கு ஆகா நானென்ன சொல் லுவேன் அண்ணா அப்படியே அந்தத்தருமனுக்குப் பட்டந்தரித் தீரானால் அபராஞ்சியில் மாணிக்கத்தைப் பதித்தாற்போலாம் நல் லயோசனைசெய்தீர் நல்லயோசனைசெய்தீர் ஆகா ஆகா ... ✻

கிருபன்-விருத்தம்.

அளிப்பதுபெரிதேயல்ல வவனிந்தவுலகையாண்டால் ..... ... ✻
களிப்பரிவ்வுலகத்தோர்கள் கருணைகூர்ந்திடுவார்தேவர் ... ✻
களிப்படுமிருளைநீக்கிச் சூரியனுதித்தாற்போலாம் ... ... ✻
இளைத்திடாத்தருமனுக்கே யிளவரசளிக்கலாமே ... ... ... ✻

வசனம்.

கேளுமையா திருதராட்டிரமகாராஜனே நீர் அந்தத்தருமராஜ னுக்கு இளவரசளிக்க அவனிந்த உலகத்தைப்பரிபாலனம்பண்ணு வானேயாகில் இருளைநீக்கிச் சூரியனுதையமானாற் போலத்தான். மேலுந்தேவர்களும் மிகுந்த கிருபைசெய்வார்கள் இந்த உலகத் தார்களும் அதிக சந்தோஷத்தை யடைவார்கள் ஆகையால் அந்த த்தருமராஜனுக்கு நீயிளவரசளிக்கிறேனென்று சொன்னது வெ குநேர்த்தி வெகுநேர்த்தி ... ... ... ... ... ... ✻

அசுவத்தாமன்-விருத்தம்.

நன்றுதானென்றுசொல்ல நமக்கதுநியாயமல்ல ... ... ... ✻
குன்றுநேர்தோளானந்தக் குலத்தினிற்சிரேட்டனைத் ... ... ✻
துன்றியதருமராஜன் றோன்றலாயமைந்தானால் ... ... ✻
அன்றுதானுடுசெய்த அதிட்டமென்பார்களையா ... ... ... ✻

வசனம்.

கேளுமையா கிருபாசாரியரே தருமராஜனுக்கு இளவரசளிக்க

லாமென்று சொல்ல நமக்குநியாயமல்ல அதேதெனென்றால் அவரவர் மனக்கருத்துகள் எப்படியிருக்குமோ ஆகையால் அந்தத்திருதரா ஷ்டிரமகாராஜன் ஒருபேதாபேதங்களுமில்லாமல் அந்தத்தருமரா ஜனுக்கு இளவரசுப்பட்டந்தரிக்க அவனுமதற்குச்சம்மதித்து அமை ந்தானேயானால் அன்றுதான் இந்த நாடுசெய்த அதிஷ்டம் அப் போதுநமக்குஞ்சந்தோஷந்தானேயாகிருபரோ. ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

ஐயமென்ன வென்மனம்போ லுமக்கெல்லோர்க்கும் ... ... *
... அப்படியே சந்தோஷ மாயிருக்கத் ... ... ... *
துய்யனும் விதுராவென் தம்பிமைந்தன் ... ... ... *
சொல்லரிய தருமனைநீ வரவேசொல்வாய் ... ... *
உய்யுமிந்த நகரமெலா மலங்கரிக்க ... ... ... *
உலகறியப் பறையதனை யறையச்சொல்வாய் ... ... *
வையமெலா மவனடிக்கீழ் வணங்கிவாழ ... ... ... ... *
வைக்கிறே னிளவரசளிக்கிறேனே ... ... ... *

வசனம்.

கேளுங்கள் குருக்கள்மார்களே ஐயாபீஷ்மரே என்மனம்போ ல உங்களுக்கெல்லாருஞ்சந்தோஷமாயிருக்கிறபடியினாலே சந்தேக மென்ன-உலகத்தார்களும் ஐம்பத்தாறுதேசத்தரசர்களும் சத்து ருக்களும் வணங்கும்படி தருமராஜனுக்கே இளவரசுபட்டந் தரி க்கிறேன் தம்பி விதுரா நீசீக்கிரமாகப்போய் தருமராஜனையழை த்துவா மேலும் நகரமெல்லாம் நேத்தியாக அலங்கரிக்கும்படி உலகமுழுதும் அறியும்படி பறையறையச் சொல்லுவாய் தம்பி விதுரா. ... ... ... ... ... *

விதுரன்-வசனம்.

தேவரீர்கட்டளையின்படியேநடந்துகொள்ளுகிறேன் அண்ணா.

விதுரன்- விருத்தம்.

அளிக்கிறேனென்றுசொன்ன அண்ணலுத்தரப்படிக்குக் ... *
களிப்புளசேர்விக்கிரா கடிகியேநீபோயிந்த ..... ... *
ஒளிப்பெருநகரமெல்லா முசிதமாயலங்கரிக்கப் ... ... ... *
பழிப்பிலாவுலகம்யாவும் பறைதனையறையச்செய்வாய் ... *

வசனம்.

ஆரடா அடா சேர்வைக்காரா இராஜாதிராஜனை திருதராட்டிர மகாராஜன் உத்தரவின்படியே நீ சீக்கிரமாகப்போய்த் தருமராஜனுக்கு இளவரசுபட்டந் தரிக்கிறார்களென்று இந்த நகரமெல்லாம் வெகுநேர்த்தியா யலங்கரிக்கத்தக்கதாக உலகமுழுதும் அறியும்படி பறையறையச்செய்யும்பிள்ளாய் சேர்வைக்காரா ... ... ✻

சேர்வைக்காரன்-விருத்தம்.

சத்தியம்வழுவிலாத தயாள்வித்தகனேயுன்றன் ... ... ✻
சித்தத்தின்படியேயிந்தச் சீர்பெறுமுலகத்துள்ளோர் ... ... ... ✻
முற்றிலுமறிவதாக முரசினையடிக்கச்செய்து ... ... ... ✻
பத்தியாய்வந்துன்முன்னே பகருவேன்பாருஞ்சுவாமி ... ... ✻

வசனம்.

கேளுஞ்சுவாமி விதுரராஜப்பிரபுவே தேவரீர் திருவாக்கின்படியே நகரமெல்லாம் அலங்கரிக்கத்தக்கதாக உலகமுழுதும் அறியும்படி பறையறையச் செய்விக்கிறேன் சுவாமி ... ... ... ✻

தோட்டிவருகிற-விருத்தம்.

ஓங்கியேநிமிர்ந்துபூரித் துசிதமேருவுக்குநேராய்த் ... ... ✻
தாங்கியபுஜபலாக்கிர தருமபுத்திரன்றனக்கு ... ... ... ... ✻
சங்கின்வரச்சிக்க லெவர்களுமறிவதாகச் ... ... ... ✻
சோங்கிலாப்பறையடிக்குந் தோட்டியும்வருகின்றானே ... ... ✻

வசனம்.

அஃதெப்படியென்றால் திருதராட்டிரமகாராஜன் சபைக்குத் தோட்டிவருகிற விதங்காண்க ... ... ... ... ... ... ✻

தோட்டிவருகிற-தெம்பாங்கு.

முத்துக்கறுப்புக்குள்ளி-என்னை ... ... ... ✻
மூலைக்கழைத்தகறுப்பாயி ... ... ... ... ✻
ஒத்துநாமெல்லோரும்-இங்கே ... ... ... ✻
ஓடித்தோப்பிலிப்போதுகூடுவமே-தெந்திறனேன்தெ
[ன்றனே-போடுசில்லா-போடுசில்லா

மாரிமுத்துவீராயி-மெத்த ... ... ... ... ❋
மஞ்சள்மினுக்கி-இல்லிக்கண்ணுளே ... ... ... ❋
சேரவந்துநீமுத்திதந்தால்-உன்னைச் ... ... ❋
சேர்த்தணைசுகசிகிசாம் போடுவனே - தெந்தினுனே
தென்னுனே-போடுசில்லா-போடுசில்லா,

குத்துமுலையாளே- உன்னைக் ... ... ... ❋
கோபிநான்வந்தெனடிமலையாளே ... ... ❋
சந்தேசுனுக்கிக்கொண்டு-நீ ... ... ... ❋
சாடையாய்ப்போறையே தோப்புக்குள்ளே-தெந்தினு
[னேதென்னுனே- போடுசில்லா போடுசில்லா,

கொண்டையவிழ்கிறதே-யுந்தன் ... ... ... ❋
குத்துமுலைபிண்டுங் கூத்தாடுதே-நீ ... ... ... ❋
ஒண்டியாகவே போகிறதைப்பார்த்தால் ... ... ❋
உருகுதேயென்மனம்வீராயி - தெந்தினுனே தென்னு
[னே போடுசில்லா போடுசில்லா,

## தோட்டிவருகிற-தரு.

## இ-ம். பந்துவராளி - தாளம் - ஆதி.

தோட்டிநாஞண்டை-பறையடிக்குந்-தோட்டிநாஞண்டை...❋
நாட்டிலரசர்கள் புகழ்விக்கிரம திருத-ராட்டிரமகிபதிபுகழ்
வுச்சிதகொலுத் ... ... ... ... ... (தோட்டிநாஞண்டை)

ருத்திரபூமியிலே- சிவன்- சத்தியுடன்விளை யாடையிலே-தத்தி
மிதிமியென்று- பதினெட்டு- தாளவினோத முழங்கிடவே-குற்றமி
ல்லாதசங்கீதபரத - கோலாகலத்துடன் கூடிநடமிடுந் (தோ)

தேவேந்திரன்மகளை-முருகர்-திருக்கல்யாணஞ்செய்கையிலே-
பூவேறியதிருவை- மாயன் - புதுக்கல்யாணஞ்செய்கையிலே - தா
வியேமுப்பத்துமுக்கோடி தேவருந்-தங்கவருகவே சங்கப்பறைய
டிற ... ... ... ... ... (தோட்டிநாஞண்டை)

நாலுவேதசாத்திரம் - ஆகமம் - நண்ணும்பலவித காவியமுந்
நூலுள்ளமுறைவகையும்-ஆண்டை-தொடிக்குள்ளே ஆராய்ந்துணா
ர்ந்திடுவேன்- சிலவதிஷ்டன்சக்கிலிப்பெண்ணைச் - சேர்ந்தவிமக்
கதைத்தெளிந்துசொல்லுங்கெட்டி ... (தோட்டிநாஞண்டை)

சேர்வைக்காரன்-விருத்தம்.

தடுத்தருபஞ்சையவென்றதருமபுத்திரன்றனக்கே ... ... ... *
அடுத்திளவரசளிக்கவரசர்கோனினைத்தலாலே ... ... ... *
விடுத்தொளிர்மகுடமன்னர்வீதிகள்மற்றுமெங்குந் ... ... ... *
தொடுத்தறிவிக்கவேண்டுந்தோட்டிநீவருகுவாயே ... ... ... *

வசனம்.

ஆரடா அடா தோட்டி இராஜாதிராஜனை திருதராட்டிர மகாராஜன் தருமராஜனுக்கு இளவரசுபட்டங்கட்ட நினைத்தபடியினாலே இந்தப்பட்டணை முழுதும் பறையறையவேண்டுஞ் சீக்கிரமாகவாடா அடாதோட்டி ... ... ... ... ... ... ... *

தோட்டி-விருத்தம்.

எண்டிசையரசரெல்லாமிணையடிபோற்றுமன்னன் ... ... *
திண்டிறற்சமுகங்காக்குஞ்சேவகதீராபோற்றி ... ... ... *
கண்டுநின்வசனத்தாலேகாரியந்தெரிந்துகொண்டேன் ... *
விண்டுநீசொன்னவாறேவிசிப்பறையறைகுவேனே ... ... *

வசனம்.

ஐயா ஆண்டைசாமி கும்பிடுகிறேன் சாமி நீங்கயெனக்கு வெகுதூரஞ் சொல்லவேணுமா ஆண்டை அடோயாசாண்டை உங்கள் முகத்தைப்பார்க்கச்சேதானே அழைக்கவந்தாயென்று தோணிச்சு அப்படியேவாறேன் பறையடிப்போம் வா ஆண்டை இம் செல்லையா செல்லையா ... ... ... ... ... ... ... *

பறையறையுங்கட்டியம்.

ராஜாதிராஜதிர்தராட்டிரமகாராஜ ... ... ... ... *
ராஜபூபதிமகிழ்ந்து ... ... ... ... *
ராஜனாகியபாண்டு ராஜன்மைந்தன்றரும ... ... ... *
ராஜனுக்கிள வரசுதானே ... ... ... ... *
தேசமுடன்முடிசூட்ட மனதினினைத்தலால் ... ... *
நிலமுழுதுமரசிக்கும் ... ... ... ... *
நெடியமுடிமன்னரொடு மகுடவர்த்தனர்திசை ... ... *
நிலத்துமன்னவர்களேனும் ... ... ... ... *
வாசமிகுதார்புனைந்தருமிட்ட வர்த்தனர்கள் ... ... *
மன்னுபடை வீரர்க்கும் ... ... ... ... *

வங்கியமீர்தங்கிபேரிகைபூரியெக்காளம் ... ... ... *
மல்லரிநரதுந்துமி .... ... ... *
ஓசைமிகுதாளங்கள் சங்கமொடுபம்பைக ... ... *
ளுடுக்கைமுதலாவொலிக்க ... ... ... *
ஒப்பரியவேதவேதியர்களெல்லோருமே ... ... *
யொருநொடியில் வந்திடுகவே ... ... ... ... *

## விதுரன் தருமராசனை யழைக்கவரும்
## பொது-விருத்தம்.

இவ்வகையாகவந்தவெழின்மிகுதிருதராஷ்டிரன் ... ... ... *
தெவ்வடுதருமனுக்குத்திகழ்முடிதரிப்பதற்காய்ச் ... ... ... *
செவ்வையாயழைக்கச்சொல்லச்செயமிகுவிதுரன்றானும் ... *
ஒவ்வியேதருமன்றன்னையுவந்தழைத்திடவந்தானே ... ...... *

## கட்டியக்காரன்-வசனம்.

அஃதெப்படியென்றால் இவ்விதமாகத் திருதராட்டிர மகாராசன் தருமராசனுக்கு இளவரசளிக்கும்படியாகச்சம்மதித்து விதுர மகாராஜனையனுப்ப அந்தவிதுரமகாராஜன் சந்தோஷித்துடன் தருமராஜனை யழைக்கவருகிற விதங்காண்க ... ... ... ... *

## தரு-இராகம்- புன்னாகவராளி-தாளம்- ரூபகம்.

விவ்விதுரன்-வந்தான்- ... ... ... இதோ,
விவ்விதுரன்வந்தான் ... ... ... ... ... *
வல்லிளவரசாக அழைக்க - மகிழ்ந்து தருமராசனையழைக்க
(விவ்விதுரன்வந்தான்)
எண்ணினவெண்ணம் பலித்ததென்றுநாடி = மெய்யாகிய தவம் ... *
இன்றைக்கே முடிந்ததேயெனமனங்கூடி ... ... ... ... *
அண்ணன் திருதராட்டிரனைக்கொண்டாடி=ராஜராஜர்மதிக்க ... *
அவனிபாலத்தருமராசனைத்தேடி=திடமொடுவேவாடி (விவ்வி)
கடுத்தநெருப்பில்குளிர்கண்டதெனத்தேறி= கெடுத்திடுபொல்லாக்
கடுவிஷத்தன்னி லமிர்தமிதென்றுகூறி ... ... ... ... *
தொடுத்திடுசர்பனை வருமுன்னேதான்வீறி-அனேவோருந்
துதிக்கத்தொல்லுலகாள வைக்கிறேனென்றுகோறி - உவகையினி
லேறி ... ... ... ... ... ... (விவ்விதுரன்வந்தான்)
வெள்ளங்கொண்டபொருளீதாமெனவெண்ணி = படுகொடியவஞ்
சினர்தால்வர் யோசனைக்கு முன்னண்ணி ... ... ... [சக

சன்னைவிடுத்ததெனவே யோசனைபண்ணி - தருமராஜன் ... *
சங்கடமெல்லாந்தொலைந்ததெனவேயெண்ணி - தயவுடனேமன்னி
வில்விதுரன்வந்தான் - இதோ,

தருமராஜன் - மட்டுவிருத்தம்.

சத்தப்பாமரர்தம்மைவிலக்கியே ... ... *
கற்றப்பாவலர்தம்மைக்கலந்திடும் ... ... *
உற்றப்பார்மன்னர்மண்டலீகர்துதி ... ... *
சிற்றப்பாவுன்றன்சீரடிபோற்றியே ... ... *

விதுரன் - விருத்தம்.

அருமையன்பு பொறுமையும் ... ... *
பெருமைநன்மை திறமையும் ... ... *
ஒருமையான நிலைமைசேர் ... ... *
தருமபூபவாழியே ... ... ... *

தருமராஜன் - விருத்தம்.

நெறியுளமகுடமன்னர்நெருங்கியமண்டலீகர் ... ... ... *
நிறைதருமைம்பத்தாறுதேசத்துராசர்சூழ்ந்து ... ... ... *
நிறைதருசொலுவைநீக்கிநிர்நிமித்தமதாயின்று ... ... ... *
செறிவுடனிங்குவந்தசெய்கையுரைசெய்வீரே ... ... ... *

வசனம்.

கேளுமென் சிறியதந்தையே ஐம்பத்தாறு தேசத்தராசர்களும் வேதவேதியருஞ் சூழத்தக்கதாகவிருக்குஞ்சொலுவைவிட்டுவிட்டு நிர்நிமித்தமாகத் தேவரீரிவ்விடத்துக்கு வந்தகாரியமென்ன அதையெனக்குத் திருவுளம்பற்றியருளவேணுஞ் சிறியதந்தையே *

விதுரன் - விருத்தம்.

மதிகுலத்தியாம்பாண்டுமைந்தனேயென்றன்கண்ணே ... ... *
துதிபெறுந்தருமனேநற்றோன்றலேசொல்லக்கேளாய் ... ... *
எதிரொருவருமில்லாமலிளவரசளிப்பதற்காச் ... ... ... *
சதிர்பெறும்பெரியதந்தைசபைக்குனைவரச்சொன்னார் ... *

வசனம்.

கேளப்பா என்னருமைமைந்தனே தருமபுத்திரா உன்பெரியதந்தையாகிய திருதராட்டிரமகாராசன் உன்னையதிக சீக்கிரமாக அழைத்துவரச்சொன்னார் அதேதென்றால் எவ்வளவுந் தம்மனதிற் களங்கமில்லாமல் துரோணர் பீஷ்மர் முதலாகிய குருக்கள்மார்களும் அரசர்களுஞ் சூழ்ந்திருக்குஞ் சபையில் உனக்கு இளவரசுப

ட்டங் கட்டுகிறேனென்று நிச்சயமாகச்சொல்லி உன்னைச்சீக்கிரமாக அழைத்துவரச் சொன்னாரப்பா தருமராஜனே ... ... *

தருமராஜன்-விருத்தம்.

குறைந்திடாநெறியோனென்றுகுவலயமுழுதுந்தேர்ந்து ... *
திறம்பெறப்போற்றுகின்றசிற்றப்பாசொல்லக்கேளாய் ... *
பிறந்திதுவரைக்குமிந்தப்பிரபஞ்சநடக்கையேதும் ... ... *
அறிந்திடாச்சிறுவன்யானேஅவனியையாள்வேனையா ... ... *

வசனம்.

கேளும் என்சிறியதந்தையே பிறந்து இதுவரையிலும் பிரபஞ்சத்தினுடைய நடக்கையைச்சிறிதும் அறியாத சிறுவன்யானே இந்தஉலகத்தையாளுவேன்தெரியச்சொல்லுமையாசிறியதந்தையே.

விதுரன்-விருத்தம்.

அவனியினன்மைதீமையறியாதபேரானாலும் ... ... ... *
பவமிலாமனத்தராகிப்பார்புரந்திடுவாராகில் ... ... ... *
தவறிலாதவர்செங்கோலைத்தழைத்திடச்செய்துவைப்பான் ... *
புவனரக்ஷகனுமந்தப்புண்ணியனருளால்வாராய் ... ... *

வசனம்.

கேளப்பாதருமராஜனே இந்த உலகத்திலே நன்மைதீமை என்றும் இரண்டும் அறியாதவர்களானாலும் பாபமில்லாத மனத்தராகி உலகத்தை யாளுவார்களேயானால் புவனரட்சகனாகிய புண்ணியன் அருளினாலே சத்தியம்வழுவில்லாது அவர்களுடைய செங்கோலைத் தழைக்கச் செய்வான் ஆதலாலே என்சொல்லுக்குத் தடைசொல்லாமல் வருவாய்மகனே தருமபுத்திரா ... ... ... ... *

தருமராசன்கவி.

அப்படியானால் மெய்ப்படுமன்றோ ... ... *
அப்படியுனது சொற்படிவருவேன். ... ... *

வசனம்.

அப்படியே வருகிறேன் சிறியதந்தையே ... ... ... *

தருமராஜன்வருகிற-பொதுவிருத்தம்.

விதுரனங்கெடுத்துக்கூறும்விசேஷத்தைக்கேட்டறிந்து ... *
துதியிலங்கவரைப்போற்றித்தனித்துத்தம்பியரிலாமல் ... ... *
மதிகுலதிருதராட்டிரமன்னவன்சமுகந்தன்னில் ... ... *
நதிசெஜர்போற்றுந்தர்மராஜனும்வருகின்றானே ... ... ... *

வசனம்.

அஃதெப்படியென்றால் திருதராட்டிரமகாராசன் சபைக்குத்தருமார்ஜுன் வருகிறவிதங்காண்க ... ... ... ... ... ※

தருமராஜன்வருகிற-தரு
இ-ம்.தோடி-தாளம்-ஆதி.

தருமபுத்திரன்வந்தான்-கண்மணியான ... ※
தருமபுத்திரன்வந்தான் ... ... ... ※

அருண்மைச் சிறியதந்தை விதுரன்சொல் லதுகொண்டு ... ... ※
ஆரிபீஷ்மன் துரோணன் கிருபனு மேவுமண்டு ... ... ... ※
வரிசைப் பொன்னின்மகுட மன்னரிருந்து கொண்டு ... ※

மருவியநற்சபை-தனிலெண்ணயித்தினம் ... ... ※
வரவேயழைத்திடு-வகையெதெனக்கொடு ... (தரும)

மாமுனிதுருவாசர் மந்திரத்தாலுதித்தோன் ... ... ... ※
மற்றநாலுபேர்தம்பி மார்கள்தங்களில்மூத்தோன் ... ... ※
காமனைநிகரானகாட்சி யழகுவாய்த்தோன் ... ... ... ※

காரினையொத்துயர்-மேனியடைத்திடு ... ... ※
நாரணனைத்துதி-யோடுநல்வித்தக (தருமபுத்திரன்)

மன்னன்திருதராட்டிரன்மகிழ்முகந்தனைக்காண ... ... ※
மற்றுமுள்ளோர்களின் மனதுமகிழ்ச்சிபூண ... ... ... ※
நன்னயம்விண்டதுரி யோதனன்மனங்கோண ... ... ※

நாகரிகப்பிர- தாபமிகுத்திடு ... ... ... ※
யோகமிகுத்துமெய்ப்- போகநிலைத்திடு (தருமபுத்திரன்)

நாவினிற்சொன்னசொல்லைத் தவறுதசத்தியவாக்கியன்
நாற்றிசைபுள்ளோர்களும் போற்றுமதிசிலாக்கியன் ... ※
பூவுலகத்திலேமேலாம் புண்ணியகுணயோக்கியன் ... ... ※

புளகிதவிற்பன - லளிதமிகுத்திடு ... ... ... ※
வளமையினற்சுயா-இளவரசைச்செய ..........(தரும)

தருமராஜன்-விருத்தம்.

சந்திரகுலமிகவிளங்கிச்செங்கோல்தாங்கச் ... ... ※
சர்ச்சனசாதுக்கனிந்தத்தரணியோங்க ... ※
விந்தைமனுவிக்ஞானம்போதித்திந்த ... ... ... ※
வேந்தர்களைவாழ்விக்கும்மேன்மைபெற்றீர் ... ※

அந்தமுடனாதிமுதலாகிநின்ற ... ... ... ... ... ❋
அரும்பொருளினுண்மையெலாமறிந்துணர்ந்து ❋
புந்தியினிலன்புபெறுகுருக்கள்மாரே ... ... ... ❋
பொன்னடிகளானினமும்போற்றிபோற்றி ... ❋

குருக்கள்மார்கள்-ஆசிர்வதிக்கும்-சுலோகவிருத்தம்.

தீர்க்காயுஷியமதீனரக்ஷகவிபூடதெதிட்பியரத்நாகரம் ... ... ❋
மார்க்கண்டஞ் சதகோடிசந்திரமகுடம் மாணிக்க தீபோற்சவம் ❋
வார்த்தாரஞ்சிதசாம்பிரதாயலலிதம் மஞ்ஞவாக்கியசித்தநிருபம் ❋
பார்த்திபஜயபாண்டு புத்திரகுணம்பிரபுடீக தர்மாசுபம் ... ❋

பீஷ்மனைத்தருமராஜன்

துதிக்கும்-விருத்தம்.

முக்கியமாயிக்குலத்துமுதல்வனாயிருந்துமேலும் ... ... ... ❋
ஒக்குமிவ்வுலகமெல்லாமொருகுடைநிழலிலாளப் ... ... ❋
பக்குவந்தெரிந்துஞ்சொல்லும்பான்மையெல்லாமறிந்த ... ... ❋
தக்கவென்பாட்டாபீஷ்மாசாரியேபோற்றிபோற்றி ... ... ❋

பீஷ்மர்தருமனைவாழ்த்து-விருத்தம்

கண்ணினன்மணியேவாழிகனகநற்குன்றேவாழி ... ... ❋
விண்ணவர்திசயிக்கவிபுவெனவந்தோய்வாழி ... ... ... ❋
நண்மைசேர்மனுவிக்ஞானநூட்பமெல்லாந்தெரிந்த ... ... ❋
தண்மையுந்தயவுமுள்ளதருமபுத்திரனேவாழி ... ... ... ❋

வசனம்.

வாழிவாழி தருமராசனே நீ தீர்க்காயுளுடனேவாழக்கடவாய்❋

திருதராட்டிரனை-தருமராஜன்.

போற்றும்-விருத்தம்.

பெருந்தவிவ்வுலகந்தன்னிற்பெயருமயிட்ருமற்றும் ... ... ❋
பொருந்தமுநீக்கி நல்லமனுவிக்ஞானப்படிக்கே ... ... ❋
திருத்தமாஞ்செங்கோலதன்னைத்தீர்க்கமாய்நடத்தவென்றும் ❋
வருத்துறுபெரியப்பாவுன்கழலினைபோற்றிபோற்றி ... ... ❋

திருதராட்டிரன்-விருத்தம்.

கண்ணுறுமென்னிலேவின்வண்ணமேதிரொருமொழிபேசாத ... ❋
புண்ணியசாலிபாண்டுபுத்திரனையவதரித்து ... ... ... ❋

மண்ணின்மேல்நிருபர்க்கெல்லாமாபதியாகிவாழ்வாய் ... ... ✻
தண்ணளியமனத்தனான தருமபுத்திரனேவாழி ... ... ... ✻

இதுவுமது.

செப்புநல்ல குணமுடைய தருமபுத்திரா ... ... ✻
திறமையுள்ள வென்றம்பி பாண்டுராசன் ... ✻
ஒப்புமென்னை ராசாதிராசனுக்கி ... ... ... ... ✻
யுலகமெல்லாமொருகுடையி லாண்டுவந்தான் ✻
அப்படியேநீயுமிளவரசாயிருந்த ... ... ... ... ✻
அவனியெல்லாமுழுதளித்தாலார்க்குங்கீர்த்தி ... ✻
தப்பறவேயெனக்கும்வெகுகீர்த்தியாகும் ... ... ✻
தரணியெல்லாங்குறை வறவேதழைக்குந்தூத்தாமே

வசனம்.

நல்லகுணமுடைய மகனே தருமபுத்திரா உன்பிதாவாகிய என்தம்பிபாண்டுராஜன் என்னைச்செங்கோலுக் கதிபதியாக்கி இவ்வுலகமெல்லாம் ஒருகுடைக்கீழாண்டு சகலகாரியமுநடத்தானே பார்த்துவந்தான் அப்படியே நீயுமிந்த இளவரசுபட்டங்கட்டிக்கொண்டு உலகமுழுதும் ரட்சிப்பாயாகில் உலகத்தார்களுக்கும் எனக்கும் மிகுந்த கீர்த்தியாயிருக்கும் மேலும் உலகமெல்லாந்தழைக்கும் ஆதலாலே உன்னை மனப்பூர்த்தியாக வரவழைத்தேன் மகனே தருமபுத்திரா ... ... ... ... ... ... ... ... ... ✻

தருமராஜன்-விருத்தம்.

தழைத்திடச்செங்கோலோச்சுந்தந்தையேயொருவின்னப்பம் ✻
இழைத்திடுநன்மைதீமையிரண்டையுமறியாப்பாலன் ... ... ✻
பழிப்பிலாவுலகையாளும்பான்மைதானறிவேனோசொல் ... ✻
எழுத்தறியாதபிள்ளையிலக்கணம்படிப்பதுண்டோ ... ... ✻

வசனம்.

கேளும் என்பெரியதந்தையே இது நன்மை தீமையென்று அறியாத சிறுகுழந்தையாகிய நான் இவ்வுலகத்தையாளும் வகையையறிவேனோ எழுத்தறியாதபிள்ளை இலக்கணஞ் வாசிப்பதுண்டோ சொல்லுமையா என்பெரியதந்தையே ... ... ... ✻

பீஷ்மர்-விருத்தம்.

வாசிப்பதுண்டோவென்றுமறுத்துநீசொல்வதென்ன ... ✻
யோசிக்குமளவிலுன்போலுலகத்திலொருவரில்லை ... ... ✻

பாசத்தாலுலகையாள்வர்பார்மன்னரல்லால்நீதி ... ... ※
நேசத்தாலுலகங்காக்குநிருபருமுண்டோசொல்லாய் .... ※

வசனம்.

கேளப்பா தருமராஜனே இந்த உலகத்தையாளுகின்ற அரசர்கள் பொன்னாசை பெண்ணாசை மண்ணாசை என்னும் மூவகை ஆசையினாலே செங்கோல்செலுத்துகிறதேயல்லாமல் மநுநீதிமுறைப்படியே செங்கோல் செலுத்தியுலகத்தை ஆளுகிறதில்லை நீமநுநீதிமுறைமைவழுவாமல் தருமசிந்தையோடுங்கூடி செங்கோல்செலுத்த மாட்டுவையென்று எனக்குத்தோன்றுகிறது ஆகையால் நீயே உலகத்தையாளலாமப்பா தருமராஜனே ... ... ... ... ※

துரோணர்-விருத்தம்.

உண்டெனச்சொல்வதற்கேயொருதிஷ்டாந்தந்தான்போதும்...※
பண்டுநீபடித்தபோதேபகுத்தறிவுடனேதேர்ந்த ... ... ※
துண்டுன்போலுலகந்தன்னிலொருவருமுணரவில்லை ... ※
கண்டதுநாங்கள்நீயேகாசினியாளலாமே ... ... ... ※

வசனம்.

கேளப்பாதருமராஜனே ஆதியிலே பள்ளிக்கூடத்தில் நீ படிக்கும்போதே அறஞ்செயல்விரும்பு ஆறுவதுசினம்முதலிய நீதிவாக்கியங்களிலுள்ளபயன்களையெல்லாம் தெரிந்துகொண்டாய் ஆகையால் உன்னைப்போல அறிந்தவர்கள் உலகத்திலொருவருமில்லை நீமநுநீதி முறைமைவழுவாமல் தருமசிந்தையோடுங்கூடி நடப்பாயென்று எனக்குத்தோன்றுகின்றது நீயேயுலகத்தையாளலாமப்பாதருமராஜனே ... ... ... ... ... ... ... ※

கிருபன்-விருத்தம்.

ஆமென்றுமாகாதென்றும் அறைந்திடயார்தாம்வல்லார் ... ※
தேமிகுமுலகையாளுநிருபராயுள்ளோர்க்கெல்லாந் ... ... ※
தாமதகுணமேயல்லால்தருமநற்குணமேயில்லை ... ... ※
வாமநற்றருமபூபாவையநீயாளத்தக்கோய் ... ... ... ... ※

வசனம்.

கேளப்பா தருமராஜனே இவ்வுலகத்தை யாளுகின்ற அரசர்களுக்கு ஆசைமிகுதியான தாமதகுணமேயல்லாமல் உன்னைப்போலத்தருமசிந்தையோடுங்கூடி மநுநீதிசெலுத்துவார்களொருவருமில்

லை ஆகையால் நீயேசெங்கோல் செலுத்தவல்லவனென்று எனக்குத்
தோன்றுகின்றது தருமராஜனே ... ... ... ... ✻

அசுவத்தாமன்-விருத்தம்.

தானமுந்தவமுநல்லதன்மையும்வண்மையான ... ... ✻
மானமும்பெரியோர்தப்பால்வணக்கமுமிணக்கந்தானும் ...... ✻
தீனர்க்காக்குநல்லதிடசித்தகுணமும்யாவும் ... ... ✻
ஆனநற்றருமபூபாஅவனிநீயாளலாமே ... ... ... ✻

வசனம்.

கேளப்பா தருமராஜனே தானமும் தவமும் நல்லதன்மையும் வண்மையும்பெரியோரிடத்தில் வணக்கமும் இணக்கமும்தீனர்களைக்காக்குந் திடசித்தமும் ஆகிய இவைகளெல்லாம் உன்னிடத்திலிருக்கிறபடியினாலே நீயே இந்த உலகத்தை யாளலாமென்று எனக்குத் தோன்றுகின்றது தருமராஜனே ... ... ... ... ... ✻

தருமராஜன்-விருத்தம்.

எடுத்திளவரசெனக்கேயேற்படவளித்தேயென்னைச் ... ... ✻
சடுத்தமில்லாமற்காக்குந்தந்தையேபொருவின்னப்பம் ... ✻
கொடுத்திடுசெங்கோல்தன்னிற்குற்றங்கள்வந்திட்டாலும் ✻
தொடுத்தென்மேற்பழிதானென்றுஞ்சொல்லவேயொண்ணாதையா

வசனம்.

கேளும் என்பெரியதந்தையே நானே இந்த உலகத்தையாளலாமென்று தேவரீருங் குருக்கள்மார்களும் மற்றுமுள்ளவர்களுஞ் சொல்லும்போது அதுகூடாதென்று தடைசொல்லுவேனு ஆனால் தேவரீரொன்றுக்குப் பெரியமனதுபண்ணவேணும் அதென்னவென்றால் நான்சிறுபிள்ளையானபடியினாலே எனக்குக்கொடுக்கப்பட்ட செங்கோலில் யாதொருகுற்றம்வந்தாலும் என்மேல் பழியில்லாமல் காக்குங்கடமை உங்களதுதானையா பெரியதந்தையே ... ✻

திருதராட்டிரன்-விருத்தம்.

மன்னவர்துதிக்குமதிகுலக்கொழுந்தே ... ... ... ✻
பன்னியதருமபாலனேகேளாய் ... ... ... ... ... ✻
இந்நிலமதிக்குமிளவரசியற்றத் ... ... ... ... ✻
தன்மைசேர்சிங்காசனத்தினிலிருப்பாய் ... ... ... ✻

வசனம்.

கேளப்பா தருமராஜனே இராஜாதி ராஜர்களெல்லாந் துதிசெய்யும்படியாகஇந்தச்சிங்காசனத்திலிருப்பாய்மகனே தருமபுத்திரா

தருமராஜன்-விருத்தம்.

இருந்திடச்சொன்ன ... ... ※
பெருந்தகைமன்னு ... ... ... ※
பொருந்துமாசனத்தி ... ... ※
லிருந்திடுவேனே ... ... ... ... ※

வசனம்.

அப்படியே சிங்காசனத்தி லிருக்கிறேனையா பெரிய தந்தையே ※

திருதராட்டிரன்-விருத்தம்.

சங்கையில்லாதபீஷ்மாசாரியேசொல்லக்கேளாய் ... ... ※
மங்களகரமாயிந்தமகுடத்தைவாங்கிமேலாம் ... ... ... ※
நங்குலகுருக்களானநற்பெருந்துரோணன்கையில் ... ... ※
துங்கமதாகவீந்துசூட்டிடச்சொல்லுவாயே ... ... ... ※

வசனம்.

கேளுமையா பீஷ்மாசாரியரே இந்த மகுடத்தைவாங்கி நம்முடைய துரோணர்கையிற்கொடுத்து நல்லமங்களம்வரும்படி ஆசிர்வதித்துச் சூட்டச்சொல்லும் ஐயா பீஷ்மரே ... ... ※

பீஷ்மர்-விருத்தம்.

சூட்டியமகுடமன்னர்தோன்றியசபையிற்றாளும் ... ... ※
தேட்டமாய்நன்மைதீமைசெப்பியதுரோணனேகேள் ... ... ※
வாட்டமில்லாமலிந்தமகுடத்தைத்தருமனுக்குப் ... ... ※
பூட்டியாசீர்வதித்துப்பூமியையாளச்செய்வாய் ... ... ... ※

வசனம்.

கேளுந் துரோணாசாரியரே மிகவும் மங்களகரம் பொருந்திய இந்த மகுடத்தைத் தருமராஜனுக்குத்தரித்து ஆசீர்வதித்துப் பூலோகத்தையாளச்சொல்லுந் துரோணாசாரியரே ... ... ※

துரோணர்-மகுடஞ்சூட்டும்-விருத்தம்.

வேதவேதியர்துதிக்கவிண்ணவரதிசயிக்க ... ... ... ※
ஆதியாங்குருகுலத்துக்கதிபதியாயிருக்க ... ... ... ※
நீதியாயுலகுக்கெல்லாநிருபனாயிருந்துவாழச் ... ... ... ※
சோதிசேர்மகுடந்தன்னைச்சூட்டினேன்சூட்டினேனே ... ※

வசனம்.

வேதவேதியர்கள் துதிக்கத்தகாக தேவர்கள் அதிசயிக்கத்தகாக

று துந்துமிமுழங்க ததாஸ்து புஷ்பமாரிபொழிய ததாஸ்துஇந்த ஐம்பத்தாறுதேசத்து அரசர்களுக்கெல்லாம்அதிபதியாயிருந்துவாழ ததாஸ்து சகலரும் அறியும்படி தருமராஜனுக்குமகுடத்தைச் சூட்டினேன் சூட்டினேன் சமஸ்த மங்களாதிபவந்து விபவசித்திரஸ்து ... ... ... ... ... ... ... ❋

திருதராட்டிரன்-விருத்தம்

மைந்தாதருமாமநுமுறைவழாமல் ... ... ... ... ❋
தொந்தார்த்தமதாய்த்துறையெனவிளங்கிச் ... ... ... ❋
சிந்தாமணிபோற்செகமெலாம்புரக்க ... ... ... ... ❋
இந்தாசெங்கோலிளவரசியற்றே ... ... ... ... ❋

வசனம்.

என்னுசைக் கண்மணியான மகனே தருமபுத்திரா மநுநீதிமுறைமைவழுவாமல் இந்த ஐம்பத்தாறுதேசத்து ராஜாக்களுக்கும் அதிபதியாயிருந்து உலகமெல்லாம்மிகுந்த சந்தோஷத்தையடையும்படியாகவும் அதனுலெனக்குக் கீர்த்திவரும்படியாகவும் இராச்சியபரிபாலனம் பண்ணக்கடவாய் இந்தாசெங்கோல்மகனே தருமபுத்திராவென்று திருதராட்டிரன் செங்கோலையளித்தான் ... ❋

பொது-விருத்தம்.

உலகெலாம்வாழியென்றுமுயிரெலாம்வாழிஞானப் ... ... ❋
புலமையோர்வாழியைந்துபூதமும்வாழிபொய்யாத் ... ... ❋
தலைமையோர்வாழிதுய்யதகைமையோர்வாழிதர்ம ... ... ❋
நிலைமைசேர்பவர்கள்யாரும்நீடூழிகாலம்வாழி ... ... ... ❋

முதற்பிரிவு-முற்றிற்று.

# இரண்டாம்பிரிவு,

கட்டியக்காரன்வருகிற-பொதுவிருத்தம்.

துதிபெறுமன்னர்மன்னன் துய்யநற்றருமராஜன் ... ... *
சதிர்பெறுமாசாரத்தைச்சமத்துடனலங்கரிக்க ... ... ... *
மதியினிலுயர்ந்தநல்லவல்லமைமிகுந்தயோங்கும் ... ... *
கதிரவனுதித்தாற்போலக்கட்டியக்காரன்வந்தான் ... ... *

வசனம்.

அஃதெப்படியென்றால் ராஜாதிராஜனாகிய திருதராட்டிரமகாராஜன் தன்தம்பிபாண்டு மகாராஜாவினுடைய புத்திரர்களாகிய ஐவரில் மூத்தவனை தருமராஜனுக்கு இளவரசுபட்டங் கட்டினபின்பு அந்தத்தருமராஜன் தம்பியர்கள்சூழக் கொலுவிருந்து அரசாட்சி செய்யும்படியாகக் கொலுவலங்காரஞ்செய்யக்கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க ... ... ... ... ... ... ... *

தரு-இ-ம்.மோகனம்-தாளம்-மிசுரம்.

வீரசூரதீர பராக்கிரம விருதுகட்டியக் காரன்வந்தான் ...*
மாரனுக்கிரகாம்-பீரனெவர்க்குமுப-காரன் தருமஉ-தாரன் கொ
மகிழும்ரஞ்சித-அதிகவிதவிங்கித ... ... * [லுவாசல்
மிகுஅலங்கிருத-எவருமஞ்சிட ... ... *
மடிக்குந்துஷ்டருயிர் குடிக்கும்பொல்லாமிண்டன் ... *
துடிக்கும்மன்னர்தொண்டை கடிக்குநற்பலசண்டன் (வீரசூர)
சிரசிற்கட்டியருமாவ்செருக்கும்- நெத்திதிலதந்
தீட்டியமுகத்திருக்குங் ... ... ... ... *
கரத்தில்பிடித்தபட்டாவுறுக்குந்-துடி ... ...*
கண்டிதமும்மீசைமுறுக்கும் ... ... ... *
அரையிலிறுக்கியிடுந்தட்டிச்-சுங்கும் ... *
அங்கியுங்கடகமும்பூட்டித்-துலங்கச் ... ... *
சராசராஜர்கள்தங்கக்கட்டி - பொல்லாதசண் ...*
டாளர்கெடிசிங்கக்குட்டி ... ... ... *
சிறுபதங்கள்மிசை-யுறுசிலம்பிஞெலி ... ... *
செறுவவயிரியரைக்-கறுவும்பெட்புலி ... *
சித்தந்திடுக்கிடப்-பற்கடித்திட ... ... *
எத்திசையுங்கெடக்-கொக்கரித்திட ... ... *

தீனரக்ஷக-ஞானவற்புத ... ... ※
மானகற்பக-மேனகவிற்பனன் ... ※
செகமுழுவதும்புகழ் - தி க ழு மி ள வ ர ※
சகமகிழ்வெயொரு - குடையின்மருவவெண ※
அமரர்பூமழை-சொரியதருமபூ ... ... ※
பதிமகிமைமிகு-ஜெயவிஜயவெனும் (வீரசூர்)

பொது-விருத்தம்.

மன்னவன்திருதராட்டிரமகிபதிமனமகிழ்ந்து ... ... ... ※
தன்னிலைதருமனுக்குநயந்துதன்முடியைச்சூட்டப் ... ... ※
பின்னுலகத்தோர்யாரும்புகழ்ந்திடவரசளிக்கத் ... ... ※
துன்னியதருமராஜன் துலங்கவேவருகின்றனே ... ... ※

கட்டியக்காரன்-வசனம்.

அஃதெப்படியென்றால் பாண்டுமகாராஜாவினுடைய புத்திரசிகாமணியாகிய இராஜாதிராஜன் தருமராஜன் இளவரசு செலுத்தத் தம்பிமாருடனே கொலுவுக்குவருகிற விதங்காண்க ... ※

முதல்-கட்டியம்.

பகையுள்வைத்து வலிதெதிர்த்த பகைவர்சேனையுட்கவே ... ※
இகனுறுக்கி யிருளகற்றி இமையோரியாரு மெச்சவே .... ... ※
திகழ்மதிக்கு நிகர்குடைக்குள் திருகில்சீர் தழைக்கவே ..... ... ※
சகமனைத்து மரசியற்றுந் தருமராஜ ரத்நமே ... ... ※
(சுவாமிபராக்கு,)

இரண்டாவது-கட்டியம்.

படிவிளங்கவறநெறிவிளங்கநிறை பலன்விளங்கமிகு வளமைசேர் ※
குடிவிளங்கவடுபடைவிளங்கநிகழ்குடைவிளங்கவெழின்மணிகளார்
முடிவிளங்கமனு முறைவிளங்கமறை முகில்விளங்கவியலரசினோர்
கொடிவிளங்கமதி குலம்விளங்கவருள் குலவுநந்தரும ராஜனே ※
(சுவாமிபராக்கு,)

மூன்றாவது-கட்டியம்.

குழிகலங்கமணி யணிகலங்கவதிர் குலைகலங்கவடல் மருவலார் ... ※
நெறிகலங்கநெடு முடிகலங்கவுயர் நிலைகலங்கவுளை குளறியே ... ※
பொறிகலங்கமதவெறிகலங்கவரு பொருள்கலங்கமிகுபடையொடு
தழிகலங்கவவர் தலைகலங்கவெதிர் சயமிகுந்தரும ராஜனே ... ※
(சுவாமிபராக்கு,)

நான்காவது-கட்டியம்.

திக்குதிமிதித்திமிதிமித்தியெனநிர்த்தமிடு ... ... ❋
சித்திரபரியொருகோடியே ... ... ... ❋
செற்றலர்கள்வச்ரமகுடத்திறல்விழப்பொரு ... ❋
சினத்தகரியொருகோடியே ... ... ... ❋
தக்கவிருதிட்டெழுதியிட்டகொடியுற்றுயர் ... ... ❋
தழைத்தரதமொருகோடியே ... ... ❋
சுத்தகடலொத்திருபுறத்தில்வரவுற்றதள ... ... ❋
கர்த்தர்படையொருகோடியே ... ... ❋
மிக்கமகதத்தர்குருதத்தர்திரிகத்தர்படர் ... ... ❋
சூர்ச்சரர்களொருகோடியே ... ... ... ❋
விற்படைகள்கைப்படைகள்மற்றையபடைத்திரளில் ❋
விற்பனர்களொருகோடியே ... ... ... ❋
தொக்கவுயர்திக்குகளனைத்திலுமதித்துபுவி....... ...❋
சொற்பமெனவுளையாடவே ..... ... ... ❋
சுற்றிவருதற்கதியுறப்பரியுகைத்துவரு ... ... ❋
சொற்றருமமகிபாலனே ... ... ... ❋

(சுவாமிபராக்கு.)

தருமராஜன்வருகிற-தரு.

இ-ம். கலியாணி-தாளம்-திரிபுடை.

ராஜராஜன் மதிமரபினில் வருமதிபதிதரும- ராஜன்வந்தானே ❋
மாசில்லாநல்லமனுநெறிமுறையநிகுலசேகரன் ... ... ❋
தேசுலாவியநயகுணரசமிலகியசாகரன் ... ... ... ... ❋
வீசுபுகழ்பாண்டுபுத்திரநவமித்திரரெவர்களும் ... ... ❋
பேசரியமலர்வத்திரன் சுபசத்திரன்பரிமள ... ... ... ❋
மருவுதாரன்-உருவில்மாரன் ... ❋
பிரபுலதீரன்-அதுலசூரன் ... ❋
வருபிரசண்டதிண்டிறல்மநுநெறி... ... ... ❋
தருமதண்டமண்டலபதிமக (ராஜராஜன்மதிமர)
மருமலரின்வளர் திருமருவுநெடு-மாலைநமஸ்கரித்து ... ❋
வருகிரணப்பிரபை தகதகெனவொளிர்-மாமுடியைத்தரித்து ❋
பொருவிலிருபுய மதனிலிணையறு-புஜகிருதுபொருத்தி ... ... ❋
புதியநவமணி வடமுமாமழகனில்-புனிதமொடுதிருத்தி ... ... ❋

மருவலர்களெதிர்நிறையொடு கிடுகிடென்றுதாழ ... ❋
வருமகிபதிக ளருகினிலிருமருங்கு சூழ ... ... ❋
அரிவையர்களொயிலாய் வெண்சாமரைபோட ... ❋
வயிரியர்கள்பலபேர் பண்பாயிசைபாட ... ... ❋
அம்புவிடதிக்கத் தம்பியர்களதிக்க ... ... ... ❋
நம்பினர்துதிக்கச் சம்பிரமுதிக்க ... ... ... ❋
அந்தரநர துந்துமிநவுரிகள் ... ... ... ... ❋
கொம்புகள்நர பம்பைகள்பவுரிகள் ... ... ... ❋
அங்களவறு சங்குசகண்டைகள் ... ... ... ❋
வண்டிறல்ஜெய கண்டிகள்கிடுகுகள் ... ... ... ❋
ஆரவாரபேரி கைமிர்தங்கி ... ... ... ... ❋
தாரைவீரபூரிகள்தவுண்டை ... ... ... ❋
சல்லரிபலவெ ல்லரியாகுளி ... ... ... ❋
மல்லரிசிலவ ல்லிகைகாகுளி ... ... ... ❋
அலைகடலிடையெழுநெடுமொலியென ... ... ...❋
அடர்மழைமுகிலதிர்தருகலியென ... ... ... ❋
தகமுழங்கவிருதுகள்பலர்சொல ... ... ❋
மிகமகிழ்ந்துசுபகரகுருகுல ... ... (ராஜராஜன்)

சிங்காசன வணக்க-விருத்தம்.

சுருதியோர்நாலும்வல்லதூயவேதியரும்வாழ்க ... ... ❋
விருதுமன்னவரும்வாழ்கவிளைமநுநீதிவாழ்க ... ... ... ❋
தருமநல்முனிவர்வாழ்கதரணியீரோழும்வாழ்க ... ... ... ❋
கருதருஞானமூர்த்திகருணைமால்கழல்கள்போற்றி ... ... ❋

முதல்மந்திரிபோற்றும்-விருத்தம்.

மருவலர்திருவிறுக்கவன்மையைப்பகைத்தாய்போற்றி ... ... ❋
அருமையுமன்புநீதியடக்கமுமுள்ளாய்போற்றி ... ... ❋
ஒருமையுமுணர்வும்வாக்கினுண்மையும்படைத்தாய்போற்றி ... ❋
தருமமேயுருவாய்வந்ததராபதிபோற்றிபோற்றி ... ... ❋

இரண்டாமந்திரிசொல்லும்-விருத்தம்.

கதிர்திசைமாறினுங்கருணைமாறுதோய்போற்றி ... ... ❋
துதிமறைபொய்த்திட்டாலுஞ்சொற்பொய்யாதவனேபோற்றி ❋
வதிகொள்தன்னுயிரைப்போலமன்னுயிர்காப்பாய்போற்றி ... ❋
சதிர்பெறுதருமந்தாங்குந்தராதிபாபோற்றிபோற்றி ... ... ❋

படைத்தலைவன்-விருத்தம்.

மதிதருமரபினில் வருமதிபதியே ...... ❋
துதிதருமநுநெறி துறையறிமதியே...... ❋
வதிதருமருவலர் வழிபடுதிதியே ... ... ❋
விதிதருபுவிமகிழ் மிகவருநிதியே (சுவாமிபராக்)

முதல்சேவகன்-விருத்தம்.

அவனிமீதுகெடுதியான அடுதுன்மார்க்கம்நீக்கியே ... ... ... ❋
சுவடர்தீயவினைவலாளர் கசடர்வாழ்க்கைபோக்கியே ... ... ❋
திவளுஞானமநுவினீதி திகழுமாட்சியாக்கியே ... ... ... ❋
தவறிலாமனுலகையாளுந் தருமமூர்த்திபோற்றியே (சுவாமிபராக்)

இரண்டாவதுசேவகன்-விருத்தம்.

அமரர்பூசைமுனிவர்வேள்வி அதிகமாகவாற்றியே ... ... ... ❋
திமிரமானமருவலார்கள் திசையிலாமன்மாற்றியே ... ... ... ❋
விமலமானவரசுநீதி மிகுவதாகவேற்றியே ... ... ... ... ❋
சமமதாகவுயிர்கள்காக்குந் தருமமூர்த்திபோற்றியே. சுவாமிபராக்

எச்சரிக்கை-தரு-சம்பை

நீதனேபிரசாதனேகுண-சீதனேதிவ்வியபாதனே ... ... ... ❋
நாதனேஞானபோதனேயெங்கள்-நாயகாவெச்சரிக்கை ... ❋
காவேயருந் தேவேமெய்சொல் நாவேதுதி பாவே ... ... ... ❋
பூவேதா தாவேயெங்கள் பூபாவெச் சரிக்கை ... ... ... ... ❋
பூபனேசல் லாபனேபிர தாபனே நிஷ்கோபனே ... ... ... ❋
தீபனேயதி ரூபனேயெங்கள் தீராவெச் சரிக்கை ... ... ... ❋
தீராமிகு சீரா செய தாரா தன குபேரா ... ... ... ❋
பேராளுயர் தருமேந்திர பிரபுவேயெச் சரிக்கை ... ... ... ❋
செயாவிசயபவாதிக்குவிசயபவா ... ... ... ... ❋

தருமராஜன்லோகவிசாரணை

இராஜன்- வினா-செயமந்திரி.

மேதினியி லுண்டான தேவாலயங்களின் - விதியெலா நடக்
[கின்றதா,

முதல்மந்திரி- விடை. சுவாமி

வேதனேயொருகுறைவு மில்லாமனுடோறும்- விதியெலா நடக்
[கின்றது,

இராஜன்வினா-விசயமந்திரி

விரதமாதவர்செயும் வேள்விகள் சதாகால - மேன்மையாய்நட
இரண்டாவது-மந்திரி-விடை-சுவாமி. [க்கின்றதா

மெய்ஞ்ஞான மூர்த்திமே விரதமாதவர்வேள்வி-மேன்மையாய்
இராஜன்-வினா-மந்திரி. [நடக்கின்றது,

வேதியர்களறுதொழி லொழுக்கமதுபிசகாமல் - மெய்யுடனட
மூன்றாவது-மந்திரி-விடை-சுவாமி [க்கின்றதா,

விஞ்ஞானவேந்தனே யுனதுசெங்கோல்வளமை-மேவலாலது
இராஜன்-வினா. [பிசகுமா,

விருதுமன்னவர்களியல் பெப்போதுநன்றாய் - வியப்புடனடக்
நான்காவது-மந்திரி-விடை. [கின்றதா,

வேறுமொருகுறையின்றி யேநடக்கின்றதுன் - வீரத்தின்பெரு
இராஜன்-வினா. [மையாலே,

சாதிபேதங்களி லாசாரதருமநெறி - தப்பாமல்நடக்கின்றதா,
மந்திரி-விடை.

சகசமாய்நால்வருண சாதிநிலைவழுவாமல்- சத்தியமாய்நடக்கி
இராஜன்-வினா. [ன்றது,

தாரணியிலாதிலொருகடமைகுடியானவர்கள்-சாங்கமாய்த்தருகி
மந்திரி-விடை. [றாரா,

சகலசாம்பிராச்சியமே யுன்றனக்கிளையினால்- தான்கொடுத்தே
இராஜன்-வினா. [வருகிறார்,

சாதகமதாகபுலியும்பசுவுமோர் துறையில்-தண்ணீர்குடிக்கின்ற
மந்திரி-விடை. [தா,

சக்ரேஸ்வராவுனது சக்ரநெறியின்படி- தண்ணீர்குடிக்கின்றது,
இராஜன்-வினா.

தடுத்துமொழிபேசாமல் ராஜாக்கள்கப்பமந் - தான்கட்டிவரு
மந்திரி-விடை. [கிறாரா,

தடையென்னவுமதுசெடிகொண்டவுத்தரவினால்-தற்சேவல்செ
ஆகாகா மந்திரி சந்தோஷம் சந்தோஷம் [ய்கிறார்கள்,

பீஷ்மர்வருகிறபொது-விருத்தம்.

திசைமுழுதெங்கும்போற்றுந் திருவருள்மிகுந்தேயோங்கும் ... ❋
இசைபெறுமவர்க்குநல்ல காரணம்பொருளைக்காட்டும் ... ... ❋

நிசமிகுமறையுணர்ந்த நிராமயநெறியெம்மாத்திரம் ... ... ... *
பிசகிலாதருள்மிகுந்த பீஷ்மரும்வருகின்றாரோ ... ... ... *

வசனம்.

அஃதெப்படியென்றால் இராஜாதிராஜனாகிய தருமராஜன் லோகவிசாரணை செய்துக்கொண்டிருக்கும்போது கொலுவுக்கு பீஷ்மாசாரியர் வருகிறவிதங்காண்க ... ... ... ... ... ... *

தரு- இ-ம். மோகனம்-ஆதிதாளம்.

பிசகிலாதமதிபூகிநன்னிர்வாகி-பீஷ்மரிதோவந்தார் ... ... ... *
திசைதிசைகளிலெங்கும் புகழ்சதுர்வேதாந்தன் ... ... ... *
நிசமறிந்தினெநல்ல நெறிமிகுபோதாந்தன் ... ... (பிசகிலாத)
சிந்தைமகிழாநந்தப்பேரறிவாளன்-சின்மயமானசீலன்-மிகு ... *
திருவருள்வளர்தரு வுளங்களிகூர்ந்தநற்-றீனர்களனுகூலன் ... *
சந்ததமும்வீறும் விந்தைப்பிரதாபதீரன் ... ... ... ... *
தாவுமைம்புலன்களைத் தடுத்தடக்குமுதாரன் ... ... ... ... *
அந்தரங்கால்புவிபுனல் செந்தணலாகியவாதி ... ... ... *
யந்தமிலாச்சோதியாஞ் சீதரனடிதுதித்துநிதம் ...... (பிசகிலாத)

தருமராஜன்- விருத்தம்.

பன்னுநன்மறைகள்நான்கும் பலகலைப்பொருள்களெல்லாம் ... *
உன்னதமாகத்தேர்ந்தே யுலகெலாந்துதிக்கப்பெற்றுத் ......... *
தன்னிகரிலாதநல்ல தவங்களிலுயர்ந்துமேலாய்ப் ... ... ... *
பின்னையுங்கருணைகொண்ட பீஷ்மரேபோற்றிபோற்றி ......... *

வசனம்.

சரணஞ் சரணம் இந்த ஆசனத்தில் வீற்றிருமையா ......... *

பீஷ்மர்-விருத்தம்.

மதிகுலபதியேவாழி மாநிலத்தரசேவாழி ..... *
துதிபெறுநிதியேவாழி துய்யநற்கனியேவாழி *
எதிரிலாத்தம்பிமாரு மெழிலுடனிதமும்வாழி *
சதிர்பெறுமன்னவாழி தருமபுத்திரனேவாழி *

வசனம்.

வாழி வாழி த ரு ம ரா ஜ னே ... ... ... ... ... *

துரோணர்வருகிற-பொதுவிருத்தம்.

நலந்திகழ்மலரோன்மிக்க நவின்றிடுநாலுவேதப் ... ... ... *
புலன்களிற்றெளிந்துஞானப் பயனுணர்வோர்க்குமாசான் ... *

நிலமுழுதெங்கும்போற்றும் நிலையுள்ளதருமராஜன் ... ... ...*
துலங்கியசொலுவைநாடித் துரோணரும்வருகின்றுரோ .........*

வசனம்.

அஃதெப்படியென்றால் இராஜாதிராஜனை தருமராஜன்சபைக்குத்துரோணசாரியார் வருகிறவிதங்காண்க. ... ... ... ... *

தரு-இ-ம் - அசாவேரி - ஏகதாளம்.

துரோணர்வந்தாரோ-மகத்தான- துரோணர்வந்தாரோ.

தரணியெங்கும்புகழுமாதரு - சாஸ்திரங்களிற்றேர்ந்த வுத்தம (துரோணர்)

சிரத்தினில்முடிதுலங்கத்-திருநாமம்நுதலிலிலங்க ... ... *
கரத்தினில்செபமாலைபிடித்துக்- கருணைஞானப்பொருளைவடித்து
வேதியர்மகிழவுள்ள-மெய்யுணர்ந்தவூதறிவுள்ள ... (துரோணர்)
பொதமென்னவுறையுமார்பினில் பொற்புடையமுப்புரிநூலின்
மன்னர்கள்கண்டுமகிக்கமனமகிழ்ந்துதேவர்துதிக்க[ன (துரோ)
மன்னுந்திறமிகுமகிமைகொண்டு-மருவுந்தருமராஜன்சபைகண்டு
துரோணர்வந்தாரோ-மகத்தான-துரோணர்வந்தாரோ ... ... *

தருமராஜன்-விருத்தம்.

நித்தமாயமலமாகி நிராமயமாகிமோன ... ... ... ... *
வித்துமாய்முளையாயெங்கும் விளக்கொளியாகிநின்ற ... ... *
சுத்தனாருளுஞ்சிறுங் கனமிகுபலமும்பெற்றுச் ... ... ... ... *
சுத்தமாய்வயங்குமெங்கள் துரோணரேபோற்றிபோற்றி ... *

வசனம்.

தெண்டஞ்சுவாமி துரோணரே இந்தசெர்ப்பாசனத்தில் வீற்றி
துரோணர்- விருத்தம்......[ருஞ்சுவாமி. *

அந்தமும்வடிவுஞ்சிரும் அவனியிற்புகழுங்கொண்டு ... ... *
சுந்தரமலருமென்னக் சுருதநற்நம்பிமாரும் ... ... ... *
இந்திரன்றன்னைப்போலு ம்ராஜாதிராஜனுகிச் ... ... ... *
சந்ததம்அருள்மிகுந்த தருமபுத்திரனேவாழி ... ... *

வசனம்.

சமஸ்தமங்களானிபவந்து ஆசீர்வாதம்ஆசீர்வாதம் தருமராஜனே
விதுரன்வருகிற-பொதுவிருத்தம்.

நல்லசற்குணமுமிக்க நலம்பெறுதருமநீதி ... ... ... *
வல்லமைமிகுந்தேயோங்கும் வளம்பெறுவடிவமிக்கான் ... *

சொல்லவுமெவர்க்குமேலான் தூயவன்பராக்கிரங்கொண்ட ... *
வில்லினிற்றிறமிகுந்த விதுரனும்வருகின்றானே ... ... ... *

வசனம்.

அஃதெப்படியென்றால் இராஜாதிராஜனாகிய தருமராஜன் இளவ
ரசுசெய்யுங்கொலுவுக்கு விதுரமகாராஜன் வருகிறவிதங்காண்க *

தரு-இ-ம். புன்னாகவராளி-ஆதிதாளம்.

விதுரராஜன்வந்தான்-மகாராஜன்- விதுரராஜன்வந்தான் ... *
எதிரில்லாதபுகழ் படைத்தவுதாரன்-சதுரன்மிகும்மதுர வசனசத்தி
யதீரன் (விதுரராஜன்வந்தான்)
சிரத்தினில்முடிமின்ன-மார்பினில்-திகழ்புரிநூல்துன்ன ... *
தரித்தபணிகள்மன்ன-எவர்களுந்-தழைக்கத்துதிகள்பன்ன- அனு
திருத்தமுடனேதன துளத்தில்நினைத்தகுறி ... ... ... [தினம்
நிறுத்திப்பெருத்தபுகழ் படைத்துப்பெருமையுடன் ... ... ... *
கரத்திலெடுத்தசிலை வளைத்துநொடிக்குள்சரந் ... ... ... *
தொடுத்துப்பகைத்தவரை முடித்துவருஞ்சமர்த்தன் ... (விதுர)

தருமராஜன்-விருத்தம்.

வஞ்சனைகபடுசூது வாதுள்ளோர்நட்பில்லாமல் ... ... ... *
விஞ்சியபுகழுஞ்சீரும் விளங்கும்பேரறிவும்வெற்றிச் ... ... *
செஞ்சிலைவலியுங்கொண்டு செகமெலாந்துதிக்கப்பின்னும் .. *
தஞ்சமென்றவரைக்காக்குந் தயாளசிற்றப்பாபோற்றி ... ... *

வசனம்.

சரணஞ்சரணஞ் சிறியதந்தையே இந்தஆசனத்தி லிருமையா *

விதுரன்- விருத்தம்.

தஞ்சமென்றவரைக்காக்குந் தருமபுத்திரனேவாழி ... ... *
மிஞ்சியபீமனோடு விதரணவிஜயாவாழி ... ... ... ... *
செஞ்சொல்வாய்நகுலனேசா தேவனேவாழிநீங்கள் ... ... *
அஞ்சுபேருஞ்சிடாம லனுதினம்வாழிவாழி ... ... ... ... *

வசனம்.

வாழிவாழிதருமராஜனே ... ... ... ... *

கிருபாசாரியர்வருகிற-பொதுவிருத்தம்.

சத்துருக்களையழித்துச் சகமுழுதாண்டளிக்கும் ... ... ... *
சித்திரதருமராஜன் விளங்கியசபைதனக்கு ... ... ... ... *

அத்துவிதசிரேஷ்டனாக வந்தணர்குலத்துதித்த ... ... ... ❋
தத்துவகிருபாசார்யர் தானிதோவந்திட்டாரே ... ... ... ❋

வசனம்.

அஃதெப்படியென்றால் இராஜாதிராஜனான தருமராஜன்சபை க்குக் கிருபாசாரியர் வருகிறவிதங்காண்க ... ... ... ... ❋

தரு-இ௩ம். கலியாணிதாளம்-ஆதி.

கிருபாசாரியர்வந்தார்-அமிருதகுண ... ... ❋
கி ரு பா சா ரி ய ர் வ ந் தா ர் ... ...... ❋
பிரபாவசட்சாத்திரமறிபோதன் ... ... ... ❋
திரிகாலநித்தியாநந்தநெறிநாதன் ... (கிருபா)
வேதவேதியர்தொழுதிடும்யோக்கியன் ... ❋
விமலமானபரதத்துவசிலாக்கியன் ... ... ❋
போதமானவற்புதமுள்ளவாக்கியன் ... ... ... ❋
புனிதபரமசிவனருள்பெறுபாக்கியன் ... ... ❋
புரந்தரன்னிரந்தரந்தொழ ... ❋
வரந்தரும்பரம்பரந்துதி ... ... ❋
புனிதமனிதரொவருமதிகவெகு ... ❋
பிரபலமுடனேபணியுமதிகொள்நல்ல
புராதனர்கள்நிதானமொழிசொல்லும் ... ... ❋
தராதரமுஞ்சராசரமும்வெல்லும் ... ... ... ❋
போகிதியாகிபுண்ணியனெனவரு ... ... ❋
வாகைமேவுமன்னவரருகிரு ...... (கிருபாசாரி)

தருமராஜன்-விருத்தம்.

சுமதிதுவெனவறிந்து தொல்புவிமுழுதுந்தேர்ந்து ......... ❋
அகமதின்மகிழ்ச்சிபொங்கி யானந்தவடிவேயாகிப் ....... ... ❋
பகைபவமச்சுஞ்சொல்லும் பழியெலாமகற்றிவாழும் ... ... ❋
செகம்புகழ்கிருபரோநந் திருமலர்ப்பதங்கள்போற்றி ... ... ❋

வசனம்.

சரணஞ்சரணமையா கிருபாசாரியரே இந்தஆசனத்தில் வீற்றி ருஞ்சுவாமி ... ... ... ... ... ... ... ... ❋

கிருபன்-விருத்தம்.

பொறுமையில்பூமிக்கொப்பாம் புனிதவுத்தமனேவாழி ..... ❋
நிறைதவந்தனிலுயர்ந்த நிபுணனேவாழிவாழி ... ... ... ❋

குறைபறவுலகையாளுங் கொற்றவா வாழிவாழி ... ... ... ❋
துறையறிதருமனைநற் றோன்றலே வாழிவாழி ... ... ... ❋

வசனம்.

சமஸ்தமங்களானிபவந்து ஆசீர்வாதம் ஆசீர்வாதம் தருமபுத்திர மகாராஜனே ஆசீர்வாதம் ... ... ... ... ..... ❋

அசுவத்தாமன்வருகிற-பொதுவிருத்தம்.

பிடிக்கும்வில்லினுக்குநல்ல பொருவரைநிகர்த்ததோளான் ... ❋
விடுக்குமம்பினுக்குமிந்த மேதினிகரிலாதோன் ... ... ... ❋
கடுத்தசத்துருக்கள்மேலைக் காற்றிற்பஞ்செனவேயாக ... ... ❋
சுடுத்தமாய்வெல்லும்அசுவத் தாமனுமிதோவந்தானே ... ❋

வசனம்.

அஃதெப்படியென்றால் தருமராஜன் சபைக்கு அசுவத்தாமன் வருகிறவிதங்காண்க ... ... ... ... ... ... ... ❋

தரு-இ-ம். மோகனம்-தாளம்- மிசிரம்.

அசுவத்தாமனிதோவந்தான்-வல்ல...... ❋
அ சு வ த் தா ம னி தோவந்தான்...... ❋

சுசிபெற்றவேதியர் மித்திரன்-வரு ... ... ❋
துரோணாசாரியரருள்சிரஞ்சீவிபுத்திரன் (அசு)
சிரசினிற்றுலங்கியமுடியும்-நெற்றிச் ... ❋
சிந்தூரப்பொட்டுஞ்சிறுநடைதுடியும் ... ❋
உரத்தினிலணிந்தநூற்பிடியும்-மிக ... ...❋
உன்னதமாகியபொன்மிதியடியும் ... ... ❋
உசிதகுருகுலவரசர்நிறைவுறும் ... ... ❋
ரசிதசபைதனில் கசிதமுடனிதோ (அசுவத்)
அரையினிலுடுத்தபொற்கலையும்-மிக்க ... ❋
வழகாகமேலிட்டவணிவாகுவலையும் ...... ❋
விரவுங்கரத்தினிற்சிலையும்-எங்கும் ... ...❋
வெற்றிபடைத்திடுமேன்மைசேர்நிலையும் ❋
வெருண்டரசர்கள்மருண்டிடவெகு...... ❋
பயத்தரவலசுதந்தரனென ... (அசுவத்தாம)
புஜபலசௌரியவீரன்-இந்தப் ... ... ...❋
பூமியில்நிகரில்லாப்போர்செய்யுஞ்சூரன் ❋

விஜயமேகொளுடமார்பிற்றூரன்-இந்த......*
விண்ணுமண்ணும்மெதிர்த்தும்விடாதீரன் *
வேதவேதியரோதுகலைநெறி ... ........*
மீதிலேவெகுநீதியேசொலும் (அசுவத்தாம)

தருமராஜன்-விருத்தம்.

தோற்றியமநுமுறை தொடர்பெலாமறிந்து ......*
நாற்றிசையோரெலா நடுக்கமேயடைய .........*
வேற்றுமையில்லா வீரகண்டாமணி ... ... ... *
சாற்றியவசுவத் தாமரேபோற்றி ... ... ... ..... *

வசனம்.

சரணஞ் சரணம் அசுவத்தாமரே இந்தஆசனத்தில் வீற்றிரும் [ஸ்வாமி.

அசுவத்தாமன்-விருத்தம்.

தங்கியமனுநெறி தவறிலாதறிந்து ........*
பங்கமில்லாமலே பாரெலாந்துதிக்கும்.......*
துங்கமெய்ஞ்ஞான சூட்சிகளெல்லாம் ......*
சங்கையிற்றேர்ந்த தருமனேவாழி ........*

வசனம்.

வாழி வாழி தருமபூபதியே வாழி ... ... ... ... *

பொது-வசனம்.

கேளுஞ் சபையோர்களே பீஷ்மாசாரியராகிய பாட்டனும் துரோணசாரியர் முதலாகிய குருக்கள்மார்களும்திருதராஷ்டிரமகாராஜனும்விதுரமகாராஜனும்கூடித் தருமராஜன்சபைசூழ்ந்திருக்கும்போதுபீஷ்மாசாரியர் தருமராஜனுக்குச்சொல்லுவதுகாண்க

பீஷ்மர்-விருத்தம்.

கண்ணிலானுலகையாளுங் காட்சிநன் றல்லவென்றே ... ... *
மண்ணெலாஞ்சொல்லிக்கொண்ட வசைமொழிமாறிநீங்க ... *
ஒண்ணுமிக்குலத்தினுக்கு முலகுக்குங்கண்வந்தாற்போல்......*
எண்ணியதருமபுத்திரா விளவரசதனைப்பெற்றாய் ... ... ... *

வசனம்.

அப்பா தருமபுத்திரா இந்தப்பூமிக்கு அதிபதியாகிய திருதராட்டிர மகாராஜனுக்குக்கண்ணில்லை ஆதலால் கண்ணில்லாதவன் ஆளாத்தனமென்று சொல்லிக்கொண்டவசை இனியில்லாமல் மாறிப்போக இந்தப்பூமிக்கும் நம்முடையகுலத்துக்குங் கண்வந்தாற்

போல் நீ இந்த இளவரசுபட்டந் தரித்துக்கொண்டது எனக்குமி கவும் சந்தோஷமாச்சுதப்பா தருமராஜனே ... ... ... ※

துரோணர்-திருதராட்டிரனுக்குச்
சொல்லும் விருத்தம்.

சங்கிலியொன்றோடொன்று தழுவிநூலானைகட்டும் ... ... ※
பொங்கிவெவ்வேறாய்ப்போனால் பூனையுங்கட்டொணாது ... ※
இங்கிதைப்போலேகூடி யிருந்திடிற்புகழ்முமுண்டு ... ... ※
அங்கவர்வேறுபட்டால் அச்சொடிந்திடுந்தேராமே ... ... ※

வசனம்.

கேளுமையா திருதராட்டிரமகாராஜனே சங்கிலியானது ஒன்றோடொன்று கூடிக்கொண்டிருந்தால் அதனால் ஆனையைக்கட்டலாம் அதுவெவ்வேறாக இருக்குமானால் பூனையுங்கட்டக்கூடாது அத்தன்மையைப்போல் இவர்களெல்லாரும் ஒருமித்திருந்தால் கீர்த்தியுண்டு மித்திரபேதமா யிருப்பார்களானால் அச்சொடிந்த தேரானது எப்படி அலகல் காகப் பிரிந்துபோமோ அப்படியென்றறிந்து நடந்துகொள்ளவேண்டியது மகாராஜனே ... ※

விதுரன்-விருத்தம்.

ஆறுகள்பலவுமோடி அலைகடற்கலந்தாற்போல ... ... ※
மாறிலாத்தலைவன்றன்னை மற்றையோர்கலந்துகொண்டு ... ※
சீறியேபேதாபேதஞ் செய்யாமலிருப்பாரானால் ... ... ※
கூறியதருமனுமேலுநறை யொன்றும்வந்திடாமத் ... ... ... ※

வசனம்.

கேளும் அண்ணாவே பல் ஆறுகளும் ஓடிக்கடலிற் கலந்தாற்போல் தம்பிமார்களெல்லாம் தமையனுடன்சேர்ந்து ஒருமித்து மித்திரபேதஞ்செய்யா திருப்பார்களானால் தருமபுத்திரனுக்கு ஒரு குறையும் வராது அண்ணாவே ... ... ... ... ... ※

திருதராட்டிரமகாராஜன்-தருமராஜனுக்குச்
சொல்லும்-விருத்தம்.

விழியிலாவென்னையிந்த மேதினிக்கரசனுக்கிப் ... ... ... ※
பழியிலாவென்றன்தம்பி பாண்டுபூதலத்தையாண்டான் ... ※
தழுவுதீரைத்துபேருந் தம்பிமார் நூறுபேரும் ... ... ... ※
ஒழிவறவொருமையாகி யுலகினையாளுவீரே ... ... ... ※

வசனம்.

கேளப்பாமகனே தருமபுத்திரா நான்கண்ணில்லாதவனாகஇரு
ந்தாலும் உன்தகப்பன் பாண்டுராஜன் எனக்குமுடிதரித்துச் சகல
காரியமும் தானேபார்த்துக் கொண்டுபோனான் அப்படியே நீங்க
ள் ஐந்துபேரும் உங்கள்தம்பிமார்கள் நூறுபேரும் ஒருமையாகஇ
ருந்து இராச்சியபரிபாலனம்பண்ணினால் பார்த்தவர்களுக்கு அழ
காயிருக்கும் மகனே தருமபுத்திரா ... ... ... ... ✻

கிருபன்–விருத்தம்.

ஆலிலேவிழுதுசும்மா யனந்தம்விட்டோடியோடி ... ... ✻
மேலுமம்மரத்தினுக்கு மிகுமுறுதியைச்செய்தாற்போல் ✻
பாலொடுதேனும்போலப் பத்துமொன்றாகக்கூடி ... ....... ✻
மாலுறுகுலத்தைக்காக்கு மைந்தரோமைந்தர்கண்டாய் ... ✻

வசனம்.

கேளுமையா திருதராட்டிரமகாராஜனே ஆலமரத்திலே அனே
கம் விழுதிறங்கி வேரோடி அந்தமரத்தை யுறுதிசெய்கிறது அப்
படிப்போல ஒருகுடும்பத்திலேபிறந்தபிள்ளைகள் அனேகரும்ஒரு
மித்திருந்து குலத்தைக்காக்கிறது நன்மையாயிருக்கும் மகாராஜ
[னே ✻

அசுவத்தாமன்–விருத்தம்.

குலத்தையுங்காக்கவேண்டுங் குணத்தையுங்காக்கவேண்டும் ... ✻
பெலத்தையுங்காக்கவேண்டும் பெயரையுங்காக்கவேண்டும் ...✻
நிலத்தையுங்காக்கவேண்டும் தமரையுங்காக்கவேண்டும் ... ... ✻
நலத்தசெயகோல்நடாத்தும் நராதிபரானபேரே ... ... ✻

வசனம்.

செங்கோல்செலுத்தி ஆளும் அரசர்கள் இருக்கவேண்டியது
எத்தன்மையென்றால் தன்னுடைய குலத்தையும் சுற்றத்தாரையு
ம் தன்னுடையகுணத்தையும் தன்னுடைய பலத்தையும் தன்னு
டையநாட்டையும் காத்துக்கொள்ளவேண்டும் இப்படியெல்லாஞ்
செய்கிறது உலகத்தையாளுகிற அரசர்களின் கடமை. ஈதறிந்து
நடந்துகொள்ளவேண்டியது ... ... ... ... ... ✻

தருமராஜன்–விருத்தம்.

அருமைசேர்பாட்டனோ யளித்திடும்பிதாவேசெங்கோல் ... ✻
பெருமைசேர்குருக்கள்மாரே பேதையேனுருவின்னப்பம் ✻

வருமநுநீதிதேரோன் மற்றுமுற்றறியேனெல்லாந் ... ... ... *
தருமமேசெயமென்றெண்ணித் தழைக்குமென்னுள்ளந்தானே *

வசனம்.

என்பாட்டனாராகிய பீஷ்மாசாரியரே ஐயாபிதாவே குருக்க ள்மார்களே ஒருவிண்ணப்பம் என்னவென்றால் இராச்சியபரிபா லனம்செய்யும் மநுநீதிமுதலான முறைமைகளும் ராஜதந்திரங்க ளும் மற்றுமுள்ள காரியாகாரியங்களும் அறியாத சிறியேன்யான் ஆகையால் தருமமே செயமென்பது என்கருத்து அதற்குமேல் உங்களுடைய கிருபாகடாக்ஷம் எப்படியோ அப்படியே நடந்து வரும் அதற்குப் பிசகிராது ... ... ... ... ... ... *

இளவரசுமுற்றிற்று.

# ஆரக்குமாளிகை.

துரியோதனன்-கர்ன்னன்-துச்சாதனன்-சகுனி-

வருகிற-பொதுவிருத்தம்.

இவ்வாறுதருமனிளவரசனுகி ... ... ... *
யெழிலுடனேபுவிமுழுதுங்காக்கும்போது ... *
தெவ்வாந்துரியோதனன்சகுனிகர்ன்னன் ... ... *
தீயதுச்சாதனனிவர்கள்சிந்தைநொந்து ... ... *
ஓவ்வாமற்றறியாமன்மனங்கொள்ளாமல் ... ... *
உண்ணுமலுறங்காமலுபேத்திடாமல் ... ... ... *
எவ்வாறெவரினரசைமாற்றுவோமென் ... ... *
றெண்ணுவாரவர்கலக்கம்பண்ணுவாரோ ... ... ... *

வசனம்.

அஃதெப்படியென்றால் இராஜாதிராஜனுகிய திருதராட்டிரமகா ராஜன் தருமராஜனுக்கு இளவரசுபட்டங்கட்டி இராச்சியபரிபால னஞ்செய்துகொண்டிருக்கும்போது அந்தச்சிறப்புகளை யெல் லாம்பார்த்து மனம்பொறுமையிலுலே அந்தத்தருமராஜனுக்குக் கொடுத்த இளவரசைமாற்றவேண்டுமென்று துரியோதனன் சகு னி கர்ன்னன் துச்சாதனன் ஆகிய இந்தநால்வருங்கூடிமந்திராலோ சனைசெய்ய வருகிறவிதங்காண்க ..... ... ... ... ... *

### தரு-இ-ம். சங்கராபரணம்- தாளம்-மிசரம்.

துரியோதனன்கன்னன் சகுனிதுச்சாதனன் ... ❋
துரைமக்கள் நால்வர்வந்தார் ... ... ... ❋
பெரியோரொவர்களும் பேதமிதுவென்றெண்ணப் ❋
பிரபலபாண்டவரைந்துபேரையுமோசப்பண்ண (துரி)
தருமராஜன்முடிசூடிக்-கொண்ட ... ... ... ❋
தன்மைபொருடமேல்நாடி ... ... ... ... ❋
வருமம்வைத்துநித மனதில்மிகவுநைய ... ... ❋
வஞ்சகமாயிவர் மந்திராலோசனைசெய்ய (துரியோ)
அரசுபாண்டவர்கள் பங்காச்சுது-நம் ... ... ❋
ஆதிக்கவரிசையும் போச்சுது ... ... ... ❋
ஈரிசனமாயிவர் கருத்திற்கோபமூள ... ... ❋
கலகஞ்செய்துதாங்கள்கடல்சூழுலகையாள (துரியோ)
தந்தைமுடிபிள்ளைக்கல்லாது-அவர் ... ... ... ❋
தம்பிபிள்ளைகட்குச்செல்லாது-என்று ... ... ❋
சிந்தையிலேயெண்ணித் தீதென்றெடுத்துக்காட்டச்❋
சிறக்கும்பாண்டவர்மீதில்தீராதபகைமூட்ட (துரியோ)

### துரியோதனன் - விருத்தம்.

தாவியவேங்கையொத்த தம்பிதுச்சாதனனேகேள் ... ... ❋
மேவிநாம்நாலுபேரும் வேண்டியபேசவேண்டும் ... ... ❋
காவலாளரையழைத்துக் கடைதலைதொறுநிறுத்தி ... ... ❋
வாவியிங்கொருவரேனும் வாராமற்காக்கச்செய்வாய் ... ❋

### வசனம்.

கேளப்பா தம்பிதுச்சாதனா நாம்நாலுபேரும் ஏகாந்தமாயிருந்து அனேகரகசியங்களைப் பெசவேண்டியதாக இருக்கின்றது ஆகையினாலே வாசற்படிதோறுங் காவல்க்காரரைநிறுத்திஒருவரையும் இந்த அரமனைக்குள்ளே விடாமலிருக்கச் செய்யடா தம்பி துச்சாதனா ... ... ... ... ... ... ... ... ❋

### துச்சாதனன்மட்டு-விருத்தம்.

ம ற் பு லி யா ன ... ... ...❋
பொற்புறு ம ன் ன ... ... ...❋
அற்பொடுசொ ன் ன ... ... ...❋
சொற்படிசெய்வேன் ... ..... ❋

வசனம்.

அப்படியேசெய்விக்கிறேன் அண்ணா......... *

துச்சாதனன்-கழிநெடில்-விருத்தம்.

ஆரடாவிங்கேயொலிமுகவாசற் கடுபுலிநிகர்த்தசேருவையே [ய்
ஆவியோடின்னமிருட்பவனுலடாவொரு வார்த்தையைக்கேளா
வீரியவசுவத்தாமநற்றுரோணன் விற்பனகிருபன்விவிதுரன் *
விறல்மிகுபீஷ்மர்பிரதானியரமைச்சர்விரு துசாமர்த்தியரின்னம்
பாரியமன்னர்பண்டிதர்கிழவர்பாலகர்பாவையர்தூதர்... [ருனும்
பகர்தருகுருடர்செவிடர்மேலெம்மைப்பயந்ததாய் தந்தையென்
ஓரவேயிந்த வரமனைவாசற்குள்ளுறவிட்டதுண்டானுல் [டேனே.
ஊட்டியைக்கடித்துன் னுயிர்குடித்திடுவே னுற்றதுசொல்லிவிட்

வசனம்.

ஆரடா அடாசேர்வைக்காரா இந்த அரமனைக்குள் ஒருவரையும் விடாமல் அதிகசாக்கிரதையாக இரடா ... ... ... ... *

சேர்வைக்காரன்-விருத்தம்.

இடிக்கின்றவிடியைப்போலவித்தனையெடுத்துக்காட்டிப் ... *
படிக்கின்றவெங்கள்கோவே பகருவேனொருவின்னைப்பம் ... *
துடிக்கின்றவெறும்பையீயைத்துகளவோர்கொசுகைமேலும் *
அடிக்கின்றகாற்றைக்கூட வரமனைக்குள்விடேனே ... ... *

வசனம்.

கேளுஞ்சுவாமி துச்சாதன மகாராஜனே நீரெனக்கு இத்தனை தூரஞ்சொல்லவேண்டுமோ இந்த அரமனைக்குள்ளே ஈ எறும்பு கொசுகு வந்தாலும் வரவொட்டேன் மேலும் அடிக்கப்பட்ட காற்றைக்கூட நிறுத்துவேன் சுவாமி ... ... ... ... ... *

துச்சாதனன். - வசனம்.

ஆனுல் அதிக சாக்கிர தையா யிரடா ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

உயிரினுக்குயிருமாய்வந்துறையுமென்சகுனிமாமா ... ... *
துயிரியக்கன்னுவென்றன் றம்பிதுச்சாதனுகேள் ... ... *
பயில்மகுடாபிஷேகம் பகையாளிகையிலொட்டித்து ... *
வெயிலிடும்விளக்காட்டின்ற மேன்மைசம்மதமோசொல்வீர் *

வசனம்.

என்னுயிருக்குயிராகிய சகுனிமாமா தம்பி துச்சாதனு அண்ணா கர்ன்னமகாராஜனே கேளுங்கோள் இப்போது நான் பெற்றுக் கொள்ளவேண்டிய இந்த இளவரசுபட்டத்தை என்பகையாளிகளாகிய பாண்டவர்களுக்கு ஒப்பித்துவிட்டு வெய்யலிலேயிட்ட விளக்கைப்போல அப்பிணியோசனாக இருக்கின்றது உங்களுக்குச் சம்மதமாக இருக்கின்றதா சொல்லுங்கோள் பார்ப்போம் ... ❋

சகுனி-விருத்தம்.

மன்னிளவரசையுனக்களிக்காமல் மருமெநறிவழியு மெண்ணாமல் ❋
பின்னொருவழியாத்தருமனுக்கீந்தபிரளியைக்கண்டநாள்முதலாய்
பன்னுமென் றுயரும்வருத் தமும்மெலிவும் பாவியேன்சதைபடு
ம்பாடும்-என்னுயிரிருக்குமேங்கமுந்தகிலுமெவருடன் சொல் [லுவேனப்பா. ❋

வசனம்.

கேளப்பாமருமகனே துரியோதனு ஆயிரம்விதத்திலும் அந்த இளவரசுபட்டம் உனக்கேகொடுக்கவேண்டும் அப்படிசெய்யாமல் தருமசாஸ்திரத்தை எண்ணிப்பாராமல் ஓ-கோ-கோ-என்ன காரணம் அந்தவழியேபோய்த் தருமராஜனுக்குப்பட்டம் எப்போது கொடுத்துவிட்டார்களோ அன்றுமுதலா யின்றையவரைக்கும்ஐயையோ என்னுடைய துக்கமும் சோகமும் மெலிவும் ஏக்கமும் திகிலும் பாவியாகிய என்னுடைய சதைபடுகிறபாடும் இவ்வளவு அவ்வளவு என்றுசொல்லுகிறதா சொல்லத்தக்கதல்ல நினைத்து நினைத்து மெழுகாயுருகிக் கழுவாய்க் கரைகின்றேன் நானென்ன செய்வேனப்பா மருமகனே ... ... ... ... ... ❋

கர்ன்னன்-விருத்தம்.

திட்பமில்லாவுங்களப்பன் திறமையும்பார்த்தேனப்பா ... ❋
அட்ருமுன் றுயரும்பார்த்தே னவர்தஞ்செருக்கும்பார்த்தேன் ❋
உடனுறைவிதுரன்பீஷ்ம னுரைவையும்பார்த்தேனென்கை ... ❋
படரும்வில்லழியும்பார்த்தேன் பதைக்கின்றேனென்னசெய்வேன்

வசனம்.

கேளப்பா துரியோதனமகாராஜனே உங்களப்பனுண்டே விழலப்பன் அந்தக்திருதராட்டிரமகாராஜன் அவன்திறமையும் பார்த்தேன் அதற்குமேல் நீவெளியிலே சொல்லாமல் வேகிறதையும் பார்த்தேன் அந்தப்பாண்டவர்களுடைய மகிழ்ச்சியும்பார்த்தேன் அந்தவிதுரன் பீஷ்மன்முதலானவர்களுடைய உறவையும் பார்த்

தேன் இவைகளைப்பார்த்துப்பார்த்து என்சரீரமெல்லாம் பதைக்
கின்றது நானென்னசெய்வேனப்பா துரியோதனா ... ... *

துச்சாதனன் - விருத்தம்.

தந்தைக்குப்புத்தியில்லைத் தமையனுக்கதிஷ்டமில்லை ... ... *
அந்தமைமுதலாயின்ன மிருப்பவரிருந்துமில்லை ... ... ... *
தந்திரவிதுரன்பீஷ்மன் தன்சொல்லைத்தடுப்பாரில்லை ... ... *
ஐந்துபேர்க்கெதிருமில்லை யாகிலிப்படியாகாதே ... ... *

வசனம்.

எங்களுடைய தகப்பனுக்கா கூர்மையான புத்தியில்லை என்தமையனுக்கா அதிஷ்டமில்லை என்னைமுதல்க்கொண்டு இன்னமிருக்கின்ற தம்பிமார்களா இருந்துமில்லை அந்தவிதுரன் பீஷ்மன் முதலானவர்களுடைய வார்த்தையைத்தடுத்துச் சொல்லப்பட்டவர்களுமில்லை அந்தப்பாண்டவர்களிருக்கிற உத்தண்டத்துக்கா எதிரில்லை இப்படியிருக்குமானால் என்னநடவாதுகாணும் ஓய்சகுனி [மாமா*

துரியோதனன் - விருத்தம்.

தொன்மையெள்ளளவுமில்லாத் துரோகியென்னப்பனுக்கு ... *
மென்மையிற்கண்போனதைப்போல் விவேகமுங்கெட்டுப்போமோ
தன்மகனிருக்கச்செங்கோல்சத்துருகையிலொப்பிக்கும் ... *
புன்மநுநீதியிற்தப் புவியிலெங்கேனுமுண்டோ ... ... ... *

வசனம்.

அல்லாமலும் இந்தவமிசத் துரோகியுண்டே எங்களப்பன் திருதராட்டிரன் அவனுக்குக்கண்கள்தான் கெட்டுப்போச்சுது அடடா மதியுங்கெட்டுப் போகவேண்டுமா இல்லாமற்போனால் மகம்மேருகளைப்போலே தனக்குநூறுபிள்ளைகளிருக்கத்தான் செலுத்தப்பட்ட வழியேபோல் தருமராஜனுக்குக் கொடுப்பானா இந்த அனியாயம் எங்கேயாகிலுமுண்டோ தன்காலைத்தானே வெட்டிக்கொண்டு எதிரிகாலுக்கு அணிசொட்டனிட்ட பாவி இவன்தான் ஆர் எங்களப்பன். ... ... ... ... ... ... ... *

சகுனி - விருத்தம்.

அறையுமவ்விதுரன்பீஷ்மனைவருக்குடந்தையானோர் ... ... *
வெறியனுன்னப்பனந்த வினையர்சொற்படியிசைந்தான் ... *
உறையுமுள்ளளவாய்த்துரோணனேமென்றுகுவித்துவிட்டான் *
துறையறியாமனீயுன் துரைத்தனமிழந்தாயப்பா ... ... *

வசனம்.

கேளப்பாமருமகனே துரியோதனா எய்கிறவனைய் தால் அம் பென்னசெய்யும் விதுரனுக்கும் பீஷ்மனுக்கும் பாண்டவர்கள் பேரில் பரிபூரணபக்ஷம் அவர்கள்சொன்னபடி உன் தகப்பனுங் கேட்டான் அந்தத்துரோணனுமா துடைதட்டிக் கொண்டான் நீ புஞ்சாக்கிரதைப்படாமல் ஏமாந்து உன்செங்கோலை இழந்துபோ ய்விட்டாய் இனியென்ன வரப்போகிறதென்று நினைக்கின்றாய் வராது வராது. ... ... ... ... ... ... ... ❋

துரியோதனன்-விருத்தம்.

பெரியவரென்றிருந்தாற் பேதஞ்செய்யாமலெல்லாஞ் ... ... ❋
சரியெனப்பார்க்கவேண்டுந் தாறுமாறாய்ப்புரட்டி ... ... ❋
ஒருவரைக்கையிலிபிடித்தி யொருவரை நடத்துவித்தால் ... ... ❋
திருமலப்பெரியோர்தங்க ணிறைமையிதுதானோமாமா ... ... ❋

வசனம்.

ஓய்மாமா ஒருசமஸ்தானத்திலே பெரியவர்களென் றிருந்தால் பாரபக்ஷமாயிராமல் எல்லாந்தராசு நிறையைப்போலுஞ் சமமாக ப்பார்க்க வேண்டியது அதைவிட்டுத் தாறுமாறாக ஒருத்தனை யி டுக்கிக்கொள்ளுகிறது ஒருத்தனை நடத்திக்கொள்ளுகிறது இப்படிக் குச்செய்கிறவர்களா பெரியோர்கள் பளா பளா நன்றாயிருந்தது.

சகுனி- விருத்தம்.

நிறையுளராகையாலே நெடுங்கடல்சூழுமிந்தத் ... ... ❋
துறையெலாமைவராளத் தனிச்செங்கோலொன்றுதந்தார் ... ❋
முறைவழுவாமற்பட்ச முழுதும்வைத்துங்களுக்குக் ... ❋
குறையறக்கோலுந்தந்து குடையையொன்றதுகந்தந்தார் ... ❋

வசனம்.

கேளப்பாமருமகனே துரியோதனா பீஷ்மனும் விதுரனும் நல்லநிறையுள்ளவர்களானபடியினாலே இந்தப்பூமியெல்லாம்ஐந் துபேரும்ஆளும்படியாக அவர்களுக்கு ஒரே-ஒரு-செங்கோலைக் கொடுத்துவிட்டார்கள் அந்தப்படிக்கே வஞ்சனையண்ணாமல் நீங் கள் நூறுபேரும் எப்படியாகிலும் முன்னுக்குவரவேண்டுமென் று என்னகொடுத்து விட்டார்களென்றால் கோலுங்கொடுத்து அ திகமா யொவ்வொரு குடையையுங்கொடுத்து விட்டார்களே இனிஇ ரந்துகுடிக்க உங்களாலேதானே அட்டியப்பா மருமகனே ... ❋

துரியோதனன்-விருத்தம்.

தந்தவர்தமையுஞ்செங்கோல் தரித்தவன்றனையுமற்றும் .... ✻
பிந்தினார்தமையும்பற்றிப் பிரசண்டமாருதம்போற்றுக்கிச் ... ✻
சிந்துசிந்தாறொதுக்கிச் செகமெலாமொருகுடைக்கீழ் ...... ✻
அந்தமாயாளவென்னி லாண்மையில்லாமற்போச்சோ ... ... ✻

வசனம்.

ஓய்மாமா நான்பெறவேண்டிய பட்டத்தைவாங்கிக் கொடுத்தவர்களையும் அதைத்தரித்தவனையும் அவன்தம்பிமார்களையும் காற்காலப்பிரசண்ட சிந்தமாருதம்போலத் தூளிபடலமாக அடித்து இந்தக்கடல்சூழ்ந்தபூமியெல்லாம் நானே ஒருகுடைநிழலிலடக்க ஆரம்பமடியான ஆண்மையென்னிடத்திலில்லையா இல்லையா நல்லது-ஆகட்டும் ... ... ... ... ... ... ... ... ... ✻

சகுனி- விருத்தம்.

தந்தைமனமிகநோகத்தாயும்வேகத் ... ... ✻
தாயுடன்கூடப்பிறந்தசமர்த்தன்மாமன் ...... ✻
என்றன்மனந் தாமரைமேற் றண்ணீர்போல் ✻
எப்போதுங்கிடந்துதவித்திடிந்துசாகப் ... ✻
பிந்திநின் றவைவர்மேன்மேல்மகிழ்ச்சியாகப் ✻
பெருமையாருமந்தப்பெருமைபார்த்தும் ... ✻
அந்தமிகுமாண்மையெங்கேபேடிகையி ... ✻
லாயுதம்போலாச்சுதுன்றனாண்மையப்பா ... ✻

வசனம்.

ஆ-ஆ-ஆ-ஆ- உன்தகப்பனுந்தாயும் நம்முடைய பிள்ளைக்குப் பட்டமில்லாமற் போச்சுதென்றுவேகிறார்கள் தாயுடன் கூடப்பிறந்த நல்லமாமனாகிய நான் இந்தமருமக்கள்மார்கள் இப்படியானார்களேயென்று என்றைக்குமெண்ணி வருத்தப்படுகின்றேன் அந்தப்பசகளைந்து பேரும் தருக்கிச்செருக்கித் தலைகீழாகத் ததிவிழுகின்றார்கள் இவைகளையெல்லாம்பார்த்துக்கொண்டிருந்தும் உனக்கு ஆண்மையென்பது ஒன்றிருக்கின்றதா அப்பா அதற்கென்ன பேடிகையி லாயுதமிருக்கின்றது இருந்தத்தினால் என்னபிரையோசனம் அதுபோலத்தான் உன்ஆண்மையும் மருமகனே ...... ✻

துச்சாதனன் - விருத்தம்.

சரிசரிநன்றுச்சொன்னீர் சபாசென்றன்சகுனிமாமா ... ... *
பரவுமிவ்வுலகமெல்லாம் பாண்டவர்க்கானபோதே ... ... *
இருந்துநூறுபேருங் கன்னனுந்தேவரீரும் ... ... ... ... *
ஆரியவாட்டின்கழுத்தி லாடியவதராளேமே ... ... ... ... *

வசனம்.

சரிசரி மாமா சபாசு நன்றாய்ச்சொன்னீர் ஆண்மையென்கின்றது எங்கேயிருந்ததுகாணும் இவ்வுலகையாளும் ஆதீனம் பாண்டவர்களுக்கு எப்போதாச்சுதோ அப்போதே நாங்கள் நூறுபேரும் கர்ன்னனுந் தேவரீரும் ஆட்டின்கழுத்திலாடிய அதராகப்போய்விட்டோமே இனியென்ன இருக்கின்றது மாமா...... *

சகுனி - விருத்தம்.

உடனுள்ளவைவர்மெள்ள வுபாயதந்திரமாயிந்தக் ... ... ... *
கடல்புனையுலகமெல்லாங் கைவசப்படுத்திக்கொண்டார் ... *
அடருமவ்வுலகைநீங்க ளாளவேநினைப்பதப்பா ... ... ....... *
திடமில்லாமுடவன்கொம்புத் தேனுக்கிச்சித்தவாறே ... ... *

வசனம்.

அட என்னகாணும் பாண்டவர்கள் எத்தாய் உபாயமாய்ப் பூமியைக்கைவசப்படுத்திக்கொண்டார்கள் அந்தப்பூமியை நீங்கள் கைவசப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றுநினைக்கிறது முடவன்கொம்புத்தேனுக் காசைப்பட்டாற் போலத்தான் அடபோங்காணும் போம் ... ... ... ... ... ... ... ... ... ... ... *.

துச்சாதனன்-விருத்தம்.

பொருக்கெனச்சரீரந்தன்னிற் புரைகுழலெழுந்தபோதே ... *
பெருக்குமுன்னறுக்கவேண்டும் பேசுவதினிவேறென்ன ... ... *
முருக்குபாண்டவர்கள்தம்மைமோசத்தாற்கொல்லவேண்டும் *
கருக்குடனதற்குமாமா கடாக்ஷம்நீர்செய்யவேண்டும் ...... *

வசனம்.

ஓய் மாமா இந்தச்சரீரத்திலே ஒரு புரைகுழலெழுந்தால் அது பெருக்கிறதுக்குமுன்னமே அதைஅறுத்தெறிந்துவிடவேண்டும் அப்படிபோல அந்தப்பாண்டவர்கள் உற்றிப்படுமுன்னே அவர்களை ஒருமோசஞ்செய்துகொல்லவேண்டும் அதற்குத்தேவரீர்தானே மனதுவைக்கவேண்டும் மற்றொருவராலே ஆகிறதா அது *

கர்ன்னன்-விருத்தம்.

திகைத்திடும்யானைகட்குச் சிங்கம்பின்வாங்குமோதான் ... ... *
முகத்தினில்மீசையுள்ளார் மோசத்தாற்கொல்லுவாரோ ... ... *
தொகுத்தவோர்கணையாலின்று சூரியனுதிக்குமுன்னே ... ... *
திகழ்ந்துமைவரையுநானே நீர்த்தூளியாகச்செய்வேன் ... *

வசனம்.

தம்பி துச்சாதனா போ போ என்னவார்த்தையிது ஆனைகளைக் கண்டு சிங்கம்பின்வாங்குமா அதுபின்வாங்குமானால் அப்போது முகத்திலேமீசையுள்ளவர்கள் ஒருமோசத்தினாலே கொல்லவேண்டும் நல்லது சூரியனுதயமாகிறதற்குமுன்னமே ஒரே ஒரு பாணத்தினாலே அந்தப் பஞ்சபாண்டவர்களைந்துபேரையும் பஞ்சபஞ்சாகப் பிஞ்சுதிரப் பூவுதிர நீர்த்தூளிசெய்து போடுகிறேன் பார்க்கிறையா கர்ன்னனுடைய திராணி ...... ... ... ... ... ... *

(இதுவுமது.)

வைப்பினில்விடமேதீண்டில் மணிமந்த்ரவவிழ்தத்தாலே ... *
கொப்பெனத்தீர்க்காவிட்டால் கொல்லுமென்பது தெரிந்தும் *
மைப்படுசத்துருக்குள் வணங்கிவாழ்ந்திருந்தீரல்லால் ...... *
தப்பறுமென்வில்லாண்மை தனையறியாமற்போனீர் ... ... *

வசனம்.

எதுகானும் விஷந்தீண்டினால் உடனே மணிமந்திரவவிழ்தங்களைக்கொண்டு மீட்கவேண்டும் அப்படிமீட்காவிட்டால்கொல்லுமென்கிறது தெரிந்திருந்தும் அந்தச்சத்துருக்களுக்கு இணங்கி வணங்கி அடங்கி ஒடுங்கி இருந்தீர்களேயல்லாமல் இந்தக்கர்ன்னனுடைய சுத்தவீரத்தை அறியாமற்போனீர்களே இனிமேலாவது அறியப்போறீர்களா இல்லை இல்லை இருக்கட்டும் ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

இடியிடித்ததுபோல்கோபித் தெழுந்தவென்கண்ணேகன்ன *
அடல்மிகுத்திடுமுன்னாண்மை அறிவேனானேவன்றேனும் *
வடிமிகுத்திடுதேவர்க்குள் மன்னர்க்குள்மற்றவர்க்குள் ... ... *
உடைரணகளப்போர்வீர ருனக்கிணையொருவருண்டோ ... ... *

வசனம்.

ஆ-ஆ-ஆ- ஆ- என்கண்ணுக்குள் மணியாயிருக்கப்பட்ட கர்ன்னமகாராஜனே நீ இப்படிகோபித்துக் கொள்ளலாமா உன்சௌ

ரிய பராக்கிரமத்தை நானறியேனு மேலும் எனக்குநன்றாய்த்தெரியுமே இந்தச்சுவர்க்கமத்திய பாதாளங்களிலேயிருக்கும் தேவர்களிலேயாவது இராஜாக்களிலேயாவது இன்னம் மற்றவர்க்குள்ளேயாவது உன்னைப்போலும் ரணரங்கசூர வீரர்களுண்டோ உண்டா ஆ - ஆ ... ... ... ... ... ... ... ... ... ... *

கர்ணன் - விருத்தம்

நிலமெலாமைவராண்டால் நீயுமுன் றம்பிமாரும் ... ... ... *
இலகியநானுமிங்கே யிருந்தினிச்செய்வதென்ன ... ... ... *
கலைவுறவோடுமாற்றில் கரைத்திடும்புளிபோலாச்சே ... ... *
புலிநிகன்னனென்றன் புஜபலாக்கிரமையையோ ... ... ... *

வசனம்.

கேளும் துரியோதனமகாராஜனே அந்தப்பாண்டவர்களே இவ்வுலகமெல்லாம் ஆளுகிறதானால் நீயும் உன்தம்பிமாரும் நானும் இங்கேயிருந்து செய்கிறகாரியமென்ன ஆனால் மகத்தான உத்தண்ட தூர்த்தண்ட புஜபலபராக்கிரம் என்னிடத்திலிருந்தும் என்னத்துக்காச்சுது ஆற்றிலேகரைத்தப்புளியாகப்போச்சுதே ஐயையோயாயிருக்கட்டும் ... ... ... ... ... ... ... ... *

பொ. து - விருத்தம்.

இப்படிக்கன்னராஜனெழுந்துவெப்புலிபோல்சீறிச் ... ... ... *
செப்பியவசனமெல்லாந் திடதுரியோதனன்றான்கேட்டுக் ... *
கொப்பெனத்தழுவியிந்தக் குவலயமுனதேயென்று ... ... *
அப்பொழுதவன்றன்கோப மாற்றுவான்தேற்றுவானே ... ... *

துரியோதனன் - தரு.

இ-ம். மோகனம் - அடதாளம்.

பொறுபொறுபதறாதேகர்ணா ... ... (என்றன்)
பத்திக்கிசைந்தவிற்பன்னா ... ... ... சம்பன்னா *
விறல்சேர்பாண்டவராலே மெலிவுவந்ததென்ன ... *
வெந்நீரிலேவிட்டுவெந்து போனதென்ன ...(பொறு)
உலகமுழுதுமைவர்காக்க ... ... ... நாங்க *
ளொடுங்கிநின்றவரைப்போயேர்க்க ... ... ... *
சிலபேர்சொல்லி நகைத்தார்க்க ... ... ... அந்தச்
சின்னத்தைநான் கண்ணால்பார்க்க ... ... (இந்த)

அலைகடற்புவியெல்லாமவர்க்கேகாணியாமோ ... ... ... *
ஆபாசந்தன்னைப்பருந்தடித்துக்கொண்டுபோமோ ... (பொறு)
பெரியோரெங்களைச்செய்தவேச்சு ... ... ... எவி
பிராவுக்கேசம்மதியாச்சு ... ... ... ... ... (அது)
தெரியாதிருந்தாலேபோச்சு ... ... ... ... சூது
தெரிந்தபின்னினியுண்டோபேச்சு ... ... ... *
பரியாசமோவிதுபகைவர்மார்பிலாணி ... ... ... ... ... *
பலவான்துரியோதனனுன்பாருமென்னுடைத்திராணி ... (பொறு)
தெய்வந்தானேயடுத்தாலும் ... ... ... நீதி
தெரிந்தோர்ஞாயங்கொடுத்தாலும் ... (அந்த)
ஐவர்சண்டைதொடுத்தாலும் ... ... எங்கள்
அப்பன்வந்துதடுத்தாலும் ... ... ... ... *
வெய்யபாண்டவரைவேரோடேமுடிக்கிறேன் *
விளங்குஞ்செங்கோலைவாங்கியுனக்கேநான்கொடுக்கிறேன் *
பொறுபொறுபதராதேகர்ண—என்றன் *
புத்திக்கிசைந்தவிற்பன்னசம்பன்ன ... ... ... ... ... ... *

சகுனி—விருத்தம்.

கன்றுகளெல்லாங்கூடிக் களம்படுத்தாவதில்லை ... ... ... *
என்றிங்கதைபோல்முன்பி னெண்ணாமற்பேசுகின்றீர் ... ... *
குன்றினைக்கிளப்பக்கூச்சுக் கொம்புகள்சிவலேபோல் ... ... *
துன்றியநீங்கள்தானே தொல்லுலகாள்வீரப்பா ... ... ... *

வசனம்.

அப்பா துரியோதனா கர்ணா ஆகாகா நன்றாயிருந்தது அல்லகாணும் கன்றுகள்கூடிக்களம்படுத்தால்வைக்கலுமாகாது செத்தையுமாகாது என்பதுபோல நீங்கள் முன்னும் பின்னும் எண்ணாமல் பினத்துகிறீர்கள் எதுகாணும் அதல சுதல பாதாளமட்டும்வேரோடியிருக்கின்ற மலையைக்கிளப்புகிறத்துக்குக் கூச்சுக் கொம்புகள் சிவுகிற நீங்கள்தானா இந்தவுலகத்தை ஆளப்போகிறீர்கள் ஆ—ஆளுவீர் ஆளுவீர் வெகுலக்ஷணந்தான் குறைச்சலில்லை ... ... *

துரியோதனன்—விருத்தம்.

மண்ணுக்குள்மாமனென்றும் மருமகனென்றுமுண்டு ... *
கண்ணுக்குள்ளிமைபோலெம்மைக் காக்கின்றமாமாநீகாண் *

என்னுக்குளிலகுமைவ ரிளவரசியற்றுஞ்செங்கோல் ... ... *
ஒன்னுக்குள்நானேயாள வுபாயத்தைநீதான்சொல்வாய் ... *

வசனம்.

கேளாய் என்சகுனிமாமா வுலகத்திலேமாமனென்றும் மருமக
னென்றுமாக இருக்கிறதுண்டு அதிலுங்கண்களை நிமைகாக்கிறு
ப்போலேகாக்கப்பட்ட மாமன்நீயே ஆகையால் அந்தப்பாண்ட
வர்கள் செய்யப்பட்ட இளவரசைநான் செய்யத்தக்கதாக வுபாய
தந்திரத்தைத் தேடிச்சொல்லேன் மாமா ... ... ... ... *

சகுனி — விருத்தம்.

இலகுபாண்டவரையிப்போ தெவ்விதத்தினிலுமென்றன் ... *
வலிமையால்வெல்வேனென்று மனப்பாலைக்குடிக்க வேண்டாம்
தலைமையாமைவர்மேலுன் தகப்பனார்க்கதிகபக்ஷம் ... ... ... *
விலகவேயிவர்வார்த்தைக்கு வேறுநீசொல்லொணாதே ... *

வசனம்.

கேளும் மருமகனே துரியோதனா பாண்டவர்கள் ஐந்துபே
ரையும் எப்படியும் என்னுடையசாமர்த்தியத்தினாலே வெல்லுவே
னென்று மனப்பாலைமாத்திரங்குடியாதே அதேனென்றால் அவர்
கள்பேரில் உன்தகப்பன் பரிபூரணபக்ஷம் வைத்திருக்கின்றான் உ
ன்தகப்பன்சொல்லுக்கு நீ ஒன்றுந்தடுத்துச் சொல்லப்போகாது
அட—என்னவானாலும் எல்லாக்காரியமும் கெடவேகெட்டுது இனிவ
ரப்போகிறதென்று நினைக்கிறாய் வாராது வாராது... ... ... *

துரியோதனன் — விருத்தம்.

பிதாமொழிதடுக்கொணாது பெரியோர்சொல்விலக்கொணாது *
சுதாவப்பாண்டவரைநாமுஞ் சண்டையால்வெல்லொணாது ... *
நிதானமாமைவர்செங்கோல் நீக்குவதினியெவ்வாறு ... ... ... *
இதாகுமிதாகாதென்றே யெங்களுக்குரைசெய்வாயே ... ... *

வசனம்.

ஓய்மாமா என்னவார்த்தை இது தகப்பன்சொல்லுக்கும் தடுத்
துச்சொல்லப்போகாது மற்றதந்திரவாதிகளுடையபேச்சும் தள்
ளலாகாது அந்த ஐந்துபேரையும் சண்டையினாலேயும் வெல்லக்
கூடாது அப்படியிருந்தால் இனி எந்தவிதத்தினாலே வேரோடிப்
போன பாண்டவர்களை வேரறுக்கிறது இப்படி அப்படி இது ஆ
கும் இது ஆகாதென்றுதான் சொல்லிக்கொளுத்தேன் மாமா *

சகுனி-விருத்தம்.

புல்லறியாவுன் தகப்பனைக்கொண்டு போதனைசெய் துபாண்டவரை
உலவிலாவந்தவாரணாவதத்திலுபாயமாப்போம்படிசெய்தால் [வார்
குலமுறைப்பெரியோர்குருக்கள்மார்மற்றக்கொற்றவ ருன்வசமா
தலைமையாய்நீயே யொருதனிக்குடைக்கீழ்ச் சகமுழுதாளுவாயப்
[பார்.

வசனம்.

உங்களப்பனாகிய திருதராட்டிரனைக்கொண்டு பாண்டவர்களை வாரணாவதத்துக்குப்போம்படியாக உபாயதந்திர போதனைசெய்து அனுப்புவித்தால் அப்பால் பீஷ்மர் முதலானபெரியோர்களும், குருக்கள்மார்களும் மற்றதேசத்துராஜாக்களும் உன்வசப்பட்டுப்போவார்கள் அவர்கள் உனக்கு வசப்பட்டபோதே இந்தவுலகமெல்லாம் எகச்க்ரேஸ்சுவரனாக நீயேஆளுவாய் இதற்குத்திருவில்லை ஏதோ இந்தப்படி செய்யேன் பார்ப்போம் ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

தகுந்தகுமிதுவே நல்ல தந்திரம்சட்டம்சட்டம் ... ... ... *
உகம்பலதவஞ்செய்தாலுமுன் போல்மாமனைக்காண்பேனோ *
இகழ்ந்துளவைவர்செல்வ மின்றைக்கேகிடைக்கப்பெற்றேன் *
சகந்தனையாளப்பெற்றேன் சமஸ்தமும்பெற்றேன் பெற்றேன் *

வசனம்.

ஆ கா கா கா ஒய்மாமா ஆ தகுந்ததும் வெகுசட்டம் வெகுச்சட்டம் நல்லவுபாயம்சொன்னீர் கற்பகோடிகாலந்தான் தவஞ்செய்தாலும் உன்னைப்போலும் மாமனைநான் காணப்போகிறேனா ஓ கோ கோ அப்படியே நடக்குமானால்அந்தப்பாண்டவர்களுடைய செல்வச்செருக்கெல்லாம் இன்றைக்கே என்னுதாச்சுது சகலதேசமும் என்னுதாச்சுது சமஸ்தமும் என்னுதாச்சுது ஆச்சுதென்று சொல்லப்போகாதா ஆகா ... ... ... ... ... ... ... *

பொது-விருத்தம்.

இந்தவகைகுடிகேடன் சகுனிமாமன் ... ... ... *
எடுத்துரைத்ததந்திரங்கேட்டிதுமெய்யென்று ... *
தந்ததுரியோதனனும் சம்மதித்தான் ... ... ... *
தம்பிதுச்சா தனனுமிது சரிதா னென்றான் ... *
அந்தமுள கன்னனுமீ தொக்கு மென்றான் ... ... *
அப்பொழுதா லோசனைவிட்டகன்றரிப்பால் ... *

புத்திபுள திருதராட் ரனைப் போய்க் கண்டு ... ... ❋
புலம்புவார் குழந்தைகள் சொல்லி யலம்புவாரே ... ❋

பொருகட்டியம்-வசனம்.

அஃதெப்படியென்றால் சகுனியானவன் சொன்ன உபாயத்தி னாலே துரியோதனன் துச்சாதனன் கர்ணன் இவர்கள்சம்மதித் துத்திருதராட்டிரமகாராஜனிடத்துக்குவந்துசொல்லுவதுகாண்க

திருதராட்டிரனுக்குத்-துரியோதனன்-
துச்சாதனன்போற்று-விருத்தம்.

அங்கண்மாஞாலங்காக்கும் அரசருக்கரசேபோற்றி ... .... ❋
மங்களகரமாய்நின்ற மதிகுலத்தலைவாபோற்றி ... ... ... ❋
தங்குநன்னெறிசேரேக சக்ராதிபதியேபோற்றி ... ... ... ❋
எங்களையீன்றகோவே யிணையடிக்கமலப்போற்றி ... ... ... ❋

திருதராட்டிரன்வாழ்த்து-விருத்தம்.

மதிதனிலுயர்ந்தவென்றன் மக்களேநீங்களிந்தக் ... ... ... ❋
கதிர்மதிகுலத்தினுக்குக் கர்ப்பூரதீபம்போலத் ..... ❋
துதிதருகீர்த்திபெற்றுத் துரைத்தனச்செங்கோல்பெற்று ... ❋
நிதிதருசெல்வம்பெற்று நீடூழிகாலம்வாழ்வீர் ... ... ... ❋

கர்ணன் திருதராட்டிரனுக்குப்போற்று- விருத்தம்.

மன்னியவுலகுக்கெல்லாம் மன்னர்மன்னவனேபோற்றி ... ❋
பொன்னணிமகுடம்பூண்ட பூச்சக்ரவர்த்திபோற்றி ... ... ❋
கொன்னிலைநெடியவேலேந்துங் குருகுலத்தலைவாபோற்றி ... ❋
என்னையாளுடையகோவே யிணையடிக்கமலப்போற்றி ... ... ❋

கர்ணனுக்குத்திருதராட்டிரன்வாழ்த்து-விருத்தம்.

தெள்ளியவறிவுநல்ல ஜெயபராக்கிரமம்பெற்றுக் ... ... ... ❋
கள்ளமெள்ளளவுமில்லாக் கனமிகுகன்னனேநீதான் ... ... ... ❋
எள்ளருந்தங்கநகன்னி விரத்தினம்பதித்தாற்போலென் ... ❋
பிள்ளைகள்நூறுபேர்க்கும் பிரியமாயிருந்துவாழ்வாய் ... ... ❋

சகுனிதிருதராட்டிரனுக்குச்சொல் - விருத்தம்.

உச்சாகமதாயுலகோர்குடையில் ... ... ❋
அச்சாணியதாயரசாளரசே ......... ❋
பிச்சாமுடியைப்பிறருக்கீய்ந்த ... ... ❋
மச்சாம்னநான்வந்தேன்வந்தேன் ... ... ❋

திருதராட்டிரன்-வசனம்.

ஆகா கா அத்தான் வாரும்வாரும் உள்க்காரும் ... ... ... *

துரியோதனன் சகுனி கர்ன்னன் துச்சாதனன்

இவர்களுக்குத் திருதராட்டிரன்சொல்-விருத்தம்.

ஆசையென்மகனேயப்பா அடா துரியோதனுசொல் ... ... *
மாசில் துச்சாதனுவோய் மைத்துனுசகுனிகர்ன்னு ... ... ... *
பேசியநீங்கள்நாலு பேருமொன்றாகக்கூடித் ... ... ... *
தேசுறவிங்கெவந்த செயலென்னசெப்புவீரோ ... ... ... ... *

வசனம்.

அப்பா துரியோதனு என்பிதாவே அடா துச்சாதனு என்பிதாவே தம்பீகர்ன்னு ஏனையா ஓய்சகுனிமைத்துனு என் அத்தான் ஓ கோகோகோ ஏது இன்றையத்தினம் அதிசயமாய்அத்திப்பூத்தது போல நீங்கள் நாலுபேரும் ஒன்றாய்க்கூடிக்கொண்டு ஏகாந்தமாகவந்தகாரியம் என்னமோ அதுதெரியஇல்லையே அது என்னகாரியம்சொல்லுங்கள் ... ... ... ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

துக்கமீதென்னசொல்வேன் தொல்பிதாநீயிருந்தும் ... ... *
திக்கிலாதவர்களானேம் செலவுதந்தனுப்புவித்தால் ... ... *
பக்குவமிதுவேநாங்கள் பரதேசமினிப்போகாமல் ... ... ... *
மிக்கதோர்வெறுப்புமெங்கள் விசனமுந்தீர்ந்திடாதே ... ... *

வசனம்.

ஐயா என்னுடையதுக்கத்தைஎன்னென்றுசொல்வேன் எங்களைப்பெற்றதகப்பன் நீயேசக்ராதிபதியாகஇருந்தும் உன்னாலேஎங்களுக்குஒருதவியும்இல்லாமற்போய்விட்டதேபோகட்டும்இப்போதாகிலும் எங்களுக்குச்செலவுகொடுத்தால் நாங்கள்நூறுபேரும் பரதேசம்போய்விடுகிறோம் அப்படிப்போகாமல் எங்களுடைய வெறுப்பும் விசனமும்கொஞ்சத்தில் ஆறாது அய்யா ... ... *

திருதராட்டிரன்- விருத்தம்.

எப்படியென்னசெய்வே னென்னடாகெடுவாயையோ ... ... *
ஒப்பறுமுனையல்லாம லுயிரெனக்கினிவேறுண்டோ ... ... *
தப்பிதம்வரவுனக்குத் தாழ்வுநான்செய்ததென்ன ... ... ... *
அப்பனேஐயனேயென் றுசைக்கண்மணியேசொல்வாய் ... ... *

### வசனம்.

ஐயையோ இதுஎன்னகாரணம் அடாஉன்னையல்லாமல் எனக்கு உயிர்வேறேயுண்டா இல்லையே அப்படியிருக்க என்னடாகெடுவாய் இப்படிச்சொன்னாய் உனக்குநான்என்னகுறைச்சல்செய்தேன் சொல்லடா என்னப்பனே என்னையனே என்றுமைக்கண்மணியே [மகனே ✳

### துரியோதனன்-விருத்தம்.

வள்ளல்நீயிருக்கச்செங்கோல் வரன்முறையிருக்கவுன்றன் ... ✳
பிள்ளைகள்நாங்கள் நூறு பேருஞ்சாகாதிருக்கத் ... ... ... ✳
தெள்ளியசத்துருக்குச் செங்கோலைக்கொடுத்தேயென்னைத் ... ✳
தள்ளுவித்திடவுனக்குத் தருமமோதகுமோசொல்வாய் ... ... ✳

### வசனம்.

சொன்னான்சொன்னான் இந்தக்கடல்சூழ்ந்தபூமிக்கெல்லாம்ஏக சக்கிரேஸ்வரனாகநீயிருக்கமேலும் அரசாட்சிசெய்யவேண்டியவரன் முறையிருக்க நீபெற்றபிள்ளைகள் நாங்கள் நூறுபேருஞ்சாகாமல் தூக்கங்களைப்போலேயிருக்க நீசெலுத்தப்பட்டசெங்கோலை என்சத்துருக்கள்கையிலேகொடுத்து என்னைத்தள்ளிவிட்டாய் இதுதானா பிள்ளைகளுக்குத் தகப்பன்செய்யும் உபகாரம் இதுதருமமா இதுதருமமா பளாபளா நன்றாயிருந்தது ... ... ... ... ✳

### சகுனி-விருத்தம்.

சித்திரமணியேயென்றன் செல்வமேயென்னடாநீ ... ... ✳
பித்தன்போல்கனவுகண்ட பேயன்போல்பேசுகின்றாய் ... ... ✳
சத்துருநமக்காருன்னைத் தள்ளிவிட்டவர்களாருன் ... ... ✳
புத்தியில்நினைத்துவந்த புலனதுதெரியச்சொல்வாய் ... ... ✳

### வசனம்.

அடா என்சித்திரமே என்செல்வமே என்கண்ணின்மணியே என்கட்டிமருமகனே ஆ-ஆ-ஆ-என்னடாபயித்தியக்காரனைப் போலவும் கனவுகண்டபேயனைப்போலவும்பேசுகின்றாய்மெய்யாய்க் கனாக்கண்டாயோமருமகனே நமக்குச்சத்துருக்கள்ஆர் உன்னைத்தள்ளிவிட்டவர்கள்ஆர் நீசொல்லுகிறது எனக்கு ஒன்றுந்தெரியஇல்லையே அதுஎன்ன செவ்வையாய்ச்சொல்லடா ... ... ... ✳

### துரியோதனன்-விருத்தம்.

புகலும்பூனைகளுக்கஞ்சிப் புலிகள்பின்னின்றாற்போலத் ... ... ✳
தகுபுயவலியர்நாங்கள் தார்வேகர் நூறுபேரும் ... ... ... ✳

மகிழ்வுறுமைவர்பின்னே வாய்புதைத்தேவல்கேட்டுத் ... ... ✻
திகழுந்தீவட்டியின்கீழ்த் தீபம்போலிருக்கச்செய்தாய் ... ...✻

வசனம்.

ஐயா பூனைக்குப்பயந்து புலிகள்பின்னிடைந்ததுபோலச் சங்கிராமவுத்தண்டதாஷ்டீக பராளான நாங்கள் நூறுபேரும் அந்தப் பாண்டவர்கள் பின்னேநின்று வாய்புதைத்துக்கைகட்டி அவர்கள் சொன்னஊழியமுங்கேட்டுக்கொண்டுதீவட்டியின்கீழ்த்தீபம்போலிருக்கும்படியாகச் செய்துவிட்டாயே இதைவிட இனியென்னத்தைச்செய்கிறது ஐயா ... ... ... ... ... ... ... ✻

திருதராட்டிரன்-விருத்தம்.

அரிகரியையோபாவி அப்படிநினைக்கலாமா ..... ... ... ... ✻
பெருங்கடல்நீரையொண்டாய்ப் பிரித்திடவுன்னாலாமா ... ... ✻
தருநெறியண்ணனுக்குத் தம்பிமார்வணங்கிவாழ்ந்தால்........✻
இருநிலந்தன்னிலத்தை யிகழ்ச்சியாயெவர்சொல்வாரோ ... ... ✻

வசனம்.

அரிகரிநாராயணா ஐயையோ அடாபாவி அப்படிநினைக்கலாமா கடலிலிருக்குந்தண்ணீரை யொண்டாகப்பிரித்துப் போடுகிறத்துக்கு உன்னாலேயாகுமா என்னாலேயாகுமா அடடா அண்ணன் எப்படிச்சொல்லுகிறானோ அப்படிக்கெல்லாந்தம்பிமார்கள்கேட்டு வணங்கிவாழ்ந்துகொண்டுஇருக்கிறது நல்லநெறியாம் இதைஉலகத்தில்ஒருவரும் இகழ்ந்துபேசார்கள் அதையோசனைபண்ணாமல் புலியென்றும் பூனையென்றுந் தீவட்டியென்றுந் தீபமென்றுஞ் சொன்னாய் இவ்வளவா உன்புத்திமகனே அப்படியா ......... ✻

துரியோதனன்-விருத்தம்.

தவறுநீசொல்வாயானால் தடுத்துநான்சொல்வதென்ன ... ... ✻
எவரையுமுன்னைப்போலே யிதயத்திலெண்ணுகின்றாய் ... ... ✻
கவர்புலிபசுத்தோல்போர்த்த காரணம்போலிருக்கும் ... ... ✻
அவர்மிகுமைவர்செய்யுஞ் சூழலினிக்காண்பாயையா ... ... ... ✻

வசனம்.

ஐயாதன்பிள்ளைகளைத்தானேகெடுக்கநினைத்திருக்கிற நீஇதுமாத்திரமாசொல்லுவாய் இன்னம் அனேகஞ்சொல்லுவாய் மேலும் நீகபடமில்லாதவன் உன்னைப்போலே எல்லாரையும்நினைக்கிறாய் புலிபசுவின்தோல் போர்த்தாற்போலிருக்கிற அந்தப்பாண்டவர்

கனுடையசூழல் இனிமேலல்லவோ உனக்குத்தெரியப்போகிறது
இப்போது தெரியுமா தெரியாது தெரியாது ... ... ... *

திருதராட்டிரன் - விருத்தம்.

பிறவியிற்குருடனாகப் பிறந்திடுமென்றனக்கு ... ... ... *
நிறைமணிமகுடஞ்சூட்டி நிலமுழுதாளச்செய்து ... ... ... *
துறையுடன்வணங்கியென்றன் சொற்படிநடந்துகொண்ட ... *
திறல்கொளென்றம்பிபாண்டு செய்கையைக்கேட்டிலாயோ ... *

வசனம்.

அடா துரியோதனா பிறவிக்குருடனாகப்பிறந்தவனைக்கேமுடிதரித்து இந்தக்கடல்சூழ்ந்தபூமியெல்லாந்தானே ஆளும்படியாக என்னைத்தலைவனாகவைத்து நானெப்படிச்சொல்லுகிறேனோ அப்படிக்கேட்டுக்கொண்டு சதாகாலமும்என்னைப்பூசைபண்ணிக்கொண்டு இருந்தானே என்தம்பிபாண்டுராசன் அவனுடையநடத்தையை நீ கேட்டதில்லையா அப்படிப்போலஅந்ததருமராசனுக்குநீங்களும் அப்படியேநடந்து கொள்ளத்தேவையில்லையா என்னடாவிபரீத ஆலோசனைகளெல்லாம்பண்ணுகிறாய்வேண்டாம்அப்பாவேண்டா [ம்மகனே *

சகுனி-விருத்தம்.

பேதமில்லாதவன்போல் பேசுமுன்தம்பிவார்த்தை ... ... *
காதினால்கேட்டதல்லால் கண்ணினாலென்னகண்டாய்...... *
மீதுமத்தருமனுக்கு விழியுண்டுவிவேகமுண்டு ... ... ... *
சாதனமனேகஞ்சொல்லத் தம்பிமார்நால்வருண்டே ... ... *

வசனம்.

அட வாயைமூடுங்காணும் அந்தத்தம்பிக்காகநீ ஒழுகினதுபோதும் அவன்மகாநல்லவனைப்போல உன்செவிக்கின்பமாக எதைச்சொன்னானோ அதையெல்லாங் காதினாலேகேட்டதல்லாமல் மற்றப்படி அவன்செய்தகாரியமெல்லாம் எந்தக்கண்ணினாலே பார்த்துக்கொண்டிருந்தாய் நீதானா அந்ததருமராசன் அவனுக்கென்ன கண்ணில்லையா கருத்தில்லையா இதுதகுந்ததாகதென்று சொல்லிக்கொடுக்கிறத்துக்கு அவனுடையதம்பிமார் நாலுபேரில்லையா இப்படிதானாபேசுகிறது ஞாயம்நன்றாயிருந்தது ... ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

சாற்றுமைத்துனனேயென்றன் தம்பியென்சொற்றள்ளாமல் ...*
போற்றியென்னுடனிருந்து புவியைநானாளச்செய்தான் ......*

சேராற்றுமப்படியேயிந்தச் சுயோதனனடந்துகொண்டால் ... *
ஏற்றவிக்குலத்துள்ளோரு மெவர்களும்பழித்திடாரோ ... ... *

வசனம்.

அதற்கல்லகாணும் ஓய் அத்தான் என்தம்பியாகிய பாண்டுராஜனென்னைத்தலைவனுகவைத்துக்கொண்டு சகலகாரியமுந்தான்பார்த்துக்கொண்டுபோனான் அந்தப்படியே துரியோதனனும் அந்தத் தருமராஜன் சொன்னபடியே நடந்துகொண்டால் நம்முடைய வமிசத்தாரும் மற்றப்பேர்களும் ஒருபழியுஞ் சொல்லார்களே யென்று தான்நினைக்கிறேன் இது நலமா நலமல்லவா சொல்லுகாணும் ஓய் அத்தான் ... ... ... ... ... ... ... *

சகுனி-விருத்தம்.

சாலவுன்னுடன்பிறந்த தம்பியைமெச்சிக்கொண்டாய் ... *
கோலுமப்படிக்குக்கோடா கோடியிலொருத்தன்கண்டாய் ... *
மேலுஞ்சுக்ரீபனுலே விபீஷணனுலேயந்த ... ... ... ... *
வாலிராவணன்முன்பட்ட வாறுநீயறிந்திலாயோ ... ... ..... *

வசனம்.

அட-நல்லதுபோங்காணும் உன்தம்பியைநீயேமெச்சிக்கொண்டாய் இப்படித்தமையனுக்கேர்க்க நடக்கின்றதம்பிமார்கள் கோடாகோடியிலே எவனே ஒருத்தன் நல்லதுவாலியுடனே கூடப்பிறந்ததம்பிதானே அந்தச்சுக்கிரீபன் அவனுலே அந்தவாலியும் ராவணனுடனே கூடப்பிறந்ததம்பிதானே அந்தவிபீஷணன் அவனுலே அந்தராவணனும் இவர்கள்பட்டபாடும் கெட்டகேடும் நீயறியாயோ சும்மாய்தம்பிதம்பியென்று தும்பிபறக்கிறாய் என்னகாணும் என்னமோ தம்பியாம் அடபோதும் அந்தமட்டிலே வாயைமூடுங்காணும் ... ... ... ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

தந்தைநீயரசுசெய்யத் தகும்வரன்முறைப்படிக்குப் ... ... ... *
பிந்தியுன்மைந்தனுனே பெறவேண்டுமதையல்லாமல் ... [தாய் *
இந்தப்பாண்டவர்க்குண்டென்றே யெவர்சொல்வாரெங்கேதேர்ந்
விந்தையில்விதுரன்பீஷ்மன் வினையத்துக்குடன்பட்டாயே ... *

வசனம்.

தகப்பன் நீசெய்யப்பட்ட அரசாட்சியை உன்பிள்ளையானநான் பெறவேண்டுமேயல்லது அந்தப்பாண்டவர்களுக்கு உண்டென்று

எந்தமனுவிக்கியானிகள்சொன்னார்கள் எந்தநீதிசாஸ்திரிகள்சொன்
னார்கள் எந்தநாயத்தைக்கொண்டு அவர்களுக்கு இளவரசுபட்டங்
கொடுத்தாய் அந்தவிதுரன் பீஷ்மன்செய்தமித்துருபேதத்துக்கு
உடன்பட்டாயேயல்லது ஏதாகிலுமுன்பின் எண்ணிச்செய்தாயா
இல்லையே நல்லதுஆகட்டும் ... ... ... ... ... ... ... ... *

துச்சாதனன்-விருத்தம்.

அரசுசெய்தருமனுக்கு மவன்றம்பிமார்க்குநாங்கள் ... ... *
வரிசையாயேவல்கேட்டு வயின்வளர்ப்பதிலுமையோ ... ... *
கரிசடைதரித்துத்தண்டு கமண்டலங்கைப்பிடித்துத் ... ... ... *
தரிசனங்காட்டிற்சென்று தவஞ்செய்தால்மிகவுநன்றே ... ... *

வசனம்.

ஐயா இப்போது சக்ராதிபதியாய் இளவரசுசெய்யப்பட்டஅந்
தத்தருமராஜனுக்கும் அவன்தம்பிமாருக்கும் நாங்கள்வணங்கிஊ
ழியஞ்செய்து இந்தவயிறுவளர்க்கிறத்தைவிட தலைநிறையச்சடை
யைத்தரித்துக்கொண்டு தண்டுகமண்டலத்தைக்கையிலேபிடித்துக்
காவிகாஷாயத்தையுடுத்தித்தபசிகளாகக்காட்டிலே போய்த்தவஞ்
செய்நால்மிகவும்நல்லது அதனால் இகபரசாதகமுண்டு அதேனெ
ன்றால் உன்வயிற்றிலேபிறந்தபிள்ளைகளாகிய எங்களுக்கு இவ்வள
வுவேண்டும்புத்தி ஐயா ... ... ... ... ... ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

எப்படிமகனேயுன்னுடையெண்ணமிப்படியென்றுநானறியேன் *
மெய்ப்புவியறியத்தருமராஜனுக்குமிஞ்சிநானிளவரசளித்தேன் *
ஒப்புடனினிநான்சொன்னசொற்றவிர்ந்தாலுலகினிலென்னையேப
ழிப்பார்-துப்பறவினிமேல்நடக்கும்வாறுனக்குத்தோற்றியதென்
[னதான்சொல்வாய் *

வசனம்.

அப்பா துரியோதனா உன்னுடையஎண்ணம் இப்படியென்று எ
ள்ளளவும் அறியாமற்போனேனே வகைமோசமாய்த்தருமராஜனு
க்குமிஞ்சி இளவரசுபட்டங்கட்டிப்போட்டேனே இனிமேல் அ
தைத்தவிர்த்துப்பேசினேனேயானால் உலகத்திலே என்னைப்பழிப்
பார்களே நானென்னசெய்வேனடாமகனே நல்லது இனிமேல் ந
டக்கவேண்டியது உனக்குஎன்னதான்தோற்றுது அதையாகிலுஞ்
சொல்லேன்மகனே ... ... ... ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

மருவுபாண்டவரைக்குந்தியையந்தவாரணாவதத்திலுக்கேகிக் ... *
கருதுபாண்டுவுக்குக் கடன்முறைசெய்யக் கங்கைத்துறையனுப்புவித்
திட்டால்- விருதுமன்னவரும் பகைவரும்பிறரும் வீழ்ந்தடிபணி
ந்தெனைவணங்க- வொருவனேயிந்த வுலகினையெல்லா மொருகு
[டை நிழலில்வைத்தாள்வேன் *

வசனம்.

ஐயா ஆனால் ஒருஉபாயமிருக்கின்றது அதென்னவென்றால் பா
ண்டவரையுங் குந்திதேவியையும் வாரணாவதத்துக்குப்போய் க
ங்கைக்கரையிலே பாண்டுமகாராசனுக்குச் சிலபரலோககிரியைசெ
ய்யும்படியாக அனுப்புவித்தால் மற்றராசாக்களும் சத்துருக்களு
ம் சமஸ்தமானபேரும் என்னைவணங்கும்படியாய் நானே இந்த
உலகத்தை ஆளும்படியான பிரையத்தனம் பண்ணிக் கொள்ளு
வேன் போகச்சொல்லும் ... ... ... ... ... ... ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

நந்துமவ்வூருக்கைவர் நடந்திடில்விதுரன்வீஷ்மன் ... ... *
சந்தமார்துரோணனசுவத் தாமனற்கிருபன்மற்றும் ... ... *
அந்தணர்மண்டலீக ரனைவருமவர்பின்போவார் ... ... ... *
எந்தவாறொருத்தனீயிங் கிருந்தரசாள்வாயப்பா ... ... ... *

வசனம்.

அப்பா துரியோதனா வாரணாவதத்துக்கு அந்த அஞ்சுபேரும்
போனால் துரோணன் அசுவத்தாமன் கிருபன் விதுரன் பீஷ்மன்
முதலான மந்திரிகள்பிரதானிகள் மற்றராசாக்கள் எல்லோரும் அ
வர்கள்பின்னே போய்விடுவார்களே அப்பால் நீயொருத்தன் பக்
கத்துணையில்லாமல் எந்தவுலகத்திலே அரசாளுகிறது ஓகோகோ
இதிலே ஒரு சங்கடம்வந்தது தே மகனே இதற்கெப்படி
யோசனை சொல்லேன் ... ... ... ... ... ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

மாமனிருக்கக்கன்னன் வல்லவனிருக்கவசுவத் ... ... ... *
தாமனிருக்கவென்றன் றம்பிமார்பலரிருக்க ... ... ... *
ஏமனுக்கேமன்போலு மெதற்குநானிருக்கவந்தத் ... ... ... *
தாமதருநவுமற்றச் சகாவும்வேண்டுவதோசொல்வாய் ... ... *

வசனம்.

கேளும்என்பிராவே கபடநாடகசூத்திரதாரியானஎன்னுடைய சகுனிமாமனிருக்கரணரங்கராசகண்டீரவமானகர்ன்னமகாராசனிருக்கஅனற்கலைக்கோலாகலப்பிரசண்டசிஞ்சாமாருதமான அசுவத்தாமனிருக்கஅதிகோரவுக்கிரப்பிரளயவீரகெர்ச்சித புசபலபராக்கிரம பெட்புவிளான என்தம்பிமார்களிருக்க எல்லாத்துக்குஞ்சண்டப்பிரசண்ட வுத்தண்டகோதண்டகண்டாரகண்டஎமகண்டகனனநான் இருக்கஅவர்களுடையஉறவும்மற்றப்பேருடையசகாவும் எனக்குவேண்டியிருக்குமா இராத்துஇராத்து இந்தக்ஷணமேபோகச் [சொல்லும்❊

துச்சாதனன் - விருத்தம்.

உதவியாய்விதுரன்பீஷ்ம னுன்னிடத்தினிலிருப்பார் ... ... ❊
விதிநிகர்வடிவதுரோணன் வீஷ்மனைப்பிரியமாட்டான் ... ... ❊
துதிபெறுகிருபனந்தத் துரோணனைநீங்கானப்பால் ... ... ❊
எதிரில்லாவசுவத்தாம னெம்மைவிட்டகன்றிடானே ... ... ... ❊

வசனம்.

ஐயா உன்னைவிட்டு விதுரரும் பீஷ்மரும் போகமாட்டார்கள் பீஷ்மரைவிட்டுத் துரோணர்போகமாட்டார் துரோணரைவிட்டுக் கிருபர்போகமாட்டார்எங்களைவிட்டுஅசுவத்தாமாபோகமாட்டார் ஆனதினாலே அந்தப்பாண்டவர்களுடனேகூட ஒருத்தரும்போகமாட்டார்கள்இதேபேச்சு இப்போதுதானேபோகச்சொல்லும்❊

கர்ன்னன் - விருத்தம்

அவர்களிங்கிருந்தாலப்போ தாகின்றலாபமென்ன ... ... ... ❊
நவமுறவைவர்பின்னே நடந்திடில்நஷ்டமென்ன ... ... ❊
இவிடமவ்விடமல்லாம லெங்கேதான்போனாலென்ன ... ... ❊
தவறுடனின்னமிந்தச் சார்பையுநினைக்கலாமோ ... ... ... ❊

வசனம்.

தம்பிதுச்சாதனா போபோஎன்னவார்த்தையிது அந்தப்பீஷ்மர்முதலானவர்கள் இங்கேஇருந்தால் நமக்குலாபமென்ன அந்தப்பாண்டவர்களுடனே கூடப்போய்விட்டால் நமக்குநஷ்டமென்ன இங்குமில்லாமல் அங்குமில்லாமல் வேறிடத்துக்குப்போய்விட்டால்த்தானென்ன இன்னம் அவர்களுடையசகாயம்வேண்டுமென்றுநினைக்கிறதென்ன அவர்களையேன்பிரதானமாகச்சொல்லுகிறாய் இதுநன்று இருக்கின்றது..............................❊

திருதராட்டிரன்- விருத்தம்.

ஆகட்டுமினிமேலெங்க ளத்தானிஷ்டப்படிக்கே ... ... ...*
போகட்டுமப்பால்நீங்கள் புத்திசாலிகளேயானால் ... ... *
சாகட்டும்பிழைக்கட்டும்மித் தரையெலாநெருப்புப்பட்டு ...*
வேகட்டுமெப்போதுஞ்சொல் வெளிவிடவேண்டாமப்பா *

வசனம்.

அப்பா துரியோதனா துச்சாதனா தம்பிகாள்னா நல்லது ஆகட்டும் என்னுடையஅத்தான் சகுனிராஜனுடையஇஷ்டம் எப்படியோ அப்படியேபோகட்டும்அதுவேனனக்குச்சம்மதிமேலே நீங்கள் நல்லபுத்திசாலிகளானால் நினைத்தகாரியத்தை முடியுங்கள் மேலும்சாகட்டும்பிழைக்கட்டும் உலகமேமுழுகிப்போகட்டும் நாம்இங்கே ஆலோசனைசெய்தோமே அதுமாத்திரம் வெளிவரலாகாது சாக்கிரதைபோய்வாருங்கள் ... ... ... ... ... *

சகுனி- விருத்தம்.

வகுத்துநியாயங்கள்சொல்லும் வஞ்சகர்சொற்கேளாமல்......*
தொகுத்தபாண்டவரைமெள்ளத் துரத்துவதுன்றன்பாரம்...*
திகைத்தவரிங்குமீளத் திரும்பிவாராமல்மாள ... ... ... *
செகத்தையுன்மைந்தனாளச் செய்வதென்பாரமத்தான் ... *

வசனம்.

ஓய்அத்தான் நான்ஒன்றுசொல்லுகிறேன்கேளும் என்னவென்றால் பீஷ்மனென்றும் விதுரனென்றும் துரோணனென்றும் இவடத்தில்பிராணனைப்போல் இருக்கிறார்களே அவர்கள் மித்துருபேதிகள் அவர்கள்பேச்சைக்கேளாமல் பாண்டவரை எப்படியாகிலும் இந்தவூரைவிட்டுஓட்டுகிறது உன்னுடையபாரம் அவர்கள்மறுபடியும் வராமல்மாளவும் உன்குமாரனே பூமியை ஆளவுஞ்செய்கிறது என்னுடையபாரம்அத்தான் எப்போதும் இது உன்மனதில் கெட்டியாயிருக்கட்டும்அத்தான்போய்வருகிறேன் செலவுதாரும் ... ... ... ... ... ... ... ... ... *

திருதராட்டிரன்- வசனம்.

ஓய்சகுனிஅத்தான் மனதில்ஞாபகம் கெட்டியாயிருக்கட்டும் போய்வாரும் அத்தான் ... ... ... ... ... ... ... *

பொது- விருத்தம்.

இவ்வகைசுயோதனன்சொற் கிசைந்தந்தத்திருதராட்டிரன் ✻
அவ்வகையேசெய்வேனென் றனுப்பினனவரையிப்பால் ... ✻
எவ்வகையினுமெம்மெண்ண மினிமுடிந்ததுவென்றெண்ணிச் ✻
செவ்வியநால்வர்தங்கள் திருமனைக்கேகினரோ ... ... ... ✻

வசனம்.

அஃதெப்படியென்றால் துரியோதனன் சகுனிகர்ன்னன் துச்சாதனன் இவர்கள்நாலுபேரும் திருதராட்டிர னிடத்துக்குப் போய் ஆலோசனைசெய்து திருதராட்டிரன் சம்மதப்பட்டபின்பு இவர்கள்நாலுபேரும் தங்கள் தங்களுடையவீட்க்குப்போய்ச் சேர்ந்தார்கள் அப்பால்நடக்கும் வரலாறுகாண்க ... ... ✻

பொது - விருத்தம்.

சேயனுந்துரியோ தனன்முதலானோர் செப்பியபடிக்குள மிசைந்து, தூயபாண்டவரை வாரணாவதத்திற் சுறுக்கினி லனுப்புதற்கெண்ணி, மாயமாமிந்தக் கபடவஞ்சனையை மற்றொருத் தருமறியாமல், தீயனுந்திருத ராட்டிரன்மறைத்துச்சிலதினங் கழிந் [திடவிருந்தான் ✻

வசனம்.

கேளீர்சபையோர்களே துரியோதனன்முதலானவர்கள் சொன்னபடிக்கேதிருதராட்டிரனும் அதற்கிசைந்துபாண்டவரைவாரணாவதத்துக்கு அனுப்பவேண்டுமென்றுஆலோசனைசெய்து அந்தவஞ்சனையைஒருவரும்அறியாமல்மறைத்துச்சிலநாளைக்கழித் [தான் ✻

பொது -விருத்தம்.

அடல்பெறுதிருதராட்டிர னவ்வண்ணமிசைந்திருந்தான் ... ✻
விடநிகருஞ்சுயோதனன் முதல்விபரீதத்தில் ... ... ... ✻
திடமிகுநாலுபேருந் திகழந்தப்புரத்திற்சென்று ... ... ✻
படர்தருகபடமின்னம் பண்ணுவாரெண்ணுவாரோ ... ... ✻

வசனம்.

கேளீர்சபையோர்களே திருதராட்டிரன்பாண்டவரைவாரணாவதத்துக்கு அனுப்பும்படியாக ஆலோசனை செய்துகொண்டிருந்தான் இப்பால் இவர்கள்நாலுபேரும் ஒரு அந்தப்புரத்தில் வந்து அந்தப்பாண்டவரை மோசஞ்செய்வதற்குரிய ஆலோசனைசெய்வதுகாண்க ... ... ... ... ... ... ... ... ✻

சகுனி-விருத்தம்.

வழிவசமாயுங்களப்பன் திருதராட்டிரன்........ *
மனைதமெள்ளக்கரைத்துரைத்து வகையுஞ்சொல்லி
ஒழியவொண்ணாப் பாண்டவர்களொழிந்துபோக *
வுலகையெலாநீயாள் வுபாயஞ்செய்தால் ... ...... *
கழிந்துதந்தச்சனியென்றுமனம்பூரித்துக்........ *
கலகலென்றுமுகமலர்ந்து களித்திராமல்...... ...*
விழிசொருகிக்கவலைகொண்டா யின்னமென்ன... *
விசனமப்பாமருமகனே விளம்புவாயே ...... ...*

வசனம்.

கேளும்மருமகனே துரியோதனா உங்கள்அப்பன்திருதராட்டிர னுடையமனதும் அந்தவச்சிரமலையும் ஒன்றுகாணும் அப்படிப் பட்டமனதைக்கரைத்து உரைத்துஒழிக்கக்கூடாத பாண்டவரை ஒழித்துப்போடும்படியாய்ச்செய்துசகலஆதிபத்தியமும் உனக் கேவரும்படியாக நான்உபாயஞ்செய்ததனால் பங்காளிச்சனியடு லேவிட்டதென்று அகமகிழ்ந்துமுகமலர்ந்து கலகலென்றுகல ந்துபேசி வேடிக்கையாகவிளையாடிக்கொண்டிராமல் என்னகா ணும்வெகுசஞ்சலத்தை அடைந்திருக்கிறாய் மருமகனே.....*

துச்சாதனன்- விருத்தம்.

வயமிகுமைவரந்தவாரணா வதம்போய்ச்சேர்ந்தும் ... ... *
அயலிருந்தவர்களங்கே அரசாட்சிசெய்வதானால் ... ... ... *
முயலுறுநமக்கெப்போது முதுகினிற்புண்ணேயல்லால் ... *
பயனென்னவித்தனைநாள் பட்டபாடதற்கோமாமா ...... *

வசனம்.

ஒய்மாமா அந்தப்பாண்டவர்கள்ஐந்துபேரும் அந்தவாரணா வதத்துக்குப்போயும் அவர்கள்அங்கேஇருந்து அரசுசெய்வார்க ளேயானால் அப்போதுமூடுகாட்டிலே நுழைகிறவனுக்குமுதுகி லே புண்ணிருந்தா லெப்படியோ அப்படியே யாகுமல்லாமல் இதிலே ஒருபிரயோசனத்தையுங்காணோமே இதற்குத்தானா இ த்தனைநாள்நாமெல்லோரும் பாடுபட்டதுமாமா ... ...... *

துரியோதனன்-விருத்தம்.

ஏற்றிடுவாரணவதத்துக் கனுப்பினாலு...... *
மிளவரசபட்டமவர்க்கிருக்குமானால் ...... *

ஊற்றமென்ன வோருறையிலிரண்டுகத்தி *
யுடனிட்டதாகுமெனக் குறுந்துமென்ன......*
ஆற்றிலேகட்டுவித்த வீட்டைப்போலு... *
மலைகடல்நங்கூரமில்லாக்கப்பல்போலும்...*
சேற்றிலேநட்டதொரு ஸ்தம்பம்போலுந் *
திரப்படாதென்னுடைய செங்கோல்மாமா *

வசனம்.

ஓய்மாமா அப்படியேபாண்டவர்கள்ஐந்துபேரையும்வாரணாவதத்திற்குஅனுப்பினாலும் அந்த இளவரசுபட்டமென்கிறது தருமராஜனுக்கு இருக்குமேயானால்இங்கேநான் என்னசெங்கோல்செலுத்துகிறது அப்போது ஒருறையிலே இரண்டுகத்திபோட்டாற்போலல்லவோ ஆச்சுது அல்லாமலும் நதிஆற்றில் வீட்டைக்கட்டினதுபோலுஞ் சமுத்திரத்தில் நங்கூரமில்லாதகப்பலைப்போலும் சேற்றிலேநட்டஸ்தம்பம்போலும்ஸ்திரப்படாது என்னுடையசெங்கோல் ஆகையாலிதற்கு என்னசெய்யலாம்மாமா *

கர்ன்னன் - விருத்தம்.

இளைப்பமாயென்னவொன்றானியாதொருபகையுண்டானால் *
முளைக்கையிற்கிள்ளல்வேண்டும் முற்றிப்போனாலோபின்பு *
விளைக்குங்கோடாலிகொண்டு வெட்டவேண்டியதாய்நேரும் *
தனைக்குமிங்கிதற்குமாமன் சகுனியேசொல்லல்வேண்டும்...*

வசனம்.

அப்படிஅல்ல யாதொருபகைசம்பவித்தால் அவனைமுளைக்கச்சே கிள்ளிவிடவேண்டும் அல்லாமற்போனால்பின்புகோடாலிகொண்டுவெட்டவேண்டியதாகநேரும் ஆதலால் அதற்குநடக்கும்யோசனை உங்கள்மாமன் சகுனிராஜனே சொல்லவேண்டும் மற்றொருவராலே ஆகிறகாரியமா அது ... ... ... ... *

துரியோதனனுக்குச்சகுனிசொல்லும் - விருத்தம்.

முக்கியமாயைவரங்கேபோனாற்பின்பு ..... ... ...*
மோசமப்பா நினைத்தவெண்ணை முடிப்பதற்கு...*
மக்களவர்போகுமுன்னே யரக்கினாலே... ... ... *
மாளிகையொன்றுச்சிதமாய் வளமாய்க்கட்டி ... *
மிககநமக்குரியவனையவர்பின்கூட்டி ... ... ... *
விளங்குமந்தவரமனையில்மேவச்செய்து ...... ...*

பக்குவம்பார்த்தணுவளவு நெருப்பைவைத்தால்...*
பாண்டவர்களைத்துடனே மாண்டுபோவார் ... ...*

வசனம்.

தம்பிமருமகனே துரியோதனா பயப்படாதே என்னகாணும் உபாயந்தெரிந்தவனுக்கு அபாயமில்லையென்ற வார்த்தையைக்கேட்டதில்லையா ஏனென்றால் பாண்டவர்கள் வாரணாவதத்துக்குப்போய்விட்டால் பிறகுமோசம்வரும் அவர்களங்கே போவதற்குமுன்னமே அங்கே அரக்கினாலே மாளிகையொன்று கட்டுவித்து நமக்கிசைந்தமனிதனை அவர்களுக்கிசைந்தவனாகக்காட்டி அவர்கள்பின்னேகூட்டி அனுப்புவித்து அந்த அரக்குமாளிகையில் இருக்கும் படியாகச்செய்தால் தம்பிமருமகனே என்மாமா வோய்கர்ன்னராஜனே சொல்லுஞ் சகுனிராஜனே தம்பி துச்சாதனா என்மாமா அல்லகாணும் ஒருகடுகளவு நெருப்புக்கென்னபஞ்சமா மெய்தான்மெய்தான் சமையம்பார்த்து வைத்தா [லோ*

கர்ன்னன்-வசனம்.

வைத்தவர் வைத்தவர்தான் ... ... ... ... *

துரியோதனன் துச்சாதனன்-வசனம்.

செத்தவர்செத்தவர்தான் அப்பால்பாண்டவர்களென்கிறபேர் விட்டுபோய் பாண்டவர்கள் மாண்டவர்களென்று சொல்லுகிறதுதானே இதற்கொருசந்தேகமா ... ... ... ... ... ... *

நால்வருங்கூடிநகைப்பு

ஆ - ஆ - ஆ - ஆ

துரியோதனன்சொல்லும் - தரு.

இ-ம். சாவேரி-தாளம்-மிசரம்.

இதுவே நல்லயோசனை மாமா ... ... ... உனக்
கிணையொருத்தரைச்சொல்லலாமா*
அதனாற் பாவம் வந்தாலும் வரட்டு மது கெட்டது ... ... *
அன்றுவந்துதொட்டசனியின்றன்றோ நம்மைவிட்டது...(இது)
அவர்க்கோநமக்கோவென்று வுள்ளநாளுள்ளமட்டும் ... ... *
அதுவே சஞ்சலமானாலென்ன காரியங் கட்டும் ... ... *
முளைக்குநச்சுமரத்தை முளையிலே கிள்ளவேண்டும் ... ... *
முற்றினாற்கோடாலிகொண்டு வெட்டியல்லோ தள்ளவேண்டும்
மூண்டுதனமாச்சும்மாயவர்க்குநமக்குஞ்சண்டை...[இதுவே

மூண்டுகொண்டேயிருந்தால் முடியாதிதுவோரெண்டை ... *
இரண்டுபட்டவூரில்குரங்குங்குடியிராது ... ... ... ... *
இப்படியிருந்தால்செங்கோல் சொற்பனத்திலும்வராது (இது)
நெருப்புஞ்செத்தையும்போலேயெப்போதுமிதுசள்ளை ... *
நீசொன்னபடிசெய்தாலப்பால்நமதுகொள்ளை ... ... — *
பெருக்கும்புணைகுழலையடியோடறுத்தாற்போகும் ... ... *
பின்னும்பற்றிருந்தக்கால் முன்னிலுமதிகமாகும் (இதுவே)
உதித்தராவணன்வாலிவதையென்னதொல்லையோ ... ... ... *
உடன்பிறந்தாரைக்கொன்றே புலகாளவில்லையோ ... ... ... *
அதமாகவவர்களை யெவ்விதமும் வெல்லவேண்டும் ... ... *
அரக்குமாளிகைகட்டியதனாற்கொல்லவேவேண்டும் ... (இது)

துரியோதனன் துச்சாதனனுக்குச்சொல்லும்-

விருத்தம்.

தன்மையாயென்றன்மனதினிற்குரிய தம்பிதுச்சாதனப் புலியே
மன்னியசிற்பசாஸ்திரவிற்பனனாய் மயனிலுமதிகவல்லவனாய் *
சொன்னசொல்லொன்றும்வெளிவிடாதவனாய்ச் சூழ்ச்சிகண்மிக
த்தெரிந்தவனாய், நின்னுளமதிக்குமோர்சிற்பியையிந்த நிமிஷத்
[தில்வரச்செய்குவாயே *

வசனம்.

தம்பிதுச்சாதனா சொல்லும்அண்ணா சிற்பசாஸ்திரக்கடல்கரைகண்டவனாக நல்லசூஸ்திரதாரியாக மயனென்கிற தெய்வசிற்பனைப்பார்க்கிலும்கெட்டிக்காரனாகத்தலைபோவதாகஇருந்தாலும் நாமிங்கேசொன்னசொல்லைவெளிவிடாதவனாய் திரவியத்தில் அதிகஅபேக்ஷை இல்லாதவனாய் உன்மனதுக்கு இசைந்தவனாய் இருக்கப்பட்ட ஒருஸ்தபதியை இந்தநிமிஷத்தில்வரச் செய்வியடா தம்பிதுச்சாதனா ... ... ... ... ... ... ... ... *

துச்சாதனன்-விருத்தம்.

நல்லதென்னண்ணாவஸ்தினபுரத்தில்நாடொறுமிருப்பவனவனே
வல்லவன்சிற்பசாஸ்திரக்கடலை வரையறக்கடந்தவனவன்மேல் *
சொல்லியவசனம் வெளிவிடான்மிகவும் சூழ்ச்சிகள்தெரிந்தவன
வனே, அல்லதுவேறேதேடுவதருமை யவனைநான் வரச்செய்கு
[வேனே *

வசனம்.

கேளும்அண்ணா இந்தஅஸ்தினபுரத்தில் பாரம்பரியமாயிருக்கப்பட்டவன் சிற்பசாஸ்திரமெல்லாங் கரைகண்டவன் உபாய

தந்திரசாமர்த்தியத்தில் நம்முடைய சகுனிமாமனைக்கூட அவனு க்கு இணைசொல்லக்கூடாது அப்படிப்பட்ட யோக்கியமான ஸ்தபதி ஒருவனிருக்கிறான் அவனை இந்தக்ஷணத்தில் தருவிக்கி றேன் அண்ணா ... ... ... ... ... ... ... ... *

துச்சாதனன்சேர்வைக்குச்சொல்லும்- விருத்தம்.

ஆரடாவிங்கேயொலிமுகவாச லடுத்திடும்பிரசண்டமாருதமே*
காரியம்வல்லவத்தினபுரிக்குக் காணியாட்சித்தபதியைநீ...... *
வீரியதுரியோதனமகராஜன் விடுத்திடுமுத்திரவென்று ... *
நேருடனந்தரங்கமாச்சொல்லி நிமிஷத்தில்வரச்செய்குவாயே.

வசனம்.

ஆரடாஅடா ஒலிமுகவாசலில்நிற்கும் பிரசண்டமாருதமே ஐயா-இந்தஅஸ்தினபுரத்துக்காணியாட்சிக்காரனாகியஸ்தபதியை ராஜாதி ராஜேஸ்வரனாகிய துரியோதனமகாராசன் அதிசீக்கிரத் தில் அழைத்துவரச்சொன்னானென்று ரகசியமாகச்சொல்லி நிமி ஷத்தில் அழைத்துக்கொண்டுவாடா ஏதோ ஓடுஓடு ... ... ...*

சேர்வைக்காரன்-விருத்தம்.

அடுகனலேபோல்...*
தடையதில்லாமல்...*
நொடியினிலேபோய்...*
கொடுவருவேனே...*

வசனம்.

சுவாமிபராக்குதேவரீர் உத்திரவின்படிக்கே ஒருநிமிஷப்போ திலே அழைத்துக்கொண்டுவருகிறேன்சுவாமி ... ... ... ... *

சேர்வைக்காரன்-விருத்தம்.

முன்னியசிற்பநூல்கள் முழுதுணர்தபதிகேளாய் ... ... ... *
என்னமோநல்லகால மிசைந்ததப்பாவுனக்கு ... ... ... *
அந்நிலைசுயோதனன்றா னந்தரங்கமதாய்ச்சொல்லி ... ... *
உன்னையோர்நொடிக்குள்ளாக வுவந்தழைத்திடச்சொன்னானே.

வசனம்.

ஓய் சிற்பசாஸ்திரி வாரும்வாரும் உமக்கென்னமோ யோககா லம்வந்திருக்கின்றது ஏனென்றால் ராசாதிராசனாகிய துரியோத னமகாராஜன் உம்மைஅதிசீக்கிரத்துக்கு அழைத்துக்கொண்டு வரச்சொன்னார் ஆனால் இன்ன இடத்துக்குப் போகிறேனென்

று உம்முடைய வீட்டிலேயுஞ் சொல்லவேண்டாம் சீக்கிரமாக
வாரும் எதோவந்திரா சஸ்திசஸ்தி ... ... ... ... ... ... *

ஸ்தபதி-விருத்தம்.

முன்னுள்ளவேந்தரெல்லாம் முத்தாகவைத்திருந்தார் ... ... *
சொன்னசொல்வழுவாரந்தத் துறையிவரிடத்திற்காணேன் ... *
மன்னிளவரசரென்றன் வல்லமையறியாரின்னம் ... ... *
என்னையின்றழைத்ததென்னோ வேகினமறிவோம்வாராய் ... *

வசனம்.

இந்தச்சந்திரகுலசேகரராய் முன்னிருந்த ராஜாக்களெல்லோரும் என்னைமுத்துமுத்தாக வைத்திருந்தார்கள் இவர்களெல்லாம் இளந்தைகளானபடியினாலே என்னுடைய அருமைதெரியப் போகின்றதா ஆனாலும் வரச்சொன்னபடியினாலே போவோம் [வாரும் *

ஸ்தபதிவரும்பொழு-விருத்தம்.

புவனத்திற்சிற்பநூலின்புலனறிதெய்வத்தச்சன் ... ... ... *
எவர்களுமனம்பிரமிக்க வெவையுஞ்சிருட்டிக்கும்யூகி ... ... *
நவமுள்ளமயனுங்கண்டு நமஸ்கரித்திதவுசொல்லும் ... ... *
தவறிலாவிசுவகர்மதபதியும்வருகின்றானே ... ... ... ... *

வசனம்.

அஃதெப்படியென்றால் துரியோதனமகாராஜன் சமுகத்துக்குஸ்தபதிவருகிற விதங்காண்க ... ... ... ... ... ... *

ஸ்தபதிவருகிற-தரு.

இ-ம். நாதநாமக்கிரியை - அடதாளம்.

தபதிவந்தானே சபைதனில் தபதிவந்தானே ...... *
சுபகரமாகவே செபமிகுத்தவனாகி ... ... ... *
விபகாரநிர்வாகி வீறுமதியினாகி (தபதிவந்தானே)
மன்னர்கள்மதிக்க வளமைபெறு மாநிலங்கதிக்கச் *
சொன்னதுவிதிக்கத் திறமிகுந்த தூயருந்துதிக்க *
மனுஞ்சிற்பசாஸ்திரம்பன்னுநிலையறிந்த ...... *
வுன்னிதமாய்த்தெய்வ ஞானவழிதெரிந்த... (தபதி)
உருவினில்மாரன்-நலநிறைந்த-வுயர்ந்தகெம்பீரன்
தருமவுதாரன்-அனைவர்க்குஞ்-சன்மார்க்கதீரன்...*
திருவருளிலாமன்ன னழைத்தவிபரங்கண்டு...... *

மருவமலர்க்கரத்தின் மட்டுப்பலகைகொண்டு (தப)
பொற்பணிகுலுங்க-மார்பினிலிட்ட-பூணூலுமிலங்க
சொற்பொருள் துலங்கப் பஞ்சாக்கரத்தால் ... [ச்
சூ ன் ய மு ம் வி ல ங் க ... ... ... ... ... *
தற்பரன்றிருவடிதனை துளங்கொண்டாடி ... ... *
கற்பனைமிகுதுரியோதனன் சபைநாடி......(தபதி)

ஸ்தபதிபோற்று- விருத்தம்.

மதிமரபினிலுதித்த மண்டலாதிபனேபோற்றி ... ... ... *
சதிர்பெறத்திகழுமேக் சக்ராதிபதியேபோற்றி ... ... ... *
எதிரிணையொருவரில்லா வெழில்பெறுவேந்தேபோற்றி ... *
அதிர்கழலரசனெங்க ளண்ணல்தன்வாழ்வேபோற்றி ... ... *

வசனம்.

சரணஞ்சரணம் சமஸ்தமண்டலாதிபா சரணஞ்சரணம்...*

சகுனி-விருத்தம்.

மாட்சியாயிந்தத்தச்சன் வரலாறுகேட்டிருப்பேன் ... ... *
சாக்ஷியாயிதற்குவேறே சாதனந்தேவையில்லை ... ... ... *
காட்சியுங்கருத்துங்கற்ற கல்வியுங்களவுபாய ... ... ... *
சூழ்ச்சியுமிவன்முகத்திற் சொலிப்பதைநன்றாய்ப்பாரீர்......*

வசனம்.

அகசா- அடட- ஏகேகே - ஓகோகோ - இந்தச்சிற்பாசாரியா ஆம்மெய்தான் இவன்சாமர்த்தியமெல்லாம் முன்னமே நான் வெகுசாய் கேட்ட துண்டுகொண்டும் அடா இவன்தானு சபாசு சரிதான் இவன்கெட்டிக்காரனென்பதற்குவேறேசாக்ஷி சாதனந்தேவையில்லையே ஏனென்றால் சாஸ்திரமும் சாம்பிரதாயமும் கல்வியும் காயகமும் வித்தையும் விதானமும் கபடநாடகசூஸ்திரகசடகடமாக சாமர்த்தியமும் இத்தனையும் இவன்முகத்திலேதானே ளகளென்று விளங்கிப்பளபளென்று சொலிக்கிறது பார்த்தீராமருமகனே இப்படிப்பட்டவன் நமக்குக்கிடைத்திருக்கையில் நம்முடைய காரியமெல்லாம் வெற்றியாகாமற்போய் விடுமா கர்ண்ணராஜனே ஆகாகா ... ... ... ... ... *

கர்ண்ணன்- வசனம்.

ஆ - அதற்கென்னசந்தேகமா தம்பிதுச்சாதனு ஆகாகா... *

கர்ன்னன்-விருத்தம்.

போலியோலென்னைவிட்டுப் பூராயமாகப்பார்த்தால்...... *
கோலியவரசுந்தேவர் கோயிலுங்குளமுமற்ற ... ... ... *
வேலியும்விளைவுநல்ல மேன்மையும்விரும்பிக்கட்டும் ...... *
தாலியுந்தலமுமிந்தத் தபதியையல்லாலுண்டோ ... ... *

வசனம்.

ஆகாகா-ஆம்மெய்தான் இவனுடையசாமர்த்தியத்தைஎளிதா ய் எண்ணலாமா போலியாய் எண்ணலாமா பூலோகமே இவனு லேதானேஇருக்கிறதுயாரும் சக்ராதிபதிகளாக இருக்கப்பட்ட ராஜாக்கள் செலுத்தும்படியாகியசெங்கோலும் கோயில்குளமு ம் மச்சுமாளிகைகளும் கொழுமுனை கதிர்முனை ஊசிமுனை எ ழுத்தாணிமுனையும் யாவருந்தொட்டுக்கட்டுகின்ற தாலியும் தல மும் சமஸ்தமும் இவனுடைய அஸ்தவிசேஷத்திலேதானே யிருக்கிறது வேறே அங்கென்னஇருக்கிறது ... ... ... ... *

சகுனி- வசனம்.

ஆ - அ த ற் கெ ன் ன ச ந் தே க மா ... ... ... *

துரியோதனன்- விருத்தம்.

உற்றிடுதபதிநீயோ ருபகாரஞ்செய்யவேண்டும் ... ... *
வெற்றிசேர்தலைபோனாலும் வெளிவிடாதிருக்கவேண்டும்... *
பெற்றியாய்ச்செய்வேனென்னப்ப்ரமாணமாய்ச்சொல்வாயானு
பற்றியதுறையுஞ்செய்யும்பருவமும்வெளியாய்ச்சொல்வேன் [ல்

வசனம்.

அப்பாஸ்தபதி என்சுவாமிநீஎனக்கு ஒருஉபகாரம்செய்யவே ண்டும் அதுவோநீ அறிந்ததும் நாங்கள் நாலுபேரு மறிந்தது மாகஇருக்கவேண்டும் பின்னையுமொ தலைபோகிறதாக இருந்தா லும்அந்தக்காரியத்தை வெளிவிடாதிருக்கவேண்டும் ஆகையால் அப்படிச்செய்வேனென்றுபிரமாணமாகச் சொல்வாயேயானால் அதற்குமேல்விபரம் சொல்லுகிறேன் ஸ்தபதி ... ... ... *

ஸ்தபதி- விருத்தம்.

ஆர்த்திடுவேந்தன்சிறிலாந் துணையில்லையென்ற........ [னே*
வார்த்தையைத்தெரிந்துமுன்றன்வார்த்தைக்குத்தடைசொல்வே
பேர்த்தவவ்வார்த்தையென்னைப் பெற்றோர்க்குஞ் சொல்லமாட்
டேன் - வேர்த்தசந் தேகம்வேண்டாம் விளக்கமாய்ச்சொல்லு
[வீரோ*

வசனம்.

கேளும் சுவாமி சமஸ்தமண்டலாதிபா அரசனைப்பகைத்தா
லாருயிரிழப்பாரென்றும்வேந்தன்சீறிலாந்துணையில்லையென்று
ம் சக்கரநெறிநில் லென்றும்சொல்லிய உலகவார்த்தையைத் தெ
ரிந்திருந்தும் உங்கள்திருவாக்குக்கு எதிர்வாக்குச் சொல்லுவே
னுமேலும் தாங்கள்சொல்லப்போகிறகாரியத்தை என்னைப்பெற்
ற தாய்தகப்பனுனாலும் அவர்களுக்கும் சொல்லஇராது சந்தே
கமில்லாமல் சட்டமாகச்சொல்லும் ஸ்வாமி ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

தறைபுகழ்கங்கைக்கரையினில்விளங்குந்தவமிகுவாரணவதத்துக்
கிறையவர்பாண்டு மைந்தர்போகின்றாரிதற்குமுன்னுகவேநீபோ
ய்-அறைதருமிதனைப்பிரதியாமலாக்குமாளிகையொன்றுகட்டி
மறைவிடமாகக்கடிகிநீவாவென்வாழ்வெலாமுன்னதேகண்டாய்.

வசனம்.

கேளாய்ஸ்தபதி கங்காநதி தீரத்திலிருக்கப்பட்ட வாரணவத
மென்கிறஸ்தலத்திலே வாசம்பண்ணும்படியாகப் பாண்டவர்க
ளைந்துபேரும் போகஇருக்கிறார்கள் அவர்கள்அங்கேபோவதற்
குமுன்னமே அரக்கினுலேமாளிகை கட்டியாகவேண்டும் இது
தான் இருக்கிறது உள்மர்மம் இதைரகசியமாக முடித்துவரு
வையேயானல் என்னுடையபாக்கியமெல்லாம் உன்னுடையபாக்
கியந்தான்ஸ்தபதி ... ... ... ... ... ... ... ... *

ஸ்தபதி-விருத்தம்.

உமக்குவந்துற்றவிந்த வுறுகிலேசங்களெல்லாம் ... ... *
எமக்குவந்துற்றதாக வெண்ணினேனினிவேறில்லை ... ... *
அமைக்குமங்கதற்குண்டான தனுகூலப்படுத்தித்தந்தால் ... *
சமைத்திந்நாளிரவிற்செய்து தடையின்றிவருவேனையா ... *

வசனம்.

நானொருவார்த்தை சொல்லுகிறேன் கேளுங்கள் இப்போது
உங்களுக்குவந்ததுன்பமும் துயரமும் கெடுதியும் கிலேசமும்
எனக்குவந்ததாகஎண்ணிக்கொண்டேனேயல்லாமல்வேறல்ல அ
ந்த அரக்குமாளிகைகட்டி ஆகிறத்துக்கு வேண்டியவஸ்துக்களை
சேகரித்துக்கொடுத்தால் மகாவிசித்திர விலாசவினோத அற்புத

அதிசய அலங்காரசோபிதமாக ஒருநாழிகைக்குள்ளே முடித்து
வருகிறேன் என்சமர்த்தைத்தான் பாரும் சுவாமி ... ...... *

துரியோதனன் - விருத்தம்.

உரைசெயுஞ்சிற்பநூலை யுணர்ந்திடுந்தபதிகேளாய் ... ... *
வரிசையாயரக்கினாலே மாளிகைகட்டுதற்குப் ... ... ... *
புரைசெயுமதற்குவேண்டும் பொருளின்னதின்னதென்று ... *
துரிசறவகுத்துச்சொன்னால் துரிதமாய்வரச்செய்வேனே ... *

வசனம்.

கேளாய்ஸ்தபதி அரக்குமாளிகைகட்டுதற்கும் அதைகெம்பீரமாக அலங்கரிப்பதற்கும் வேண்டியவஸ்துக்கள் இன்னதின்னதென்றுவிபரமாய்ச்சொல்லுவையேயானால் அப்படியேஒருநிமைப்போதிலே வரும்படிசெய்கிறேன் ஸ்தபதிசொல்பார்க்கலாம் *

ஸ்தபதிஆசிரிய-விருத்தம்.

ஐந்துபேர்களுமிருந் தரசாட்சி செய்யவோ
ரரண்மனைசெய்வதானால் ... ... ... ... ... *
ஐம்பத்தொராறு தேசத்துராஜாக்கள்கு
மாஸ்தானமண்டபமுதல் ... ... ..... ... *
சுந்ததருமமடுவன்னசாலை போசனசாலை
ஸ்நானசபநிஷ்டைசாலை ... ... ... ... ... *
சத்பரதசாலை மந்திரசாலை நூல்கள்பயில்
தருசாலைசயனசாலை ... ... ... ... ... ... *
சிந்துமாயுதசாலை விந்தைசித்திரசாலை
திகழுமுக்கிராணசாலை. ... ... ... ... ... *
திறைசாலை சிறைசாலை மேலுமுப்பரிகைமுதல்
செய்யவேண்டுவதாகையால் ... ... ... ... *
உத்தமனதுக்கொத்த செந்தகமரக்குவெடி
யுப்புசெம்பஞ்சுமெழுகு ... ... ... ..... ... *
ஒளிர்செம்பொன் வெள்ளியின்மூலாந்தகடு நவரத்ந
மொருமிக்கவேண்டுமென்றே ... ... ... ... *

வசனம்.

கேளும்சுவாமி சமஸ்தமண்டலாதிபா பாண்டவர்கள் ஐந்து
பேருமிருந்து அரசாட்சிசெய்ய அரக்குமாளிகைகட்டவேண்
டுமாகில் ஐம்பத்தாறு தேசத்துராஜாக்களு மிருக்கத்தக்க ஆஸ்

தானமண்டபம் மடைப்பள்ளியறை போசனசாலை ஸ்நானசாலை செபநிஷ்டைசெய்கிறசாலை பாரதசாஸ்திரமண்டபம் சரஸ்வதிவிலாசமண்டபம் உக்கிராணமண்டபம் சிறைச்சாலை மேலும் பரிகைகள் இதுகள்செய்யவேண்டியிருக்கின்றது ஆகையால் அதற்குவேண்டியமுதல்தரமாகியகெந்தகம் அரக்கு வெடியுப்பு செம்பஞ்சு மெழுகு வெள்ளிமுலாந்தகடு பொன்முலாந்தகடு நவரத்தினம் ஆகியஇவைகள்வேண்டும் இவையிசைந்தால் அதிசீக்கிரத்தில் உங்கள்இஷ்டப்படிக்குக் கட்டிப்போடுகிறேன்ஸ்வாமி ✻

கர்ன்னன் - விருத்தம்.

கெந்தகமரக்குமற்றுங் கேட்டவஸ்துக்களெல்லாம்...... ...✻
இந்தவஸ்தினபுரத்தி லிருப்பதேயருமையல்ல ... ... ... ✻
உந்துமேழ்கடலுக்கப்பா லுள்ளதைத்தரவென்றாலும்... ... ✻
தந்திரத்தபதியேநான் தருவிப்பேன்தடங்கலுண்டோ ......✻

வசனம்.

கேளாய்ஸ்தபதி கெந்தகமுதலான சகலவஸ்துக்களும் நம்முடைய ராஜதானிப்பட்டணமாகிய இந்த அஸ்தினபுரத்திலே தானேகிடைக்கும் அதைச்சம்பாதித்துக்கொடுக்கிறது அருமையல்ல இந்த எழுகடலுக்கப்பாலேஇருக்கப்பட்டவஸ்துக்களென்னமோ அதைக்கேட்டாலும் தருவித்துக்கொடுப்போம் ஆனால்நாங்கள் நினைத்தகாரியமாத்திரம் முடித்துக்கொடுத்தால்போதும் ஸ்தபதி ... ... ... ... ... ... ... ... ... ✻

துச்சாதனன் - விருத்தம்.

பொறுப்புள்ளதபதிசொன்னபொருள்களெல்லாமலுங்கள் ... ✻
உறுப்பிலொவ்வொன்றுதந்தாலுடன்முடிந்திடுமென்றாலும் ✻
அறுப்புடனறுத்துன்கையி லட்டியில்லாமலீவோம் ... ... ✻
முறுக்கொடெவ்விதமுஞ்செய்து முடித்திட்டாற்போதுமப்பா

வசனம்.

கேளும்ஸ்தபதி அரக்குமாளிகைகட்டுதற்குவேண்டியவஸ்துக்களை நீகேழ்க்கிறதும் எங்களண்ணன் கொடுக்கிறேனென்றுசொல்லுகிறதும் வெகுவேடிக்கையாகஇருக்கிறது அதுவும் வேண்டாம் அங்கேகுத்துக்கால்நட்டுக்கொடுங்கைபோடவேண்டியதாகஇருக்கிறது ஆகையினாலே உங்கள்கால்களிலே ஒவ்வொருகாலும் கைகளிலே ஒவ்வொருகையும் அறுத்துக்கொடுத்தால்

உடனேமுடியுமென்றுகேட்டாலும் இப்போதேஅறுத்துக்கொ
டுக்கிறோம் என்னகாணும் அதற்கொருசந்தேகமா இன்னம் அ
டகமுத்தையாகிலும் கொடுத்துக் காணியைத்தேடென்றான் அ
தை எப்படியாகிலும் முடித்துக் கொடுத்தால் போதும் அது
போதும்.

சகுனி-விருத்தம்.

மங்களகரமாய்மிகவுமுன்னதமாய்மன்னர்சஞ்சரிக்கவற்புதமாய்
த்-தங்குமேன்மயமாய்வெகுவிசித்திரமாய்த் தரியலரைவர்மெச்
சுவதாய்- இங்குலாமரக்குமாளிகையென்று யாவர்க்குந்தெரியொ
ணாவிதமாய் - அங்கமாயமைத்து வருவதேசமர்த்து அதிலன்றோ
[விருப்பதுசத்து.

வசனம்.

தம்பிமருமகனே துரியோதனு கெந்தகமும் அரக்கும்வேண்
டியதைச் சேகரித்துக் கொடுக்கிறதல்லவே சமர்த்துகொடுத்தா
லும் செய்யப்பட்டமாளிகை எப்படி இருக்கவேண்டுமென்றால்
மகாதிவ்வியமங்களகரமாய் மிகவுஞ்சித்திரவிசித்திரமாய் அலங்
காரசோபிதமாய் மேலும் சக்ராதிபதிகளாக இருக்கப்பட்டரா
சாக்கள் இதுவேயோக்கியம் இதுவேயோக்கியமென்று புகழத்
தக்கதாய் அரக்கினுலேசெய்ததென்று மற்றசிற்பசாஸ்திரி களுக்
கும் தெரியாததாய் செய்கிறதல்லவோசமர்த்து அதுதான் அந்
தச்சிற்பாசாரிக ளுடையசமர்த்து அந்தப்படியே செய்யவேண்
டும் தம்பிமருமகனே ... ... ... ... ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

சங்கையறநாங்கள்சொன்னபடிநீசெய்தால் ... ... *
தனங்கிடைக்கு மேலுமெங்கள் தயையுங்கிட்டும் *
பொங்கமிகு பாண்டவர்மே விதங்கிநாங்கள் ......*
புகலுமிந்த வார்த்தைதப்பிப் போவாயாகில் ... *
பங்கம்வருமுன்குடிக்குத்தீங்குநேரும் ... ... *
படர்சுவர்க்க மத்தியபா தாளத்துள்ளே ... ... *
எங்கிருந்தாலும்பிடித்துக் கொடுவந்துன்னை......*
யெமபுரத்துக் கேகுடியா யேற்றுவோமே......*

வசனம்.

கேளாய்ஸ்தபதி சொல்லுஞ்சுவாமிஉனக்குஒருசங்கையுந்தே
வையில்லை நாங்கள்சொன்ன காரியத்தைமாத்திரம் பேதமில்லா

மல் முடித்துவருவையேயானால் தனத்திலே குபேரனுக்குச்சம தியாக இருப்பாய் எங்கள்கண்ணுக்குக் கண்ணாகவும் அன்புக்கு அன்பாகவும் இருப்பாய் இதில்ஒருபேதப்பட அந்தப்பாண்டவர்களுடைய பக்ஷமாய் நீயும்இருப்பாயேயானால் அப்போது நீஇந்தச்சுவர்க்கமத்தியபாதாளதிரிபுவனத்திலே எங்கேபோய் ஒளித்தாலும் உன்னைக்கொண்டுவந்து அகோரஉக்கிரருத்திர ராசகற்பாந்த காலாக்கினியைப்போலத் தத்தப்படலமாகஅழித்து இப்போது இளவரசுபட்டத்தில் மகிழ்ந்திருக்கிற அந்தத் தருமராஜனுடைய அப்பன் எவனோ அவனிருக்கிறஇடத்துக்கு உன்னையும் அனுப்புவேன் அதுஉன்மனதில் கெட்டியாக இருக்கட்டும் ஓய்

ஸ்தபதி- விருத்தம். [சாக்கிரதை.

சக்கரநெறிநில்லென்ற சாத்திரமிருக்கவுங்கள் ... ... ... *
உக்கிரவுதிப்ரசண்ட வுத்தண்டந்தெரிந்திருக்க ... ... ... *
தக்கவவ்வார்த்தைதப்பித் தரணியிலிருந்துய்வேனோ ... ... *
இக்கணம்போய்முடித்திங் கினிதுடன்வருவேனையா... ... ...*

வசனம்.

ஐயா சக்கரநெறிநில்லென்றசாஸ்திரமிருக்க உங்களுடைய உக்கிரகனப்பிரசண்ட வீரசூரசாமர்த்தியமும்தெரிந்திருக்க உங்கள்வார்த்தைக்குவித்தியாசஞ்செய்துபின்னும்நான்இந்தப்பூமியிலிருப்பேனா எப்படியும் அதைப்போய்முடித்துவருவேனேயல்லாமல்நான்சும்மாய்வரமாட்டேன்ஐயா நான்போய்வருகிறேன்

பொது - விருத்தம்.

அயல்செய்தைவரையுங்கொல்ல வரக்குமாளிகைசெய்யென்று *
தயையறுசுயோதனன் துச்சா தனன்முதலோர்சொன்ன......*
பயமதுமுன்னிமுக்கப் பரிதாபம்பின்னிழுக்க ... ... ... *
வயமிகுதபதிநின்று மயங்குவான்தியங்குவானே ... ... ... *

வசனம்.

கேளீர்சபையோர்களே துரியோதனன் துச்சாதனன்கர்ன்னன் சகுனி இவர்கள் நாலுபேரும் ஸ்தபதியையழைத்துப்பாண்டவர்களைக்கொல்லும்படியாக அரக்குமாளிகைகட்டுவதற்குச் சாமான்களெல்லாங்கொடுத்து ஸ்தபதியை அனுப்புவிக்க அந்த ஸ்தபதியானவன் இப்பால்வியசனப்படுகிற விதங்காண்க......*

## ஸ்தபதிபுலம்பல்- தரு.

### இ-ம். பயிரவி- ஆதிதாளம்.

என்னதர்ம்மசங்கடமீது இனி என்ன மாகுமோதெரியாது ※
அன்னீதமையோவிந்த வவதிக்கென்னதான்செய்வேன் ...... ※
ஐந்துபேர்க்குந்துரோகஞ் செய்தெந்தவிதநானுய்வேன் ... ※
சொன்னசொல்லைத்தடுத்தால் துரியோதனனுக்குக்கோபம் ...... ※
துணிந்துசெய்வோமென்றாலும்சுத்திக்கொள்ளுங்கொலைபாபம்
(என்னதர்ம்மசங்கடமீது)

கொடியதுரியோதனனெஞ்சுதானென்னகல்லோ ... ... ※
கூடப்பிறந்தவனைக்கொல்லச் சொன்னதுசொல்லோ ... ... ※
படிப்படியாயிவர்க்குள் பகைமூண்டதென்னகொல்லோ...... ※
பழிக்குநானேர்ப்பட்டேனல்லோ ... ... ... ※
நடுவிலிவர்தஞ்செங்கோல் நாய்வாய்ச்சீலையாய்ப்போச்சே ... ※
நாலுபேருக்குமிது ஞாயமில்லாத பேச்சே ........ ※
படருங்கொலைக் கஞ்சாத பாதகனென்ன வேச்சே ... ... ※
பாக்குவெட்டியிலகப்பட்டுக்கொண்டாற்போலாச்சே (என்ன)

சந்திரகுலத்தில்வெகு பேர்களிவ்வுலகாண்டார் ... ... ... ※
தபதியைக்கொண்டுகொல்ல வெவர்தான்முன் பகைபூண்டார் ※
இந்தவுலகிற்பாண்ட வர்களையெவர்தான்வேண்டார் ... ... ※
யேறேவிப்பகைமூண்டார் ... ... ... ... ※
சொந்தத்தமையன்தம்பி மாரைக்கொல்வதோசாரம் ... ... ※
துரோகஞ்செய்துலகாண்ட துஷ்டருண்டோவிஸ்தாரம் ... ※
சிந்தைநடுங்குதவர் செய்யச்சொன்னவகோரம் ... ...... ※
சிவனேயிதெப்போதுந் தீராமனவிசாரம்......(என்னதர்ம்ம)

ஒருக்காலே யண்ணன்றம்பிக் கொருகோடிவிவகாரம்... ... ※
உற்றாலுஞ் சண்டையிட்டுச் செற்றாலும் லோகாசாரம் ...... ※
அரக்குமாளி கைகட்டி யதனுற் கொல்வதோ வீரம் ........ ※
ஐயோயிதென்னகோரம் ... ... ... ... ... ※
உருக்குமந்தத்துஷ்டர்க ளுலகைவாய்ப்பூசுவாரோ ... ... ※
ஒன்றுநாங்களறியோ மென்றுகைவீசுவாரோ ... ... ... ※
ஒருக்காய்நம்மைமாத்திரஞ் சாதனம்பேசுவாரோ ... ... ...※
உச்சனுளவிருந்து கொன்றானென்றேசுவாரோ ...... (என்ன)

அரவக்கொடியோன்மெத்த வட்டங்காதவசனுவி ... ... ... ❋
ஆறுனுந்துச்சாதன னவனிலும்பபாவி ... ... ... ... ❋
கரவுசகுனிபொல்லாக் கபடர்க்கொருகைச்சாவி ... ... ... ❋
கர்ன னே முன் கோவி ... ... ... ... ... ❋
மருவும் புத்தியில்லாத விதமாயிவ் வுலகாண்டார் ... ... ❋
வகைதெரியாமற்புவி மன்னரனேகர் மாண்டார் ... ... ... ❋
இரவும்பகலு மெம்மை யடுத்து விவேகம் பூண்டார் ... ... ❋
என்னையுமைவரையு மெவரையு மினிவேண்டார் ... ... (என்ன)

பொது-விருத்தம்.

யந்தமிகுமரக்குமா ளிகையுண்டாக்கிப் ... ... ❋
பாண்டவரைக் கொல்வதற்குப் பாவிசெய்த ... ❋
தந்திரமுஞ் சர்ப்பனையுஞ் சதியுமந்தத் ... ... ❋
தபதியுடன் சொல்லிய சங்கதியுங் கேட்டு ... ❋
மைந்தர்களை நினைந்துருகி விதுரராசன் ... ... ❋
மனங்கலங்கிப் பரதவித்து வருந்தியையோ ... ❋
எந்தவகை யிந்தவினை தீர்ப்போ மென்றே ... ❋
யெண்ணுவா னவர்க்குறுதி பண்ணுவானே ... ❋

வசனம்.

இப்படியாக ஸ்தபதியானவன் புலப்பிக்கொண்டு விதுரமகா ராசனுடைய அரமனைவீதியில் அழுதுகொண்டுபோகிறபோது அந்தக்தருணத்தில் விதுரமகாராசன்சகுணசேர்வையுடன்சொல்லுகிற விதங்காண்க ... ... ... ... ... ❋

விதுரன்-விருத்தம்.

வருசகுணசேர்வையேகேளாயந்த ... ... ... ❋
மாபாவி யாந்துரியோ தனனுஞ்சூது ... ... ❋
பொருசகுனி கர்ன்னதுச்சா தனருங்கூடிப் ... ❋
பொல்லாத கபடவஞ்சனை புரிந்தே ... ... ❋
வரமிகுந்த தபதிதனை யழைத்துப்பேசி ... ... ❋
மகராச ரைவருக்கு மாற்றங் கொண்டார் ... ❋
தருமந்தத் தபதிபங்கே போகின்றானத் ... ... ❋
தபதிதனை யழைத்திங்கே சடுதிவாடா ... ❋

வசனம்.

கேளாய் சகுணசேர்வையே அந்தமகாபாவியான துரியோதனனும் சகுனியும் கர்ன்னனும் துச்சாதனனும் கூடிப்பாண்டவர்களைக்குறித்து ஆலோசனைசெய்து ஸ்தபதியை அழைத்துப்பேசினர்களாம் அது என்னகாரணமோ தெரியஇல்லை ஆகையால் அந்த ஸ்தபதியை அழைத்துக்கொண்டுவா அப்பா சேர்வைக்காரா ... ... ... ... ... ... ... ... ... ... ... ❋

சேர்வை - விருத்தம்

வாடாவென்று வழுத்தியகோவே ... ... ... ... ... ... ❋
பாடாவின்று பரிவுடன்சென்று ... ... ... ... ... ... ❋
தேடாநின்று செயதப திதனைக ... ... ... ... ... ... ❋
கோடாதிதொநான் கொடுவருவேனே ... ... ... ... ... ❋

வசனம்.

பாரக்கு - ராசமார்த்தாண்டா அப்படியே அழைத்து வருகிறேன் சுவாமி ... ... ... ... ... ... ... ... ... ... ❋

ஸ்தபதி - விருத்தம்.

தன்மையுள்ள தபதியேகேளாய் ... ... ... ... ... ❋
மன்னவன்விதுர மகிபதியுன்னை ... ... ... ... ... ... ❋
வன்மையதாக வரவழைத்திடவே ... ... ... ... ... ... ❋
சொன்னதைக்கண்டால் சுகம்பெருகுகமே ... ... ... ... ❋

வசனம்.

கேளும் ஸ்தபதியே ராசசேகரராய் காருண்ணிய சுரூபராய் விளங்காநின்ற விதுரமகாராசா உம்மை அழைத்துக்கொண்டு வரச்சொன்னார்வாரும் சீக்கிரமாகவாரும் ... ... ... ... ❋

ஸ்தபதி - விருத்தம்.

திடமிகுசகுண சேர்வையேகேளாய் ... ... ... ... ... ❋
அடன்மிகுவிதுரற் கடியனென்தெண்டம் ... ... ... ... ❋
வடுதவிரரசன் வரச்சொன்னதனல் ... ... ... ... ... ... ❋
புடைபெயரிருவரும் போகலாம்வாராய் ... ... ... ... ❋

வசனம்.

கேளாய்சேர்வைக்காரா கருணைக்கடலாய் சற்குண சிரோம

ணியாயிருக்கிற மகாப்பிரபு விதுரமகாராசன் அழைத்தால்த
டையென்னஇருக்கிறது போவோம்வாராய் சேர்வையே ... *

ஸ்தபதிவருகிற-தரு.

இ-ம். கல்யாணி- ஆதிதாளம்.

விதுரனழைத்ததேனோ என்னைப்பொருளாய் ... ......*
விதுரனழைத்ததேனோ ... ... ... ... ... *
மதுரவுரைவிற்பன்னன் -சதுரசத்தியசம்பன்னன் ...(விதுர)
என்னுடன்சொன்னசேதி தெரிந்ததோ-இதை ... ... ... *
எண்ணியெப்படிமனமெரிந்ததோ.............*
உன்னுந்துரியோதனற் குளவென்றென்னையேசவோ.........*
உடந்தையில்லையென்றெண்ணிக் ... ... ... *
கலந்துக்கொண்டேபேசவோ ... ... ...... *
(விதுரனழைத்ததேனோ)
பரிவாயிதற்குபாயந் தேடவோ-அல்லால் ... ... ... ... *
பழியையென் மேலெடுத்துப் போடவோ ... ... ... ... *
தெரியாவரக்குமாளிகை செய்யாமல் நீக்கவோ ... ... ... *
செய்தாலும்பாண்டவர்க்குத் திருகில்லாமற்காக்கவோ(விதுர)
என்சம்மதித்தாயென்று வையவோ- மேலும் ... ... ... *
இதற்குக் தந்திரம்வேறு செய்யவோ ... ... ... ...... *
தான்சம்மதித்தாற்போலுஞ் சோதித்தென்னைக்கொல்லவோ *
சதிகாரர்தீவினையிற்றப்புவிக்கச்சொல்லவோ(விதுரனழைத்த)

ஸ்தபதி- விருத்தம்.

மதுராமிருத மாமணியே போற்றி ...... *
கதிரார் முடிசேர் கதியே போற்றி ...... *
துதிசேர்கருணைத் துரையே போற்றி...... *
விதுரா வுன்றன் மெல்லடி போற்றி ...... *

விதுரன் - விருத்தம்.

சுபதியேவாழி சுமுகனே வாழி ... ...... *
விபவமாமொங்கள் விவேகனே வாழி ...... *
சுபகரமிகுந்த தோன்றலே வாழி ... ... *
தபதியே வாழி சயசய வாழி ... ... ... *

விதுரன்-விருத்தம்.

தருமமென்ணுத துஷ்ட சதுஷ்டர்களொன்றாய்க்கூடி ... ... ✻
மருமமாயுன்னையங்கே வரவழைத்தாலோசித்த ... ... ... ✻
விரகுசத்தநீநந்தேனின்ன விதமெனத்தெரியாதந்தக் ... ... ✻
கருவென்னவவர்கள்கொண்ட கருத்துத்தானென்ன சொல்வாய்

வசனம்.

அப்பாஸ்தபதீ தருமசிந்தை யில்லாத துஷ்ட சதுஷ்டர்களாகிய துரியோதனன் கர்ன்னன் சகுனி துச்சாதனன் இவர்கள் நாலுபேருங்கூடி ரகசியமாக உன்னைவரவழைத்து ஆலோசித்தார்களென்றதைநான் கேட்டுவிட்டடேன் ஆனாலின்னவிதமென்றும் இன்னகருத்தென்றுந் தெரியஇல்லை ஆகையால் அவர்களென்னபேசினார்கள் சொல்லவேண்டும் அப்பா ஸ்தபதீ.....✻

ஸ்தபதி-விருத்தம்.

சஞ்சலக்கடலில்வீழ்ந்து தவிக்கின்றதருணந்தன்னில்...... ✻
அஞ்சலென்றங்கோர்தெப்பமகப்பட்டாற்போலுமாச்சு......✻
வஞ்சகரோவலாலே மனங்கொதித்தழுதும்வேளை ... ... ✻
இஞ்சொலாற்றேவரீரிங் கெனைவரச்சொன்னதையா ... ... ✻

வசனம்.

ஐயா விதுரராசப்பிரபுவே சஞ்சலமென்கிறகடலிலேவீழ்ந்துவிட்டவனுக்கு அங்கே ஒருதெப்பம் அகப்பட்டாலெப்படியோ அப்படியாச்சுது தேவரீர்என்னை வருவித்ததானதென்றால் அத்தனை விசனப்பட்டுக்கொண்டிருக்கிறேன் சுவாமி ... ... ✻

ஸ்தபதி-விருத்தம்.

மன்னியபாண்டுபுத்திரர் வாரணாவதத்துக்கேக ... ... ... ✻
முன்னமேயெனைப்போயங்கே முழுமையுமரக்கினாலே......✻
மின்னுமாளிகையுண்டாக்கவேண்டுமென்றனரவ்வார்த்தை ...✻
சொன்னதுமுதலென்னாவி துடிக்கின்றதென்செய்வேனே ...✻

வசனம்.

பாண்டவர்கள் வாரணாவதத்துக்குப்போய்ச்சேருமுன்னமே அந்த வாரணாவதத்திலே யான்போய் அங்கே அரக்கினாலே மாளிகைசெய்துமுடிக்கும்படிச்சொன்னார்கள் அரகராசிவசிவா ஆ

து முதல் என்னுடையசித்தத்திலுண்டானகலக்கத்தையும் ஆவே சத்தையும் விசனத்தையும் நா னென்ன சொல்லப்போகிறேன் இவ்வளவு அவ்வளவென்று சொல்லக் கூடாததா யிருக்கின்றது நானென்னசெய்வேன் சுவாமி ... ... ... ... ... ... ...*

விதுரன்புலம்பல் - தரு.

இ-ம். நீலாம்புரி தாளம் திரிபுடை.

ஐயையோ இப்படியுஞ் செய்வாரோ துரோகம் ... ... ...*
அரிகரி யிதைநினைந்தா லாறுமோ சோகம் ... ... ... ... *
ஐயையோ இதுசகுனி யால் விளைந்த மூலமோ ... ... ... *
அகமிகுந்த கவுரவர்க்கு யுகமுடிவு காலமோ ... ... (ஐயையோ)
கர்ன்னன் துச்சா தனன் சகுனி சுயோதனன்கூது ... ... ...*
கருதியவர் கொடிமுடிந்த கபடவஞ்ச மீது ... ... ... ... *
சின்னஞ்சிறு பாண்டவர்க்கு இன்னங்கருத் தெரியாது ... ... *
திருவுளமே துணையல்லால் திக்கொருவரினியேது (ஐயையோ)
நத்துந்திருத ராட்டிரனுக்கு நாவுதா னிரண்டோ ... ... ...*
நம்பவைத்துக் கழுத்தறுக்கும் ஞாயமெதைக் கொண்டோ ...*
குத்திரஞ்செய் சகுனியிதைக் குறித்ததென்ன கண்டோ ... ...*
கொலைசெய்து வாழ்ந்தவர்கள் குவலயத்தின் முன்பினுண்டோ
தருமபுத்திரனுக்குக் கிரகசாரமும் பொல்லாதோ [ஐயையோ)
சதிகாரர் தீவினைமுன் தருமமு நில்லாதோ ... ... ... ... *
அருமையெண்ணுப் பாவிகளை யக்ரமம்வெல் லாதோ ... ... *
அரசனன்று கொன்றக்கால் தெய்வம்நின்று கொல்லாதோ *
ஐயையோ இப்படியுஞ்

ஸ்தபதி - விருத்தம்.

அரியநல்விதுரராச வண்ணமேல்நின்றுள்போற்றி ... ... *
துரிதமாயவர்களென்ன சூதுவஞ்சனைசெய்தாலும் ... ... *
அருமையுமநுகூலன்பு மாசையும்பெருகுமுன்றன் ... ... *
உரிமையுமிருக்கவைவர்க் கொருகுறைவருவதுண்டோ ... ... *

வசனம்.

ஐயா விதுரராசப்பிரபுவே அந்தத்துரியோதனன் முதலான பேர்கள் எத்தனைகபடவஞ்சனைமோசஞ்செய்தாலும் சர்வோத் தமரான தேவரீருடைய அன்பும் ஆசையும் ஆசீர்வாதமும் பா

ண்டவர்கள்மேலில் பரிபூரணமா யிருக்கும்போது அவர்களுக்கு ஒருபொல்லாங்கும்வருமாவாதே நீமேன்விசனப்படுகிறீரையா

விதுரன் - விருத்தம்.

இருமையுமுணர்ந்தநல்ல வெழில்பெறுந்தபதியேயென் ... *
உரிமையாலருளாலப்பா லுதவிமற்றில்லைகண்டாய் ... ... *
கருணையோடிந்தத்தத்தைக் காத்திரக்ஷிப்பதற்குன் ... ... ...*
பெருமையையன்றியைவர்பிழைப்பதற்கிடம்வேறுண்டோ... *

வசனம்.

மகாதயாள குணமுள்ள ஸ்தபதியே என்னுடைய அன்பினாலேயும் ஆசையினாலேயும் பாண்டவர்களுக்கு உதவிஎன்ன இருக்கின்றது இன்னேரம்அவர்களைக்காப்பாத்துகிறபாரம் உன்னைதேயல்லாமல் மற்றவர்களுக்கில்லை உலகத்திலே நீயே நிலைநிறுத்தவேண்டும் அப்பா ஸ்தபதி ... ... ... ... ... ... *

ஸ்தபதி - விருத்தம்.

வேணுமென்றெனக்குரைத்தவில்லில்வல்லவனேபோற்றிச்... *
சேணுயர்கீர்த்திபெற்ற செயவிதுரோத்தராபோற்றிப் ... ... *
புணுமங்கதற்குண்டான புலனுடன்சொன்னால்பாரும்... ... *
காணொணாவகையாயந்தக் காரியஞ்செய்வேனையா ... ... ... *

வசனம்.

ஐயா விதுரராசப்பிரபுவே இன்னவகையா யிப்படிச்செய்யலாமென்றுதேவரீர் அதற்குப்புலன்சொன்னால் அப்படியேஇரண்டாம்பேர் அறியாமல் செய்துமுடித்து அவர்களைத் தப்புவிக்கமாட்டுவேன் சுவாமி ... ... ... ... ... ... ... ... *

விதுரன் - விருத்தம்.

மயனினும்பெரியதபதியேயந்த ... ... ... ... *
வாரணாவதத்தினுக் கருகே ... ... ... *
மருவியகாத வழிக்குளே யிடும்பன் ... ... ... *
வாழ்ந்திடும் வனமிருப் பதனால் ... ... ... *
சுயமுடனீசெய் யரக்குமா ளிகைக்கும் ... ... *
சுருங்கிடா விடும்பன்காட் டுக்குந் ... ... *
தொடர்ச்சியாயுள்ளே நிலவறையாகச் ... ... ...*
சுரங்கமுண் டாக்கியே வைத்தால் ... ... ... *

அயலுறுங் கொடிய பாவிகள் கூடி ... ... ... *
அடர்நெருப் பிடுஞ்சமை யத்தில் ... ... ... *
அமைத் திடுமந்த நிலவறை வழிபோ ... ... ... *
யைவருந் தப்பியே பிழைப் பார் ... ... ... *
இயலிதை யல்லா லுபாயம்வே றில்லை ... ... ... *
யிவ்வகை செய்வையே யானால் ... ... ... *
ஈரேழுபதினு லுலகமுள்ளளவு ... ... ... ... *
யிருக்குமுன் சுகுர்த மெய்ப்புகழே............*

வசனம்.

கேளாய் ஸ்தபதீ வாரணவதத்துக்குச்சமீபத்திலே காதவழி க்குள்ளே இடிம்பனிருக்கிற வனமிருக்கின்றது அந்தவனத்து க்கும் நீகட்டும் அரக்குமாளிகைக்கும் நிலவறையாகச்சுரங்கம் உண்டாக்கிவைத்தால் சத்துருக்கள் நெருப்புவைக்கிற சமயத் தில் நிலவறைவழியாய்ப்பாண்டவர்கள் தப்பிப்பிழைப்பார்கள் இதைவிடவேறே உபாயம்இல்லை இவ்வளவு உபகாரம் நீசெய் யவேண்டும் இது நீ செய்தால் உலகமுள்ளளவுக்கும் உன்னு டைய உண்மையானகீர்த்தி நிலைநிற்கும் ஸ்தபதீ............*

ஸ்தபதி-விருத்தம்.

மேவருங்கீர்த்திபெற்ற மிகுவிதுரேந்த்ராபோற்றி ... ... *
தேவரீர்திருவாக்குக்குத் திருகுநான்சொல்லுவேனே...... *
ஏவரும்பாண்டவர்க்கோ ரிடரும்வந்திடாமலேதான் ...... *
தாவருமதற்குண்டான தந்திரஞ்செய்வேனையா ...... ... *

வசனம்.

ஐயாவிதுரராசப்பிரபுவே தேவரீர்திருவாக்குக்கு அடியேன் தடங்கல்சொல்லுவேனு தருமமேசெய மென்றிருக்கும் பாண் டவர்களைத் தருமந்தலைகாக்குமென்கிற பழமொழிதற்காத்துக் கொள்ளாதா அதற்குவேண்டிய உபாயஞ்செய்து அவர்களைத் தப்புவிக்கமாட்டுவேன் இதற்குத்திருகில்லை சுவாமீ ... ... *

விதுரன்-விருத்தம்.

உடையவர்கள்சொற்படியே நடக்கவேண்டும் ... ... ... *
கருதரக்குமாளிகையுங் கட்டவேண்டும் ... ... ... ... *
தடையறப்பாண்டவர்கள்குடி புகவும்வேண்டும் ...... ... *

சங்கையில்லாதவர்களுஞ் சஞ்சரிக்கவேண்டும் ... ... ... ❋
புடைகொளுந்துஷ்டர்கள்நெருப்பை யிடவும்வேண்டும்... ❋
புனையறப்பாண்டவர்தப்பிப்பிழைக்கவேண்டும் ... ... ❋
நடையறியாதவரிருக்க வேண்டுமிந்த ... ... ... ... ... ❋
நன்மையைநீயுலகினிலே நாட்டவேண்டும் ... ... ... .... ❋

வசனம்.

கேளாய் அப்பா ஸ்தபதீ அந்தத் துஷ்டசதுஷ்டர்கள்சொன்னபடியே அரக்குமாளிகையும் கட்டவேண்டும் அதிலேபாண்டவர்கள் ஐந்துபேருங்வாசஞ்செய்யவும்வேண்டும் அப்போது அந்தத்துஷ்டர்கள் நெருப்பை யிடவும்வேண்டும் அந்தப் பாண்டவர்கள் ஐந்துபே நம் நிலவறைவழியாய்த் தப்பிப்பிழைக்கவும்வேண்டும் மேலும் இந்தரகசியம் ஒருவருக்கும் தெரியாமல் இருக்கவும் வேண்டும் இப்படியெல்லாம் செய்து உன்னுடையபுகழை நீயேநிலைநிறுத்தவேண்டும் அப்பா ஸ்தபதீ...❋

ஸ்தபதி- வசனம்.

நல்லதுநான் போய்வருகிறேன் சுவாமி ... ... ... ... ❋

விதுரன்- வசனம்.

போய்வா ஸ்தபதீ சாக்கிரதை சாக்கிரதை......... ...... ❋

பொது-வசனம்.

கேளும் சபையாரே ஸ்தபதியானவன் விதுரமகாராசனிடத்தில் செலவுவாங்கிக்கொண்டு வாரணாவதத்துக்குப்போய் அரக்கு கெந்தகம் செம்பஞ்சு மெழுகு வெடியுப்பு இவைகளாலே அரக்குமாளிகைகட்டிவைத்து இடும்பாசூரனுடைய வனத்தில் வழிவைத்து வழிக்குமேல் பாறைமூடி அந்தப்பாறைக்கும் மேல்சொல்லிய மாளிகைக்கும்காதவழி அதற்குச்சுரங்கம் வெட்டி அந்தச்சுரங்கத்தில் பாண்டவர்கள் போகும்படியாகிய தருணத்தில் இருட்டினாலே நிலவறைவழிதெரியாதென்று நினைத்து அரக்குமாளிகைக்கும் இடும்பன்வனத்தில் மேல்வழிமூடியபாறைக்கும் அந்தச்சுரங்கத்துக்குள் நடுவில் மாருக்குமார் மாணிக்கம்பதித்து ஒளிவுவிளங்கவைத்துத் தயார்செய்து மறுபடியும் விதுரராசனிடத்தில்வந்து மாளிகைசெய்த வகையைச்சொல்வதுகாண்க ... ... ... ... ... ... ... ... ... ... ❋

ஸ்தபதி-விருத்தம்.

மானவேல்வீராபோற்றி வாய்மைநேர்மன்னாபோற்றி .... ...*
ஞானசம்பன்னாபோற்றி, நற்குணக்கடலேபோற்றி ... ..... *.
தானமுந்தவமுமுள்ள தயாளவுத்தமனேபோற்றி ... ....... *
மேணிசேர்விறல்வில்லேந்தும் விதுரராசேந்த்ராபோற்றி...*

விதுரன்-விருத்தம்.

போற்றியென்றுரைக்குநல்ல புலனறிதபதிகேளாய் ... ..... *
மாற்றலர்சொல்லரக்கு மாளிகைமுடிந்ததாமேல் ... ... ...*
நேத்தியாய்ப்பாண்டவர்க்கு நிலவறைசெய்திட்டாயா ... ... *
ஆற்றுமென்மனக்கலக்க மாறநீவுரைசெய்வாயே............ *

வசனம்.

அப்பா ஸ்தபதீ என்சுவாமீ இங்கேவா அரக்குமாளிகைகட்டி முடிந்ததா பாண்டவர்கள்தப்பிப் பிழைக்கும்படியாகிய நிலவறைசெய்தாயா என்விசனமெல்லாந் தீரத்தக்கதாக நீ செய்தவகையைச்சொல்லவேண்டும் அப்பா ஸ்தபதீ ... ... ... ...*

ஸ்தபதி- வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் சுவாமீ ... ... ... ... ...*

ஸ்தபதி -விருத்தம்.

அரக்குமாளிகையுஞ்செய்தே னவருமந்தவேளை ... ...... *
நெருக்கமில்லாமலேக நிலவறைதனையுஞ்செய்தேன் ... ... *
இருக்குமிவ்வுளவையுன்னோ டெச்சரித்தப்பாலந்தச்......... *
செருக்குறுசுயோதனற்குச் சேதியைச்சொல்லவந்தேன் ... *

வசனம்.

அரக்குமாளிகையும்செய்தேன் பாண்டவர்களைந்துபேரும் விபத்துவந்தவேளையில் நிர்ப்பயமாயெழுந்துபோக நிலவறையும்செய்தேன் இந்தக்காரியத்தைத் தேவரீருடனே சொல்லிப் பின்பு அந்தத்துரியோதனாதிகளுடனே சொல்லவேண்டுமென்றுவந்தேன் சுவாமீ ... ... ... ... ... ... ... ... ... *

விதுரன்-விருத்தம்.

அல்லலகற்றினையே ... ... ... *
நல்லதுநற்றபதீ ... ... ... ... *

அஞ்சம்பஞ்சபாதகத்தை யடைத்துக்கிடக்கும்பானே ...... *
அடுக்குமன்னர்குடியைக் கெடுக்கும்ருத்ராக்ஷப்பூனே (புரோ*)
இணையில்லாப்பேறுபெற விருந்தகாந்தாரிகெர்ப்பம்... ... *
இவனாலன்றேயொன்று நூறுனது—பின்னும் ... ... ... *
இவரவனொன்றெண்ணுத திருதராட்டிரன்மனது ... ...... *
இவனுலிரண்டுபட்டுப் போனது—கெட்ட ... ... ... ... *
துணையாஞ்சகுனிசொல்லுஞ் சொல்லையுஞ்செதுக்கும்வாச்சி*
துய்யபாண்ட வர்க்குமோசஞ் செய்ய வந்திடும் வேர்ப் பூச்சி
(புரோசனன்வந்தான்)

புரோசனன்—விருத்தம்.

அருள்பெறுங்கடலேபோற்றியதிபதிகோவேபோற்றி ...... *
பொருண்மனுமிகுந்தாய்போற்றி பொருவின்மாமணியேபோ
மருளறுதெளிவேபோற்றி மன்னர்மன்னவனேபோற்றி [ற்றி
தெருண்மிகுமரசேபோற்றி திருதராட்டிரனேபோற்றி......*

திருதராட்டிரன்—வசனம்.

ஆகா கா கா கா என்னருமைக்குரித்தாகியமந்திரி புரோச னுவந்தாயா உட்காரு ஆகா கா சந்தோஷம் சந்தோஷம் .... *

திருதராட்டிரன்—விருத்தம்.

புலனெலாமறிந்தநல்ல புரோசனுசொல்லக்கேளாய் ... ... *
குலமுறைப்பெரியோர்மற்ற குருக்கள்மாரொவருஞ்சூழ ... *
இலகியதருமராஜ னிளவரசிருக்குமந்தக் ... ... ... ... *
கொலுமுகச்சபையம்பார்த்துக் கொப்பெனவரச்செய்வாயே*

வசனம்.

மந்திரி புரோசனு நம்முடைய் பத்திரசிம்மாசனக்கொலுமுகத்திலே தருமராசன் தம்பிமார்களும் பீஷ்மர் துரோணர் கிருபர் விதுரன் முதலானசமஸ்தமானபேருஞ்சூழக் கொலுவீற்றிருக்கிறசபையமாயிருக்கிறதாபார்த்துவரச்சொல்லுபுரோசனு

புரோசனன்—விருத்தம்.

ஐமப்படி வடமேமரு...... *
ஒப்பெனவுறைகின்ற......... *
இப்புவியிறையோனே...... *
செப்பியபடிசெய்வேன்... *

வசனம்.

தேவரீர் சொன்னபடியே செய்கிறேன் சுவாமீ............*

புரோசனன்– விருத்தம்.

புகழ்பெறுசமூகங்காக்கும் புலிநிகர்சேர்வைக்காரா.........*
அகமகிழ்ந்தொருநொடிக்குள் திவேகமாகச்சென்று ......*
திகழ்முடித்தருமராஜன் தெளிவுறுபெரியோர்சூழத் ... ....*
தருமிளவரசிருக்குஞ் சமையத்தைப்பார்த்துவாராய் ... ... *

வசனம்.

ஆரடா அடா சேர்வைக்காரா சுவாமீ பராக்கு குருக்கள்மார் முதலான சமஸ்தமானபேரும் வந்திருக்கத் தருமராஜன் கொலுவீற்றிருக்கின்ற சமையமாயிருக்கின்றதா பார்த்துவாடா சேர்வையே ... ... ... ... ... ... ... ... ... ... *

சேர்வைமட்டு – விருத்தம்.

கேடின்மதியிலே ... ... ... *
ஈடில்லவனே ... ... ... *
நாடிநொடியிலே ... ..... ... *
ஓடிவருகிறேன் ... ... ... ... *

வசனம்.

அப்படியேபோய்ப் பார்த்துவருகிறேனையா மந்திரீ......*

சேர்வைக்காரன்–விருத்தம்.

சீர்பெறுமருண்மிகுந்து திகழுமந்திரியேகேளாய் ....... ... *
தார்புயத்தருமராஜன் தம்பிமார்குருக்கண்மார்கள்...... ... *
பேர்பெறுவிதுரன்பீஷ்மன் பின்னுமன்னவர்கள்சூழ... ... *
ஏர்பெறக்கொலுவின்மேவி யிருக்கின்றதருணமையா ...... *

வசனம்.

கேளுமையாமகாமந்திரீ அப்படியேபோய்ப் பார்க்குமளவில்சமஸ்தமானபேருஞ் சூழத்தக்கதாகத் தருமராஜன் கொலுவீற்றிருக்கிற தருணமாயிருக்கின்றது சுவாமீ ....... ... ... *

புரோசனன்– விருத்தம்.

திரைகடல்சூழுமிந்தச் செகதலபதியேபோற்றி ... ... ... *
வரை நிகர்புயத்தின்மிக்க மகுடமண்டலிகரோடு ... ... ... *

குளைகழல்விதுரன்பீஷ்மன் குருக்கண்மாரருகிருக்கத்...... *
தளைபுகழ்தருமராஜன் தனிக்கொலுவிருக்கின்றானே......... *

வசனம்.

கேளும் ராஜாதிராஜனான திருதராட்டிரமகாராஜனே விதுரர் பீஷ்மர் துரோணர்முதலான சமஸ்தமானபேருஞ் சூழ்ந்திருக்கத் தருமராஜன் கொலுவீற்றிருக்கிற தருணமா யிருக்கிறது சுவாமீ ... ... ... ... ... ... ... ... ... ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

புத்தியிலிணையிலாத புரோசனமந்த்ரீகேளாய் ... ... ... *
இத்தரைமுழுதுமிப்போ திளவரசியற்றுகின்ற ... ... ... *
சத்தியதருமராஜன் தன்னுடன்பேசவேண்டிக் ... ... ... *
கொத்துடனரசர்சூழுங் கொலுவுக்குப்போவோம்வாராய்... *

வசனம்.

மந்திரீ புரோசனா என்சுவாமீ நம்முடைய தருமபுத்திரன் இளவரசுசெய்யுங் கொலுவுக்குப்போய் சிலகாரியம்பேசவேண்டியதாயிருக்கின்றது வருகின்றையாபோவோம் ... ... ... *

புரோசனன் - வசனம்.

அப்படியேநானும்வருகிறேன்போவோம் வாரும்சுவாமீ ... ... ... ... ... ... ... ... ... *

பொது-விருத்தம்.

துன்மார்க்கமானமைந்தன்சுயோதனன்சொற்கிசைந்து ... *
சன்மார்க்கப்பாண்டுமைந்தர் தம்மைச்சர்ப்பனையாற்றேற்றி *
வன்மார்க்கமாக வாரணாவதத்துக்கனுப்பப் ... ... ... ... *
புன்மார்க்கதிருதராட்டிர பூபதிவருகின்றானே ... ... ... *

வசனம்.

அஃதெப்படியென்றால் இளவரசுசெய்யுந் தருமராசனுக்குச் சில எத்தாகவும் உபாயமாகவும் சூதாகவும்சொல்லி அந்தத்தருமராசன் இங்கே இளவரசுசெய்யாமல் தம்பிமாருடன் வாரணாவதத்துக்குப்போக அநுப்பும்படியாய்த் தருமராசன் கொலுவுக்குத் திருதராட்டிரமகாராசன் வருகிறவிதங்காண்க... ... *

## திருதராட்டிரமகாராசன் - தரு.

### இ-ம். தோடி - ஆதிதாளம்.

சகபதிமகபதிதிருதராட்டிர ஏகசக்ராதிபதிவந்தான்
நகபதி புகழ்பதி குலபதி பலபதி ... ... ... *
நதிபதி நிதிபதி அயபதி கெசபதி ... ... ... *
நரபதி வரபதி நவகண்ட மகிபதி .. ... (சகபதி)

இலகும்பூச் சக்ரக்குடை கவிக்க ... ... ... *
எதிரெதிர் மன்னர் கரங் குவிக்க ... ... ... ...*
பலபேர் வெண்சாமரை வீச ... ... ... ... *
சிலபே ரன்பாய்த் துதிபேச ... ... ... ... *
பகலின் விளங்கிய மணிமகு டம்பனை ... ... *
மருவலர் வந்திரு சரணில் விழுந் தெம ... ... *
திடரக வும்படி யருள்புரி யென்பது ... ... ...*
செவியினு ழைந்ததின் மிகவும கிழ்ந்திட ...... *
பார்வையி ல்லையெனு மொருகு றையலாது ... *
சீர்கொள்செல்வமதுமூருகுறைவிலாத......(சகபதி)

### தருமராசன் - விருத்தம்.

அன்னையுமாய்த் தந்தையுமாய்க்குருவுமாய்நல் ... ... ... *
லருள்புரியுந் தெய்வமுமா யனைத்துமாய்நின் ............ *
றென்னையரு ளாலேயோங்கி யிடுக்கணீக்கி ... ... ... ... ... *
இளவரசு பட்டமதை யெனக்குண் டாக்கிப் ........ ... ... *
பின்னுமனத் திருள்போக்கிக் கையைத்தூக்கிப்........... *
பிழைப்பித்த வென்னுடைய பிதாவேபோற்றி ... ... ... *
பொன்னடியை யான்கண்டேன் றலைமேற்கொண்டேன் ... *
போற்றினே னென்கவலை மாற்றினேனே ... ... ... ... *

### மற்றநால்வர் - விருத்தம்.

குருகுலமதிலுயர் கோவேபோற்றி ... ... ... ... ... *
மருவலரடிபணி மன்னாபோற்றி ... ... ... ... ... ... *
திருவளரரசர்கள் திலகாபோற்றி ... ... ... ... ... ... *
பெருமைகொள்பெரிய பிதாவேபோற்றி ... ... ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

சந்ததம்பெருமையுந் தருமசிந்தையும் ... ... ... ... ... *
அந்தமுமருமையு மன்புமாண்மையும் ... ... ... ... ... *
புந்தியுஞானமும் புகழுமெய்தியே ... ... ... ... ... *
மைந்தர்நீரைவரும் வாழிவாழியே ... ... ... ... ... ... *

வசனம்.

என்னருமையான மக்களே ஊழியானது புரண்டுபோய் விட்டாலும் நீங்கள் நீடூழியாகவாழ்ந்திருக்கக்கடவீர்கள் மக்களே.

திருதராட்டிரன்-விருத்தம்.

பெருக்குநால்வேதமுற்றும் பிசகறக்கற்றறிந்த ... ... ... *
குருக்கள்மாரனைவருக்குங் கூறுவேன்தெண்டந்தெண்டம் ... *
வருக்கமுமனுவுஞ்செங்கோல் வரன்முறைநெறியுந்தேர்ந்த *
தருக்குள்ளபீஷ்மருக்குச் சாஷ்டாங்கதெண்டந்தெண்டம்... *

குருக்கள்மார்-சுலோகம்.

ஆசீர்வாதமகண்டராச்சியவிபவமத்தியந்தலக்ஷ்மீகரம் ... ... *
தேஜோஜ்வாலகிரீடவர்த்தன சுபந்தீனப்ரஜாபாலனம் ... ... *
வாசாரஞ்சிதசாம்பிரதாயலலித மார்த்தாண்டகோடீஸ்வரம் *
தேஜோதேஜவிராஜராஜநிலகந் திருதராஷ்டிரசன்மங்களம்... *

பீஷ்மர்-விருத்தம்.

நிதிபெறுதிருபா வாழி ... ... ... *
துதிபெறுசகுண வாழி ... ... ... *
சதிர்பெறுமன்ன வாழி ... ... *
மதிகுலபதியே வாழி ... ... ... *

விதுரன்-விருத்தம்.

இன்புறமுயிர்கட னுயிரெனவெண்ணிப் ... ... ... ... ... *
பின்பிகலரசர்கள் பெருமையடக்கி ... ... ... ... ... *
மன்புவிபுகழ மகிழ்ந்தொருகுடைக்கீழ் ... ... ... ... *
அன்புடனுறுமென் னண்ணுபோற்றி ... ... ... ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

தருமனுநெறியறி சதுராவாழி............. *
இருநிலமெலியனா யிகலாய்வாழி......... *

வருமமுதெனுமொழி மதுராவாழி ... ... *
வெருவருநெடியவில் விதுராவாழி ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

குற்றமில்குருக்கண்மாரே குலமுறைபீஷ்மரேநல் ... ... *
வெற்றிவில்விதுராவென்றன் விசனமென்னென்றுசொல்வேன்
பத்தியாயென்றன்றம்பி பக்கவில்லாதவாழ்க்கை ... ... ... *
உற்றதோருயிரில்லாத வுடலிருப்பதுபோலாமே ... ... ... *

வசனம்.

கேளுங்கள் குருக்கள்மார்களே ஐயா பீஷ்மரே தம்பி விதுரா என்மனோதுக்கத்தை என்னென்றுசொல்வேன் ஏனென்றால் என்தம்பி பாண்டுராசன் எப்போதும் என்பக்கத்திலேயே இருந்தவனல்லவா இப்போது அவனில்லாமல் நான்தனியே இருக்கிறது உயிரில்லாமல் உடல்மாத்திரம் இருக்கின்றதுபோல் இருக்கின்றது நானென்னசெய்வேன் என்னுடைய அதிருஷ்டம் இப்படி இருந்தது பார்த்தீர்களா ஐயையோ என்னசெய்கின்றது *

கிருபன்-விருத்தம்.

இருளறவிளக்குஞ்செங்கோ லியற்றியிவ்வுலகங்காக்குந் ... *
தெருளுறுதிருதராட்ர தீரனேசெப்பக்கேளாய் ... ... ... *
அருளினிலறிவிலன்பி லருமையிலருமையான ... ... ... *
பொருளினுன்றம்பிபாண்டு பூபதிக்கிணைவேறுண்டோ ... *

வசனம்.

கேளும் ராஜாதிராஜனை திருதராட்டிரமகாராஜனே தயையிலும் தாக்ஷிண்யத்திலும் அறிவிலும் அன்பிலும் திறத்திலும் தெளிவிலும் உம்முடையதம்பியான பாண்டுராஜனுக்கு இணையாக ஆரிருக்கின்றார்கள் ஒருவரும் இல்லை ஐயா ... ... *

துரோணர்-விருத்தம்.

வம்பிகைகேகிசொன்ன வார்த்தையைத்தலைமேற்கொண்டு *
அம்புவிபோற்றுமந்த வயோத்திமாநகரைவிட்டு ... ... *
வெம்புகானகத்திற்சென்ற விறன்மிகுசிலைக்கைராமன் ......*
தம்பியைப்பார்க்கிலும்முன் றம்பிநல்லவன்காணையா ... ... *

வசனம்.

கேளுமையா திருதராட்டிரமகாராஜனே அந்தப்பொல்லாத் கைகேசி சொன்னபடித் தன்னரசிழந்து அயோத்தியை விட்டு ஸ்ரீராமன் காட்டுக்குப்போனபோது கூடப்போனானே ஒரு தம்பி அந்தத்தம்பியைப்பார்க்கிலும் உம்முடைய தம்பி மெத்தநல்லவனுச்சுதே ஐயா ... ... ... ... ... ... ... ... *

திருதராட்டிரன்-விருத்தம்.

உசிதவேதியர்குலத்தி லோங்குமன்னவர்குலத்தில் ... ... *
வசியர்தன்குலத்தின் மற்றவசூத்திரர்குலத்தில் ... ... *
பிசகறவுலகந்தன்னிற் பிறந்திறந்தவரைப்பார்க்கில் ... ... *
பசையுளவென்றன்றம்பி பாண்டுராசனைப்போலுண்டோ *

வசனம்.

பிராமணகுலத்திலேயாவது க்ஷத்திரியகுலத்திலேயாவது வைசியகுலத்திலேயாவது சூத்திரகுலத்திலேயாவது இதுவரையிலும்பிறந்து இறந்தவர்களிலே என்தம்பி பாண்டுராசனைப்போல் ஆராகிலும் இந்தப் பூமியிலேயுண்டா அப்படிப்பட்ட தம்பியை நானிழந்து இன்னம் பூமியிலே இருக்கின்றேனே என்னைப்போலும்பாவியுண்டா ஐயையோ ... ... ... ... ... ... *

பீஷ்மர்-விருத்தம்.

நேற்றிருந்தவரின்றில்லை நிலைபெற்றேயிருப்பார்போலச் ... *
சாற்றுவதல்லால்யாருஞ் சதாகாலமிருந்ததில்லை ... ... ... *
ஆற்றல்சேர்திருதராட்ர வண்ணலேமனந்தளர்ந்து ... ... *
காற்றெனச்சுழன்றிடாதே கண்ணினீர்மாற்றுவாயே ... ... *

வசனம்.

கேளப்பா திருதராட்டிரமகாராஜனே உலகத்திலே நேற்றிருந்தவர் இன்றில்லை மனிதர்கள் நிலைபெற்றிருக்கின்றவர்களைப்போலப் பேசுகிறதல்லாமல் யாருஞ்சாஸ்வதமாக இருந்ததில்லை நீ என்கண்ணீர்விட்டு மனந்தளருகின்றாய் வேண்டாம் அப்பா திருதராட்டிரமகாராசனே ... ... ... ... ... ... ... *

விதுரன் -விருத்தம்.

மதிகுலத்திலுதித்தான் வாழ்வையுமனுபவித்தான் ... ... *
பதிமுதராசுஞ்செய்தான் பாலரைவரையுந்தந்தான் ... ... *

விதிவழியுயிரும்விட்டான் மேலானகதியும்பெற்றான் ... .... *
சதிருளவண்ணாவுன்றன் றம்பிக்குக்குறையொன்றுண்டோ *

வசனம்.

கேளும் அண்ணா திருதராட்டிரமகாராசனே உம்முடைய தம்பியானபாண்டுமகாராசாதல்லசந்திரவமிசத்திலேயும் பிறந்தார் சகலபாக்கியத்தையும் அனுபவித்தார் உம்முடனேகூடஇருந்து இராச்சியபரிபாலனமுஞ்செய்தார் திவ்யமங்களமாணிக்கவிக்கிரகங்களைப்போலே ஐந்துபிள்ளைகளையும்பெற்றார்விதிவிகிதப்படிக்கு உயிரையும்விட்டார் மேலான பரமபதத்தையும் அடைந்தார் ஆகையினாலே அந்தப்பாண்டுமகாராசாவுக்கு என்னகுறை உமக்குத்தான் என்னகுறை அண்ணா ... ... ...*

திருதராட்டிரன்-விருத்தம்.

ஆதலாலவ்வாறான வருமைமையென்றம்பியாண்டு ... ... ... *
தீதிலாதெனக்குநானுந் திலதருப்பணங்கள்செய்யப் ... ... *
போதநானுயிர்விடாமற் பொருமிநானழுதுகொண்டு...... *
பாதகனின்னமிந்தப் பாரினிலிருக்கின்றேனே ... ... ... *

வசனம்.

தம்பிவிதுரா அத்தன்மைப்பட்ட தம்பியாகியபாண்டுராசன் எனக்குத் திலதர்ப்பணக் கிரியைகள்செய்யும்படி அவனுக்குமுன்னே நானிறந்துபோகவேண்டும் அல்லது அவனிறந்தபோதாகிலும் கூடஇறந்துபோகவேண்டும் அப்படியில்லாமல் அவனிறந்தும் இன்னமும் இருக்கின்றேனே என்னைப்போலும்பாவிகள் இந்தப்பூமியிலே ஆராகிலும் இருப்பார்களா ... ... *

விதுரன்-விருத்தம்.

மதியுற்றவண்ணாநூறு மைந்தர்களுனக்கிருக்கக் ... ... ... *
கதியுற்றபாண்டுதானு கடன்முறைசெய்யவேண்டும் ... ... *
விதியுற்றவாறல்லாமல் வேறொன்றுநடப்பதுண்டோ ...... *
துதியுற்றமன்னனேயுன் றுயர்தனையொழித்திடாயே ....... *

வசனம்.

கேளும் அண்ணா திருதராட்டிரமகாராசனே உமக்குஒன்று இரண்டல்ல பிள்ளைகள் நூறுபேர் இருக்கின்றார்கள் அப்படி இருக்க இறந்துபோனபாண்டுமகாராசன்தானு திலதர்ப்பணக்

கிரியைகள் செய்ய வேண்டும் விதியின்படி நடக்கு மல்லாமல் வேறொன்றுநடக்குமா சும்மாநீர் கவலைப்படவேண்டாம் அண்ணேவே ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ❋

திருதராட்டிரன்-விருத்தம்.

தொகுத்தநால்வேதந்தேர்ந்த துரோணரேயொன்றுகேளீர் ❋
செகத்தினிலிறந்தபேர்க்குத் திதிதிலதர்ப்பணங்கள் ... ... ❋
மகுத்துவநதிதீரத்தில் வகையுடன்செய்தனன்றோ ... ... ❋
பகுத்தமற்றிடத்திற்செய்யும் பலனதுநன்றேசொல்வீர் ... ❋

வசனம்.

ஐயா துரோணரே இறந்துபோனவர்களுக்குத் திதி திலதர்ப்பணாதி பரலோககிரியைகள் தெய்வஸ்தலங்களிலே நதி தீரங்களிலே செய்கிறது நல்லதா அல்லது மற்ற இடங்களிலே செய்கிறது நல்லதா அதைத்தெரியச்சொல்லுஞ் சுவாமீ ... ... ... ❋

துரோணர்-விருத்தம்.

அண்ணலேதிருதராட்ர வதிபதியேநீகேளாய் ... ... ... ❋
புண்ணியநதிதீரத்திற் புகழுந்தெய்வத்தலத்தில் ... ... ... ❋
பண்ணியதர்ப்பணாதி பரலோககிரியைக்கொப்பாய்த் ... ... ❋
திண்ணியமற்றிடத்திற் செய்வதைச்சொல்லலாமா ... ... ❋

வசனம்.

கேளுமையா திருதராட்டிரமகாராசனே புண்ணியநதி தீரங்களிலே திவ்வியக்ஷேத்திரங்களிலே திலதர்ப்பணாதி பரலோககிரியைகள் செய்கிறதுக்குச் சமானமாயிருக்குமா மற்ற இடங்களிலே செய்கிறது ... ... ... ... ... ... ... ❋

திருதராட்டிரன்-விருத்தம்.

தங்கிய தருமபுத்ரனே நீயும் ... ... ... ❋
தம்பிமார் களும்பெற்ற தாயும ... ... ❋
மங்கள கங்கைக் கரையினிற் றெய்வ... ... ❋
வாரணாவதத்தி னுக்கேகி ... ... ... ❋
இங்கு செய்யாதை யங்கிருந் தியற்றி... ... ❋
யின்றவுன் பிதாமனங் களிக்கப் ... ... ❋
பொங்கு மோமாதி கிரியைக ளன்றாய்ப்... ❋
புரிந்திருந் தாலமப்பா ... ... ... ❋

வசனம்.

கேளாய்மகனே தருமபுத்திரா நீயும் உன்தம்பிமாரும் உங்கள் தாயாராகியகுந்திதேவியும் கங்காநதிதீரத்தில் இருக்கப்பட்ட திவ்விய ஸ்தலமாகிய வாரணவதத்துக்குப்போய் இங்கேசெய்கிற அரசாட்சியை அங்கே இருந்துசெய்து உன்பிதாவாகிய பாண்டு மகாராசனுக்குப் பிரீதியாக எக்கிய ஓமாதி கிரியைகள்செய்துகொண்டிருந்தால் எனக்குமிகவும் நன்மையாகத்தோற்றுது மகனே தருமபுத்திரா ... ... ... ... ... ... ... ... ... ✽

தருமராசன் - விருத்தம்.

சிந்தையைத்தெளிவித்திந்தச் சிறுவர்க்குப்புத்திசொல்ல ... ✽
வந்திடும்பிதாவேயுன்றன் வார்த்தையைத்தலைமேற்கொண்டோம்
எந்தவாறானசெய்தாலும் யாமதைத்தடுப்பதில்லை ... ...[ம்
செந்திருப்புயனேயுன்றன் திருவாக்குக்கெதிர்வாக்குண்டோ✽

வசனம்.

ஐயா என்பெரியபிதாவே இதாகிதந்தெரியாத சிறியோர்கள் நாங்கள் தேவரீர் எந்தப்படிகட்டளை இடுகிறீரோ அந்தப்படியே சிரசாய்வகித்து நடந்துகொள்ளுவோமேயல்லாமல் உங்கள் திருவாக்குக்கு எதிர்வாக்குண்டோ அப்படியே செய்கிறோம் ஐயா ... ... ... ... ... ... ... ... ... ... ... ✽

திருதராட்டிரன் - விருத்தம்.

இப்படியாகவங்கே யினிதுசெய்திருந்தீராகில் .... ... ... ✽
ஒப்பறுமும்மையிந்த வுலகெலாந்துதியேசெய்யும் ... ... ✽
அப்பொழுதெனக்குப்பின்னு மதிகசந்தோஷமாகுந் ......✽
தப்பிலாமக்களேநீர் தாழ்விலாதிருந்துவாழ்வீர் ... ... ... ✽

வசனம்.

கேளுங்கள் என்னருமையானமக்களே இந்தப்படி அந்தவாரணவதம்போய்ச்சேர்ந்து நான்சொன்னபடியே நீங்களும் நடந்து கொண்டீர்களேயானால் உங்களை இந்தத் திரிலோகமுந் துதிசெய்யும் அப்போது எனக்கும் அதிகசந்தோஷமா யிருக்கும் நீங்களும் ஒருகுறையு மில்லாமற் சுகமா யிருப்பீர்கள் மக்களே ... ... ... ... ... ... ... ... ... ... ... ✽

திருதராட்டிரன் - விருத்தம்.

புத்தியின்மிகவுயர்ந்த புரோசனுசொல்லக்கேளாய் ... ... *
இத்தனை தருமன்சிந்தைக் கிசைந்தமந்திரிநீயாகிச் ... ... ... *
சத்துருக்களையழித்துச் சகமெலாமவன்குடைக்கீழ் ... ... *
மெத்தவுமடங்கிவாழ மேன்மைநீசெய்குவாயே ... ... ... *

வசனம்.

அப்பா புரோசனு என்சுவாமீ இந்தத்தருமராசனும் மற்ற நாலுபேரும்ஆகிய ஐந்துபிள்ளைகளும் அறியாத சிறுபிள்ளைகள் ஆகையால் நல்லபுத்திசாலியாகிய நீ இவர்களிடத்தில் மந்திரியாகஇருந்து எதிர்த்தசத்துருக்களையெல்லாஞ் சங்காரஞ்செய்து சகலராசாக்களும் இவன்சொல்லுக்கு அடங்கிநடக்கும்படியாகச்செய்து இவர்களுக்கு வேண்டியகாரியங்களுக்கு எல்லாமுயற்சியும் நீயேசெய்து அவர்கள் மனதுக்கேற்க நடந்துகொண்டிரு கூடப்போ ... ... ... ... ... ... ... ... ... *

புரோசனன் - விருத்தம்.

அணுமலையாகச்செய்வேன் மலையணுவாகச்செய்வேன் ... *
பணிவில்சத்துருக்களெல்லாம் பஞ்சபஞ்சாகச்செய்வேன் *
இணையின்மன்னவரையெல்லா மிவரடிவணங்கச்செய்வேன் *
துணையெனவைவருக்குத் தொண்டுசெய்துய்வேனையா...... *

வசனம்.

கேளுஞ் சுவாமீ திருதராட்டிரமகாராசனே அடியேன் அணுவை ஒருமலையாகவுஞ் செய்வேன் மலையை ஒரு அணுவாகவுஞ் செய்வேன் எதிர்த்தசத்துருக்களையெல்லாம் அதாகதமுஞ்செய்வேன் மற்றராஜாக்களையெல்லாம் இவர்களுக்குவணங்கிநடக்கும் படியாகவுஞ்செய்வேன் நானும் இவர்கள்சொன்ன ஊழியங்கேட்டுக்கொண்டு இவர்கள்மனதுக்கேற்கநடந்துகொள்ளுவேன் சுவாமீ ... ... ... ... ... ... ... ... ... *

திருதராட்டிரன் - வசனம்.

ஆனால் கூடப்போ சாக்கிரதை சாக்கிரதை ... ... ... *

திருதராட்டிரன் - விருத்தம்.

மைந்தரேயும்மைப்பெற்று வளர்த்தமாதாவாமந்தக் ... ... *
குந்திக்குத்தெரியச்சொல்லிக் கூடவேயழைத்துக்கொண்டு... *

வந்தனஞ்செய்யுமந்த வாரணாவதத்திற்சேர்ந்து ... ... ... *
சந்ததமகிழ்ச்சியாகத் தழைத்தினிதிருங்கள்போங்கள் ... ... *

வசனம்.

அப்பாதருமபுத்திரா பீமா அர்ச்சுனா நகுலா சகாதேவா உங்களுடைய தாயாராகிய குந்தாதேவிக்குத் தெரியப்படச்சொல்லிக்கூட அழைத்துக்கொண்டு அந்தவாரணாவதத்துக்குப்போய் ராச்சியபரிபாலனம் பண்ணிக்கொண்டு சுகமாயிருங்கள்போய்வாருங்கள் மக்களே ... ... ... ... ... ... ... ... ... *

தருமராஜன்-வசனம்.

அப்படியே செய்கிறோம் பிதாவே ... ... ... ... ... *

தருமராஜன்-விருத்தம்.

குருகுலசமஸ்தானத்திற் குலவியகுருக்கண்மாரே ... ... *
திருமலர்ப்பதங்களுக்குச் சாஷ்டாங்கதெண்டந்தெண்டம் ... *
மருவியவடியேமந்த வாரணாவதம்போய்ச்சேரத் ... ... *
திருவருள்சுரந்தெமக்குச் செலவுதந்தருளுவீரோ ... ... *

வசனம்.

குருகுலசமஸ்தானத்துக் குருக்கள்மாரனைவருக்குந்தெண்டம் தெண்டம் நாங்கள் வாரணாவதத்துக்குப்போய் வருகிறோம் விடைகொடுத்தனுப்பவேண்டுஞ் சுவாமிகளே ... ... ... *

குருக்கள்மார்-விருத்தம்.

அருமையாயெங்க ளாசிர்வாதத்தால் ... ... ... *
இருநிலந்தன்னி லெங்கிருந்தாலும் ... ... ... *
கருதருநீங்கள் கவலையில்லாமல் ... ... ... ... *
தருமமும்புகழுந் தழைத்துவாழ்ந்திடுக ... ..... *

வசனம்.

எங்கள் ஆசீர்வாதத்தினாலே நீங்கள் ஐந்துபேரும் எங்கே இருந்தாலும் தருமார்த்த காமமோக்ஷப் பிரயோசனராய்ச் சுகமாக இருக்கக் கடவீர்கள் போய் வாருங்கள் அப்பா பாண்டவர்களே ... ... ... ... ... ... ... ... ... *

தருமராஜன்-விருத்தம்.

அன்னையேயுனதுசெய்ய வரவிந்தபாதம்போற்றி ... ... *
மன்னுமெங்களையுமெங்கள் மாதாவாமுன்னையும்போய் ... *

மின்னும்வாரணவதத்தின் மேவியங்கிருக்கச்சொல்லி ... ...❋
உன்னுமென்பெரியதந்தை யுரைத்தனர்வருவாயம்மா ... ...❋

வசனம்.

சரணம் சரணம் அம்மாதாயே எங்கள் ஐந்துபேரையும் உம்மையும் வாரணுவதத்திற்போய் வாசம்பண்ணச்சொல்லி எங்கள்பெரிய தகப்பனாராகிய திருதராட்டிர மகாராசன் உத்திரவுபண்ணி இருக்கிறார் போவோம்வாரும் அம்மணி ... ... ❋

குந்திபுலம்பல்- தரு.

இ-ம். நீலாம்புரி- ஆதிதாளம்.

அரிகரி இப்போ தெம்மை வாரணு வதத்துக்கேக ... ... ❋
அரசனனுப் புவதென் ... ... ... ... (தெய்வமே)
ஆறுதுன் சிறுவர்களிவருங் கூடிக்குறை ... ... ... ... ❋
அண்ணனுக் கென்ன செய்தார் ... ..... (தெய்வமே)
அரசாளத் தகுமென்று தருமராசனுக்கிள ... ..... ... ❋
வரசளித்து கந்தாரோ ... ... ... ... (தெய்வமே)
அகமகிழ்ந் துலகாளப் பார்த்துள்ளம் பொறாமையால் ... ... ❋
ஆரென்ன செய்த குற்றம் ... ... ... (தெய்வமே)
பதிவிட்டுப் பதிசென்று பதியாள வந்தகுறை ... ... ... ❋
பார்த்தாமன் கருணையோ ... ... ... ... (தெய்வமே)
பார்புகழ் பஞ்சவர்க்குக் கிரகசாரம் போதாதோ ... ... ❋
பதிவிட்டுப் போவதேது ... ... ... (தெய்வமே)
அருமை மக்களுக்கிந்த விஷயிடித்தாற் போலவந்த ... ... ❋
அநிசெய மென்ன சொல்வேன் ... ... .... (தெய்வமே)
அன்னைநா னிருந்தென்ன தந்தையிருந்தாராகுல் ... ... ❋
அநியாய மாவதுண்டோ ... ... ... (தெய்வமே)
மணிமுடி நீங்கள்பூண்டு மாநிலம் ஆளக்கண்டேன் ... ... ❋
மகிழ்ச்சிகொண்டிருந்தேனே ... ... ... (தெய்வமே)
வாரணுவதத்துக்கெம்மைமன்னன்போகச்சொல்லக்கேட்டேன்
மணிக்குடர் துடிக்குதே ... ... ... ... (தெய்வமே)
உள்ளந் துணிந்தரச னெம்மையங்கே போகச்சொன்ன ... ❋
உளவென்னமோ வறியேன் ... ... ... (தெய்வமே)

உலகாளத்தந்தசெங்கோல் வரூவாதென்றெண்ணினேனே... *
உடனேவந்த் திங்கேதோ ... ... ... ... (தெய்வமே)
மனுநெறி தவறாத மகாராஜ ராஜனுக்கு ... ... ... ... *
மனதுதான்வந்ததேதோ ... ... ... ... (தெய்வமே)
மாதரையாளு மன்னர் நகைக்கவல்ல வோவெம்மை ... ... *
மன்ன னிவ்வாறு ரைத்தான் ... ... ... (தெய்வமே)
பண்டுநான் செய்தபாவ மேதோவென்பாலர்களும் ... ... *
பதிவிட லாச்சுதே ... ... .... ... ....... (தெய்வமே)
பார்புகழ்மன்னர்மன்னன் சொற்கேளாவிடிற்பொல்லாப்... *
பகைவந்து நேரிடுமே ... ... ... ... ... (தெய்வமே)

குந்தி-விருத்தம்.

ஆட்சியாயரசுசெய்யு மஸ்தினபுரியைவிட்டு ... ... ... *
மாட்சிவாரணவதத்தில் வாசமேசெய்யச்சொன்ன ... ... *
சூழ்ச்சிகளேதோவென்ன தொர்தரைக்கிடமோவிந்தத்......*
தாழ்ச்சியைக்கேட்டபோதே தயங்குதென்சிந்தைதானே ... *

வசனம்.

கேளுங்கள் என்அருமைமக்களே இந்தச்சந்திர வம்சத்துரா ஜாக்கள்பரம்பரையாய் அரசாட்சிசெய்யப்பட்ட இந்த அஸ்தின புரியைவிட்டு நம்மை வாரணவதத்திலேபோய் வாசம்பண்ணச் சொன்னகாரியம் என்னமோ என்னபொல்லாங்குக் கிடமோ இதைக்கேட்டமாத்திரத்தில் என்சிந்தை கலங்குகின்றது மக்களே.

தருமராசன்-விருத்தம்.

கலங்குவதென்னேகங்கைக் கரையதுவாகையாலே ... ... *
இலங்கும்வாரணவதத்தி லிருந்தெங்கள்பிதாவுக்காகப் ... *
பலந்தருதர்ப்பணாதி பரலோககிரியைசெய்து ... ... ... *
நலங்கிளரரசுஞ்செய்தா னன்மையென்றுரைத்தாரம்மா ... *

வசனம்.

கேளும்தாயே நீர்கலக்கப்பட வேண்டியதில்லையே ஏனென்றால் வாரணவதமென்கிறது கங்கைக்கரையிலே இருக்கிறபடியினாலே அதில்வாசமாய்நாங்கள் இருந்து இறந்துபோன எங்கள் பிதாவுக்குத் திலதர்ப்பணாதி பரலோககிரியைகள்செய்தால் நன்மையென்று நம்மைப்போகச்சொன்னார் அம்மா ... ... ... *

## குந்தி-விருத்தம்.

அருமைமைந்தர்களேநீங்க ளேவருஞ்சம்மதித்துப் ... ... *
பொருவில்வாரணவதத்திற் போயுங்கள்பிதாவுக்காகக் ... ... *
கருதருதர்ப்பணாதி கடன்முறைசெய்வதானால் ... ... ... *
வருபலனிதுவேநானும் வருகின்றேன்செல்லுவீரோ ... ... *

## வசனம்.

கேளுங்கள் என் அருமைமைந்தர்களே உங்கள் ஐந்துபேருக்குஞ்சம்மதியாகக் கங்கைக்கரையிலே வாரணவதத்திற்போய் உங்கள்பிதாவுக்குத் திலதர்ப்பணாதி கிரியைகள்செய்துகொண்டு வாசம்பண்ண வேண்டுமென்று மனதிருந்தால் என்னாலே அட்டி இல்லை அப்படியேபோவோம் வாருங்கள்மக்களே ... ... *

## பொது-வசனம்.

இந்தப்படிக் குந்திதேவியும் பாண்டவர்களும் வசனித்துக் கொண்டிருக்கும்போது புரோசனன்சொல்வதுகாண்க ... *

## புரோசனன்-விருத்தம்.

ஆரிங்கேசேர்வைக்காரா வாண்டவன்றருமராசன் ... ... *
வாரணாவதத்திறுக்கு மனமகிழ்ந்தேகவுற்றான் ... ... ... *
பாரிலோர்கணத்துக்குள்ளே பயணபேரிகைமுழக்கி ... ... *
வீரசேனைகளைக்கூட்டி விரைவுடன்புறப்படாயே ... ... *

## வசனம்.

ஆரடாசேர்வைக்காரா நம்முடைய ஆண்டவன் தருமராஜன் வாரணாவதத்துக்குப் போகும்படியாகச் சித்தமானார் ஆகையினாலே இந்தநிமிஷத்தில் பிரயாண பேரிகைமுழக்கி அதிசீக்கிரமாய்ச் சதுரங்கசேனைகளையுங்கூட்டி நிமிஷத்திற்புறப்படுபிள்ளாய்.

## சேர்வைக்காரன்-விருத்தம்.

இந்தவா றுரைப்பீ ரென்று ... ... ... *
முந்தவே தெரிந்து கொண்டு ... ... ... *
தந்திர சேனை கூட்டி ... ... ... ... *
வந்திதோ நிற்கின் றேனே ... ... ... *

## வசனம்.

இந்தப்படி உத்தரவுபண்ணுவீர்களென்று இதற்குமுன்ன

மேதெரிந்துகொண்டு சதுரங்கசேனைகளையுங்கூட்டித்தயாராகி நிற்கிறேன் ஐயா மகாமந்திரி ... ... ... ... ... ... ... *

புரோசனன்-விருத்தம்.

தரணியிற்புகழ்ச்சிபெற்ற தருமராசேந்திரகோவே ... ... *
வருமனுதிருதராட்ர மகிபதிமொழிப்படிக்குப் ... ... *
பொருவில்வாரணவதத்திற் போவதற்கிசைந்துசேனை ... *
அனைத்துமிஷத்திற்கூடி யடர்ந்துவந்தார்களையா ... ... ... *

வசனம்.

கேளும் சமஸ்தமண்டலாதீஸ்வரா தருமபுத்திரமகாராஜனே உங்கள் பெரியபிதாவாகிய திருதராட்டிர மகாராஜன் அடியேனுக்கு ஆக்கியாபித்தபடியே வாரணாவதத்துக்குப்போகச் சதுரங்கசேனைகளும்வந்து தயாராகநிற்கிறார்கள் சுவாமீ ...*

தருமராசன்-விருத்தம்.

அப்படியானால் ... ... *
மெய்ப்படுமந்த்ரீ...... *
சொற்படியாக ... ... *
ஒப்புடன்வருவோம் *

வசனம்.

ஆனால் அப்படியே போவோம்வாரும் புரோசனா ... ... *

பாண்டவர்கள்வாரணாவதத்துக்குப்போகின்ற-தரு.

இ-ம். காம்போதி- ஆதிதாளம்.

தருமதுரைகள்நடந்தார்- ஆதி-நாரணன்பதத்தைநாடி ...... *
வாரணாவதத்தைத்தேடி ... ... ...... ... (தரும)
பொருவில்லாதவந்த வஸ்தினபுரந்தன்னைப் ... ... ... *
பொல்லாப்புல்லர்பங்காக்கிக்-கங்கையைநோக்கி ..... (தரும)
பஞ்சபாண்டவர்க்கிந்த வஞ்சகஞ்செய்தகொடும் ... ... *
பாவிகளானொன்றன்ன - இந்தப் ... ... ... *
பக்ஷபாதகஞ்செய்யுங் குருடன்மக்களுக்கிது ... ... ... *
பலியாமற் போமோவென்ன- இது ... ... ... ... ... *
கொஞ்சத்திற்போமோவேதோ விபரீதமென்றுமாதர் ... *
கும்பல் கும்பலாய்க்கூட-அழுதுவாட ... ... ... (தரும)
செந்திருமாமகளும் விந்தைமகளுந்தரும ... ... ... ... *

தேவ தையும்பின் ஞெடாப்- பொல்லாத் ... ... ... ... *
திருதராட்டிரன்செய்யுந் தீதென்றவர்மேலாசை ... ... ... *
தேசமுழு தும்படரச்-செல்லும் ... ... ... *
இந்தமைந்தர்போய்மீண்டெப் பொதுவருவாரென்றே... ...*
இரங்கித்துயரங்கூர-எல்லோருஞ்சோர ... ... ... (தரும)
ஆவிபோனவுடல்போ லாச்சுதிந்தவூரொன்று ... ... ... *
அறமும்புகழும்விலங்க- இந்த ... ... ... *
ஐவர்கள்போனவினி யதர்மம்விளையுமென்று ... ... ... *
அறிஞர் மனது கலங்க - அந்தப் ... ... ... ... ... *
பாவிதுரியோதனன் செய்தவினையிதென்று ... ... ... ...*
பலபேருஞ்சொல்லியலம்ப-மண்ணும்புலம்ப ... ... (தரும)

பொது-விருத்தம்.

இத்தரையாளுமன்னர்க் கிராசனாந்திருதராட்ரன் ... ... *
மித்ருபேதத்தினாலே மேவிளவரசைவிட்டு ... ... ... ... *
வைத்தசீர்ப்பாண்டுபுத்ரர் வாரணவதத்துக்கேக ... ... *
மொத்தமாய்க்குடிகள்வந்து முறையிட்டேயழுகின்றாரோ ...*

வசனம்.

கேளும் சபையார்களே அந்தப்படித்திருதராட்டிரமகாராஜன் சூதுமார்க்கமாகப்பாண்டவர்களை வாரணவதத்துக்கு அனுப்புவிக்கப் பாண்டவர்களுங் குந்திதேவியும்வாரணவதத்துக்குப்போகின்றபோது அஸ்தினபுரத்தில் இருக்குங் குடிகள் அனைவரும்நம்மை இரக்ஷிக்கும்படியான துரைகள்போய் விடுகிறார்களேயென்றும் அவர்களுக்குப் பின்பு நம்மை ஆதரிப்பவர்கள் யாரென்றும் பாண்டவர்களிடத்துக்குப் புலம்பிக்கொண்டுவருகிறவிதங்காண்க ... ... ... ... ... ... ... ... ... ... *

குடிகள்-புலம்பல்- தரு.

இ-ம். ஆனந்தபைரவி- ஆதிதாளம்.

எப்படிநாங்களிருப்போம் - ஐயாவினி ... ... ... ... ... *
எவ்விதமாய்த்திரிப்போம் ... ... ... ... *
இப்புவிபுகழ்கொண்ட திருதராட்டிரமன்னன் ... ... ... *
என்னநெஞ்சி லெண்ணினனோ - எதுயோசனை பண்ணினனோ
(எப்படிநாங்களிருப்போம்-ஐயாவினி)

துரியோதனன்கூடதோ-இப்போதுங்கள் ... ... ... ... *
சொல்லெவர்க்குந் தகாதோ ... ... ... ... ... ... *
பரிவாயெங்களைப்பரிபாலனஞ்செய்வதாரோ ... ... ... *
பத்தியாய்மிகப்பரிந்து-உத்தரிப்போமைப்பிரிந்து... (எப்படி)
செங்கோன் முறையுங் கோணுமே-சுயோதனனால் ... ... *
தீமையும் வந்து பூணுமே ... ... ... ... ... ... *
திங்கடோறுமழை செழிக்கவும்பொழியாதே ... ... ... *
செல்வமென்பதுங்குறையுந்-தேவபூசையும்மறையும் (எப்படி)
காதகன்சகுனிசேர்ந்தான்-கூடத்துணையாய்க் ... ... ... *
கன்னனும் வந்து சார்ந்தான் ... ... ... ... ... ... *
ஆதலாலினி யஸ்திநபுர மென்னபாடோ ... ... ... ... *
ஆரறிவாரிந்தமோசம்-ஊர்பிழைப்பதேபிரயாசம்...(எப்படி)

குடிகள்-விருத்தம்.

பூவுலகிலெவர்க்கு மொருதாழ்விலாமற் ... ... ... ... ... *
புகழ்பெறவேகாத்தளித்தீ ரெங்கள்கோவே ... ... *
தேவனெனவருத்த முற்றெங்களுக்குச் ... ... ... ... *
சிந்தைகளிப்புறவிருந்தீ ரிந்நாளெல்லாம் ... ... ... *
மேவுகின்றவிந்நாட்டை விட்டிப்போது ... ... ... ... *
விரைந்துகொடுங் கானகத்தை யடைகின்றீரோ ... ... *
ஏவல்செயும் யாங்களுங்கண் மலர்முகத்தை ... ... ... *
எக்காலமினிக்காணப் போகின்றோமே ... ... ... *

வசனம்.

பாண்டுவின் சிரோமணிகளாகிய தருமதுரைகளே கேளுங்கள் சர்வசனங்களுக்கும் யாதொருதாழ்வும்இல்லாமல் இரட்சித்துக்கொண்டுவந்தீர்கள் எல்லாருக்குந்தெய்வம்நீங்களே அன்றி வேறில்லையென்று நினைத்துக்கொண்டிருக்கும் எங்களைவிட்டு ஐயையோ நீங்கள்வனவாசம்போகின்றீர்களே உங்கள் திருமுகத்தைநாங்கள் எந்தக்காலத்தில் காணப்போகிறோம் சுவாமீ *

தருமராசன்-விருத்தம்.

அஞ்சாதிருங்களீச னருளினாற்சிலதுகாலம் ... ... ... ... *
மஞ்சாரும்புரிசைகொண்ட வாரணாவதத்திற்றங்கி ... ... *

நெஞ்சாரப்பாண்டுவுக்கு நெடியநன்னெறிபைச்செய்து ... *
விஞ்சாருமிந்நாட்டுக்கு மீளவேவருவோங்கண்டீர் ... ... *

வசனம்.

கேளுங்கள் குடிகளே நீங்கள்விருதாவாய் ஏன் விசனப்படு கிறீர்கள் நாங்கள் வாரணாவதத்தில்தங்கி எங்கள்தந்தையாகிய பாண்டுராஜனுக்கு நன்மார்க்கமாகிய திலோதக தர்ப்பணங்களைச் செய்து இன்னஞ் சிறித்துகாலத்தில்மறுபடியும் இவ்விடம் வருவோமேயல்லது அவ்விடத்தில்தானே இருக்கிற நாங்கள் அல்ல ஆகையால் நீங்கள் எதுக்கும் அஞ்சவேண்டாம் சுகமாய்ப் போய்வாருங்கள் குடிகளே ... ... ... ... ... ... ... *

குடிகள்-வசனம்.

அப்படியேபோய் வருகிறோம் சுவாமீ ... ... ... ... *

பொது-வசனம்.

இப்படியாகப் பாண்டவர்களிடத்தில் குடிகள்வந்து விசனப்பட்டுக்கொண்டிருக்க அவர்களுக்குப்பாண்டவர்கள் அபயஸ்தங்கொடுத்து அனுப்பிவிட்டுப் புரோசன மந்திரியுடனேகூடி வாரணாவதத்துக்குப் போகின்றபோது துரியோதனன் சொல்வது காண்க ... ... ... ... ... ... ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

அடுபுலிசேர்வைக்காரா வாரடாவிங்கேவாடா ... ... ... *
திடுதிடென்றோடியங்கே செலும்புரோசனனைக்கண்டு ... *
கடுகிநானழைத்தேனென்று கையுடனழைத்துக்கொண்டு... *
வடுவறநிமைக்குள்ளாக வாயுவேகம்போல்வாடா ... ... *

வசனம்.

ஆரடா அடா உக்ரசேர்வையே அதிசீக்கிரமாய் ஓடி அந்த வாரணாவதத்துக்குப் போகின்ற மந்திரியாகிய புரோசனனைக்கண்டு நான் அழைக்கிறேனென்று கையுடனே அழைத்துக்கொண்டு ஒரு நிமைப்போதிலே வாடா அடா ஏதோ பார்ப்போம் போனையா ஓடு ஓடு ஓடு ஓடு சல்தி சல்தி ... ... ... ... *

சேர்வை-விருத்தம்.

போவதற்கிசைந்துநின்ற புரோசனமந்திரீயுன்னைக் ... ... *
காவலனுஞ்சுயோதனன் கடிதழைத்திடவேசொன்னான் ... *

ஆவலாயோடிக்கேட்டா லாச்சுதில்லாமற்போனால் ... ... *
சாவுநேரிடும்போதே தவறில்லைசொன்னேன்சொன்னேன் *

வசனம்.

கேளும்ஐயாபுரோசனமந்திரீ துரியோதனமகாராஜன் உம்மைத்துரிதமாய் அழைத்துக்கொண்டு வரச்சொன்னார் சீக்கிரமாகவாரும் இப்பொழுதே ஓடிவந்துகேட்டால் ஆச்சுது இல்லாவிட்டால் சிரசாக்கினைநேரிடும் தப்பாது சொன்னேன் சொன்னேன் அப்படி இருக்கிறது அவடத்தில் அவசரம் வாரும் வாரும் சல்தியில்வாரும் ஏதோவந்திரா ... ... ... ... ... *

புரோசனன்-விருத்தம்.

இந்நிலத்தரசேபோற்றி யிறையவன்மைந்தாபோற்றி ... *
டன்னுமந்திரியாயந்தப் பாண்டவருடன்செல்கின்றேன் ... *
மன்னுமைவருமவர்க்கு மாதாவும்பயணமானார் ... ... ... *
என்னையிங்கழைத்ததென்ன விறைவனேயுரைசெய்வாயே ...*

வசனம்.

கேளும் என்ஆண்டவனாகிய துரியோதனமகாராஜனேஉங்களின்பிதாவாகிய திருதராட்டிரமகாராஜன் உத்திரவுப்படிக்குப் பாண்டவர்களுக்கு நானேமந்திரியாய் வாரணாவதத்துக்குக் கூடப்போகிறேன் அந்தப்பாண்டவர்களும் அவர்கள்தாயும் பயணமானார்கள் நானும் போகவேண்டும் என்னை அழைத்தகாரியம் தெரியச்சொல்லும் மகாராஜனே ... ... ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

புகலும்பாண்டவர்களுக்குப் புரோசனாமந்த்ரியாய்நீ ... ... *
வகையுடனிசைந்தாயென்ற வார்த்தையைக்கேட்டபோதே...*
நெகிழுமென்னெஞ்சுக்குள்ளே நினைத்திடுங்காரியங்கள்......*
சகலமுமுடியுமென்று சரீரம்பூரித்தேனப்பா ... ... ... *

வசனம்.

கேளாய்புரோசனா பாண்டவர்களுக்கு நீமந்திரியாய் வாரணாவதத்துக்குக் கூடப்போகிறாயென்கிற சமாசாரங் கேட்டமாத்திரத்தில் ஆகா கா கா இனிமேல் நான்நினைத்தகாரியம் எல்லாம் முடியுமென்று சந்தோஷிப்பட்டு என்சரீரம்பூரித்தேன் எனக்கு

உண்டானதேக புளகிதமான அதிசயத்தைநான் என்னென்று
சொல்வேன் புரோசனா ... ... ... ... ... ... ... *

புரோசனன்-விருத்தம்.

மனத்தினில்வைரம்வைத்து வசப்படுஞ்சமயம்பார்த்து ... *
நினைத்ததைமுடிப்பதற்கு நீயொருத்தனுமேபோதும் ... *
அனைத்துங்கைகூடு நின்றே டடியேனுங்கூடிக்கொண்டால்...*
சனித்தநற்சக்கிமுக்கி தட்டினவிதந்தானையா ... ... ... *

வசனம்.

கேளும்ஐயா துரியோதனமகாராஜனே மனதிலேவைரம்வை
த்துச் சாமபேததான தண்டசதுர்வித உபாயத்தினாலே சத்து
ருக்களைச் சாதிக்கிறத்துக்கு நீர் ஒருத்தருமேபோதும் உம்மு
டனே அடியேனுங் கூடிக்கொண்டால், சக்கிமுக்கித்தட்டினாற்
போலத்தான் அங்கே என்ன இருக்கின்றது ... ... ... ... *

புரோசனன்- விருத்தம்.

தருமனிளவரசான நாளைத்தொட்டுத் ... ... ... ... ... *
தயங்குகின்றவுன துபரி தாபம்பார்த்துக். ... ... ... *
கருதுமுன்றன்மாமன்றன் சமர்த்தும்பார்த்துக் ... ..... *
காரியமேயில்லையெனக் கண்டுகொண்டு ... ... ..... *
பொருவிலவர் மந்திரியர் யெனையனுப்பப் ... ... ... ... *
புகுந்துள்ளே யிதற்குமுடி போட்டேனல்லால்...... *
மருவுமிங்கே யென்றனுக்குக் குறையொன்றுண்டோ ..... *
மற்றவர்பின் போவதனால் வாழ்வொன்றுண்டோ ... *

வசனம்.

கேளும்துரியோதனமகாராஜனே இந்தச்சந்திரகுல சமஸ்த்
தானத்திலே உங்கள் தகப்பனாரிடத்தில் நான் ஒரு மந்திரியாய்
சமயாசமயத்திலே ஒரு புத்தி யுக்திசொல்லப்பட்டவனாய் இரு
ந்தேனே அல்லாமல் நான் செத்துப்போக இல்லையே நல்ல
து உங்களுக்கு வரர்தவிசனமும்வந்ததே ஒருகாலத்திலேயாவ
து என்னைநினைத்திருப்பீர்களா இல்லையே இருக்கட்டும் அந்த
த்தருமராஜனுக்கு இளவரசானநாள்முதல் நீர் படுகிறவிசனமு
ம் வேக்காடும்பார்த்தேன் உங்கள்மாமாசெய்கிற உபாயதந்திர
ங்களிலே இதுவரையிலும் ஒருகாரியமுங்கூடிவரஇல்லை யென்று

ங்கண்டுகொண்டேன் இனிச்சும்மாஇருக்கலாகாதென்று நினைத்தேன் நானே அந்தப்பாண்டவர்களுக்கு மந்திரியாக என்னை அனுப்பும்படியாய் அங்கே உள்ளுக்குள்ளே முடிபோட்டேன் இதைநீர் அறிவீரா நான் இங்கே இருப்பதினாலே குறைச்சலென்ன அவர்கள்பின்னே போவதினாலே லாபமென்ன எனக்கு ஒன்றுமில்லை எல்லாம் உமக்காகத்தான் இத்தனைபாடுபட்டேன் இப்போதும் போகிறேன் ஐயா ... ... ... ... ... *

துரியோதனன்-விருத்தம்.

ஒத்திதுவரைக்குநாமிங் குயிரொன்றுயுடலிரண்டாய் ... ... *
இத்தனையொருமையாக விருந்திடுஞ்சினேகிதத்தை ... ... *
மெத்தவுமெண்ணினேனு னென்றன்மேற்றயவுபண்ணி ... *
உத்தமநீயெனக்கோ ருபகாரஞ்செய்யவேண்டும் ..... ... *

வசனம்.

கேளாய்புரோசனு நீவேறல்லநான்வேறல்லநாம் இதுவரைக்கும்மிருந்த அன்னியொன்னியமாய்ப் பிரியாதசினேகமாய் இருந்தோமே அந்தச்சினேகிதத்தைஎண்ணி எங்கள் சத்துருக்கள் முன்னே நாங்கள் எப்படியாகிலும் முன்னுக்குவரவேண்டுமென்று என்பேரில்தயவுபண்ணி நீ எனக்குஒரு உபகாரஞ்செய்யவேண்டும் புரோசனு ... ... ... ... ... ... *

புரோசனன்-விருத்தம்.

இன்னகாரியமென்றிப்போதெனக்கதைத்தெரியச்சொன்னால் *
உன்னுமுனத்தனைச்செய்தே யுன்றயைபெற்றுக்கொள்வேன் *
என்னமோயாதோவென்றேயெண்ணுதேயென்றுனும் ... *
மன்னவாவுன்வார்த்தைக்கு மறுவார்த்தைசொன்னதுண்டோ *

வசனம்.

கேளும் ஐயா துரியோதனமகாராஜனே இன்னகாரியமென்று மாத்திரம் எனக்குத் தெரியச்சொன்னால் உடனேசெய்து உம்முடையதயவைப் பெற்றுக்கொள்வேன் என்னமோ எதோ என்றுசந்தேகப்படவேண்டாம் எப்போதாகிலும் உம்முடைய வார்த்தைக்குமறுவார்த்தைசொன்னதுஉண்டா இல்லையேதாராளமாய்ச்சொல்லலாஞ் சொல்லுஞ்சுவாமீ ... ... ... ... *

### துரியோதனன்-விருத்தம்.

அரக்குமாளிகையொன்றங்கே யமைத்திடச்செய்தேனீயத் *
தருக்குமபாண்டவரதற்குட் சஞ்சரித்திருக்கச்செய்து ... *
நெருக்கியசமயம்பார்த்து நெருப்பிட்டுக்கொன்றாலிந்தத் *
திரைகடலுலகுமென்றன் செங்கோலுமுனக்கேயீவேன் ... *

### வசனம்.

கேளாய்புரோசனா நீசெய்கின்ற உபகாரம் என்னவென்றால் வாரணாவதத்திலே அரக்கினாலேமாளிகை கட்டுவித்தேன் அந்தப்பாண்டவர்கள் ஐந்துபேரும் அவர்கள்தாயும் அதிலேவாசம்பண்ணும் படியாய்ச்செய்து பின்பு நாங்கள்நேமித்து அனுப்பும்நாளிலே சமயம்பார்த்து நெருப்பைவைத்து அவர்கள்பேர் இல்லாமல் மாத்திரஞ்செய்துபோடவேண்டும் அவ்வளவுசெய்வையேயானால் இந்த உலகமெல்லாம் நீயே ஆளும்படியாகச் செங்கோலை உனக்கேகொடுத்துவிடுகிறேன் புரோசனா.....*

### புரோசனன்-விருத்தம்.

துறையிதுசரியேயுன்றன் சொற்படிக்கறுக்காய்த்தானே ... *
இறைவகேளவர்தம்மை யெவ்விதத்தினிலுங்கொன்று .....*
குறையறநீயெனக்குக் கொடுக்கின்றேனென்றசெங்கோல் *
முறையுடனுனக்கேதந்து மூவுலகாளச்செய்வேன் ... ... *

### வசனம்.

கேளும்என் ஆண்டவனான துரியோதனமகாராஜனே அப்படியே அரக்குமாளிகையில் ஐவரையும் தாயுடனே குடியேறச்செய்து நெருப்பிட்டு அவர்களைக்கொன்று எனக்குக்கொடுக்கிறேனென்றுசொன்ன செங்கோலை உமக்குநானே கொடுத்து இந்தத்திரிலோகமும் நீரே ஒருகுடையில் ஆளும்படியாகச்செய்கின்றேன்பாரும் என்திராணியை மகாராஜனே நான் போகின்றேன் ... ... ... ... ... ... ... *

### பாண்டவர்களிடத்துக்கு-விதுரன்வரும்

### பொது-விருத்தம்.

அத்திருதராட்டிரனுள்ளேசொன்னசூதும் ... ... ... *
ஐவரைவாரணவதத்துக்கனுப்புஞ்சூதும் ... ... ... *

புத்திரக்குமாளிகையைச்செய்ததும் ... ... ... *
புரோசனனைமந்திரியாயனுப்புங்கதும் ... ... *
இத்தனையும்பாண்டவர்களறியாரென்றே ... ... ... *
இணையில்லாவில்விதுரனிதயத்தெண்ணிப் ... ... *
புத்திரரைவழிவிடுத்தங்கனுப்புவான்போல் ... ... ... *
புல்லுவானவர்க்குவகைசொல்லுவானே ... ... ... *

வசனம்.

கேளுஞ்சபையாரே அந்தத்திருதராட்டிரமகாராஜன் ரகசியமாய்த்துரியோதனன்முதலானவர்களுடனேபேசியதும்வாரணாவதத்துக்குப் பாண்டவர்களுடனே கூடப்போகின்றமந்திரியாகிய புரோசனனைத் துரியோதனன் ரகசியமாய் அழைத்துப் பாண்டவர்களைக் கொல்லும்படியாக யோசனைசெய்ததும் மேலும் அரக்கினாலேமாளிகை கூடாகக்கட்டுவித்ததும் புரோசனன் மாரீசஞ்செய்யும்படிக்கு மந்திரியாகப்போகின்றதும் இவைகளெல்லாம் பாண்டவர்களுக்குத் தெரியாதென்றுதானே பாண்டவர்களுக்கு ரகசியமாகச்சொல்ல வழிவிடவருகிறவனைப்போல விதுரமகாராஜன்வந்துபாண்டவர்களைத்தழுவிக்கொண்டு அவர்களுக்கு வகைசொல்வதுகாண்க ... ... ... ... ... *

பாண்டவர்-விருத்தம்.

எள்ளரும்புனிதாபோற்றி யெம்முயிர்க்குயிரேபோற்றி ... *
தெள்ளுநன்னெறியுணர்ந்த சிற்றப்பாபோற்றிபோற்றி ... *
வள்ளலாரிருக்குந்தெய்வ வாரணாவதத்துக்கேக ... ... *
விள்ளவேயெங்களுக்கு விடையதுதருகுவீரே ... ... ... *

விதுரன்- விருத்தம்.

வள்ளலின்மைந்தரோ நீர் வாரணாவதம்போய்ச்சேர்ந்தால் ... *
பொள்ளெனப்பகைவராலே பொல்லாங்குவிளைவதுண்மை *
உள்ளதுசொன்னேனித்தை யுள்ளத்தில்வைத்துமேலுங் ... *
கள்ளரும்புரோசனன்மேற் கண்ணுண்டாயிருந்திடீரே ... *

வசனம்.

கேளும்மக்களே நீங்கள் வாரணாவதத்துக்குப் போய்ச்சேர்ந்தால் சத்துருக்களாயிருக்கின்ற அந்தத்துரியோதனன் கர்ண

னன் சகுனி துச்சாதனன் என்பவர்களாலே மிகுந்தபொல்லா ங்கு விளையும்என்பதற்குச் சந்தேகமில்லை அது உண்மைதான் ஆகையினாலே நீங்கள் அதிகசாக்கிரதையாக இருக்கவேண்டும் மேலும் உங்கள் கண்ணும்கருத்தும் எங்கே இருக்கவேண்டும் என்றால் இப்போது உங்களுக்குமந்திரியாய் ஏற்பட்டுவருகிற னேபுரோசனன்அவன்பேரில்இருக்கவேண்டியது ஆதலால்அத ற்குண்டாகிய சாக்கிரதையாய் இருங்கள் மக்களே ... ... *

பாண்டவர்-வசனம்.

அருமையாய் எங்களை எப்போதும் ஆதரிக்கப்பட்ட தரும குணத்தையுடைய சிறியதந்தையேகேளும் ஸ்ரீமன் நாராயண னுடையகிருபை இருக்க உம்முடைய திருவருள் மிகுந்திருக்க அந்தச்சத்துருக்களாலே வரப்பட்ட பொல்லாங்குகள் எங்களை என்னசெய்யும் எப்படிப்பட்ட பொல்லாங்குகளும் சூரியனைக் கண்டபனியைப்போல நீங்கிப்போகாதா சிறியதந்தையே... *

விதுரன்-வசனம்.

அப்பாமகனே-என்சிறியதந்தையே-இப்படிவா-வந்தேன் ஐயா (ரகசியம்) சாக்கிரதை சாக்கிரதை மகனே ... ... *

புரோசனன்-விருத்தம்.

அருளுள்ளதருமபுத்ரா வரசிளங்கோவேபோற்றி ... ... *
வருதிறைக்கங்கையீது வாரணாவதவூரீது ... ... ... *
மருவியகுழலோர்பாகன் வாழும்பொற்கோயிலீது ... *
திருவளர்கோயிலிற்போய்ச் சிவதரிசனஞ்செய்வோமே ... *

வசனம்.

கேளும் என்ஆண்டவனாகிய தருமபுத்திரமகாராஜனே இது தான் கங்காநதி-ஆகாதா இதுதானாபுரோசனா கங்காநதி-ஆம்சு வாமீ இதுதான் வாரணாவதமென்கிறபட்டணம்-அப்படியா பு ரோசனா இதுதானா வாரணாவதமென்கிறபட்டணம்-ஆம்சுவாமீ இதோகோபுரந்தெரிகின்றதே இதுதான்சிவாலயம் -அப்படியா ஆம் அந்தச்சிவாலயத்துக்குப்போய்ச்சிவதரிசனஞ்செய்வோம் வாரும்சுவாமீ ... ... ... ... ... ... ... *

தருமராசன்-விருத்தம்.

அரசியலனைத்துந்தேர்ந்த ... ... ... *
துரிசிலாச்சுகுணமந்திரீ ... ... ... *
வரிசையாய்மகேசன்றன்னைத் ... ... *
தரிசனஞ்செய்வோம்வாராய் ... ... *

வசனம்.

அப்படியே சிவதரிசனஞ் செய்வோம் வாராய் புரோசனு *

புரோசனன்-வசனம்.

அப்படியே செய்வோம் வாரும் சுவாமீ ... ... ... *

தருமராசன்-போற்றி-தேவாரம்.

கங்கைவேணியனேபோற்றி கறைமிடற்றவனேபோற்றி ... *
மங்கையோர்பாகாபோற்றி மறையினுட்பொருளேபோற்றி *
தங்குவெள்விடையாய்போற்றி சச்சிதானந்தாபோற்றி ... *
துங்கமான்மழுவையேந்துஞ் சோதியேபோற்றிபோற்றி... *

பீமசேனன்-போற்றி-தேவாரம்.

பூரணுபோற்றிபோற்றி புராதனுபோற்றிபோற்றி ... *
ஆரணுபோற்றிபோற்றி யமலனேபோற்றிபோற்றி ... *
காரணுபோற்றிபோற்றி கண்ணுதற்பொருளேபோற்றி ... *
வாரணுவதத்தின்மேவும் வள்ளலேபோற்றிபோற்றி... ... *

அர்ச்சுனன்-போற்றி-தேவாரம்.

அரகராபோற்றிபோற்றி யனுதியேபோற்றிபோற்றி ... *
புரகராபோற்றிபோற்றி பொருவின்மாமணியேபோற்றி *
விரகரானவர்கணெஞ்சின் மேவொணுதவனேபோற்றி ... *
வரகராம்புயனேபோற்றி வாரணுவதனேபோற்றி ... ... *

நகுலன்-போற்றி-தேவாரம்.

முக்கணற்புதனேபோற்றி முத்தர்நாயகனேபோற்றி ... *
அக்கினிச்சடையாய்போற்றி யருமழுவிடையாய்போற்றி *
இக்குவில்லியையெரித்த வெங்கள்நாயகனேபோற்றி ... *
தக்கன்வேள்வியைச்சிதைத்த சம்புவேபோற்றிபோற்றி *

சகாதேவன்-போற்றி-தேவாரம்.

மூலமாய்நடுவாயீறாய் முத்தியாய்முத்தர்கொண்ட ... *
கோலமாய்க்குணங்கடந்து குணங்கடந்தவற்றின்மேலாம் *

ஓலமாயெங்குந்தானாய்ச் சிதாகாசவெளியாய்நின்ற ... ... ❋
பாலநேத்திரனேயுன்றன் பதாம்புயம்போற்றிபோற்றி ... ❋

புரோசனன்-போற்றி-தேவாரம்.

தந்திரகபடவஞ்சச் சதியுஞ்சர்ப்பனையுமிக்க ... ... ❋
இந்திரசாலமுமமிங் கெவ்வையுநிர்மித்தாய்போற்றி ... ... ❋
முந்துமாலயனுங்காணா முடிவிலாதவனேபோற்றி ... ❋
ஒன்றனெண்ணத்துக்கேற்ற வீசனேபோற்றிபோற்றி ... ❋

பொது-விருத்தம்.

அந்தமிகும்வாரணா வதத்துக்கேகி ... ... ... ... ❋
அரியசதுமறைமுடிவி லிருக்குமீசன் ... ... ❋
சந்தவடிவணங்கிமிகத் தொழுதுபோற்றிச் ... ... ... ❋
சதிசெயமேவும்புரோ சனனுமற்றக் ... ... ... ❋
கந்துகமாமதகரிதேர் காலாளென்னக் ... ... ... ❋
கருதியநால்வகையமர்ந்த சேனையோடும் ... ... ❋
விந்தையுளவரக்குமா ளிகையிலவர் ... ... ... ... ❋
மேவியவரண்மனையிற் குடிகொண்டாரே ... ... ❋

வசனம்.

அஃதெப்படியென்றால் பாண்டவர்களும் புரோசனனும் வா
ரணாவதத்தில் ஈஸ்வரனைத்தியானஞ்செய்து பின்புகுதிரைலகட்
டிஇருக்கின்ற மாளிகையில்வந்துசேர்ந்து குடிகொண்டார்கள்
இனி அப்பால்நடக்கும் வரலாறுகாண்க ... ... ... ❋

புரோசனன்- விருத்தம்.

நிலையுள்ளபடைத்தலைவா ரதத்தையெல்லாம் ... ... ... ❋
நிரையாய்க்கோயிலுக்கருகே நிறுத்தச்சொல்வாய் ... ❋
மலையனையவானைகளை மேற்புறத்தில் ... ... ... ❋
வகுத்தருகேபந்தியிட்டு வைக்கச்சொல்வாய் ... ... ❋
கலினமிகுகுதிரைகளை யிதற்கடுத்த ... ... ... ... ❋
கங்கையாற்றின்கரையிற் கட்டச்சொல்வாய் ... ... ❋
இலகியகாலாட்படையை யூருக்கப்பால் ... ... ... ❋
இசைந்தபலதோப்புகளி லிறங்கச்சொல்வாய் ... ❋

வசனம்.

கேளாய் படைத்தலைவா ரதங்களைஎல்லாம் கோயில்மதிலுக்

ளு அருகேநிறுத்தச்சொல்வாய் ஆனைகளெல்லாம் ஊருக்குமே லண்டை அணியாகக்கட்டச்சொல்வாய்புரவிகளெல்லாம் கங்கா நதிதீரத்தில் கட்டச்சொல்வாய் காலாள்களெல்லாம் குளிர்ச்சி பொருந்தியதோப்புகளிலேஇறங்கச்சொல்வாய்படைத்தலைவா.

படைத்தலைவன்—வசனம்.

அப்படியே செய்விக்கிறேன் ஐயா புரோசனமந்திரீ......*

புரோசனன்—விருத்தம்.

கருதரியபாண்டவர்க ளரண்மனையைச்சுற்றிக் ... ... ... *
காவலிரண்டாயிரம்பேர் காக்கச்சொல்வாய் ... ... *
நிருபர்களுக்கேவல்செய்யச் சிலபேர்தம்மை ... ... ... *
நீங்காமல்கைகட்டி நிற்கச்சொல்வாய் ... ... ... *
வருமரசர்திறைகொண்டு காணவந்தால் ... ... ... *
மந்திரிவரவேண்டுமென்று மறிக்கச்சொல்வாய் ... *
திருமருவுஞ்செல்வனாவ னெதைக்கேட்டாலுஞ் ... ... *
சீக்கிரமாயெனக்குவந்து தெரியச்சொல்வாய் ... ... *

வசனம்.

கேளாய்படைத்தலைவா நம்முடைய ஆண்டவர்களாகிய பாண்டவர்களுடைய அரண்மனையைச்சுற்றி இரண்டாயிரம்பேர் காவல்காக்கவும் சிலபேர்கள் ஏவல்செய்யவும் சிலபேர்கள் கைகட்டிக்கொண்டு எச்சரிக்கைபண்ணவுந்திட்டஞ்செய்வாய் மேலும் ராஜாக்கள்பகுதிகொண்டு வந்தார்களானால்புரோசனமந்திரிவரவேண்டுமென்று அவ்விடம் போகாமல் ஆக்ஷேபம் பண்ணச்சொல்வாய் மேலும் ஆண்டவர்களாகிய பாண்டவர்கள் எதைக்கேட்டாலும்எனக்குச்சந்நிதியில்வந்துசொல்வாய்போ படைத்தலைவா. ... ... ... ... ... ... ... ... *

புரோசனன்—விருத்தம்

நீடியகுருகுலத்து நிறைதவப்பயனேபோற்றி ... ... ... *
வாடியபயிர்க்குப்பெய்யு மழையெனவருவோய்போற்றி *
தேடியதெய்வந்தானே சித்தித்தாற்போலேவந்து ... ... *
கூடியிங்கெனையாட்கொண்ட கொற்றவாபோற்றிபோற்றி *

வசனம்.

இந்தக்குருகுலசமஸ்தானத்திலே நிறைந்ததவத்தையுடையவ

ராகியும்வாடியிருக்கும்பயிருக்குமழைபெய்துரக்ஷிக்கிறதுபோலவுலகத்தைரக்ஷிக்கின்றவராகியுமஅரியதவத்தினாலும்அறியவொண்ணாத தெய்வம் தேடிவந்தது போலவந்து என்னை ஆட்கொண்டவராகியும்விளங்குகின்றராஜாதிராஜனே சரணம்சரணம் ❋

தருமராசன்-மட்டு-விருத்தம்.

மன்னருளங்கண்மகிழ்ந்திட ... ... ... ❋
நன்னயநீதிநவின்றிடும் ... ... ... ❋
பொன்னனவமிஞ்சுபுரோசனா ... ... ... ❋
என்னபணிந்ததெழுந்திராய் ... ... ... ❋

வசனம்.

ஏகசக்ராதிபதிகளெல்லாம் ஆச்சரியப்படும்படியாகப்புத்தியுக்திசொல்லப்பட்ட மந்திரீபுரோசனா நீ இப்போது வினவிப்பணிந்தகாரியம்என்ன எழுந்திரு எழுந்திருஅப்பா புரோசனா.

புரோசனன்-விருத்தம்.

இந்தநற்சரீரந்தன்னை யெடுத்தநாண்முதலாயென்றன் ... ❋
மந்திரித்தனத்துக்கேற்ற மன்னரில்லாமையாலே ... ... ❋
சந்ததமனமெலிந்து சஞ்சலப்பட்டிருந்தேன் ... ... ... ❋
உன்றனையடைந்தபின்பென் றுள்ளமுங்குளிர்ந்ததையா ❋

வசனம்.

கேளும்என்ஆண்டவனான தருமபுத்திரமகாராஜனே நான்பிறந்து இதுவரைக்கும் இந்தச்சமஸ்தானத்திலேவெகுநாளாய் மந்திரியாயிருக்கிறேன் இருந்தாலும் என்னுடைய,சாமர்த்தியத்துக்கேற்ற ராஜாக்களில்லாமற் போனபடியினாலே அதுவே சஞ்சலமாய்ப் புலியைக்கட்டிப் போனிலே போட்டாற்போல மூலைக்குமுட்டாய் விழுந்துகிடந்தேன் இப்போது தேவரீரை அடுத்தபிறகல்லவோ என்மனதுகுளிர்ந்தது சுவாமீ ... ❋

தருமராசன்-விருத்தம்.

ஓதுமிவ்வுலகமெல்லா மொருகுடையினிலாண்டாலும் ... ❋
தீதுநன்றிரண்டுமின்னந் தெரியாதசிறுவர்நாங்கள் ... ❋
ஆதலால்செங்கோல்வண்மை யனைத்துநீயறிவாயிங்கே ... ❋
யாதொருகுறைவந்தாலு மெமக்கல்லவுனக்கேகண்டாய் ... ❋

வசனம்.

மந்திரீபுரோசனா நாங்கள் இந்த உலகமெல்லாம் ஒருகுடையில் ஆளுகிறவர்களாய் இருந்தாலும்இது நன்மைஎன்றும் இது தீமையென்றும் இவைஇரண்டும்அறியாதசிறுபிள்ளைகள் நீயோவென்றால் எப்போதும் இராஜசமஸ்தானத்திலே இருந்துசகலமுந்தெரிந்துஇருக்கப்பட்டமந்திரிஆகையாலே இனிஇங்கேநடக்கப்போகிற அரசாட்சியிலேயாதொருநலம்வந்தாலும் இளப்பம்வந்தாலும் உனக்கே அல்லாமல் அது எங்களுக்கு அல்ல அதைஅறிந்துநடந்து கொள்ளவேண்டும் புரோசனா... .....*

புரோசனன்-விருத்தம்.

ஒன்னலர்பகையைநீக்கி யுலகையுன்வசப்படுத்திச் ... ... *
சின்னமில்லாமற்செங்கோல் செலுத்துவித்திடவெனக்குச்...*
சொன்னவுன்பெரியதந்தை சொல்லைநான்மறந்தேனானால் *
மன்னுமென்விழிதெரிந்து வழிநடப்பேனோஸ்வாமீ ... *

வசனம்.

பாண்டவர்கள் இன்னஞ் சிறுபிள்ளைகள் ஆனபடியினாலே மந்திரீபுரோசனா நீயேமுன்னின்று சத்துருக்களைச் செயம்பண்ணி உலகமெல்லாந் தருமபுத்திரன்சொல்வழியே நடக்கும்படியாய்ச்செய்யவேண்டும்என்று உங்கள்பெரியதகப்பனாராகிய திருதராட்டிரமகாராஜன் என்னுடனே சொன்னசொல்லை நான் மறந்துபோவேனா அப்படி நான்மறந்து போவேனேயானால் நான்கண்தெரிந்து வழிநடப்பேனா சுவாமீ ... ... ... *

தருமராசன்-விருத்தம்.

ஆதலாலரசாட்சியை ......*
தீதிலாதுசெலுத்தநீ ... ...*
ஏதுவாகவிருப்பதே ... *
போதநன்றுபுரோசனா...*

வசனம்.

கேளாய் புரோசனா எவ்விதத்தில் ஆனாலும் என்னுடைய அரசாட்சியில் ஒருபழுதுவராமல் நீசாக்கிரதையாய் நடப்பிக்கிறதேபிரதானம் ... ... ... ... ... ... ... *

## புரோசனன்-விருத்தம்.

ஆண்டவனீயேயானு லடியவனுமேனயானால் ... ... ... *
ஈண்டுலகெல்லாம்வந்து னிணையடிதொழுவதானால் ... *
தாண்டியவென்சொல்லுக்குத் தடங்கல்சொல்லாமலேநீ ... *
தூண்டு துசெங்கோலென்றன் சொல்வழிநடத்தல்வேண்டும் *

### வசனம்.

கேளும் ராஜாதிராஜனான தருமபுத்திரமகாராஜனே நீர் என்னுடைய ஆண்டவனேயானால்உமக்குநான்அடிமையாய் இருக்கிறதுமெய்யேயானால் மேலும் இந்தஉலகமெல்லாம் உன்னுடைய ஆணையாகிய ஆக்கினைக்குள்அடங்கிச் சரணாகதிஎன்றுவணங்கி நடக்கவேண்டுமேயானால் தேவரீர் பெரியமனதுபண்ணவேண்டும் அது என்னவென்றால் என்சொல்லுக்குத் தடங்கல்சொல்லாமல் நான் எந்தப்படிச்சொல்லுகிறேனோ அந்தப்படிக்கு நீர் ராஜ்யபரிபாலனம் பண்ணவேண்டும் என் ஆண்டவனே ... *

## தருமராசன்- விருத்தம்.

பிழையில்லாவேந்தனெங்கள் பெரியப்பனருகிருந்து ... *
பழகியெல்லாந்தெரிந்த பழையமந்திரிநீகண்டாய் ... ... *
தழுவியவுன்சொல்லுக்குத் தடங்கலுஞ்சொல்லுவேனோ ... *
செழியுமுன்சொற்படிக்கே செங்கோலைச்செலுத்துவேனே *

### வசனம்.

கேளாய்புரோசனா எங்கள் பெரியதகப்பனாகிய திருதராட்டிரமகாராஜனிடத்தில்இருந்து எல்லாம்பழகித் தெரிந்துஇருக்கப்பட்ட பிரதான மந்திரி நீஆகையால் உன்சொல்லுக்குத்தடங்கல்சொல்லுவேனா உன்சொற்படியே நானும் செங்கோலைச் செலுத்துவேன் புரோசனா ... ... ... ... ... ... *

## பொது-வசனம்.

இந்தப்படித்தருமபுத்திர மகாராஜ னிடத்திற்பேசிய புரோசனன் வேறேஒரு ஏகாந்தஸ்தலத்துக்குவந்து ஓலை எழுதிவசந்தன்கையில்கொடுத்துத் துரியோதனமகாராஜனுக்கு அனுப்புவிக்கிற விதங்காண்க ... ... ... ... ... ... *

## புரோசனன்-துரியோதனனுக்கு-எழுதும்- விருத்தம்.

### இ-ம். தோடி.

செயசெய ஸ்ரீமன் மகாமண்டலேஸ்வரன்
    திக்குவிசயப்ரதாபன்
திறல்கொண்ட நவகண்டசண்டப்ரசண்டசய
    சக்ரபரிபாலனான
தேவரீரொங்கதுரியோதனமகாராஜன்
    திவ்யதிருவடிகளுக்குச்
சிறியன்புரோசனன் றிக்குநோக்கிக்கோடி
    தெண்டனிட்டெழுதுமோலை
வயமிகும்பஞ்சபாண்டவர்களையுபாயமாய்
    வகையுடன்கொண்டுவந்து
மரணயோகங்கொண்டபொல்லாததாளிலே
    வாரணவதத்தில்விட்டேன்
மற்றுமவர்நான்சொன்னசொற்படிநடக்கவென்
    வலையினில்வசப்படுத்தி
வளமாயரக்குமாளிகையிலிரவும்பகலு
    மகிழ்வுடனிருக்கவைத்தேன்
அயலொருவரறியாமனாமிருவருஞ்செய்த
    ஆலோசனைப்படிக்கு
அதிகசீக்கிரமாய்நினைத்தகாரியமினி
    அகத்திபமுடிக்கவேண்டும்
ஆகையாலினிமேனடக்கவேண்டியசெயலும்
    அனல்வைக்குநாளுமுங்கள்
அம்மானுடன்பேசிவிபரமாயெழுதியென்
    அண்டைக்கனுப்புவித்தால்
இயலுளரக்குமாளிகையைநீறாக்கியுன்
    எதிரிகளைநாசமாக்கி
இவ்வுலகமுழுதுமுன்வசமாக்கியுன்றனை
    ராஜாதிராஜனாக்கி
இனிமேனமக்கொருவரெதிரில்லை நிகரில்லை
    இகலில்லையென்பதாக்கி

இறைவனேபிறகுன்முகத்துமுன்வருகுவேன் ... ... *
எனதுவிண்ணப்பமிதுவே ... ... ... ... *

புரோசனன் - விருத்தம்.

உறையுநன்னிபுணவசந்தனேயிந்த ... ... *
வோலையைரகசியமாக ... ... ... *
இறையவன்றுரியோதனமகாராச ..... ... *
னிடத்தினிற்கொண்டுபோயங்கே ... *
அறைதருவிதுரன்பீஷ்மன்மற்றவர்க ... ... *
ளாருமில்லாமலேபார்த்துத் ... ... *
திறமையிற்கொடுத்துத்தருமறுசேதி ... ... *
சீக்கிரங்கொண்டுநீவாராய் ... ... ... *

வசனம்.

கேளாய் என் உயிர்க்கு உயிராய் இருக்கப்பட்ட வசந்தனே இந்த ஓலையை ரகசியமாய்த் துரியோதன மகாராஜ னிடத்துக் குக்கொண்டுபோய் அங்கேவிதுரன் பீஷ்மன் துரோணன் முத லானபேர்கள் இல்லாமல்பார்த்து இந்த ஓலையைக்கொடுத்து ம றுசேதி சீக்கிரமாய்க்கொண்டுவந்தால் உனக்குச்சொல்லவேண் டுமா சகலமும் உன்னதுதான் வசந்தா ... ... ... *

வசந்தன் - விருத்தம்.

மீன்குஞ்சுதனக்குநீச்சல் வேங்கைக்குட்டிக்குப்பாச்சல் *
ஊன்கெஞ்சுநரிக்குபாய மொருவர்கற்பித்ததுண்டோ ... *
ஏன்கொஞ்சியெனக்குச்சும்மா வெத்துகள்சொல்லுகின்றாய் *
நான்கொஞ்சக்காரனல்ல நடத்தையிற்காண்பாயையா ... *

வசனம்.

கேளும்ஐயா புரோசனமந்திரீ மீன்குஞ்சுக்கு நீச்சலும் வே ங்கைக்குட்டிக்குப்பாச்சலும் நரிக்குஉபாயமும் ஒருவர்கற்பித் துக்கொடுத்ததுண்டா அப்படிப்போல நான் இட்ட பேருக்கு உண்டேபிச்சை எனக்கு இத்தனை தூரம் சொல்லிக்கொடுக்கவே ண்டுமா நான் என்னகொஞ்சக்காரனு நல்லது இனிமேல்நடக் கும் காரியங்களிலே தெரியவருகின்றது பாரும் ஏன்திராணியையையா ... ... ... ... ... ... *

புரோசனன்-விருத்தம்.

அ ப் ப டி ய ா ஞ ல் ... ... ... *
செ ப் பி ய ப டி யே ... ... ... *
வெ ா ப் பு ட ன் செ ன் று ... ... ... *
கொ ப் பெ ன வ் ா ர ா ய் ..... ... *

வசனம்.

அடாவ்சந்தா நீசீக்கிரமாகப்போய் மறுசமாச்சாரம்கொண் டுவாடா வசந்தா ஓடு ஓடு சல்தி ... ... ... ... ... *

பொது-விருத்தம்.

வசந்தனையனுப்பிவிட்டு மந்திரிபுரோசனன்றான் ... ... *
இசைந்தநற்றிருதராட்டிர விறையவன்சமூகத்துக்கு ... *
ரசகுளிகைக்கொப்பான ராயசக்காரனைக்கொண் ... *
டிசைமன்னர்களிப்பதாக விண்ணப்பமெழுதுவானே ... ... *

வசனம்.

அஃதெப்படி என்றால் மந்திரியாகியபுரோசனன் துரியோ தனமகாராஜனிடத்துக்கு வசந்தன்கையில் ஓலை எழுதி அனுப் பினபிறகு திருதராட்டிரன் மெச்சும்படியாக ராயசக்காரனைக் கொண்டு விண்ணப்பம் எழுதும் படிக்குச்சொல்வதுகாண்க *

புரோசனன்-விருத்தம்.

நேயமாய்ச்சொன்னசேதி நிகழ்த்துமுன்னெழுதவல்ல ... *
ராயசக்காராகேளாய் ராஜாதிராஜனை ... ... ... *
தூயதோர்திருதராட்ர துரந்தரன்சமூகத்துக்குத் ... ... *
தீயசொற்பழுதில்லாமற் றிகழோலையெழுதுவாயே ... ... *

வசனம்.

கேளாய்ராயசக்காரா ராஜாதிராஜனை திருதராட்டிரமகாரா ஜன் சமூகத்துக்கு ஒரு ஓலை எழுதும்பிள்ளாய் ... ... ... *

ராயசக்காரன்-வசனம்.

கேளும்மந்திரீ உங்களுடைய உத்திரவின்படியே ஓலையெழுது கிறேன்ஐயா ... ... ... ... ... ... ... *

புரோசனன்-சொல்லியெழுதுவிக்கும்-சீட்டுக்கவி.

மங்களம்ஸ்ரீமன் மகாராஜராஜமார்த்தாண்டவுக்ரதுார்த்தண்டன் வருநவகண்டவகண்டபூச்சக்ரமதிபதிதிருதராட்டேந்த்ரன்...*

செங்கழலணிந்ததிருவடிகளுக்குச் சிறியன்புரோசனன் றீர்க்க ✻
தெண்டனிட்டெழுதிக் கொண்டவிண்ணப்பந் திகழோலைவிபர
[மென்னென்றால் ✻
பங்குனிமாதமுரோகணிபூர்வபக்ஷமஷ்டமிசுபதினத்தில் ... ✻
பஞ்சபாண்டவருந் தாயுமற்றவரும் பகரும்வாரணவதஞ்சேர்
[ந்தோம் ✻
இங்குநின்மைந்த ரிருப்பதற்குரித்தா யிசைந்தவோரரண்மனை
[கட்ட ✻
எண்ணினைதற்குத்தடங்கலில்லாமலினிதருள் புரிந்தனுப்புக
[வே.

ராயசக்காரன்–வசனம்.

அப்படியேதங்கள்உத்திரவின்படியேஎழுதிஆச்சுதுசுவாமீ ✻

புரோசனன்–வசனம்.

ஆனால் அதை ஒருதரம் வாசியும் பிள்ளாய் ... ... ✻

ராயசக்காரன்–வசனம்.

அப்படியே வாசிக்கிறேன் சுவாமீ ... ..... ... ... ✻

பொது–வசனம்.

கேளுஞ்சபையாரே ராயசக்காரன்வாசிக்க அதைக்கேட்டுப் புரோசனன் சொல்வதுகாண்க ... ... ... ... ✻

புரோசனன்–வசனம்.

ஆனால் அதற்குச் சந்திரிகம் போடும் பிள்ளாய் ... ✻

ராயசக்காரன்– வசனம்.

அப்படியே தயாராச்சுது சுவாமீ ... ... ... ✻

புரோசனன்–விருத்தம்.

முன்னுறைசேர்வைக்காரா மொழியுமிவ்விண்ணப்பத்தை ... ✻
மன்னியதிருதராட்டிர மகிபதிசமுகத்துக்குத் ... ... ... ✻
தன்னிலையுடன்கொடுத்துத் தருமமுஞ்சேதிகொண்டு ... ... ✻
உன்னரும்வாயுவேக மாகவேயோடிவாராய் ... ... ✻

வசனம்.

கேளாய் சேர்வைக்காரா இந்த விண்ணப்ப சந்திரிகையைராஜாதிராஜனான திருதராட்டிரமகாராஜனுக்குக்கொடுத்துமறுசேதிவாங்கிக்கொண்டு அதிசீக்கிரமாய் வாயோ ... ... ✻

சேர்வைக்காரன்-விருத்தம்.

அடுத்தமன்னராருகினன்னீதியை ... ... ... ... *
எடுத்துக்காட்டி யிசைத்திடுமந்திரியே ... ... ... *
தொடுத்துச்சொன்னநின் சொற்படியேயிதைக் ... ... ... *
கொடுத்துச்சேதியைக் கொண்டுவருகிறேன் ... ... *

வசனம்.

அப்படியேகொடுத்துமறுசேதி வாங்கிக்கொண்டு வருகிறேன் ஐயா ... ... ... ... ... ... *

புரோசனன்-வசனம்.

ஆனால்சல்திசல்தியில் சமாசாரம்கொண்டு வரவேண்டும்ஓடு ஓடு *

வசந்தன் - தரு.

இ-ம். காம்போதி - ஆதிதாளம்.

வசந்தன்வந்தானே வெகுவிசித்ர வசந்தன்வந்தானே ... *
இசைந்தபுரோசனனீந்தநிருபங்கொண்டுசென்று ... ... *
இலகுந்துரியோதனனிடத்திற்கொடுக்கவென்று ...(வசந்தன்)
சென்னிமுடியிற்செகதாடுபளபளென்னத் ... ... ... *
திகழ்நெத்தியிற்றரித்ததிலதந்தளதளென்ன ... ... *
நன்னயமார்பினிலணியும்பணிகள்மின்ன ... ... ... *
நாணயமலர்க்கையிற் பிடித்தபட்டாவுமின்ன ... ... *
தன்னுடமீசைமுறுக்கி- உன்னுங்கச்சையிறுக்கி ... ... *
பன்னுமொழிகருக்கித்- துன்னுங்கிடியுறுக்கிப் ... ... *
பார்க்கு ளடங்காச் சிங்கக் குட்டி ... ... ... ... *
நோக்க மிகுந்துள தங்கக் கட்டி ... (வசந்தன்வந்தானே)

வசந்தன்-விருத்தம்.

செயசெயபோற்றியெங்கள் செயசக்ரவர்த்திபோற்றி...... *
துயரறவுன்றனெண்ணந் துறுக்கினிற்பலிக்கும்போற்றி ... *
இயல்புரோசனனுமந்த்ரி யென்கையிலோலைதந்து ... ... *
அயலறியாமலிப்போ தனுப்பினார்போற்றிபோற்றி ... *

துரியோதனன்-விருத்தம்.

வண்ணவிற்கன்னசேதி வாக்காணேனென்றுநெஞ்சில் ... *
எண்ணினேனிவனும்வந்தா னிவன் வயதாயிரங்காண் ... *

புண்ணியபுருஷனந்தப் புரோசனனனுப்புவித்த ... ... *
என்னருமோலைதன்னை யெடுத்துநீபடித்திடாயே ... *

வசனம்.

ஆகா கா அண்ணா கர்ன்னராஜனே இன்னம் ஒருசேதியும் வரக்காணோமென்று இப்போது தான்நினைத்தேன் - அடடா - ஏகேகே இவனும்வந்துவிட்டான் இவனுக்குவயசு சரியாய்ஆயிரமென்று சொல்லலாம் நல்லது அந்தப்புண்ணிய புருஷனான புரோசனன் அனுப்புவித்த ஓலையைக் கர்ன்னராஜனே நீரேபடிக்கவேண்டும் இந்தாரும் எடுத்துப்படியும் பார்ப்போம் ... *

பொது-வசனம்.

கேளும் சபையாரே இந்தப்படி அதிசயப்பட்ட துரியோதனமகாராஜன் வசந்தன்கொண்டுவந்த ஓலையைவாங்கிக் கர்ன்னராஜன்கையில்கொடுத்தான் அதைவாங்கி அவன்படித்துக்காட்ட அதில்எழுதியிருந்த சங்கதிகளைக்கேட்டமாத்திரத்தில் மிகவும்அதிசயப்பட்டு அப்பொழுதேபாண்டவர்கள் அழிந்துபோய் சமஸ்த சாம்ப்ராஜ்யங்களும்தனக்கே ஆனதுபோல அதிசந்தோஷங்கொண்டு புளகாங்கித பரனாகிச்சொல்வதுகாண்க ...*

துரியோதனன்-விருத்தம்.

வித்தையில்விதரணத்தில் விசேஷத்தின்மித்ருபேத ... ... *
சத்தியில்சமத்துப்பேசுஞ் சாதுரியத்தினல்ல ... ... *
உத்தியிலுபசாரத்தி லுபாயத்திலுசிதமான ... ... *
புத்தியில்புரோசனன்போல் புருஷரும்புவியிலுண்டோ *

வசனம்.

ஆகா கா ஓய்சகுனிமாமா அண்ணாகர்ன்னராஜனே தம்பீ துச்சாதனா ஓகோ கோ என்னஆச்சரியம் இது வித்தையிலேயும் விதரணத்திலேயும் மித்துருபேதஞ் செய்யப்பட்ட சாகசத்திலேயும் சமர்த்திலேயும்உபசாரத்திலேயும் உபாயத்திலேயும் சமய உசிதமானபுத்தியிலேயும் நம்முடைய புரோசனனைப்போலும்ஆராகிலும் இந்தப்பூமியிலே இருப்பார்களா ஆகா கா சபாசு அவனல்லவோஆண்பிள்ளை கர்ன்னராஜனே எப்படி எப்படி இன்னம் ஒருதரம் எடுத்துப்படியும் பார்ப்போம் ... ...... *

பொது-வசனம்.

கேளும்சபையார்களே மறுபடியும் கர்ன்னராஜன் அந்த ஓ லையைப்படிக்க அதைக்கேட்டுத்துரியோதனமகாராஜன் அதிக சந்தோஷப்படும்போது சகுனிசொல்லுகிற விதங்காண்க ✻

சகுனி-விருத்தம்.

ஒருபகையினியில்லாம லுலகெலா நீயேயாள ... ... ✻
வருகிறவதிஷ்டம்வந்தான் மடிபிடித்திழுக்குமாகில் ... ✻
தருபுரோசனனுக்குள்ளே சமர்த்துகளுண்டாகாதா ... ✻
கருதியபாண்டவர்க்குக் காலந்தான்குறுகிடாதா ... ... ✻

வசனம்.

மருமகனே துரியோதனா என்னமெத்தவும் மெச்சிக்கொள் ளுகிறாயே இனிமேல் ஒருபகையும் இல்லாமல் இந்தஉலகை எ ல்லாம்நீயே ஆளும்படியாய் உன் அதிஷ்டமானது நான்வருகி றேன் வருகிறேன் என்று தானேவந்து உன்னுடைய மடியைப் பிடித்து இழுக்குமேயானால் அந்தப்புரோசனனிடத்திலேசமர் த்துகள்உண்டாகிறது மெத்தப்பெரியகாரியமா அந்தப்பாண்ட வர்களுக்குக் காலங்குறுகுகிறதுக்குஎன்ன சந்தேகமா கைப்பு ண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா அடா என்னகாணும் அதையே லக்ஷியமாகச் சொல்லுகிறாய் அடபோங்காணும் அவனாலேயு ம் ஒருசமர்த்துண்டா போங்காணும்போம் பளாபளா...... ✻

கர்ன்னன்-விருத்தம்.

வெய்யவைவரையுமிங்கே வேரறப்பார்த்துப்பின்னே ... ... ✻
ஐயநான்வருவேனென்ற வவன்றயிரியமொன்றுக்கே ... ✻
மெய்யனற்புரோசனற்கு வெகுமதியாகவிந்த ... ... ✻
வையகமுழுதுந்தந்து மகுடமுஞ்சூட்டலாமே ... ... ✻

வசனம்.

கேளும்துரியோதனமகாராஜனே அந்தப்புரோசனனுடைய தயிரியத்தைப்பாரும் பாண்டவர்கள் ஐந்துபேரையும் வேர்அ ற்றுப்போகும்படியாகச்செய்துபிறகுநான்வந்து உன்முகத்தி லேவிழிப்பேன்என்று எழுதியதிடசித்தத்துக்குமாத்திரமே அ வனுக்குஇவ்வுலகமெல்லாம்கொடுத்து மகுடாபிஷேகமும்செ ய்யலாமே-ஆகாகா-சபாசு- அவன்நல்லசாமர்த்தியமுள்ளவன் ✻

துரியோதனன்- வசனம்.

ஓகோ கோ சபாசு மெய்தான் மெய்தான் அண்ணு கர்ண்ண ராஜனே ... ... ... ... ... ... ✳

கர்ண்ணன்-வசனம்.

சொல்லும் துரியோதன மகாராஜனே ... ... ... ✳

துரியோதனன்-வசனம்.

அல்லகாணும் அவன் ஆண்பிள்ளை என்கிறத்துக்குஎன்னசந்தேகம் அடடா ... ... ... ... ... ... ✳

கர்ண்ணன்-வசனம்.

ஆகா கா அடடடா அவனை அப்படிச்சொல்வதற்கு ஒருபிசகு உண்டா - ஆகா கா ... ... ... ... ... ✳

துச்சாதனன்-விருத்தம்.

விரைவுடன்வசந்தன்வந்த வேலையைமுன்பாருங்கள் ... ✳
கருவுடனினைந்த காரியமுடிந்ததானால் ... ... ... ✳
வருபுரோசனனுக்கிந்த வையகமுழுதுந்தந்து ... ... ✳
குருவென்றுகையெடுத்துக் கும்பிட்டாற்சேதமுண்டோ ✳

வசனம்.

இம் ஆகட்டும் அண்ணு வசந்தன்வந்தவேலையை முன்னே பார்த்து அனுப்பிவிடுங்கள் நாம் நினைத்தகாரியம்கைகூடுமானால் அந்தப்புரோசனன் நமக்குச்செய்த உபகாரத்துக்கு இந்த உலகமெல்லாம் அவனுக்கே உரிமையாகக் கொடுத்தாலுந்தான் போதுமா அவனைக்குருவென்று கையெடுத்துக் கும்பிட்டால் என்னசேதமா அது இருக்கட்டும் ஆரியக்கூத்தாடினாலும்காரியத்தின்மேல் கண்ணுண்டாய் இருங்கள் வசந்தனைமுன்னே அனுப்பிவிடுங்கள் சீக்கிரம் சீக்கிரம் ... ... ... ... ✳

சகுனி-வசனம்.

மருமகனே துச்சாதனா-என்மாமா-நம்முடைய புரோசனனுக்குப்பதில் நிருபம் எழுதவேண்டியது ஆகையால் சொல்லுகிறேன் எழுது மருமகனே எழுது ... ... ... ... ✳

துச்சாதனன்-வசனம்.

அப்படியே எழுதுகிறேன் சொல்லும்மாமா ... ... ✳

திருமுக-விருத்தம்.

இ-ம்-, சாவேரி.

சகபதிசக்ரபதிநராதிபதிசர்வமங்களபதிநித்ய ... ... *
சயபதிதுரியோதனமகிபதிசற்சனபதிவிடுத்திடுதிருபம் ... *
தருமதிநிபுணவிதரணப்ரமுகசரசபுரோசனனுக்குத் ... *
தந்திரயுத்தியுக்திசாதுர்யந்தனைத்துமேன்மேலுமுண்டாக *
வகையினியனுப்புமோலைவாசித்துமற்றந்தவிபரமுந்தெரிந்து
மாமன்விற் கன்னன் தம்பியுநானு மனமகிழ்ந் துவந்து பூரித்
[தோம் *
அகமகிழ்வாகவரக்குமாளிகையிலனைவிருந்தின மெதுவென்றால்
அடுத்தகார்த்திகைமாசத்திலேநேரு மக்கினியஞ்சகங்காணே *

துரியோதனன்-விருத்தம்.

தன்னிகரிலாதவென்னுயிர்க்குயிரோ ... *
தம்பிதுச்சாதனப்புலியே ... ... ... *
உன்னிநீயெழுதுமோலையின்விபர ... *
மொருதரமெல்லவாசித்து ... ... *
வின்னமில்லாமற்றலைப்புமாறாமல் ... *
விளங்குசந்திரிகையிற்போட்டுப் ... ... *
பன்னியகால்கடனையினில்லாமற் ... *
பதைக்கின்றவசந்தன்கைகொடடா ... *

வசனம்.

தம்பீ துச்சாதனா-என் அண்ணா-நீ இப்போது எழுதியவோலையி
ன்விபரத்தைமெல்ல ஒருதரம்வாசித்துக்காட்டி எழுதின எட்டு
த்தலைப்புமாறாமல் சரியாய் அனுப்புமுகத்திலே வருகிறதாய்ச்
சந்திரிகையிற்போட்டுக்கால் தரையில்படாமல் பதைக்கின்ற
வசந்தன்கையில் கொடடா தம்பீ துச்சாதனா ... ... *

துச்சாதனன்-மட்டு- விருத்தம்.

அடுத்து நீ சொன்ன ... ... *
படிச்சுருள்பண்ணி ... *
நொடித்திடுமுன்னே ......*
கொடுத்தனனண்ணா ... *

வசனம்.

நீங்கள்சொன்னபடியே முன்னமே சந்திரிகம்போட்டு வசந்தன்கையில்கொடுத்துவிட்டேன் அண்ணே ... ... ✻

துரியோதனன்-விருத்தம்.

போகுநல்வசந்தாநீயும் புரோசனமந்த்ரியுந்தான் ... ... ✻
ஏகமாமெனக்குநீங்க ளிருவருமிரண்டுகண்கள் ... ... ✻
ஆகையாற்பன்னிப்பன்னி யடிக்கடிச்சொல்லமாட்டேன் ✻
வேகமாய்ப்புரோசனன்பால் விடியுமுன்கொடுத்திடாயே ✻

வசனம்.

அடாவசந்தா இங்கேவா நீயும் அந்தப்புண்ணிய புருஷனை புரோசனனும்ஆகிய நீங்கள் இரண்டுபேரும் எனக்குஇரண்டு கண்கள் ஆனபடியினாலே நான்உங்களுக்கு அடிக்கடிச்சொல்ல மாட்டேன் இதுகாரியத்தில் நீ சாக்கிரதையாய்ப்போய்ப் பொழுதுவிடியுமுன்னமே சீக்கிரமாய் இந்தஓலையைப் புரோசனன் கையில்கொடுத்துவிட்டு இருவரும் சாக்கிரதை செய்யுங்கள் ✻

வசந்தன்-விருத்தம்.

கர்த்தனேபோற்றியிந்தக் காரியந்தொடுத்ததாதி ... ... ✻
நித்திரையுண்டாநல்ல நினைவுண்டாநீக்கமுண்டா ... ... ✻
பற்றுதல்வேறொன்றுண்டா பசிவேளைக்கன்னமுண்டா ... ✻
நத்துமுன்றன்னைமறந்தா னற்கதியெமக்குண்டாமா ... ✻

வசனம்.

கேளும் என் ஆண்டவனே இந்தக்காரியம் தொடங்கியநாள் முதல் எங்களுக்கு நித்திரை ஏதாகிலும் உண்டா நல்லநினைவுதான் உண்டா பசிவேளைக்குப்போசனம் உண்டா மற்றக்காரியங்கள் ஏதாகிலும்உண்டா ஒன்றும் இல்லை ஐயனே தாங்கள் சொன்ன காரியத்திலே தான்சாக்கிரதையாக இருக்கிறோம் அப்படி நீங்கள் சொன்னகாரியத்தை நாங்கள் சாக்கிரதை பண்ணுமற் போவோமேயானால் எங்களுக்கு நல்லகதிதான் கிடைக்குமாசுவாமீ நான்போய்வருகிறேன் ... ... ... ... ... ... ✻

துரியோதனன்-வசனம்.

ஆனால்சாக்கிரதை ஓடு ஓடு சல்திபோனையாஏதோ சல்தி ✻

பொது-வசனம்.

வசந்தன் உடனே பிரயாணப்பட்டு வாரணாவதம்வந்துசேர்ந்து புரோசனனைக்கண்டு சொல்வதுகாண்க ... ... ... *

வசந்தன்-விருத்தம்.

காடகன்றமனகன்பேர் கதையினிற்கேட்டதுண்டு ... ... *
சாதமாய்நினைப்பதற்குச் சாதனங்காணேனந்தத் ... ... *
திருடர்களிரண்டுபேருந் தேவரீரொருவராகப் ... ... *
புருடனாயவதரித்த புரோசனமந்த்ரீபோற்றி ... ... *

வசனம்.

சரணம்சரணம்ஐயா புரோசனமந்திரீ ... ... ... *

புரோசனன்-விருத்தம்.

வந்தையாவசந்தாவுன்றன் வசத்தினிற்கொடுத்தவோலை ... *
எந்தையாய்விளங்குமந்த வெழிற்றுரியோதனற்குத் ... *
தந்தையாபடித்துப்பார்த்துச் சந்தோஷப்பட்டாராமேல்...*
விந்தையாதேனுமுண்டோ விளக்கமாயுரைசெய்வாயே ... *

வசனம்.

அப்பாவசந்தா ஆகா கா வந்தாயா வா என்கர்த்தனாகிய துரியோதன மகாராஜனைக்கண்டு ஓலையைக்கொடுத்தாயா அதைப் பார்த்து அவர்என்பேரில்சந்தோஷப்பட்டாரா இதுவன்றியில் இன்னம்விந்தையானசெய்தியாதேனும்உண்டா அதைத்தெரியச்சொல்வாய் அப்பாவசந்தா ... ... ... ... ... *

வசந்தன்-விருத்தம்.

மகிழ்ந்ததோவியப்புற்றோர்ந்து மனங்களித்துனைமேன்மேலும்
புகழ்ந்ததோசரீரமெல்லாம் பூரித்ததோமற்றொன்று ... [ம்
நிகழ்ந்ததோவென்னைக்கூட நினைத்ததோவைவர்தம்மை *
இகழ்ந்ததோவிளைந்தவின்பமென்னென்றுசொல்வேனையா *

வசனம்.

கேளும்ஐயா புரோசனமந்திரியே தாங்கள் என்கையில்கொடுத்த ஓலையைக்கொண்டுபோய் நம்முடைய கர்த்தனாகிய துரியோதன மகாராஜன் இடத்தில் கொடுத்தஉடனே ஆகா கா உம்முடையபேரில் அவர்சந்தோஷப்பட்டபெருமைஎன்னாலே இவ்வளவு அவ்வளவுஎன்று சொல்லக்கூடாததாய் இருக்கின்றதுமே

னும் ஓகோ கோ அந்தப்பாண்டவர்களை இகழ்ந்து சொன்னசொ
ல்லை ஐயையோ என்வாயினாலே சொல்லுகிறதா அது இருக்கட்
டும் இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களைச் சாக்கிரதைப்ப
டுத்துகிறதே நல்லது ஐயா ... ... ... ... ... ❋

புரோசனன்-விருத்தம்.

சற்றுமோய்வில்லாநல்ல சாக்ரதைவசந்தாவாடா ... ... ❋
மற்றென்றுநிகழ்ந்ததென்று மறைவிடமாகச்சொல்லாய் ...❋
குற்றமோகுற்றமோவென்றாற் கூடுமோகூடாதோவவ் ... ❋
வெற்றிசேர்வார்த்தைதன்னை விளக்கமாயுரைசெய்வாயே ... ❋

வசனம்.

அடாவசந்தா துரியோதன மகாராஜன் இடத்தில்போய் வந்த
செய்தியை என்னவென்றுகேட்டால் ஏதோ ஒருபேச்சுமறைவி
டமாகச்சொல்லுகிறாயே அதுஎன்ன இந்தக்காரியம்என்னாலே
ஆகுமோ ஆகாதோ என்கிறதாய் யோசனை பண்ணினார்களா இ
ன்னம் வேறேஏதாவது யோசனைபண்ணினார்களா அதைத்தெரி
யச்சொல்லுவாய் வசந்தா ... ... ... ... ... ❋

வசந்தன்-விருத்தம்.

அரக்குமாளிகையிலந்த வைவரும்மடிந்தாராலல் ... ... ❋
நெருக்கமொன்றில்லையப்பா னிபுணபுரோசனற்குப் ... ❋
பெருக்கமாய்மகுடஞ்சூட்டிப் பேருலகாளச்செய்து ... ❋
தருக்குடன்கண்ணாற்கண்டு சந்தோஷிப்படுவோமென்றார் ❋

வசனம்.

கேளும் ஐயாமந்திரி நீர்செய்கிற உபாயதந்திரத்தினாலே பா
ண்டவர்கள் ஐந்துபேரும் அரக்குமாளிகையிலே நிர்மூலமாய்
ப்போய்விட்டார்களேயானால் அப்பால் தங்களுக்கு ஒருகிலேச
மும் இல்லைஎன்றும் சொன்னார்கள் அல்லாமலும் இன்னம்ஒரு
காரியம் ஆகர்கா அதென்னவென்றால் இப்படிப்பட்ட மகாஉ
பாயசர்ப்பனைகளாலே பாண்டவர்களை அதாகதிசெய்துபோடு
கிறேன் என்றபுரோசனனுக்கு மகுடத்தைத்தரித்து இவ்வுலகை
அவன் ஆளும்படியாக நாம்கண்ணாலேகண்டு சந்தோஷிப்பட
வேண்டும்என்றும் சொன்னார்கள் ஐயா ... ... ... ... ❋

## பொது-வசனம்.

கேளும்சபையாரே இப்பால்வசந்தன்கையில் துரியோதனன்
எழுதி அனுப்புவித்த ஓலையைப்புரோசனன் ரகசியமாய் வாசித்
துப்பார்த்து உள்ளத்தில்அதிகசந்தோஷத்தைஅடைந்துஇருந்
தான் இப்படிஇருக்க மேல் பாண்டவர்களுக்குள் பீமசேனனு
னவன் ஒருநாள் தனித்துக் கங்கையாற்றின்கரையில் உலாவிக்
கொண்டு இருக்கும்போது அஸ்தினபுரத்திலிருந்து விதுரராஜ
னுலேசொல்லி அனுப்புவிக்கப்பட்டமனிதன் வந்துசொல்லஅ
வனுலே தாங்கள் குடி இருக்கும் வீடு அரக்கினுலே கட்டியது
என்பதும் துரியோதனன்செய்வித்தகூது என்பதும் அதன்மூன்
றற்றில் கட்டிஇருக்கப்பட்ட மண்டபத்திலுடைய ஈசானமூலை
ஸ்தம்பத்தின் கீழ் இடும்பாவனம் போய்ச்சேரும்படி சுரங்கம்
வைத்துஇருக்கின்றது என்பதும் கார்த்திகைமாதத்தில் அக்கினி
பஞ்சகதினத்தில் நெருப்பு வைக்கும்படிப் புரோசனன் காத்தி
ருக்கின்றுன் என்பதும் அறிந்துகொண்டுசங்கதிதெரிவித்தவனு
க்கு ரகசியமாய்ப்பெருமானமும்செய்து தாங்கள் வாரணவத
த்துக்குவரும்போது சிறியபிதாவாகிய விதுரராஜன் தங்கள் ஐ
வருடன் சொன்ன சாக்கிரதையையும் தனக்குத்தனித்துச்சொ
ன்னதையும்யோசித்து அரக்குமாளிகையையும் மண்டபத்தை
யும் சோதித்துப் புரோசனனுடைய நடத்தைகளையும் இரண்
டொருதினம் குறிப்பாகப்பார்த்து எல்லாம்வஞ்சனையாகஇருக்
கின்றதென்று தனக்குள்ளேதீர்மானித்துக்கொண்டு பின்புதன்
னுடைய சகோதரர்கள்நால்வருக்கும்வீடு அரக்கினுல்கட்டிஇ
ருப்பதைமாத்திரம் அறிவித்தான் அதற்குமேல் அவர்கள்நால்
வரும் வீட்டுக்கு உள்ளிடத்தில் சோதித்துப்புரோசனன் நடத்
தைகளையும் குறிப்பாகப்பார்த்துச் சந்தேகப்பட்டார்கள் பின்
பு ஐவரும் ஓரிடத்தில் இருந்து ஆலோசிக்கும்சங்கதிகாண்க ❋

### பீமன்-விருத்தம்.

நினைவெலாம்வஞ்சஞ்சொல்லெலாமசத்ய ... ... ❋
நெறியெலா மிந்திரசாலம் ... ... ... ... ❋
வினையெலாம்வித்தை யுடம்பெலாங்கூறு ... ... ... ❋
விழுவெலா நயமுகப்பகட்டு ... ... ... ... ❋

மனமெலாங்கபட நடையெலாமருட்டு ... ... ... *
மந்திரித்தனமெலா மோசம் ... ... ... ... *
கனமிலாவிந்தப் புரோசனன்றன்னைக் ... ... ... *
கனவிலுநம்பொணாதண்ணா ... ... ... ... *

வசனம்.

அண்ணா ஆகா கா இந்தப்புரோசனனுடைய மாரீசத்தனம் எப்படிப்பட்டதென்றால் இவனுடையவசனமானது அசத்தியமாகக்காணுகின்றது மேலும் இந்திரசாலம் மகேந்திரசாலம் தெரிந்தவனைப்போலும் இருக்கிறான் இவன்நம்மிடத்தில் மந்திரியாகஇருந்து ஏதோ ஒருசூது செய்வான் போலவும் காணுகின்றது இப்படிப்பட்ட கொடியபாதகனான புரோசனனைநம்பக்கூடாது அண்ணா ... ... ... ... ... ... *

அர்ச்சுனன்-விருத்தம்.

உள்ளுளேநெருப்பு முவந்தபொய்ச்சிரிப்பு ... ... ... *
மொழிங்கிய வார்த்தையினினிப்பும் ... ... ... *
கள்ளமில்லவர்போ லிருக்கிறகளிப்புங் ... ... ... *
கரடகதமனகநினைப்பும் ... ... ... ... *
மெள்ளநம்மெதிரே யொழுகுறுபசப்பும் ... ... ... *
வெளியிலேயிவன் படுகசப்பும் ... ... ... ... *
முள்ளெனும்புரோசனன் னடையனைத்தும் ... ... *
மோசமாய்க் காண்கிறதண்ணா ... ... ... *

வசனம்.

கேளும்அண்ணா இந்தப்புரோசனனுடைய தேகமாத்தியந்தமும் வடவாமுகாக்கினியைப்போலும்இருக்கிறான் இவன்நம்முடனேகூடநகைக்கிறதா பொய்யாகக்காண்கிறது நம்முடனே இவன்பேசுகிறதெல்லாம் வெகுஇனிப்பாகப்பேசுகிறான் மேலும்தன்னிடத்திலே எவ்வளவுங்களங்கம் இல்லாதவனைப்போல் இருக்கிறான் இவனுடைய சாகசமோவென்றால் கரடகதமனகவித்தையாய் இருக்கின்றது நம்மைவிட்டுவெளியிலேபோகும்போது நம்முடையபேரில் தூறிக்கொள்ளுகிறான் இப்படிப்பட்ட கொடியபாதகனாகிய புரோசனனை நம்பக்கூடாது அண்ணா *

நகுலன்-விருத்தம்.

பஞ்சதந்திரங்களஷ்டகன்மங்கள் ... ... ... ... *
பக்குவசதுருபாயங்கள் ... ... ... ... ... *
வஞ்சகந்துரோகஞ்சர்ப்பனைவிரோதம் ... ... ... *
வகையுடன்றேர்ந்தவனுடலம் ... ... ... *
நஞ்சுதோய்ந்திருக்குநாகமோடிணங்கி ... ... ..... *
நாடோறும்வாழ்கலைபோலும் ... ... ... *
இஞ்சொலிற்கொடியபுரோசனப்பாவி ... ... ... *
இவனுடன்பழகுவதண்ணா ... ... ... ... *

வசனம்.

கேளும் அண்ணா இந்தமகாபாவியான புரோசனனுடனே பழகுவது எத்தன்மையாய் இருக்கின்றது என்றால் பஞ்சதந்திரம் அஷ்டகருமம் சதுர்விதஉபாயம் வஞ்சகம் துரோகம் சர்ப்பனைவிரோதம் இவைஎல்லாம் நன்றாய்த்தேர்ந்தவன் ஆகையால் பாதாதிகேசபரியந்தம்விஷமயமாகிய சர்ப்பத்துடனேகூடி வாழ்வதுபோல இருக்கின்றது ஆகையால் இவனை நம்பக்கூடாது மகாராஜனே ... ... ... ... ... ... ... *

சகாதேவன்-விருத்தம்.

மாய்க்கும்வச்சநாபிக்குமாற்றொன்றுண்டு ... ... *
வல்லரவினுக்குமணிமந்த்ரமுண்டு ... ... ... *
தீய்க்குநெடுந்தணலினுக்குமேதுவுண்டு ... ... ... *
தேடிவருங்காலனுக்குஞ்செயலொன்றுண்டு ... ... *
சாய்க்கவரும்புரோசனனும்பாவியாலே ... ... ..... *
சடுதியிலோர்கெடுதிவந்துசம்பவித்தால் ... ... *
வாய்க்குமதையாரிருந்துநீக்கவல்லார் ... ... ... *
வருமுன்னேகாப்பதுவேவண்மைதானே ... ... *

வசனம்.

ஆகா கா அண்ணா கொல்லும்படியாக இடப்பட்ட வச்சநாபியைமுறித்துக்கொள்ளமாற்று உண்டு பின்னையும் அரவந்தீண்டுமேயானால் மணிமந்திரங்களினாலே நீக்கிக்கொள்ள வகைஉண்டு பெரிதாகியதீயை ஆற்றிக்கொள்ள ஏதுஉண்டு கடிந்துவரும்படியாகிய எமனைவெல்லுகிறத்துக்கு உபாயம்உண்டு இந்தப்

பொல்லாத கொடியபாதகனுகியபுரோசனன் அந்திசந்தி மத்தி
யான இராத்திரிகாலங்களிலே சமயம்பார்த்து ஒருசூதுசெய்
வானே ஆனல் அதையார்வந்துதடுக்கப்போகிருர்கள் அப்படி
வாராமுன்னமே நாம்சாக்கிரதைப்படுகிறதே நலமாய்இருக்கிற
து அண்ணுவே ... ... ... ... ... ... ... *

பீமன்-விருத்தம்.

தருமமேயுருவாய்வந்து தழைக்குமென்னண்ணுவேபோற்றி *
அருமைசேருலகமெல்லா மானந்தப்படுவதாகக் ... ... *
கருதுநாமைந்துபேருங் கனிபுரோசனனுங்கூடி ... ... *
மருவியேவேட்டையாடி வருகுவோமவருகுவீரோ ..... *

வசனம்.

தருமமேஉருவாய்நிறைந்த என்அண்ணுவே நாம் ஐந்துபே
ரும் இந்தப்புரோசனனும்வேட்டைக்குப்போய்வருவோம் வா
ரும் மகாராஜனே ... ... ... ... ... ... *

அர்ச்சுனன்-விருத்தம்.

நெருப்பினின்றதனைப்போலு நினைவுவேறுகிறாளும் ... *
தரிப்பறவிங்கிருந்து சஞ்சரிப்பதிலுமந்தப் ... ... *
பொருப்புறுவனத்திறுக்குப் போய்வேட்டையாடியேநாம் *
விருப்புடன்வருதன்மெத்த மேன்மேலுநலந்தாணண்ணு *

வசனம்.

அண்ணு தருமபுத்திர மகாராஜனே நெருப்பிலேநின்று தத்
தளிப்பதுபோலச் சதாகாலமும்இவ்விடத்தில்வாழ்ந்துஇருக்கி
றத்தைவிட வனத்திலேசென்று வேட்டையாடி மனக்களிப்புட
னேவருவது மிகவும்நன்மையாய் இருக்கின்றது என் அண்ணுவே.

சகாதேவன்-விருத்தம்.

இன்றையதினமோநாளையோவல்ல ... ... ... ... *
இரவிலோபகலிலோவயர்ந்து ... ... ... *
நின்றகாலையிலோபொசித்திடும்பொழுதோ ... ... *
நித்திரைசெய்யும்வேளையிலோ ... ... ... *
என்றிவன்மோசஞ்செய்வதையெண்ணி ... ... ... *
எண்ணமுற்றிங்கிருப்பதிலும் ... ... ... ... *

இன்று வேட்டையினிற்பகலெல்லாம்போக்கி ... ... *
இரவில்வந்திருக்கலாமண்ணா ... ... ... ... *

வசனம்

கேளும் அண்ணா மகாராஜனே இன்றைத்தினமோ நாளையதினமோ அல்லது ராத்திரியிலேயோ பகலிலேயோ உண்ணுகிற வேளையிலேயோ உறங்குகிற வேளையிலேயோ எந்தவேளையில் மோசஞ் செய்வானோவென்று எண்ணி எந்நேரமும் மனதுசஞ்சலப் பட்டுக்கொண்டு இங்கே இருக்கிறத்தைப்பார்க்கிலும் வேட்டையாடக் காட்டுக்குப்போய்ப் பகற்காலமெல்லாம் அவ்விடத்திலேசஞ்சரிக்கிறதும்இராத்திரிகாலத்தில் இங்கேசற்றுநேரம் இருக்கிறதுமாய் இருக்கலாம் அண்ணாவே ... ... ... *

தருமராஜன்-விருத்தம்.

மும்மதக்களிற்றைப்போலு மொய்ம்புள்ளதம்பிமாரே ... *
வெம்மைசேர்வேட்டைக்கேக வேண்டுமென்றீர்களுங்கள் *
சம்மதிப்படியெனக்குஞ் சம்மதிதானானாலும் ... ... *
அம்மனையானகுந்திக் கறிவித்துப்போம்வாம்வாரீர் ... *

வசனம்.

மும்மதம்பொழிகின்ற மேன்மையாகிய திக்கசம்போலும் புசபலத்தையுடையதம்பிமார்களே உங்கள்இஷ்டப்படியே வேட்டைக்குப்போக எனக்கும்சம்மதிதான் ஆகிலும் நம்முடைய அன்னையாகியகுந்திதேவிக்கு அறிவித்துப் போவோம்வாரும் தம்பிமார்களே ... ... ... ... ... ... *

தம்பிமார்-நால்வர்-விருத்தம்.

மைப்படிவனையிணையென்ன ... ... ... *
ஒப்பறுநமையருளன்னைக் ... ... *
கெப்படியும்மிதையறிவித் ... ... ... *
தப்படிசெய்குவோமண்ணா ... ... *

வசனம்.

அப்படியேநம்முடையதாயாருக்குஅறிவித்துப் போவோம் [வாரும் அண்ணா

பாண்டவர்கள்-விருத்தம்.

காட்டையேகுறித்தபாண்டுகாதலிநின்முன்போற்றி ... *
பாட்டையாலெமைச்சுமந்து பயந்தெடுத்தவளேபோற்றி ... *

நாட்டையேகாத்திருந்த நாங்களிந்நேரவேளை ... ... *
வேட்டைக்குப்போகவேண்டும்விடைகொடுத்தனுப்புமம்மா *

வசனம்.

கேளும்அம்மா எங்களைப்பெற்றதாயேநாங்கள்இந்த அரண்மனையிலேயே இருக்கிறது எங்களுக்குவெறுப்பாய் இருக்கிறபடியினாலே நாங்கள் வேட்டைக்குப்போய் வந்தோமேயானால் எங்களுக்கு ஆரோக்கியமாய் இருக்கும் ஆகையால்விடைகொடுத்து அனுப்பவேண்டும் அம்மா ... ... ... ... *

குந்திதேவி- விருத்தம்.

கூட்டுமந்திரத்தால்வந்த சுந்தரப்புதல்வீர்கேளீர் ... ... *
நாட்டுடனிருக்கச்சிந்தை நாடாமற்போகுமானால் ... ... *
ஆட்டியவில்லுமம்பு மங்கையிற்கொண்டுகாட்டில் ... ... *
வேட்டையையாடிமீண்டு விரைவுடன்வருகுவீரே ... ... *

வசனம்.

கேளும் என்அருமைமக்களே இந்த அரண்மனையிலே இருக்க வருத்தமாகஇருந்தால் அப்படியேவனத்துக்குப்போய் வேட்டையாடி மனக்களிப்புடனே சாயங்காலம் ஏதுவேளைக்கும்இவ்விடத்தில் சந்நிதியில்வந்து சேருங்கள்மக்களே ... ... *

தருமராசன்- வசனம்.

கேளாய்புரோசனா நாங்கள் இன்றையதினம் ஆரணியத்திலே போய்த்திரிந்து வேட்டையாடவேண்டும் ஆகையால் வேடர்வில்லியர்களை வரவழைப்பாய் பிரயாணப்பேரிகை அறைவிப்பாய் [புரோசனா

புரோசனன்- வசனம்.

அப்படியே வரவழைக்கிறேன் சுவாமீ ... ... ... *

பொது- வசனம்.

இந்தப்படிப்பாண்டவர்கள் வேட்டைக்குப்போகப் பிரயாணப்படவேதான் நினைத்தகாரியத்துக்கு விக்கினம் வருகிறாப்போல் இருக்கின்றதென்று மனங்கலங்கிப்புரோசனன் ஏகாந்தமாய் வசந்தனுடனே சொல்வதுகாண்க ... ... ... *

புரோசனன்-விருத்தம்.

ஆண்டவன் துரியோதனனியமித்த ... ... ... ... *
வக்கினியஞ்சகமாகும் ... ... ... ... ... *

கண்டுறமரக்குமாளிகைகொளுத்த ... ... ... *
வெண்ணம்வைத்திருந்தவித்தினத்தில் ... ... ... *
பாண்டவர்வேட்டைக்கேகுவான்றுணிந்து ... ... *
பயணபேரிகைமுழக்கென்றார் ... ... ... *
பூண்டநூற்றுவர்க்குநமக்குமிப்புவிக்கும் ... ... *
பொல்லாதகாலமின்னமுமே ... ... ... ... *

வசனம்.

கேளாய்வசந்தா துரியோதனமகாராஜன் உத்திரவுப்படிக்கு அரக்குமாளிகை கொளுத்தும்படியாக எண்ணம்வைத்து இருந்ததினமாகிய அக்கினிபஞ்சக நாள் வந்ததே இன்றையதினம் இராத்திரி எதுவேளைக்கும் அரக்குமாளிகை கொளுத்துவோம் என்று எண்ணம்வைத்து இருந்தோமே இன்றையதினம் பாண்டவர்கள் ஐந்துபேரும் வேட்டைக்குப்போக வேண்டுமென்று சீக்கிரமாய்ப்பயணபேரிகைமுழக்கச்சொல்லுகிறார்களே நாம் என்னசெய்வோம் அவர்கள்சொல்லின்படி நாம்செய்யலாமா யோசிக்கும்இடத்தில் அந்தத்துரியோதனமகாராஜன் முதலாகிய நூறுபேருக்கும்நமக்கும் இந்தப்பூமிக்கும் இன்னமுமென்னமோ பொல்லாதகாலம் போலத்தோன்றுகின்றது இதற்கு என்னசெய்வோம் சொல்லடா வசந்தா ... ... ... *

வசந்தன்—விருத்தம்.

தவறிதுமெய்தான்வேட்டைதனிலவர்சென்றாரானால் ... *
அவசரப்படுத்தியின்றைக் கந்திநேரத்துக்குள்ளே ... ... *
திவளுமாளிகையில்வந்து சேர்ந்திடவுபாயஞ்செய்யும் ... *
நவரசகுளிகைநீயே நல்லுள்ளங்கலங்கலாமோ ... ... *

வசனம்.

கேளும்ஐயா புரோசனமந்திரீ நாம்நினைத்தகாரியத்துக்குப் பாண்டவர்கள் காட்டுக்குப்போகிறது தகாதுதான் அப்படி அல்லவென்றுபோவார்களேயானால் போனஇடத்தில் ராத்திரிக்கு அங்கேநிற்கவொட்டாமல் அவசரப்படுத்திராத்திரி எதுவேளைக்கும் அரக்குமாளிகையில்வந்து சேரும்படியாய்ச்செய்யப்பட்ட சூஸ்திரதாரியான நீர்தானே ஐயா இப்படிமனம் தளரலாமா துரியோதனனுடைய அதிருஷ்டம் எப்படியும் கூட்டுவிக்கும்

போம் ஐயாபோம் என்னமோ இதற்குத்தானு பயப்பட்டீர்
ஆகாகா நன்றுச்சுதுபோம் ஐயா ... ... ... ... ... ❋

பொது-வசனம்.

இந்தப்பிரகாரம் வசந்தன்சொல்லவே அதைக்கேட்டுமெய் தானென்று ஒப்புக்கொண்டு புரோசனன் படைத்தலைவனுக்குச் சொல்வதுகாண்க ... ... ... ... ... ... ❋

புரோசனன்-விருத்தம்.

தடவரையைப்பொருவுபடைத்தலைவாகேளாய் ... ... ❋
சரசசெகபதிதருமராசராசன் ... ... ... ❋
திடமிகும்வெப்படரடவிக்குள்ளேசென்று ... ... ❋
திறல்வேட்டையாடுதற்குச்சித்தமானார் ... ... ❋
கடகரடக்கரிபரிதேர்காலாளான ... ... ... ... ❋
கருதியநாற்படைகளுடன்கருத்திசைந்த ... ... ❋
வடிவுறுகைச்சிலைவலையத்திரளாய்க்கொண்ட ... ... ❋
மறவரொடுவில்லியரும்வரச்செய்வாயே ... ... ❋

வசனம்.

கேளாய்தளபதி ஆண்டவனாகிய தருமபுத்திரமகாராஜன் வேட்டைக்குப்போக ஆயத்தமாய் இருக்கிறார் ஆகையால் ஆனை சேனைபரிவாரங்களையும் வேடர் வில்லியர்களையும்செந்நாய்டேகைராஜாளி இவைமுதலானவைகள் எல்லாவற்றையும் ஒருநிமைக்குள்ளே வரச்செய்வாய் பிள்ளாய் ... ... ... ... ❋

தளபதி-விருத்தம்.

வரவுரைசெய்தமந்திரிகேளாய் ... ... ❋
கரிபரிதேர்காலாண்முதலானோர் ... ... ❋
விரைவுடனெய்தவேகமதாகத் ... ... ❋
தருமராசதிரத்தருவிப்பேனே ... ... ❋

வசனம்.

கேளும்மந்திரீ அப்படியே சதுரங்கசேனைகளையும் மற்றும் வேட்டைக்குரியவைகளையும் தருவிக்கிறேன் ஐயா ... ... ❋

தளபதி-விருத்தம்.

கருதுபுயபலமிகுந்தசேர்வைக்காரா ... ... ... ❋
கதித்தமனோவேகமதாய்க்கடிகியோடி ... ... ❋

இரதகசதுரகபதாதிகளுமற்ற ... ... ... ... ... *
வேளுதிவில்லியர்மல்லர்களெல்லோரும் ... ... *
பெருவலைக்காரர்கண்முதலானவருமோடிப் ... ... *
பேதித்துக்கவ்வியசெந்நாயுமின்னம் ... ... *
அரியராசாளிபேட்டைகைகளுமிந்த ... ... ... ... *
வடியிலொருநொடியில்வரவழைத்துவாடா ... ... *

வசனம்.

ஆரடாசேர்வைக்காரா- சுவாமீபராக்கு- ராஜாதிராஜ ராஜபர மேஸ்வரனுகிய தருமபுத்திரமகாராஜன் வேட்டைக்குப்போகச் சித்தமானுர் ஆகையால் சதுரங்கசேனைகளும் வில்லியர் வேட்டைக்காரரும் நாய்க்காரரும் பெருவலைக்காரரும் ராஜாளி வல்லூருபேட்டைக்காரரும் வலைதடிக்காரர் சுவளக்காரர் முதலான பேரெல்லாரும் ஒருநொடியில் வந்துசேரும்படி அழைத்துக் கொண்டுவாஓடிஓடி ... ... ... ... ... *

சேர்வைக்காரன்-வசனம்.

அப்படியே அழைத்துக்கொண்டுவருகிறேன் சுவாமீ ... *

சேர்வைக்காரன்-வசனம்.

ஆரடாஅடா வேடர்வில்லியர்களே நம்முடைய தருமராஜன் வேட்டைக்குப்போகச்சித்தமாய் இருக்கிருர் ஆகையால் அவரவர்கள் ஆயுதங்களைஎடுத்துக்கொண்டு அதிகசீக்கிரத்தில் பிரயாணப்படுங்கள் ... ... ... ... ... ... *

வேடர்-வசனம்.

ஆனுல் போவோம்வாரும் சேர்வைக்காரா ... ... ... *

பொது-விருத்தம்.

வினையொழிதருமராஜன் விருப்பினுல்வேட்டையாட ... *
மணமுவந்தழைக்கக்கண்டு மகராசன்கொலுவைநாடிச் ... *
சினமிகுசெந்நாய்மற்ற திகழும்வில்லம்புகொண்டு ... ... *
வனமதிற்சஞ்சரிக்கும் வனவேடர்வருகின்ருரோ ... ... *

வசனம்.

அந்தவெப்படியென்ருல்தருமராஜனுடன் வேட்டைக்குப்போக வேடர் வில்லியர்வருகிற விதங்காண்க ... ... ... *

வேடர்வருகிற-தரு.

இ-ம். கலியாணி - ஏகதாளம்.

வேடர்நாங்களே ... ... ... ... ... (இந்தமலை)
வேடர்நாங்களே ... ... ... ... ... *
காடுகண்மலைகள் இடிகிடென்னக் ... ... ... ... *
கடிந்தெழும்பிய துஷ்டமிருகங்களை ... ... ... *
நீடுஞ்சிலைவளைத் தம்புவைத்தெய்தொரு ... ... ... *
நிமைக்குள்ளேயதை முடிக்குந்திண்புய ... ... (வேடர்)
எற்றிவரும் பெரும் வேங்கைப் புலிகளைச் ... ... *
சித்ரவதைசெய்வோம் ... ... (இந்தவனம்)
முற்றிலுமாராய்ந்து பன்றிகளைத்தலை ... ... ... *
யற்றவிழசெய்வோம் ... ... ... ... (க்ஷணத்தினில்)
பெற்றிடுமிருப்பு வலைகளைக்கட்டிப் ... ... ... *
பெருத்தமாமத யானையின்மீதிலே ... ... ... ... *
யெற்றிடும்வீர சிங்கமுமங்ஙனே ... ... ... ... *
யேங்கியுளறிட வாங்கும்வல் லமைசேரும் ... ... (வேடர்)
ஓடிப்பதுங்குங் கடம்பைகள்யாவையு ... ... ... *
நாடியடித்திடுவோம் ... ... ... ... (வனத்தினில்)
தேடிவருங்கலை மான்களைநாங்க ... ... ... ... *
ளோடிப்பிடித்திடுவோம் ... ... ... (இதல்லாமல்)
பாடுங்கிளிகளுங் கொக்குநரையானும் ... ... ... *
பாரத்வாசமொடு டேகைராசாளியுங் ... ... ... *
காடைகவுதாரி யோடேயுள் ளானையுங் ... ... ... *
கண்டவுடன்கண்ணி கொண்டுபிடிக்கின்ற ... ... (வேடர்)
அம்புவிதன்னிலெங் கன்னியைக்கண்டால் ... ... ... *
செம்பொன்களைக் கொடுத்து ... ... ... (ஆவலுடன்)
நம்பிவரும்புல வோர்களென்றஞ்சாமல் ... ... ... *
வெம்பிமிகக் கொதித்துத் ... ... ... (திறமில்லா)
வம்பர்கசடர் சன்மார்க்க மில்லாமூர்க்கர் ... ... ... *
வண்டமிழ்க்குதவியில் லாதவர்வாயிலே ... ... ... *
அம்புவியோர்துதி ராமசந்திரன்கவி ... ... ... *
யாப்பையடித்தவர் வாய்ப்பற்பிடுங்கிடும்... (வேடர்நாங்களே)

சேர்வைக்காரன்விருத்தம்.

கதாதண்டவீர. . . . . . ✻
கதாநின்றசேனை. . . . ✻
எதோவென்றுடீறி...... ... ......✻
இதோவந்த தையா... ... ... ...✻

வசனம்

கேளும் ஐயா அசகாய சூரனாகிய படைத்தலைவா தேவ
ரீர் சொல்லுமுன்னமே இந்தக் குறிப்பறிந்து வேட்டைக்குப்
போகச் சமஸ்தமான சேனைகளையும் ஆயத்தமாய் அழைப்பித்
துவைத்திருக்கிறேன் ஐயா படைத்தலைவா. ... ... ... ...✻

படைத்தலைவன் விருத்தம்.

சாசவிதரணவுசிதபுனிதனான ... ... ... ... ✻
சதுரபுரோசனனெனுமந்திரியேகேளாய்... ... ... .. ✻
உரைசெய்மதகரிபரிதேர்பதாதியோடு... ... ... ...✻
முரவில்வளைதடிமெயறிவேல்சவளக்காரர் ... ... ... ... ...✻
தரசனுகும்வலைக்காரர் வேட்டைக்காரர் ... ... ...✻
தாவியெழுநாய்க்காரர் சமஸ்தபேரும்... ... ... ... ... ✻
வரிசையுடன்வேட்டையெங்கே யென்றுசொல்லி......✻
வதைக்கின்றார் துடி துடித்துப் பதைக்கின்றாரோ...... ......✻

வசனம்.

கேளும் புரோசன மந்திரீ சதுரங்க சேனைகளும் மற்று
முள்ள வேட்டைக்கு உரியவர்களும் ஆயத்தமாய் வந்துநிற்
கிறார்களையா... ... ... ... ... ... ... ... ... ... ... ...✻

புரோசனன்விருத்தம்.

அறிவுள்ளவசந்தாவாடா வாண்டவரைவருக்கும் ... ... ... ✻
திறமுள்ளயானையைந்து தேரைந்துகுதிரையைந்து......✻
மறுவறுசிவிகையைந்து வளங்கொளும்விமானமைந்து ...✻
நிறையுடனலங்கரித்து நிமிடத்திற்கொண்டுவாடா ... ... ✻

வசனம்

அடா வாடா வசந்தா நம்முடைய ஆண்டவர்களாகிய பா
ண்டவர்கள் வேட்டைக்குப்போக ஆயத்தமாயிருக்கிற படியி
னலே பட்டத்து ஆனையில்ஐந்து குதிரையில் ஐந்து தேரில்

ஐந்து பல்லக்கில் ஐந்து விமானத்தில் ஐந்து நன்ருய் அல
ங்கரித்துச் சீக்கிரமாய்க்கொண்டுவாடா... ... ......... ...*

வசந்தன்விருத்தம்.

கொண்டுவருகென்றே ... ... ... *
விண்டுரை செட்டமந்த்ரீ ... ... ... *
அண்டிபுடன் சென்றே ... ... ... *
கொண்டிதொவடைந்தேன் ... ... *

வசனம்

அப்படியே இதோ கொண்டுவந்தேன் ஐயா ... ... ...*

புரோசனன் வசனம்

கேளும் என் ஆண்டவனே தேவரீருடைய உத்தரவின்ப
டியே வேட்டைக்குப் போகச் சுத்த வீரர்களும் வேடர்களும்
வில்லியர்களும் வேட்டைக் குறித்தாகிய மற்றவர்களும் தயாரா
கவந்திருக்கிருர்கள் சுவாமீ... ... ... .. ... ... ... ...*

தருமபுத்திர மகாராசன் வசனம்

ஆனல் வேட்டைக்குப் போவோம் வாராய் புரோசனு ...*

சேவகர் கட்டியம்.

பகையுள்வைத்து வலிதெதிர்த்த பகைவர்சேனையுட்கவே ...*
இகனுறுக்கியிரு ளகற்றிவிபுதர் யாருமெச்சவே ... ... ...*
திகழ்மதிக்குநிகர் குடைக்குடிருகில் சீர்தழைக்கவே ... ...*
தருமனத்தினர சியற்றுதருமராச ரத்னமே. சுவாமீபராக் . *

இதுவும்அது

படிவிளங்கவறநெறிவிளங்க நிறைபலன்விளங்க மிகுவளமை
சேர், குடிவிளங்க வடிபடைவிளங்க நிகழ்குடைவிளங்க வெழி
ன்மணிகளார்,முடிவிளங்கமனுமுறைவிளங்கமழைமுகில்விளங்
க வியலரசிறேர், கொடிவிளங்க மதிகுலம்விளங்க வருள்குல
வுநந் தருமராசனே... சுவாமீபராக் ... ... ... ... ... *

இதுவும்அது

குறிகலங்க மணியணிகலங்கவதிர்குலைகலங்க வடன்மருவலார்.
நெறிகலங்க நெடுமுடிகலங்கவுயர் நிலைகலங்கவுளைகுளறியே*
பொறிகலங்க மதவெறிகலங்க வவர்பொருள்கலங்க மிகுபடை

யொடே, தறிகலங்க வவர்தலைகலங்க வெதிர்சபமிருந் தரு மராசனேசுவாமீபராக்... ... ... ... ... ... ... ... ...*

இதுவுமது

திக்குதிமிதித்திமிதி மித்தியென நிர்த்தமிடுசித்ரபரி யொரு கோடியே, செற்றலர்கள்வச்சிரமகுடத் திறல்விழப் பொருசி னத்தகரி யொருகோடியே, தக்கவிரு திட்டெழுதி யிட்ட கொடியுற்றுயர் தழைத்தரதமொருகோடியே, தத்துகடலொ த்தொரு புறத்தில்வரவுற்றதள கர்த்தர்திரளொருகோடியே. *

மிக்கமகதத்தர்குருதத்தர் நிடதத்தரடல்குர்ச்சரர்க ளொரு கோடியே, விற்படைகள் கைப்படைகள் மற்றுரு வித்திரள் கொள் விற்புனர்க ளொருகோடியே, தொக்கவுயர் திகருகள னைத்துமதிரத்தரணி சொற்பமென வுரையாடவே, சுற்றுமருவி த்திரளுறப்பரிவு வைத்துவருசொற்றரும மகிபாலனே. சுவாமீ பராக் - - - - - - - *

தருமராசன் கொச்சகம்.

அண்டரிருப்பிடமோ வயனிருப்பிடமோ... ... ... *
வண்ணெப்பமாலையணி மாயனிருப்பிடமோ ... ... ...*
மண்டலத்தோர்வாழிடமோ மாமுனிவர்மேவிடமோ .*
விண்டவிழுமிவ்வனம்போல்வேறெங்குங்கண்டிலனே.*

வசனம்

ஆகாகா அப்பா புரோசனு இந்த வனம் தேவர்கள்வாச ஞ் செய்யத்தக்கதோ அரி கரி அல்லது வைகுந்த வாசரா கிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி வாசஞ் செய்யப்பட்டதோ அல்லது சீவ செந்துக்களைச்சிருஷ்டிக்கும் பிரமனுடைய உத்தியான வனமோ ஆகாகா புரோசனு இந்தவனத்தில் ரிஷீஸ்வரர்கள் எக்கியஓமாதி கிரியைகள்செய்கிற விநோதமும் இன்னம்இதர மாகிய மனிதர் சஞ்சாரஞ்செய்கிற வேடிக்கையும்நானென்ன சொல்லுவேன் புரோசனு ஆகாகா அரிகரி ... ... *

தருமராசன் வனத்தைப்பார்த்துச் சொல்லுகிற தரு.

இராகம்- பைரவி - அடதாளம்,

கங்குகரையென்பதில்லாம லெங்கணுங்... ... ... ... ... ...*
கன்கொண்ட மட்டுங்கசித்துத்தழைத்து... ... ... ... ...*

மங்களமாதவர்சஞ்சரிக்கதக்க வனத்தைப்பாராய் பீமா ...
வனத்திலுன்னதத்தைப்பாராய் பீமா ... ... ... ...... ※
செக்கச்செவந்தபலாக்கனிகைக்கொண்டு... ... ... ......※
சிறைதமகிழ்ந்துறமந்திகள் கூடியே... ... ... ... ... ...※
தக்குதிக்குவென்று மத்தளங்கொட்டிய... ... ... ... ...※
தலையைப்பாராய் பீமா... ... ... ... ... ... ... ... ※
அதனுடைவகையைப்பாராய்பீமா......... ... ... ... ...※
சத்தியமில்லாத துஷ்டனையேமன் ... ... ... ... ... ...※
றலைகீழாய்நட்டுச் சதைப்பதுபோலவே... ... ... ...※
மெத்தவும்வௌவாற் றலைகீழாய்த்தொங்குமிவ் ... ...... ※
வேதைபாராய் புரோசனா... ... ... ... ... ... ※
அதுபடும்வாதைபாராய் புரோசனா ... ... ... ... ※

புரோசனன் சொல்தரு.

மத்தமலைபோலும் பெண்யானைபின்னே... ... ... ... ※
மதங்கொண்டுபோகின்ற வாரணத்தைச்சிங்கந் . . . ※
கொத்தமஸ்தகத்தைப் பற்றிப்பிளக்கின்ற... ... ... ...※
கோரம்பாருஞ் சுவாமீஐயா அதன்வீரம்பாருஞ்சுவாமீ ... ※
காடுஞ்செடியுங் கரடுங்கல்லுமுள்ளுங் ... ... ... ... ※
கள்ளியுமுள்ளியுங் கண்ணிற்காண்பதல்லால்.. .. ... ... ※
நீடுமாளிகைபோலே சஞ்சரிக்கக்கூடா... .. . .. . ※
நெருக்கம் பாருஞ்சுவாமீ வழிகளின்சுருக்கம்பாருஞ்சுவாமீ ※
வாகார்ந்ததேசத்து மகுடமண்டலீகர். ... ... ... ...※
வந்துகூடியங்கே வழிபார்த்திருப்பார்கள் ... ... ... ※
எமாந்தமாளிகைவிட்டிங்கேவந்த திதமேயில்லைசுவாமீ.... ※
எனக்குச்சம்மதமே யில்லைசுவாமீ ... ... ... ... ... ※

தருமர் சொல்லுகிறது.

நினைத்துக் கர்த்தத்துரோகஞ்செய்வோனையேம. . ....※
னெடுந்தணல்மேலே நிறுத்துவதுபோல ... . . . ※
வனத்தின்மூங்கில் பற்றநாகம் படுகின்ற. . .. .. ... ※
வருத்தம்பாராய்புரோசனா . . . . . . . .※
அதுபடுந்துரிதம்பாராய்புரோசனா . . . ※

தருமர்விருத்தம்.

வில்லமைதன்னின்மிக்க மந்திரிபுரோசனனேகேள். ✻
எல்லையிலடவியேறியிய னுள்ளவேட்டையாடி. ✻
சல்யமாய்த்தோளுங்கையுஞ் சலிப்புற்றதினிமேனும் ✻
புல்லியபோதுபோமுன் போம்படிபயணஞ்செய்வாய் ✻

வசனம்

கேளாய் புரோசனா இவ்வனத்தில் வேட்டையாடித் தோளுங் கையுஞ் சலித்தது மேலும் மெத்த ஆயாசப் பட்டோம் ஆகையால் இனிமேல் நம்முடைய வாரணாவதத்துக்குப் போகப்பொழுதுபோகு முன்னமே சேனைகளை எல்லாம் பிரயாணம் செய்யும்பிள்ளாய். ✻

புரோசனன்விருத்தம்.

செய்கவென்றெனக்குரைத்த செகதலபதியேபோற்றி ✻
மெய்யநின்னுரைப்படிக்கு வீரசேனைகளைக்கூட்டி ✻
நொய்யதோர்போதுபோமுன் னுவனுநம்மனைக்குப்போகச் ✻
சையநேர்கயத்தின்மீதாய்ப் பறைதனைச்சாற்றுவேனே ✻

வசனம்

கேளும் என் ஆண்டவனே தேவரீர் உத்தரவுப் படிக்குச் சேனைகள் எல்லாம் பொழுதுபோகிறத்துக்குமுன்னே அரண்மனைக்குப்போய்ச் சேரும்படியாக ஆனைமேல் பறைபறைவித்தேன் மகாராசனே. ✻

இதுவும் புரோசனன்விருத்தம்.

சத்தியம்வழுவில்லாத தருமராசேந்திரகோவே ✻
இத்தரைமன்னர்வாழ்த்து மிணைமலர்ப்பதங்கள்போற்றி ✻
மெத்தவுமிளைத்தீர்கானில் வெய்யவில்வாட்டமுற்றீர் ✻
அத்தமித்திடுமுன்னேநம் மரண்மனைக்சேருவோமே ✻

வசனம்

சத்திய பரிபாலக ராசசேகரா வந்து வெய்யிலிலும் காற்றிலும் திரிந்து வேட்டையாடி ஆரண்யத்திலே வெசாரிமிகவும்இளைத்தீர்கள் ஆதலால் இனிமேல்காலதாமசப்படுத்தாமல் சீக்கிரமாய்ப் பொழுது போகுமுன்னே நம்முடைய அரண்மனைக்குப் போய்ச் சேருவோம் வாரும் சுவாமீ ✻

தருமர் விருத்தம்.

அடையலர்செயலொடுங்க வைவர்மேன்மேலுமோங்க - - ✻
நடையறிபுரோசனுக்கே னல்லதப்படியேபோவோம் - ✻
படையெலாம்வருவதாகப் பயணபேரிகைமுழக்கி - - ✻
புடைவளரடவிவிட்டுப் புறப்படச்செய்குவாயே - ✻

வசனம்.

சத்துருக்களுடைய தனமும் கனமும் குலைய ஐவர்களாகிய நாங்கள் சிறப்புற்றிருக்கச் செங்கோல் செலுத்துவிக்கும் மேலானபுத்தியையுடைய புரோசனு நல்லது அப்படியே சேனைகளை எல்லாங் கூட்டிக் காட்டைவிட்டுப்புறப்படும்படியாகப்பிரயாணபேரிகை முழக்கச்செய்வாய் புரோசனு. - ✻

புரோசனன்வசனம்

அப்படியே பறையறை வித்தேன் சுவாமீ - - - ✻

பொதுவிருத்தம்.

அறக்கொடும்பாவிப்புரோசனனமைத்த - ✻
வரக்குமாளிகையிலுறவையங்கொண்டே - ✻
உறக்கமுணவில்லாமற்பகலிராவு - - ✻
முளமெலிந்துவிதிவசத்தையுன்னியுன்னிச் - ✻
சிறக்கவனவேட்டையெனவடவிக்கேகித் - - ✻
திரிந்துதிரிந்திளைத்து மிகச்சிந்தைநொந்து - ✻
மறக்கவொண்ணாக்கலக்கமிடும்வல்லரக்கு - -✻
மாளிகையிலைவர்களும்வந்திட்டாரே - - - - ✻

பொதுவசனம்.

அஃது எப்படி யென்றால் மகாபாவியான புரோசனனானவன் பாண்டவர்கள் ஐந்துபேரையும் அரக்குமாளிகையில் இருக்கச்செய்து அவர்களை மோசஞ்செய்துகொல்லவேண்டும் என்று நினைத்து இன்றையராத்திரிக்கு நெருப்பிடுகிறதென்று எண்ணம் வைத்திருக்கும்போது பாண்டவர்கள் எப்படியோ புரோசனனுடைய சூதைக்கண்டு கொண்டவர்களாய் நம்விதி வசத்தைத் தள்ளக்கூடுமோ என்று ஆகார நித்திரையில்லாமல் ராத்திரியும் பகலும் மனசஞ்சலப்பட்டுக்கொண்டுஒருவிதமாக ஏக்க முடையவர்களாய் இருந்து வேட்டைக்குப் போயாவது

பொழுதுபோக்கு வோமென்று எண்ணிக் காட்டுக்குப்போன பாண்டவர்களிதிரிந்து வேட்டையாடி அலத்து மறுபடியும் அரக்குமாளிகையில் வந்து சேர்ந்தார்கள் அப்பால் நடக்கும் வரலாறு காண்க. - - - - - - - - - - ✻

தருமர் விருத்தம்.

போந்தநல்லறிவின்மிக்க புரோசனமந்த்ரீகேளாய் - - ✻
சாந்தமாயின்றுநாங்கள் சவுக்கியந்தனையடைந்தோம் - ✻
பாந்தமாயினிமேற்காணிற் பகலெல்லாம்பொழுதுபோக்கி ✻
ஏந்துமிம்மாளிகைக்கு ளிரவில்வந்திருப்போங்கண்டாய் - ✻

வசனம்

கேளாய்புரோசனா இன்றையதினம் வனத்துக்குப்போய்வந்தது எங்கள்சரீரத்துக்குமிகவும் ஆரோக்கியமாய் இருக்கின்றதுஆகையால் இனிமேல்நித்தியமும்இந்தப்படிக்குப் பகல் எல்லாம் வேட்டையாடி இராத்திரியில் இவ்விடம் வந்து இருந்தால் சவுக்கியமாய் இருக்கும் புரோசனா. - - - ✻

புரோசனன்விருத்தம்.

செயலென்னசெங்கோலென்னதெவ்வேந்தர்கலக்கமென்ன,✻
இயலென்னவிடைவிடாம லெய்துமண்டலிகமென்ன - ✻
அயலென்னவுன்பிதாவிவ் வடியேனுக்கிசைத்ததென்ன - ✻
பயனென்னவிதனைக்கேட்டோர் பரியாசஞ்செய்திடாரோ- ✻

வசனம்

ஐயையோ ஐயையோ- ஆ- ஆ- இது என்ன அனியாயம் இது என்ன அனியாயம் நாம் வந்த காரியம் என்ன உங்களுக்கு இளவரசு பட்டந்தரித்து இருக்கிறது என்ன மேலே சத்துருக்கள் மேலிட்டு இருக்கிறது என்ன அடிக்கடி ஐம்பத்தாறு தேசத்து ராசாக்களும் வந்துகொண்டே இருக்கிறவேளைஎன்ன இதுவும் அல்லாமல் உம்முடையபிதாவாகிய திருதராட்டிர மகாராசன் அடியேனுக்கு ஆக்கியாபித்தது என்ன அத்தனையும் ஆற்றிலேகரைத்த புளியாக விட்டுப் பகல் எல்லாம் காட்டிலே இருந்துஇராத்திரியில் வீட்டுக்கு வந்து இருககிறோம் என்று சொல்லுகிறீர்களே இது என்ன அனியாயம் இதைப்பார்த்தவர்களும்கேட்டவர்களும் பரியாச

ஞ்செய்து வேறொன்றால் நகையார்களா பளா பளா நன்றாய்ச்
சொல்லுகிறீர்கள் ஐயா. - - - - *

பீமன் விருத்தம்

போற்றியங்கிதைடமுத்த புரோசனா சொல்லக்கேளாய் - *
சாற்றுமித்தனையுமுன்றன் சமர்த்தாலே நடப்பதல்லால் - *
வேற்றொருபேதாபேதம் விபரமொன்றறியாவிந்த - - *
ஆற்றலிற்சிறியோராலே அரசியனடப்பதுண்டோ - *

வசனம்.

கேளாய் புரோசனா நீ இப்போது சொன்ன காரியாகாரியங்கள் எல்லாம் நீ இருந்து நடப்பிக்கிறதும் நீ சொன்னபடி கேட்கிறதுமே அல்லாமல்வேறே என்ன இருக்கின்றது எங்களுக்கு ஒருபேதாபேதங்களுந் தெரியாது மேலும் நாங்கள் சிறியோர்கள் ஆகையால் இதற்கு ஒன்றும் விகாதஞ்சொல்லவேண்டாம் சமஸ்தமும் நீயே இருந்து நடப்பிக்கலாம் புரோசனா - - - - - *

புரோசனன்விருத்தம்.

அலையிலாக்கடலேயேழை யடியேனையாளுங்கோவே - *
நிலையிலாவொருவனேவிந் நெடும்பழியேற்றுக்கொள்வான் *
விலையிலாராச்சியபாரம் வெறியெனச்சுமக்கச்சொன்னால் - *
தலையிலாவுடலிருந்து தரணியைத்தாங்கலாமோ - - *

வசனம்

அலையில்லாத கருணைக்கடலே என் ஆண்டவனே கேளும் தேவரீர் சொன்ன வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலே என் சரீரம் எல்லாம் நடுங்குகின்றதே இப்படியுஞ்சொல்லுவார்களா எவனாகிலும் நிலைகெட்ட தறிதலையானால் இந்தப்பழியை ஏற்றுக்கொள்ளுவான் இந்தப்பாரத்தை நானா சுமக்கிறது ஆகிலும் தலை இல்லாமல் உடல்மாத்திரம்இருந்து ராச்சியபரிபாலனம்பண்ணினது நான்எங்குங் கண்டது இல்லை மகாராசனே. *

அர்ச்சுனன்விருத்தம்.

கடுவினைபூட்டவில்லை கடலிற்போட்டமுத்தவில்லை - - *
நெடுநெருப்பினிலேநீபோய் நில்லென்று சொல்லவில்லை - *

வடுவருமன்னர்வந்தால் வனவேட்டைபோனுரென்று - *
தொடர்மொழிசொல்வதோவித் தொல்புவிசுமப்பதப்பா *

வசனம்

கேளாய் புரோசனு விஷத்தை உண்ணச்சொல்ல இல்லையே உன்னை நடுக்கடலிலே போட்டு அழுத்த இல்லையே நெருப்பிலே போய் இறக்கச்சொல்ல இல்லையே ராசராசாக்கள் யாராவது வந்தால் பாண்டவர்கள் வேட்டைக்குப்போய் இருக்கிறார்கள் என்று ஒருவார்த்தை சொல்லும்படி சொல்லுகிறது தானே இதுதானு இந்தஉலகை எல்லாஞ்சுருட்டி உன் தலைமேல் நாங்கள்சுமையாக வைத்ததும் நீசுமக்கிறதும் என்னகாணும் வெகு சமர்த்துகளெல்லாம் பேசவந்தாய் அட போங்காணும் போம். - - - - - *

புரோசனன்விருத்தம்.

ஆண்டவன்திருதராட்ர வண்ணனுக்கென்னசொல்வேன் - *
ஈண்டெனக்குரைத்தவார்த்தைக் கேதுதானென்னசொல்வேன்
தாண்டியுத்தரவுசொல்லித் தப்பித்திடத்தலையிரும்போ - *
வேண்டியபடியேசெய்வீர் விடிந்தபின்வருகுவேனே - *

வசனம்

என்னை மந்திரியாக்கி எத்தனையோ சாக்கிரதை சொல்லி அனுப்புவித்த அந்தத் திருதராட்டிர மகாராசனுக்கு நான் என்னசொல்லப்போகிறேன் அல்லது இப்படிச்சொல்லுகிறீர்களே இதற்குத்தான் நான் என்னசொல்லப் போகிறேன் அப்படித்தடுத்துச் சொல்லுகிறத்துக்குஎனக்கென்னதலையிரும்பா இல்லை உங்களுக்கு எப்படிச்சம்மதமோ அப்படியே செய்யுங்கள் இன்றெல்லாம் வனத்திலே திரிந்து எனக்கு மெத்தவும்ஆயாசமா இருக்கின்றது ஆகையால் சூரிய உதையத்துக்கு வந்து சேருகிறேன் - - - - - *

பீமன் விருத்தம்.

படையொடுங்காட்டிற்சென்று பகலெலாந்திரிந்தலைந்து - *
இடைநிலாதோடிவந்த விளைப்பிலேயிவிடம்விட்டு [தங்கி]
விடைகொண்டுன்மனைக்குப்போக வேண்டுமோவிங்கே [வாய்]
உடனுண்டுடன்னுடன்படுத்தே யுதையத்துக் கெழுந்துபோ

கேளாய் புரோசனா இன்றைத்தினம் அதிகாலமே புறப்பட்டு வேட்டைக்குப் போய்ப் பகலெல்லாந்திரிந்து மிகவும் பிரயாசைப்பட்டோம் திரும்பிவரும்போது அதிசீக்கிரமாய் இடையில் நில்லாமல் ஓடிவந்தோம் வந்தும் இந்தராத்திரியில் வெகுநேரம் பேசிக்கொண்டு இருந்தோம்இப்படி இருந்தும் நீமறுபடியும் வீட்டுக்குப் போகவேண்டாம் போகவேண்டாம் எங்களுடனே போசனஞ்செய்து எங்களுடனே கூடநித்திரை செய்துசூரிய உதையத்துக்கு எழுந்து போவாய் புரோசனா.

புரோசனன் விருத்தம்.

ஒப்பறு பேருலகில் - - *
கைப்புடமாமலையே - *
துப்புடனீயுரைசெய் - - *
அப்படியே புரிவேன் - - *

வசனம்

இராச கண்டீரவனான மகா பராக்கிரம பீமராசனே நீ ருல் தேவரீர் சொன்னபடியே செய்கிறேன் சுவாமீ. - *

பொது வசனம்

கேளும் சபையாரே இந்தப்பிரகாரம் பேசிக்கொண்டிருந்த புரோசனன் வெளியில் வந்து வசந்தனுடன் ரகசியமாய்ச் சொல்வதுகாண்க - - - - - - *

புரோசனன்விருத்தம்.

மைமருவ்வனத்திலேயும் வழியிலுந்தங்கிடாமல் - - *
ஐவரைக்கொண்டுவந்தே யரக்குமாளிகையிற்சேர்த்தும் - *
தைவரத்தம்மோடுண்டு சயனித்துக்கொள்ளச்சொன்னார் - *
மெய்வருமிதற்குநேரும் விகாதத்தைப்பார்வசந்தா - - *

வசனம்

வசந்தா என்னகாரணம் அடா வேட்டைக்குப் போன இடத்திலே வனத்திலேயும் வழியிலேயும் நிற்கவொட்டாமல் மெள்ளக்கொண்டுவந்து அரக்குமாளிகையிலே சேர்த்தும் நீஇனிமேல் எங்கே வீட்டுக்குப்போகிறது போசனஞ்செய்து எங்க

ளுடனே கூடப்படுத்துக் கொண்டு நித்திரை செய்யென்று சொல்லுகிறீர் களே எப்படி வெளியிலே இருந்தா லல்லவோ அந்தக்காலத்திலே சுரங்கத்தின் வழியாகவந்து நெருப்பைவைக்கலாம் இவிடத்தில் இருந்தால் என்ன செய்கிறது இதுகாரியத்துக்கு எத்தனை விகாதம் வருகிறதடா பார் அடா வசந்தா இன்றைத்தினமே இத்தனை இழவானால் எப்படிச்சமாளிக்கிறது.

வசந்தன்விருத்தம்.

இருப்பிடத்திருந்தாலப்போ தெழுந்துதான்போகவேண்டும்.
துரிப்புடனங்கேதானே சயனித்தால்விழித்திருந்து ※
நெருப்பையிட்டுடனேயந்த நிலவறைவழியாய்த்தங்கிச் ※
சுரிப்படப்பாலைவார்த்துத் தலைமுழுகிவிடலாங்கண்டாய் ※

வசனம்

ஐயா பழம் நழுகிப்பாலிலே விழுந்தாற் போலவந்துவாய்த்திருக்கும்போது விகாதம் ஏது அகாதம் ஏது போம்ஐயா போம் என்னவார்த்தை சொல்லுகிறீர் பாண்டவர்களுடனே கூடப்படுத்து நீர் விழித்துக்கொண்டு இருந்து அவர்கள் தூங்கப்பார்த்து நெருப்பைவைத்துப்போட்டு அந்தச்சுரங்கத்தின் வழியாய் இறங்கி நிமிஷத்தில் வீடுவந்து சேர்ந்து சனிவிட்டுதென்று பாலைவார்த்துத்தலைமுழுகிப் போடலாம் போம் ஐயா போம் என்னமோ இதற்குத்தானா பயப்பட்டீர் போம் ஐயா போம் ※

பொது வசனம்

புரோசனன் இந்தப்பிரகாரம் சொல்லியவசந்தனுடைய சொல்லைக்கேட்டு மெய்தானென்று ஒப்புக்கொண்டு அந்தப் பாண்டவர்களுடனே போசனம் செய்து படுத்துக் கொண்டு நித்திரைபோனான் மேல் நடக்கும் சங்கதி காண்க. ※

பொதுவிருத்தம்.

தமையனுந்தாயுந்தம்பிமார்களுமத் ※
தந்திரப்புரோசனனுடனே ※
அமைவுறப்படுத்துத்தனித்தனியாக ※
வயர்ந்துநித்திரைசெயும்போது ※

சமயமிதென்று பீமனங்கெழுந்து - - ❊
தங்கியவரக்குமாளிகையில் - - - ❊
இமையவரஞ்ச விலங்கையிலனுமா - - ❊
னிட்டதீயெனத்தனையிட்டான் - - - ❊

இதுவுமது

சித்திரமாயரக்குமாளிகைநாற்பாங்குந் - ❊
திகுதிகென்றுபடர்ந்தெரியுஞ் செயலைநோக்கி - - - ❊
மெத்தனவேகுந்தியொடு தருமராசன் - - ❊
வில்விசையனகுலசகாதேவர்தங்கள் - - ❊
நித்திரையுஞ்சிதையாமலெடுத்துக்கொண்டு - - - - ❊
நெடியதூணுதைத்து நிலவறையிற்சென்று - - ❊
சத்தியமில்லாப்புரோசனனை யக்கினிக்குத்- - ❊
தந்திட்டா னிடிம்பன்வனம்வந்திட்டானே - - ❊

பொதுவசனம்

அஃது எப்படி என்றால்வாரணாவதத்தில் அரக்குமாளிகையிலே இருந்து மந்திரியாகிய புரோசனனாலே பொல்லாங்கு வருமென்றறிந்த பீமசேனனானவன் ஒரு ராத்திரியிலே அந்தப்புரோசனமந்திரியைக் கூடவே யிருக்கச்சொல்லி ராத்திரி காலத்திலே நல்ல நித்திரை செய்யும்சமயம் பார்த்துத் தானே அந்த அரக்குமாளிகையில் நாலாமூலையிலும் நெருப்பிட்டுக் கொளுத்திவிட்டுத் தாயாகிய குந்திதேவியையும் சகோதரர் நால்வரையும் நித்திரை கலையாமல் இருக்கும்படித்தானேஎடுத்துக்கொண்டுவந்து அந்த அரண்மனை முற்றத்துள்ளமண்டபத்தின் ஈசானமூலை தன்வழியிலே இருந்தசுரங்கவழியிலே புகுந்துபோய் இடும்பாசூரன் வனத்திலிருக்கும் பாறைக்கல்லின் மேல் நித்திரை சிதையாமல் படுக்க வைத்து அந்த ஐந்துபேர்களும் நித்திரைதெளிகிற வரைக்கும்காவல் காத்துக்கொண்டிருந்தான் அப்பால் நடக்கும் சங்கதிகண்டுகொள்க. - - ❊

அரக்குமாளிகை முற்றிற்று.